

# அன்பின் வலிமை

அபா

ION

## உள்ளே...


1. அன்பின் வலிமை 5
2. இமைக்காத இமைகள் 155


# அன்பின் வலிமை

### அறிமுகம்: 1

கடற்கரையை ஒட்டி போடப்பட்டிருந்த அந்த சிமெண்ட் நடை பாதையில் எத்தனை விதமான கால்கள். நடைபாதையை ஒட்டியிருந்த சிறு சுவரில் சூர்யா அமர்ந்திருந்தான். 22 வயது. வசீகரமான முகம். அகலமான தோள்கள். திடமான மார்பு. அமர்ந்திருந்த விதத்தில் மேல் குடி தோற்றம்.

நடைபாதையில் கோக் உறிஞ்சிக் கொண்டு இளைஞர்கள் விரைந்தார்கள். ஆழமான, ஆபத்தான விளிம்புகளில் ஜீன்ஸ் பேண்ட்களை அணிந்து குட்டையான மேல் சட்டை போட்டு இளம் - பெண்கள் ஒயிலாக நடந்தார்கள். அவர்களுடைய இடுப்பு சரிவுகளை ரசிப்பதற்காக ஒரு பட்டாளம் சூர்யாவின் பக்கத்தில், சூர்யாவிட

மிருந்து சற்று தள்ளி அமர்ந்திருந்தது. இடுப்புயர அல்சேஷனுடன் ஒரு இளம்பெண் ஓடி வந்தாள். சட்டென்று அந்த இடத்தில் பேச்சுக் குரல்கள் அடங்கி எல்லோருடைய பார்வையும் அவளையே மொய்த்தன.

அங்கங்கே முடிச்சு முடிச்சாக கோன் ஐஸ்களை மாற்றிக் கொண்டு சிகரெட்டுகளை ஊதிக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். சிரிப்புகள், உற்சாகமான வீறிடல்கள் அச்சிட முடியாத வார்த்தைகளில் நண்பர்களை அழைத்துக் கொள்ளும் பிரயோகங்கள் என்று அந்த பிரதேசமே கலகலப்பாக இருந்தது.

மணல் வெளியில் உற்சாக கூக்குரல்களோடு சில இளைஞர்கள் வாலிபால் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவ்வப்போது இரண்டு முக்காலியை இறக்கி அதன் மீது தட்டை பரப்பி, பாவ்பாஜி, பேல்பூரி என்று இந்தியில் விசாரிக்கும் சிறுவர்கள். 'யக்கா - இந்த பூவை மட்டும் வாங்கிக்க...' என்று இடுப்பில் தட்டு நிறைய பூச்சரங்களை சுமக்கும் சிறுமிகள். கடைசி பகுதி கோன் ஐஸ் தங்களுக்குத்தான் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு விடாமல் வாலை ஆட்டிக் கொண்டு, நாக்கை தொங்கப் போட்டு நட்போடு அமர்ந்திருக்கும் நாய்கள்.

சூர்யாவின் கவனத்தை எதுவும் கவரவில்லை. யாருடனும் ஒட்டாமல் சற்று ஒதுங்கி தனியே அமர்ந்திருந்தான். கண் மட்டத்தில் கடந்து போகும் இடுப்புச் சரிவுகளோ, உற்சாக வீறிடல்களோ, இளைஞர்களின் நட்பு கூக்குரல்களோ, எதுவுமே அவனை எட்டியதாகத் தெரியவில்லை.

காற்றில் தத்தி தத்தி ஒரு ராட்சத பலூன் பறந்து வந்தது. அமர்ந்திருந்த அவன் கால்களுக்கிடையில் ஒதுங்கி தத்தி நின்றது. பொதுவாக, யாராக இருந்தாலும்



அந்த பலூனை துரத்தி வரும் குழந்தை எங்கே என்று பார்த்திருப்பார்கள். பலூனை இரு கைகளாலும் பிடித்து எடுத்து அந்த குழந்தையிடம் கொடுத்திருப்பார்கள். அதன் முகம் எங்கும் சந்தோஷம் நிறைந்து போக அதைக் கண்டு ஆனந்தித்து, புன்னகைத்து குழந்தையின் கன்னத்தை விரல்களால் தட்டிக் கொடுத்திருப்பார்கள்.

சூர்யா எதுவும் செய்யவில்லை.

பலூனை துரத்திக் கொண்டு குழந்தை ஓடி வந்தபோது அதை கவனித்தானா என்று கூட புரியவில்லை. விரல்களால் பலூனை நகர்த்தினான். அவனிடமிருந்து விடுபட்ட வேகத்தோடு, பலூன் காற்றின் வேகத்தில் சட்டென்று விலகி நகர்ந்தது. குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது. அதன் அப்பா சூர்யாவை முறைத்துப் பார்த்து விட்டு பலூனை துரத்திக் கொண்டு ஓடினார்.

என்ன ஆயிற்று இந்த சூர்யாவுக்கு?

என்ன ஓடிக் கொண்டிருக்கிறது அவன் மனதில்?

அவனை ஒத்த வயதில் இருப்பவர்கள் சுற்றிலும் உற்சாக ஊற்றாக பொங்கிக் கொண்டிருக்கும் பொழுது புதைக்கப்பட்டு எழுந்தவன் போல், ஏன் இப்படி உயிரற்று அமர்ந்திருக்கிறான்?

### அறிமுகம்: 2

படிகளை ஜோதி இரண்டிரண்டாக தாவி ஏறினாள். மாடியை அடைந்ததும் நிற்காமல் அதே வேகத்தில் அறைக்கதவை திறந்தாள். அறைக்குள் பாய்ந்தாள். சோபாவில் அமர்ந்திருந்த அவளுடைய அப்பா நிமிர்ந்தார். ஒரே பாய்ச்சலில் அவரை நெருங்கி அவர் கழுத்தை கட்டிக் கொண்டு கன்னங்களில் முத்தங்களை பொழிந்தாள்.

"என்னடா... என்ன ஆச்சு என் கன்னுகுட்டிக்கு?"

"அப்பா... அம்மா இப்பத்தான் சொன்னாங்க. உங்களுக்கு ப்ரமோஷன் ஆகியிருக்காமே?"

"சொல்லிட்டாளா... நானே ஒரு சர்ப்ரைஸா உன்னை வெளியில அழைச்சுட்டுப் போய் ஹோட்டல்ல வச்சு சொல்லணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். முந்திரி கொட்டை மாதிரி எனக்கு முன்னால சொல்லிட்டாளா."

"வாங்கப்பா, ஹோட்டலுக்குப் போலாம். ஐ' யாம் ஸோ ஹேப்பி."

"ஆனா, உனக்கொரு வெடிகுண்டும் வச்சிருக்கேனே!"

"என்னப்பா...?"

"என்னை கோயம்புத்தூருக்கு மாத்திட்டாங்க."

"ஸோ. வாட்? இத்தனை நாளா மெட்ராஸ்ல என்ஜாய் பண்ணோம். நாளையிலேர்ந்து கோயம்புத்தூர்ல என்ஜாய் பண்ணப்போறோம் அவ்வளவுதானே."

"நிஜமாவா சொல்றே? குட்... வெரிகுட். பழகின காலேஜ். உன்னுடைய ப்ரண்ட்ஸ் அத்தனை பேரையும் விட்டுட்டு வேற ஊருக்கு வரணும்னா, நீ முரண்டு பிடிப்பியோன்னு நான் நினைச்சேன்."

"எங்க போனாலும் எனக்கு ப்ரண்ட்ஸ் கிடைப்பாங்கப்பா. ஆனா காலேஜு பாதியில மாத்திக்க முடியுமாப்பா?"

"அதுக்கெல்லாம் ஆள் இருக்கும்மா. நான் ஏற்பாடு பண்ணிடுவேன்."

"தாங்க்யூ டாட். வாங்க நாம கொண்டாட போகலாம்."

ஜோதி எப்பொழுதுமே இப்படித்தான். காற்றிலிருந்து 24 மணி நேரமும் உற்சாகத்தை உறிஞ்சிக் கொண்டிருப்



பவள். சின்னச் சின்ன சந்தோஷங்களைக் கூட, பெரிய குதூகலங்களாக மாற்றிக் கொள்ளும் பக்குவம் கொண்டவள். அவளுடைய வயதிற்கு அத்தனை ஆர்ப்பாட்டமான ஒரு பெண்ணை சுலபத்தில் பார்க்க முடியாது. எல்லோருடனும் நட்பாகவும், சிரித்து பேசுகிறாளே என்று அவளை எளிதாக எடை போட்டு விடவும் முடியாது. அவளுக்கென்று சில கோட்பாடுகள் உண்டு. பாரம்பரியமான சில நம்பிக்கைகள் உண்டு. அவற்றை விட்டுக் கொடுத்து விட்டு மிக நவீனமான பெண்ணாக காட்டிக் கொள்ள அவள் விரும்பியது இல்லை. காஞ்சிபுரம் இட்லி சாப்பிடவும் தெரியும். பிட்ஸாவை நாசூக்காக மென்று தின்னவும் தெரியும். கோயிலில் கும்பிட்டு விட்டு பூவை கண்களில் ஒற்றிக் கொண்டு கூந்தலில் அணியவும் தெரியும். கல்லூரி மேடையில் பாப் மியூசிக்கிற்கு ஆட்டம் போட்டு முதல் பரிசு வாங்கவும் தெரியும். பிறந்ததிலிருந்து 19 வருடங்களாகப் பழகி நேசித்து உறவாகவே ஆக்கிக் கொண்டு விட்ட சென்னை நகரத்தை விட்டுப் பிரிவதில் அவளுக்கும் அடி ஆழ் மனதில் ஒரு சின்ன வருத்தம் இருந்தது. புதிய ஊர், புதிய காற்று, புதிய மனிதர்கள் இவர்களைச் சந்திக்கப் போகும் ஒரு உற்சாகமும் இருந்தது.

**அறிமுகம்: 3**

இன்னொரு முக்கியமான அறிமுகத்தை இப்போது வேண்டாம். பின்னால் ஒரு சந்தர்ப்பத்தில் வைத்துக் கொள்ளலாமே?

# 1

சீட்டில் உட்காராமல் நின்றபடியே பெடல்களை ஏறி ஏறி மிதித்தாள்

ஜோதி. 'க்ரீச் க்ரீச்' என்ற முனகலுடன் அந்த சைக்கிள் ரிக்ஷாவின் சக்கரங்கள் உருண்டன. கோவையின் அமைதியான அந்த தெருவில் ரிக்ஷா நகர்ந்தது.

''போதும்மா இந்த விளையாட்டு. உங்க அப்பா பார்த்தால் என்னைதான் திட்டுவாரு.''

ரிக்ஷாவின் இருக்கையில் அமர்ந்திருந்த ரிக்ஷாக்கார தாத்தா கெஞ்சும் குரலில் சொன்னார்.

ஜோதி இடதும் வலதுமாக தலையை அசைத்து மறுத்தாள்.

''தினம் தினம் நீங்க இப்படிதானே எங்களை வச்சு மிதிக்கிறீங்க.''

வீட்டின் பால்கனியிலிருந்து வேடிக்கை பார்த்த அவளுடைய அப்பா சந்தானம் அங்கிருந்தே குரல் கொடுத்தார்.

''ஏய், ஜோதி... காலேஜுக்கு நேரமாகலை? இது என்ன விளையாட்டு?''

''சொன்னேனில்லம்மா, ஓரமா நிறுத்திடுங்க.''

ஜோதி மூச்சிரைப்பும் புன்னகையுமாக கடைசி சில கஜங்களையும் மிதித்து விட்டு ரிக்ஷாவை ஓரம் கட்டினாள். இறங்கினாள்.

''தேங்க்யூ தாத்தா'' என்று வீட்டிற்குள் ஓடினாள்.

''ஏய், கழுதை. காலேஜுக்கு கிளம்பற நேரத்துல ட்ரெஸ் பண்ணிக்கிட்டு இப்படிதான் ரிக்ஷா மிதிப்பாங்களா? பாரு. உடம்பெல்லாம் வேர்த்துவிட்டிருக்கு.''

படபடத்த அம்மாவை, கன்னத்தில் வியர்வையுடன் முத்தமிட்டாள். சரசரவென படிகளில் ஏறி மாடிக்குச் சென்றாள்.



''சும்மா ஒரு ஜாலிக்குதான் அப்பா. ரொம்ப நாளா இந்த ரிக்ஷா ஓட்டிப் பார்க்கணும்னு எனக்கு ஆசை.''

''ஏம்மா, இன்கம்டாக்ஸ் ஆபீசரோட பொண்ணு ரிக்ஷா ஓட்றதை ரோட்ல யாராவது பார்த்தா, என்ன நினைப்பாங்க?''

''என்ன நினைப்பாங்க? இத்தனை நாளா வெள்ளையும் சொள்ளையுமா ரிக்ஷாகாரங்களை தான் பார்த்திருக்கோம். இப்ப பாருடா நம்ப ஊருக்கு சும்மா தளதளன்னு ஒரு ரிக்ஷாகாரி வந்திருக்கா. இனிமே இவ ரிக்ஷாவுலதான் எங்க போனாலும் போகணும்னு நினைப்பாங்க.''

''நாக்கு மட்டும் இல்லேன்னு வச்சுக்க. உன்னை காக்கா கொத்திட்டுப் போயிடும்.''

கோபமாகப் பேசத் தொடங்கிய சந்தானம் சிரித்துக் கொண்டே, ''இன்னும் அஞ்சு நிமிஷத்துல கிளம்பினா நானே காலேஜ் வாசல்ல ட்ராப் பண்ணுவேன். இல்லேன்னா பஸ்சை பிடிச்சுதான் போணும்.''

''அஞ்சு நிமிஷமா? நாலே நிமிஷத்துல நான் ரெடி.''

'அம்மா டிபன்' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஜோதி படிகளில் தாவி இறங்க ஆரம்பித்தாள்.

## 2

கோவையின் அந்தப் பெண்கள் கல்லூரியை தாண்டியதும் பஸ் நிறுத்தத்துக்கு வந்தது. சூர்யா கூட்டத்தை விலக்கிக் கொண்டு படிகளில் இறங்கினான். அவன் இறங்கும் பொழுதே, பஸ்சிற்குள் ஏறிவிடும் உந்துதலோடு சில இளைஞர்கள் அவனை தள்ளிக்கொண்டு பஸ்சிற்குள் ஏறினர். கடைசிப் படியி

லிருந்து அவனை இறங்கவிடாமல் மறித்து ஏறிய இளைஞனின் சட்டையை சூர்யா கொத்தாகப் பற்றினான். அப்படியே பின்புறம் தள்ளினான். அந்த இளைஞனும், அவனுக்கு பின்னால் ஏற முயன்ற மூன்று இளைஞர்களும் சூர்யாவின் ஆக்ரோஷ பலத்தில் பிடிப்பு இழந்து சாலையில் மல்லாந்தனர்.

சூர்யா இறங்கினான்.

முகத்தில் நெருப்பு தகித்தது.

''ஏய், இறங்கிறவங்களுக்கு முதல்ல வழி விடுங்க.'' என்று சொல்லிவிட்டு நகர ஆரம்பித்தான்.

கீழே விழுந்த இளைஞர்களில் ஒருவன் சரக்கென்று எழுந்து, பாய்ந்து சூர்யாவின் சட்டையைப் பிடித்தான். பிடித்த வேகத்திலேயே சூர்யாவை திருப்பினான்.

''என்னடா, ஸ்டூடண்ட்ஸ் கிட்ட உன் திமிர் காட்டுற.''

சொல்லி முடித்ததும், சூர்யாவின் முஷ்டி பறந்து வந்தது. இளைஞனின் இடது கன்னத்தில் ராக்கெட்போல தாக்கியது. இளைஞன் அப்படியே பக்கவாட்டில் எகிறி விழுந்தான். வாயிலிருந்து ரத்தம் எட்டிப் பார்த்தது. சூர்யா முகத்தை மிகக் கடுமையாக வைத்து விரலை மிரட்டுவது போல் ஆட்டினான். மற்ற இளைஞர்கள் அவனுடன் எந்த வம்புக்கும் போகாமல் பின் வாங்கினர். கலைந்த சட்டையை சரி செய்து கொண்டு சூர்யா அந்த பெண்கள் கல்லூரியை நோக்கி நடந்தான். அடிபட்ட இளைஞனை மற்ற இளைஞர்கள் கைதூக்கிவிட, கலவரத்தில் ஈடுபடாமல் அவர்கள் பஸ்சில் ஏறினர்.

கல்லூரி துவங்குவதற்கு இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. கார்களிலும், பைக் பில்லியன்களிலும், ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டும், பஸ்சில் இறங்கி தெருவைக் கடந்தும், பெண்கள் சின்னச் சின்ன குழுக்களாக வந்து கொண்டே இருந்தனர்.



சூர்யா சாலையை கடந்தான். எதிர்ப்புறம் இருந்த பஸ் ஸ்டாப்பில் இருந்த குறுக்கு சுவரில் ஏறி அமர்ந்தான்.

அங்கிருந்து கல்லூரியின் வாசல் மிகத் தெளிவாக தெரிந்தது. கல்லூரிக்குள் நுழையும் ஒவ்வொரு பெண்ணையும் அவனது விழிகள் நோட்டமிட்டன. ஆனால், இளம் பெண்களைப் பார்க்கும் உற்சாகம் எதுவும் அந்த கண்களில் இல்லை. போர்க்களத்தில் எதிரியுடன் மோதும் ஒரு வீரனின் வேகம்தான் அந்த கண்களில் தெரிந்தது. பெண்கள் கல்லூரி வாசலில் நுழைய நுழைய அவ்வப்போது சூர்யா தன் பாக்கெட்டில் கை விட்டு ஒரு போட்டோவைக் கையில் எடுத்தான்.

அந்த போட்டோ சற்று தொலைவிலிருந்து 'க்ளிக்' செய்யப்பட்ட ஒரு புகைப்படம். புகைப்படத்தில் தான் படம் பிடிக்கப்படுகிறோம் என்பது தெரியாமலேயே கோவிலில் இருந்து வெளியே வரும் பெண்.

கல்லூரிக்குள் நுழையும் ஒவ்வொரு முகத்தையும் போட்டோவில் இருக்கும் முகத்துடன் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டிருந்தான் சூர்யா.

இவள் இல்லை.

இவளா?

இவளும் இல்லை.

இதோ ஸ்கூட்டரில் வருகிறாளே, இவளா?

இல்லை. இவளும் இல்லை.

ஒவ்வொரு பெண்ணாக அவன் நிராகரித்துக் கொண்டே வந்தான். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் அந்த இடத்தை விட்டு அசையாமல் அவன் அங்கு அமர்ந்திருந்தான்.

கல்லூரி துவங்குவதற்கான மணி அடிக்கப்பட்டு, கல்லூரி கதவுகள் மூடப்பட்டன.

சூர்யா சலிப்புடன் தரை இறங்கினான்.

புகைப்படத்தை பாக்கெட்டில் செருகிக் கொண்டு, பக்கத்து கடை சென்று 'ஒரு பன்னீர் சோடா' என்றான்.

## 3

சிக்னல் சிவப்புக்கு மாறியது.

சூர்யா மோட்டார் சைக்கிளை பிரேக் அடித்து நிறுத்தினான். காதுகள் சூடாகியிருந்தன. ஐந்து நிமிடங்களுக்கு முன்பு பெட்ரோல் பங்கில் சில பாயிண்டுகள் ஏமாற்ற முயற்சி செய்த பணியாளனிடம் சண்டை போட்டுவிட்டு வந்திருந்தான். அந்த சண்டையின் ரீங்காரம் இன்னும் மண்டைக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

''ஐயா.''

குரல் கேட்டு நிமிர்ந்தான்.

தோளில் குழந்தையை சார்த்திக் கொண்டு சுருக்கங்கள் நிறைந்த முகத்துடன் பிச்சை எடுக்கும் பெண்.

சூர்யா அவளை இரக்கமின்றி பார்த்தான்.

''ஐயா... டீ காசு குடுங்கையா.''

சூர்யா முகத்தை திருப்பிக் கொண்டான். அப்படி திருப்பியபோது, வெகு தற்செயலாகத் தான் எதிர்ப்பக்கம்



சிக்னலுக்காக காத்திருந்த அந்த பேருந்து கண்களில் பட்டது. வரிசையான ஜன்னல்களில் மூன்றாவது ஜன்னலில், பஸ்சிற்கு வெளியே உற்சாகமாக பார்த்துக் கொண்டிருந்த முகம். அவன் விழித்திரையில் பட்டது. மின்சார சாட்டையால் தீண்டப்பட்டவன் போல் சூர்யா விதிர்த்தான்.

'இவள்தான். இவள்தான்.'

அவசர அவசரமாக தன் பாக்கெட்டிலிருந்து அந்த புகைப்படத்தை எடுத்தான். ஒப்பிட்டுப் பார்த்தான்.

இவளேதான்.

எதிர்சாரிக்கு சிக்னல் மாறி, அந்த பேருந்து அவனை கடந்து சென்றது. சிக்னலை மீறி ப வளைவு எடுத்து அந்த பேருந்தை தொடர முடியாதபடி, நட்ட நடு சாலையில் போக்குவரத்து போலீஸ் நின்றிருந்தது.

சூர்யா பதைத்தான்.

எதிர்சாரிக்கு சிக்னல் முடிந்து, குறுக்கு சாலையின் இரண்டு சிக்னல்களும் முடிந்த பிறகுதான் அவனுக்கு பச்சை விழுந்தது. வெகு தூரம் சென்று வண்டியை வளைத்து திருப்பி எடுத்துக் கொண்டு எவ்வளவோ வேகமாக விரட்டிப் பார்த்தும், பேருந்தை அவனால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

மோட்டார் சைக்கிளை சாலையோரம் ஒதுக்கி நிறுத்தினான். பேருந்தின் வழித்தட எண்ணை மனதில் நினைவு படுத்திப் பார்த்தான். அந்த வழித்தடத்தில் எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன. அவனிடம் இருந்த வரைபடத்தை விரித்து வைத்துக் கொண்டு உன்னிப்பாகப் பார்த்தான்.

மூன்று கல்லூரிகள் அந்த மூன்றில் ஒரு கல்லூரியில் தான் அவள் படித்துக் கொண்டிருக்கிறாள். இன்னும் இரண்டு நாட்களுக்குள் எப்படியாவது அவளை கண்டு பிடித்தாக வேண்டும்.

சூர்யா செலுத்தப்பட்டவன் போல மோட்டார் சைக்கிளை கிளப்பினான்.

சீறி விரைந்தான்.

## 4

அடுத்த இரண்டு நாட்கள் சூர்யா அந்த கல்லூரி வாசல்களில் செலவழித் தான். முதல் இரண்டு கல்லூரிகளிலும் அவள் இல்லை. அவள் ஏறியிருந்த அந்தப் பேருந்து புறப்படும் இடத்தி லிருந்து பயணம் செய்து கூட பார்த்தான். ஆனால், அவள் மறுபடி கண்களில் இடறவே இல்லை.

இரண்டாவது நாளும் முடிவுக்கு வந்தபோது சூர்யா வுக்கு மனதில் வலித்தது.

வெள்ளிக்கிழமை மாலை நேரமும், கல்லூரி விடுகின்ற சமயத்தில் காத்திருந்து முகங்களை தேடித் தேடி சலித்து விட்டான்.

அவள் இல்லை.

ஒருவேளை கல்லூரி செல்வதையே நிறுத்தி விட்டாளோ?

குழப்பமாக இருந்தது.

வெள்ளிக்கிழமை ஊட்டி செல்லும் கடைசி பேருந்தில் அவன் ஏறினான்.



## 5

“இன்னிக்கு சனிக்கிழமை. காலேஜ் கிடையாது. இது நாலாவது தடவை உங்கிட்ட சொல்றேன்.”

அம்மாவிடம் சிணுங்கி விட்டு, போர் வையை தலைவரை போர்த்தி ஒடுங்கிப் படுத்தாள் ஜோதி.

சென்னையை விட கோவை அதிகக் குளிராக அவ ளுக்குத் தோன்றியது.

“இன்னிக்கு மருதமலைக்குப் போகலாம்னு சொல்லிட் டிருந்தியே ஜோதி நீ தூங்கி எழுந்து போறதுக்குள்ள, கோயிலையே மூடிடுவாங்க.”

அம்மா சரியான அஸ்திரத்தைப் பயன்படுத்தினாள். விருட்டென்று போர்வை விலகியது. ஜோதியின் நிலவு முகம் எட்டிப் பார்த்தது.

“மணி என்ன சொன்ன?”

“எட்டு.”

“ஐயையோ.”

போர்வையை முற்றிலுமாக விலக்கி விட்டு ஜோதி பாய்ந்து இறங்கினாள்.

## 6

மலைகளின் ராணி என்று அழைக் கப்படும் ஊட்டி நீல மலைத் தொட ரின் ஒரு வெற்றிச் சின்னமாக ஊட்டி ஏராள வளைவுகளை சந்தித்துவிட்டு பேருந்து பெருமூச்சுகளோடு ஊட்டி பேருந்து நிலையத்தில் நுழைந்து நின்றது.

சூர்யா இறங்கினான். குளிர் எலும்புகளை தொட்டது. சீண்டியது. குறுகுறுத்தது. தன் ஜெர்கினை இன்னும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். ஆட்டோ பிடித்தான். 'பச்சை வயல்' என்றான். ஆட்டோ பயணத்தின் போதும் குளிர் அவனை குலுக்கியது. பச்சை வயல் என்று போர்டு வைத்த ஒதுக்குப் புறமான பகுதியில் ஆட்டோ நுழைந்தது.

''அந்த கடை கிட்ட நிறுத்திக்கங்க.''

சூர்யா சொன்ன கடை அருகில் ஆட்டோ நின்றது. பணத்தைக் கொடுத்து விட்டு சூர்யா இறங்கினான்.

சற்று தூரம் பயணம் செய்ததும், சாலையிலிருந்து அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருந்த வெளிச்சம் கூட முற்றிலும் அற்றுப் போனது. கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் நடந்ததும் பாதை சரேலென்று முடிவுக்கு வந்தது. சூர்யா அங்கிருந்து விலகி சரிவில் பதிந்திருந்த ஒற்றைப் பாதையை தேர்ந்தெடுத்தான். தன் உடலை முன்னுக்கு தள்ளி பாலன்ஸ் செய்தபடி கொஞ்சம் கொஞ்சமாக ஏறினான். இருளில் பாதை சரிவர தெரியாத சமயங்களில் பாக்கெட்டிலிருந்து சிறு டார்ச் எடுத்து பற்களால் கவ்விக்கொண்டு பாதைக்கு வெளிச்சம் போட்டுக் கொண்டான். மேலே... மேலே... மேலே ஏறி முடித்ததும் மீண்டும் ஒரு மண் பாதை.

மண் பாதையை ஒட்டி, சலசலத்து ஓடும் சில்லென்ற ஓடை. சூர்யா இன்னும் சற்று தூரம் நடந்து, அந்த ஓடை குறுகிய ஒரு இடத்தில் உருண்டு கிடந்த பாறைகளை மிதித்து அதை கடந்தான். மரங்களும்... மரங்களும் அடர்ந்திருந்த அந்த பகுதியில் டார்ச் வெளிச்சம் வழி காட்ட கொஞ்சம் கொஞ்சமாக நடந்தான். வெளி



உலகிலிருந்து முற்றிலும் மறைக்கப்பட்டது போல் ஒதுக்கப்பட்டிருந்த ஒரு பகுதியில் அந்த சிறு மரக்குடில் இருந்தது. அதன் உச்சியிலிருந்து மங்கலான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சூர்யா அந்த வெளிச்சத்தை பார்த்ததும் உற்சாகமானான்.

டார்ச்சை அணைத்து விட்டால் நிச்சயமாக ஏதாவது ஒரு மரத்தில் மோதி அவன் பயணம் அவசர நிறுத்தத்துக்கு வந்து விடும். இன்னும் சில பல கஜங்களை கடந்தான். அந்த வீட்டை நெருங்கினான். அழைப்பு மணியை இரண்டு முறை அழுத்தினான்.

உள்ளேயிருந்து பானுவின் குரல் பாய்ந்து வந்தது.

''அண்ணன் வந்தாச்சு.''

கொலுசு கால்கள் ஓடிவந்தன. கதவைத் திறந்தன. சூர்யா நுழைந்தான்.

''என்னண்ணா, இன்னைக்கு இத்தனை லேட்...?''

சூர்யா பதில் சொல்லாமல் அங்கிருந்த மர நாற்காலியில் அமர்ந்தான்.

''உங்களைதாண்ணே கேக்கிறேன்.''

சூர்யா அப்போதும் பதில் சொல்லவில்லை.

பானு உள்ளே பார்த்துத் திரும்பினாள்.

''பாருங்கம்மா. நான் கேட்டா பதிலே சொல்லமாட்டேங்குது.''

''ஏன் லேட்டாச்சுன்னு காரணம் கேட்டு என்னம்மா சாதிக்கப் போற. அண்ணன் களைச்சுப் போய் வந்திருக்கானே சாப்பிடறயா... அப்படின்னு கேக்கணும்னு தோணுதா உனக்கு. சூர்யா சாப்பிட வர்றியா?''

சூர்யா அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

ஐம்பதைத் தாண்டிவிட்ட வயது. தெளிவான லட்சண மான முகம். ஆனால் அதில் மையமாக இருக்க வேண்டிய குங்குமம் இல்லை. காதுகளில் தங்கத்தில் புள்ளி வைத்தது போல சின்னச் சின்ன தோடுகள். கழுத்தில் பென்சிலால் கோடு போட்டது போல மெல்லிய தங்கச் சங்கிலி. இந்த ஆபரணங்கள் கூட சூர்யா வற்புறுத்தி, பிடிவாதம் பிடித்ததால் மட்டுமே அணியப்படுகின்றன.

''நான், போய் கை, கால் கழுவிவிட்டு வந்திடறேன். தட்டை போடுங்க.''

சூர்யா எழுந்து அந்த வீட்டின் பின்புறம் சென்றான். பானு 'வெவ்வே' என்பதுபோல் அவனுக்கு அழகு காட்டி விட்டு தட்டை கழுவி வைக்க நகர்ந்தாள்.

வீட்டின் பின்புறம் அடர்ந்திருந்த இருட்டில் சூர்யா தண்ணீரை வாளியிலிருந்து மொண்டு கைகளையும் கால்களையும் கழுவிக் கொண்டான். வானத்தில் நூறா யிரம் நட்சத்திரப் பொத்தல்கள். திடீரென்று சூர்யா விறைத் தான். பக்கத்து ஜன்னலில் இருந்து 'ம்... ம்...' என்று ஒரு முனகல் ஜன்னல் கதவு உள்ளேயிருந்து கூரிய நகங்களால் சுரண்டப்படும் 'க்ரக்... க்ரக்...' என்ற ஒலி.

சூர்யா செம்பை கீழே வைத்துவிட்டு அவசரமாக வீட் டிற்குள் வந்தான். கிச்சனில் நுழைந்தான். அங்கு தட்டு போட்டு மூடி வைக்கப்பட்ட ஒரு ட்ரே. ட்ரேவை திறந் தான். உள்ளே சில ரொட்டி துண்டங்களும் வட்டமாக வெட்டப்பட்ட தக்காளி, வெங்காயம்' வெள்ளரி போன்ற காய்களும் அடுக்கப்பட்டிருந்தன.

''இன்னும் சாப்பாடு குடுக்கலை?''



சூர்யாவின் குரல் பானுவை நோக்கித் திரும்பியது.

''இல்லண்ணா, இன்னைக்குத்தான் நீங்க வந்திடுவீங் களே. நீங்களே குடுப்பீங்கன்னு...'' பானு இழுத்தாள்.

''பரவாயில்ல சூர்யா. முதல்ல நீ சாப்பிடு. அப்புறம் அதுக்கு குடுக்கலாம்.''

''இல்லம்மா. எனக்கே பசிக்குதுன்னா...'' சூர்யா வாக் கியத்தை முடிக்காமல், அந்த ட்ரேயை எடுத்துக் கொண்டு அந்த ஹால் பகுதியிலிருந்து வெளியே வந்தான்.

அந்த மரவீடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. ஒரு பகுதியில் பானுவும், அம்மாவும் வாழும் இடம். இன்னொரு பகுதி சற்று தனிமைப்படுத்தப்பட்டு இருந்தது. பூமி இயற்கையாகவே சரிந்து உள் வாங்கி யிருந்ததால் மரத்தால் ஆன படிகளில் இறங்கி பூட்டப் பட்ட ஒரு கதவை அடைந்தான் சூர்யா. அங்கு சுவரில் முக்கோணமாக வெட்டப்பட்ட பிறையில் இருந்து விரல் நீளத்திற்கு ஒரு சாவியை எடுத்தான். சட்டென்று மேலே யிருந்த மின் விளக்கு விழித்தது. சூர்யா திரும்பிப் பார்த் தான். சுவிட்சை போட்டு விட்டு பானு அங்கே நின்றிருந் தாள்.

''நான் கதவை திறக்கப் போறேம்மா. இப்ப எதுக்கு லைட்டை போட்ட. அணைச்சுடு.''

''இல்லண்ணா, எனக்கு பயமா இருக்கு.''

''எதுக்கு பயப்படுகிற. இது என்ன எனக்கு புதுசா...?''

சூர்யா இன்னொரு முறை அழுத்திச் சொன்னதும் பானு சுவிட்சை அணைத்தாள்.

சூர்யா மெலிதாக வெளிச்சத்தை வீசும் சிறிய டார்ச்சை பற்களுக்கிடையில் கவ்விக் கொண்டான். சாவி போட்டு

அந்த கதவைத் திறந்தான். சாவியை மீண்டும் அந்த பிறையிலேயே வைத்துவிட்டு, கதவை அழுத்தி திறந்து சரேலென்று உள்ளே நுழைந்தான். நுழைந்த வேகத்தி லேயே கதவை உட்புறம் தாளிட்டான். அவன் தாளிட்ட ஒலி கேட்டதும் பானு விளக்கைப் போட்டாள்.

மின்சார வெளிச்சம் அந்த சரிந்த படிகளில் இப்போது பாய்ந்தது. குறுகலான இரண்டு சுவர்களுக்கு இடையில் படிகள் இறங்கி, அகலமான அந்த மரக்கதவை அடைந் திருந்தன.

பானு மேல் படியில் உட்கார்ந்து, முழங்கால்களில் முழங்கைகளை ஊன்றி, உள்ளங்கைகளில் முகத்தைத் தாங்கி அமர்ந்தாள். அவள் இதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. உள்ளே கால்கள் நடமாடும் சத்தம். திடீரென்று திமுதிமு என்று ஓட்டமும், தொமீல் என்று யாரோ எதன் மீதோ மோதுவது போன்ற பெரும் ஒலியும் கேட்டன.

''அம்மா...'' என்று சூர்யாவின் குரல் வலியோடு ஒலித்தது.

பானு பதறினாள். படிகளில் தாவி இறங்கி கதவை தட்டினாள்.

''அண்ணா... அண்ணா... உங்களுக்கு ஒண்ணும் இல்லையே.''

''ஒண்ணுமில்ல...'' என்ற சூர்யாவின் குரல் பெரும் மூச்சிரைப்பினூடே வந்தது.

பானுவின் கைகளும் கால்களும் உதறின. சில படிகள் ஏறி அமர்ந்தாள். பிறையில் இருக்கும் சாவியை எடுத்துத் திறந்து உள்ளே நுழைய வேண்டும் என்று ஒவ்வொரு



முறையும் எழும் ஆர்வத்தை அடக்கிக் கொண்டாள். அடுத்த முறை சூர்யாவிடம் அடம் பிடித்து அந்த அறைக்குள் நுழைந்து விட வேண்டும்.

பானு காத்திருந்த பொழுது அந்தப் பெரிய மரக்கதவின் கீழ்ப் பகுதியில் ஒரு அகலமான திறப்பு பிளந்தது. தரையை ஒட்டியிருந்த அந்த திறப்பின் மூலம் கரகர வென்று சப்தித்துக் கொண்டு காலி ட்ரே வெளியே வந்தது.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ட்ரேக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வெளியே வந்தன. அந்த ட்ரேக்கள் ஓரங்களில் நசுக்கப்பட்டும் வளைக்கப் பட்டும் வன்முறையாக கையாளப்பட்ட அடையாளங் களுடன் வெளியே வந்தன. அந்த ட்ரேக்களில் வைத்து அந்த வாரத்தின் முதல் ஐந்து நாட்கள் கொடுத்த உணவு கள். அந்த ட்ரேக்களின் வெவ்வேறு பகுதிகளில் தீற்றி காய்ந்து கிடந்தன. ஒரு ட்ரேயில் எறும்புகள் அப்பி யிருந்தன.

பானுவின் கண்களில் நீர் துளிர்த்தது. அந்த ட்ரேக் களை அள்ளிக் கொண்டு, படிகளில் ஏறி, வீட்டின் மறு பகுதிக்குச் சென்றாள். அம்மா அங்கே கவலையோடு உட்கார்ந்திருந்தாள்.

''பாவம் சூர்யா. முதல்ல அதுக்கு சாப்பாடு போட் டிருக்கலாம்.''

பானு அங்கே நிற்காமல், பரபரப்பாக வீட்டின் மறு பகுதிக்கு வந்தாள்.

இப்பொழுது அவள் கையில் புதிதாக ஒரு ட்ரே. அன்றைய சாப்பாடை சுமந்திருக்கும் ட்ரே. கதவின் அந்த திறப்பு வழியே பானு ட்ரேயை உள்ளே அனுப்பினாள்.

சரக்கென்று ட்ரே உள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டது. அதன்பின் உள்ளே சின்னச் சின்ன போராட்டங்களின் ஒலி. கதவுகளிலும், சுவர்களிலும் முதுகுகள் மோதும் சத்தம். எல்லாம் பானுவிற்குப் பழக்கமாகிப் போயிருந்ததால் கனத்த மனத்துடன் படிகளில் ஏறி அவள் வீட்டின் மறு பகுதிக்கு வந்தாள்.

கிட்டத்தட்ட ஐம்பது நிமிடங்களுக்குப் பிறகு மரக் கதவு திறக்கப்படும் ஒலி. சாவி நுழைக்கப்பட்டு கதவு தாளிடப்படும் ஒலி.

பானு பரபரப்பாக ஓடிப்போய் பார்த்தாள்.

கதவைப் பூட்டி, பிறையில் சாவியை வைத்துவிட்டு சூர்யா மெல்ல படிகளில் ஏறினான். அவனுடைய இடது கன்னத்தில் சூடு வைத்தது போல ஒரு சிவப்பு.

''ஐயோ... அண்ணா, அடிபட்டிச்சா?''

சூர்யா வறண்ட புன்னகையுடன் 'இல்லை' என்று தலையசைத்தான்.

அவனுடைய நெற்றியில் சில கீறல்கள். தலைமுடி வெகுவாக கலைக்கப்பட்டிருந்தது. சட்டையின் பாக்கெட் கிழிந்து தொங்கியது.

''என்னண்ணா... கவனமாக இருக்கக் கூடாது.''

அவளுடைய பதட்டத்தைப் பார்த்து சூர்யாவின் புன்னகை பெரிதானது. அவளை அன்பாக தலையில் தட்டிக் கொடுத்து, ''ஒண்ணும் இல்லடா. இதை எதுக்கு பெரிசு பண்ற. அம்மா காதுல விழுந்தா அவங்க வேற பதறிப் போவாங்க.''

சூர்யா மீண்டும் கொல்லைப்புறம் சென்று குளிர்ந்த நீரை முகத்தில் வாரி அடித்துக் கொண்டான். ஏற்கனவே



சுற்றுப்புறம் குளிர்ந்திருந்த நிலையில், குளிர் நீர் முகத்தில் பட்டதும் ஐஸ் கத்தி போல குத்தியது. முகத்தையும், கைகளையும் கழுவிவிட்டு தட்டிற்கு முன்னே வந்து அமர்ந்தான்.

''ஒண்ணும் பிரச்சனை இல்லையே'' என்றான்.

''இல்ல சூர்யா. ஆனா இன்னும் எத்தனை நாளைக்குதான் இப்படி...?''

அம்மா சொல்ல ஆரம்பித்தபோது சூர்யா உதடுகளில் விரலை வைத்து 'உஷ்' என்று அடக்கினான்.

''நான் உங்க ரெண்டு பேருக்கு ஒரு நல்ல நியூஸ் சொல்லப் போறேன்.''

பானு நிமிர்ந்தாள். சூர்யா பாக்கெட்டிலிருந்து புகைப் படத்தை எடுத்து அவர்களுக்கு மத்தியில் வைத்தான்.

''இவளை கண்டுபிடிச்சிட்டேன்.''

''நிஜமாவா...?''

பானு அதிர்ந்து நிமிர்ந்தாள்.

சூர்யா 'ஆம்' என்று தலையசைத்தான்.

''எந்த பஸ்ல போறான்னு பார்த்திட்டேன். ஆனா, எந்த காலேஜ்னு இன்னும் கண்டு பிடிக்கலை. கண்டு பிடிச்சுடுவேன். நிச்சயம் கண்டுபிடிச்சுடுவேன்.''

அம்மா அவனுக்கு இன்னொரு கரண்டி சாம்பாரை ஊற்றிக் கொண்டே, ''ஏம்பா சூர்யா, நான் சொன்ன பேச்சை நீ கேக்கப் போறதில்லைதானே.''

''நீங்க சொன்ன அத்தனை விஷயத்தையும் நான் கேட்டிருக்கேனே அம்மா. இந்த ஒரு விஷயத்துல என்னை என் போக்கிலேயே விட்டுருங்க.''

''வேணாம் சூர்யா. அந்தப் பொண்ணு பாவம். அவளை விட்டுடு.''

அம்மா இப்படிச் சொன்னதும் பானு கோபத்துடன் வெடுக்கென்று திரும்பினாள்.

''என்னம்மா பாவம். எப்படி இருந்த அண்ணன் இப்ப எப்படி இருக்கார். இதுக்கெல்லாம் யார் காரணம்? அந்த பொண்ணு தானே.''

''பானு நீயும் ஒரு பொண்ணு. நீ இதுல குறுக்கே பேசாத.''

''இல்லம்மா, சூர்யா செய்யறது கரெக்டுதான்.''

''சூர்யா, கொஞ்சம் யோசிச்சுப் பாருப்பா. நம்ம பானு போலத்தானே அந்தப் பொண்ணும். அவ போக்கில அவ போகட்டுமே. விட்டுடேன்.''

சூர்யா இடதும் வலதுமாக தலையை அசைத்தான்.

''இல்லம்மா, என்னால விட முடியாது. இந்த வீட்ல கொண்டு வந்து அவளை தள்ளற வரைக்கும் என் மனசு ஆறாது. என் உடம்பு ஓயாது. தயவு செஞ்சு இதப்பத்தி நீங்க மறுபடி பேசாதீங்க.''

அதற்கு அப்புறம் அந்த மூவருக்குள்ளும் எந்த வார்த்தையும் பரிமாறப் படவில்லை. வெளியே இருந்த இருளைப் போலவே உள்ளே மௌனம் அடர்ந்தது.

## 7

சூரியன் ஊட்டி குளிரின் அடர்ந்த மேகங்களை ஊடுருவிக் கொண்டு தன்னுடைய முதல் வெளிச்சத்தை மரங்களின் உச்சியில் தெளித்திருந் தான். காற்றில் குளிர் சீறியது. சற்று



மேடாக ஏறும் சாலையில் சூர்யா, பானு, அம்மா. மூவரு மாக உடலை சற்றே முன் தள்ளி ஏறினார்கள். அந்த பாதையில் ஏறி முடித்ததும், வளைந்து திரும்பும், தார் சாலை. அந்த கொண்டை ஊசி வளைவிலிருந்து சற்று தள்ளி பஸ்கள் நிறுத்தும் இடம்.

சூர்யா கைநீட்டி பானுவின் பின்னலை பிடித்து இழுத் தான்.

''ஏய், இன்னும் என் மேல கோபமா?''

கோபம் பிரதிபலிக்கும் முகத்தை திருப்பி, ''ஆமாம்'' என்று அசைத்தாள்.

''நீ விடுப்பா, அவ கோபத்துக்கெல்லாம் போய் விளக்க மெல்லாம் கேட்டுகிட்டு.''

''போண்ணா, ஒவ்வொரு நாளும் வெள்ளிக்கிழமை ராத்திரிதான் வர்றே. சனி, ஞாயிறு ரெண்டு நாளும் எங்களை தொரத்தி விட்டுற. திருப்பி ஞாயித்துக்கிழமை ராத்திரி வந்ததும் நீ புறப்பட்டுப் போயிடுற. வாரத்துல அஞ்சு நாள் தனியா நீயேதானே சமைச்சு சாப்பிடற. சனி, ஞாயிறுலயாவது உன்னை உக்கார வச்சு சமைச்சுப் போடணும்னு எங்களுக்கு ஆசை இருக்காதா?''

''இருக்கும். அதுக்கெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திரு. நேரம் கூடிவரும்.''

தூரத்தில் விளக்குகளை போட்டுக் கொண்டு பஸ் வருவது தெரிந்தது.

''சூர்யா.''

''என்னம்மா?''

''கவனமா இருப்பா.''

''நான் கவனமா இருக்கேம்மா. நீங்க நாளைக்கு திரும்பி வரும்போது கொஞ்சம் நேரத்திலேயே வந்திடுங்கம்மா. ரொம்ப இருட்டினப்புறம் இந்த பாதையிலயெல்லாம் வர வேண்டாம்.''

''சரிப்பா.''

சூர்யா தன் பையிலிருந்த ஒரு சாவிக் கொத்தை எடுத்து பானுவிடம் கொடுத்தான்.

''போய் அம்மாவை தொந்தரவு பண்ணாம இரண்டு நாள் சந்தோஷமா ஜாலியா இருந்திட்டு வா. வீட்டுக்கு பக்கத்திலேயே, கமலோட புதுப்படம் வந்திருக்கு போய் பாரு.''

''ஆமா, தனியா உட்கார்ந்து சாப்பிடணும், தனியா சினிமா போகணும். தனியா இருக்கணும். நீ கூட இருக்க மாட்டே. அப்படித்தானே?''

பஸ் மிக நெருக்கத்தில் வந்து நிறுத்தத்தில் நின்றது. சூர்யா அம்மாவையும், பானுவையும் உந்தித் தள்ளி முன்னால் கொண்டு சென்று பஸ்சில் ஏற்றி விட்டான். பஸ் ஏராள இரைச்சலுடன் புறப்பட்டு, திருப்பத்தில் திரும்பும் வரை அங்கேயே நின்றிருந்தான். காற்றில் குளிர் அபரிமிதமாக இருந்ததால் அவன் மூச்சு கூட புகை போல் வெள்ளையாக மாறிக்கொண்டிருந்தது.

பஸ் பார்வையிலிருந்து மறைந்ததும், சூர்யா வந்த வழியே அந்த வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## 8

ஞாயிற்றுக்கிழமை மாலை.

பானுவும் அம்மாவும் திரும்பி விட்டார்கள்.



''ஒண்ணும் பிரச்சனை இல்லையே?'' அம்மா தயக்கத்துடன் கேட்டாள்.

சூர்யா தலையசைத்தான். ''ஒண்ணும் பிரச்சனையில்ல.''

திங்கள் காலையில் சூர்யாவுடன் பேருந்து நிறுத்தத்திற்கு நடந்து வந்த பானு, ''அவ எந்த காலேஜ்னு இன்னைக்குக் கண்டு பிடிச்சுடுவியா அண்ணா'' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

''தெரியலைடா. அந்த பஸ் ரூட்ல மூணு காலேஜ் இருக்கு. மூணுத்தயும் நோட்டம் விடப் போறேன்.''

''கிடைச்சதும் எனக்கு போன் பண்ணணும் என்ன?''

''நீ அம்மாவை கவனமா பார்த்துக்க. நான் இல்லாத போது அந்த ரூமுக்குள்ள நுழைஞ்சிடாத.''

''ம்ஹூம்...'' என்று பானு அவசரமாக தலையை அசைத்தாள்.

பேருந்து நிறுத்தத்திற்கு வந்ததும், ''நீ போடா'' என்று அவளை அனுப்பி விட்டு, சூர்யா ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

இரண்டாவது நாளே சூர்யாவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பேருந்திலிருந்து இறங்கி, புத்தகங்களை மார்போடு அணைத்தபடி ஜோதி அந்த கல்லூரியில் நுழைந்தாள். சாலையில் எதிர்ப்பக்கம் உட்கார்ந்திருந்த சூர்யாவின் நரம்புகள் விறைத்தன.

தடதடவென்று ஓடி சாலையைக் கடந்து அவள் கூந்தலைப் பிடித்து இழுத்து நிறுத்தலாமா என்று ஒரு பரபரப்பு கூட அவனுள் எழும்பியது. சூர்யா தன்னை நிலைப் படுத்திக் கொண்டான். பிடித்துக் கொண்டிருந்த சிக

ரெட்டை கீழே போட்டு மிதித்து அணைத்தான். கூன் விழுந்த ஒரு கிழவி, "தம்பி, ஒரு பன் வாங்கிக் குடுப்பியா?" என்று நடுங்கும் குரலில் அவன் முன் வந்து நின்றாள்.

சூர்யா அவளை உதாசீனம் செய்து, ஜோதியின் மீதே பார்வையை பதித்திருந்தான். இன்னும் சில தோழிகளுடன் ஜோதி கல்லூரிக்குள் சென்று மறைந்தாள்.

"தம்பி, உன்னைத்தாம்பா. ரெண்டு நாளா சாப்பிடவே யில்ல."

கிழவி மீண்டும் சூர்யாவிடம் இறைஞ்சினாள். சூர்யா அவளை சற்றும் மதிக்காமல் விருட்டென்று திரும்பி தனது மோட்டார் சைக்கிள் நிறுத்தியிருந்த இடத்திற்கு நகர்ந்தான்.

## 9

தியேட்டரில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பேருந்திலிருந்தே கவனித்து விட்ட ஜோதியின் முகத்தில் ஏமாற்றம்.

"என்னக்கா...?"

தம்பி பிரபு அவள் வளையலைப் பிடித்து இழுத்தான்.

"டிக்கெட் கிடைக்காதுன்னு நினைக்கிறேண்டா."

"அதுக்குதான் அட்வான்ஸா புக் பண்ணிருக்கலாம்ல?"

"பண்ணல. திடீர்னு அப்பா பர்மிஷன் குடுப்பார்னு யாருக்குத் தெரியும்?"

"அக்கா... அக்கா... பிளாக்ல டிக்கெட் கிடைக்கும் அக்கா, வாங்கி பார்த்திரலாம்கா. திரும்பி வீட்டுக்குப் போக வேண்டாம்கா. அடுத்த தடவை அப்பா பர்மிஷன் தரமாட்டார்."



பிரபு அவளை கெஞ்சினான். அவனுடைய கரத்தை பற்றிக் கொண்டு ஜோதி மெல்ல தியேட்டர் காம்பவுண்டுக்குள் நுழைந்தாள். யாராவது ஏற்கனவே முன் பதிவு செய்து விட்டு கடைசி நிமிடத்தில் வர முடியாமல் போனால் நின்றிருந்து டிக்கெட்டை கொடுக்க மாட்டார்களா. ஆனால் அங்கும் இங்கும் வேகமாக கடந்து போனவர்கள் யாரிடமும் அப்படி கூடுதல் டிக்கெட் இருப்பதாகத் தெரியவில்லை. வெகு அருகில் திடீரென்று ஓர் ஆண் குரல்.

"40 ரூபாய் டிக்கெட் இருக்கு வேணுமாம்மா?"

"ஆமா, வேணும்."

அவளை முந்திக் கொண்டு பிரபு அவசரமாக சொன்னான்.

"ஒரு டிக்கெட் எண்பது ரூபா ஆகும்."

"என்னது நாப்பது ரூபா டிக்கெட் எண்பது ரூபாயா. அதெல்லாம் வேண்டாம்" என்று ஜோதி பிரபுவை இழுத்துக் கொண்டு அங்கிருந்து நகரப் பார்த்தாள்.

"அக்கா டிக்கெட் வாங்கிட்டுப் போகலாம்கா."

பிரபு நகர மறுத்து அடம் பிடித்தான். ஜோதி வலுக்கட்டாயமாக அவனை அங்கிருந்து நகர்த்திக் கொண்டு போனாள். கறுப்பு டிக்கெட் வைத்திருந்தவன் முன்னால் நிழலாடியது.

சூர்யா.

"மூணு டிக்கெட் குடுப்பா."

"டிக்கெட் எண்பது ரூபா."

"தெரியும்பா, மூணு டிக்கெட் குடு."

சூர்யா பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து நீட்டி னான். மூன்று டிக்கெட்டுகளை வாங்கிக் கூட்டத்திற்குள் நுழைந்தான். தியேட்டரின் இன்னொரு வாசலில் வெளிப் பட்டு, சற்று சுற்றிக் கொண்டு மீண்டும் தியேட்டரில் நுழைந்தான். அப்போதுதான் நுழைபவன் போல, பார்வையால் அங்கும் இங்கும் மேய்ந்துவிட்டு ஜோதியும் பிரபுவும் நின்றிருந்த இடம் நோக்கி நகர்ந்தான்.

''எக்ஸ்க்யூஸ் மீ...''

ஜோதி சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

''நீங்க டிக்கெட்டுக்காக வெயிட் பண்றீங்களா?''

ஜோதி மிகச்சின்னதாக தலையசைத்து 'ஆமாம்' என்றாள்.

''என்கிட்ட ரெண்டு டிக்கெட் எக்ஸ்ட்ராவா இருக்கு. வேணுமா?''

''என்ன விலை ஆகும்?''

''நான் கவுண்டர்ல நாற்பது ரூபாய் கொடுத்து வாங்கி னேன். அந்தப் பணத்தைக் கொடுத்தாலும் சரி, இல்ல அதுக்குக் கம்மியா கொடுத்தாலும் சரி'' சூர்யா புன்னகைத்தான்.

கடந்த சில மாதங்களாக சூர்யாவுடன் இருந்திருந்தால் இது போன்ற வசீகரமான புன்னகை அவன் உதடுகளுக்கு பரிச்சயம்தானா என்று ஆச்சரியமாக இருந்திருக்கும்.

''தாங்க்ஸ்.''

ஜோதி நன்றிப் புன்னகையுடன் பர்சை திறந்து பணத்தை எடுத்தாள்.

''ஏங்க, இங்க பணத்தை எடுக்காதீங்க. நான் ஏதோ பிளாக்ல டிக்கெட் விக்கிறதா நினைச்சுப்பாங்க. இன்டர் வெல் அப்ப வாங்கிக்கறேனே.''



இரண்டு டிக்கெட்டுகளை பிரபுவிடம் திணித்து விட்டு சூர்யா வேகமாக நகர்ந்து விட்டான். ஜோதி சற்று தயங்கி விட்டு பர்ஸை மூடினாள்.

''வாக்கா. படம் ஆரம்பிச்சுடப் போவுது'' என்று பிரபு அவசரப்படுத்தினான்.

இப்பொழுது கூட்டத்தைப் பார்த்த பொழுது ஜோதிக்கு திடீரென்று தன்னம்பிக்கை வந்து விட்டது. 'என்னிடம் டிக்கெட் இருக்கிறது' என்று இரைச்சலோடு கூறி எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும் போல இருந்தது. பிரபுவின் கையை பிடித்துக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தாள். அவர்கள் இருவருக்கும் அடுத்த இருக்கை காலியாகவே இருந்தது. படம் ஆரம்பிக்கும் வரை அந்த இடத்திற்கு யாரும் வரவில்லை.

இந்திய செய்திப் பிரிவின் வறண்ட குரலில் ஜெயப் பிரகாஷ் நாராயணனின் வாழ்க்கை சரித்திரம் ஓடத் தொடங்கியபோது தியேட்டரின் இருட்டில் அந்த இருக்கையில் வந்து அமரும் சூர்யாவின் பக்கவாட்டுத் தோற்றம் புலப்பட்டது. சூர்யா தன் கையில் இருந்த பாப்கார்ன் பாக்கெட்டை பிரபுவின் மடியில் வைத்தான்.

''தேங்க்யூ அங்கிள்.''

ஜோதி பர்ஸை திறக்க முயன்றாள்.

''படம் ஆரம்பிக்கப் போவுது. நான்தான் இன்டர் வெல்ல வாங்கிக்கறேன்னு சொன்னேனே.''

செய்திப் பிரிவின் படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டு திரை நிறைய வெளிச்சத்தை பாய்ச்சிக் கொண்டு திரைப் படம் துவங்கியது.

சூர்யா கண்களை மூடி, சற்றே தளர்ந்து அமர்ந்து கொண்டான். இடைவேளை வரை யார் வந்தார்கள், யார் போனார்கள், என்ன பாடல் ஒலித்தது என்று எதுவுமே அவனுக்குப் பதிவாகவில்லை. அவ்வப்போது பக்கத்து இருக்கைகளில் பிரபுவும், ஜோதியும் பொங்கி சிரிப்பதும் உணர்ச்சி வசப்படுவதும் ஒலிக்குறிப்புகளாக மட்டுமே அவனை எட்டிக் கொண்டிருந்தன.

இடைவேளையில் திரைப்படம் நிறுத்தப்பட்டு திரை யரங்கின் எல்லா விளக்குகளும் விழித்துக் கொண்ட போது, அத்தனை நேரம் படம் பார்த்தவன் போல சூர்யா கைகளை உயரே தூக்கி சோம்பல் முறித்தான். ஜோதி அவசரமாக பர்ஸை திறந்து பணத்தை எடுத்தாள்.

''அட, நான் எங்க ஓடிடப் போறேன்.''

''இல்ல, வாங்கிக்கங்க.''

பணத்தை அவன் கையில் திணித்தாள். சூர்யா எண் ணிப் பார்த்தான்.

''என்ன, தொண்ணூறு ரூபாய் இருக்கு? நான் வாங்கின விலைக்கு தானே டிக்கெட் குடுத்தேன்.''

''இல்ல, எண்பது ரூபாய் டிக்கெட்டுக்கு பத்து ரூபாய் பாப்கார்னுக்கு.''

''அந்தளவுக்கு கணக்கு பார்ப்பீங்களா நீங்க.'' சூர்யா மெல்லப் புன்னகைத்தான். பத்து ரூபாயை மடித்து, பிரபுவின் சின்ன பாக்கெட்டில் சொருகினான்.

''அடுத்த தடவை சேர்ந்து படம் பார்க்கும்போது எனக்கு பாப்கார்ன் வாங்கிக் குடுங்க. கணக்கு சரியாயிடும்.''

ஜோதி முதன் முறையாக சரியான வெளிச்சத்தில் சூர்யாவை பார்த்தாள். தியேட்டர் வாசலில் பார்த்தபோது சரியாகப் பதிவாகாத முகம்.



என்ன வசீகரமான ஒரு முகம். வெளிச்சம் சிந்தும் கண்கள். நேரான நாசி. உறுதியான உதடுகள். நிமிர்ந்த முகம். பரந்த மார்பு. உதடுகளில் எப்பொழுதும் நட்புக்கு ஏங்கும் ஒரு புன்னகை.

''எம்பேரு சூர்யா.''

திடீரென்று அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் ஜோதி சற்று தடுமாறினாள். முன்பின் அறியாத ஒருவனிடம் தன் பெயரை சொல்வதில் சின்ன தயக்கம் இருந்தது.

''நான் பிரபு. அஞ்சாங்கிளாஸ் படிக்கிறேன். இது என் அக்கா ஜோதி. காலேஜ் செகண்ட் இயர்.''

''நைஸ் மீட்டிங் யூ'' சொல்லிவிட்டு சூர்யா திரையைப் பார்த்து திரும்பி அமர்ந்து கொண்டான். என்ன பேசுவ தென்று புரியாமல் ஜோதி தடுமாறி விட்டு அவளும் திரையைப் பார்க்கத் துவங்கினாள்.

திரைப்படம் முடிவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும் பொழுதே சூர்யா இருக்கையிலிருந்து எழுந்தான். அவனுக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்திருந்த பிரபு விடமும் அடுத்திருந்த ஜோதியிடமும் 'ஸாரி... ஸாரி...' என்று முணுமுணுப்பாக கூறிவிட்டு வெளியே வந்தான். ஏன் படம் முடியும் வரை அவன் இல்லை என்று கேட்க ஜோதிக்கு ஆவல் எழுந்தாலும் கூச்சம் அவளைத் தடுத்தது.

சூர்யா நிற்காமல் பரபரப்பாக நடந்து கதவைத் திறந்து தியேட்டரை விட்டு வெளிப்பட்டான். திரைப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் இருக்கைகளின் நுனிகளில் உட்கார்ந்து ரசிகர்கள் முழு அமைதி காப்பதை பல காட்சிகள் பார்த்து வந்திருந்த பணியாளர்களுக்கு சூர்யா

அந்த முக்கியமான காட்சிகளை தவிர்த்து விட்டு வெளியே வந்தது ஆச்சரியமாக இருந்தது.

சூர்யா படிகளில் இறங்கி, தியேட்டரை விட்டு வெளிப்பட்டு தனது மோட்டார் சைக்கிள் நிறுத்தியிருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

## 10

நகரமே உறங்கி விட்டது. சூர்யா விழித்திருந்தான். ஜன்னலுக்கு வெளியே பார்வையை எறிந்தபோது கட்டிடங்களும் விளக்குகளை அணைத்திருந்தன. சாலைகளும் குறுக்குத் தெருக்களும் கூட வெறிச்சோடியிருந்தன.

சூர்யாவால் உறங்க முடியவில்லை. மறுபடி மறுபடி தியேட்டரில் பக்கவாட்டில் அமர்ந்து சந்தித்த ஜோதியின் முகமே மனதில் வந்து வந்து போனது. அவனுடைய அந்த லாட்ஜ் அறையின் நீளத்தையும் அகலத்தையும் எத்தனை முறை நடந்து பார்ப்பது?

கால்கள் கெஞ்சின, இரவு சாப்பாட்டை தவிர்த்திருந்ததால் வயிற்றுக்குள் பசி பசி என்று அமிலம் அலறியது. சூர்யா பானையிலிருந்து சிறிது நீரை சரித்து அருந்தினான். கண்ணாடிக்கு எதிரில் போய் தன் முகத்தை மீண்டும் பார்த்தான். அவனுடைய முகமே அவனுக்கு அச்சுறுத்தலாய் இருந்தது. யாரோ நண்பனிடம் பேசுவதுபோல அவன் தனது பிம்பத்தில் பேச ஆரம்பித்தான்.

''ஏண்டா, எத்தனை நாளா அந்தப் பெண்ணை தேடிட்டு இருக்க. கைக்கெட்டுற தூரத்துல உக்கார்ந்து சினிமா பார்த்தா தரதரன்னு அவளை இழுத்திட்டு வந்திருக்க வேண்டாம்.''



''முட்டாள். இப்படி இழுத்துட்டுப் போனா நீ நினைச்ச காரியம் நடக்குமா?''

''ஆனா என்னால சும்மா வேடிக்கை பார்த்துட்டு உக்கார முடியலையே, கையும் காலும் பரபரக்குதே.''

''அந்த பரபரப்புதான் தப்பான முடிவு எடுக்க வைக்கும். கொஞ்சம் அமைதியாக இரு. எப்ப உன் கண்ணில் பட்டுட்டாளோ, இனிமே அவளுக்கு விடிவு காலமே கிடையாது. அவசரப்பட்டு அள்ளித் தெளிச்சா காரியம் குட்டிச் சுவராயிடும். ஒவ்வொரு காயையும் நிதானமா திட்டம் போட்டு நகர்த்தணும்.''

சொன்ன வேகத்தோடு கண்ணாடியிலிருந்து திரும்பி அவன் மீண்டும் ஜன்னலுக்கு வந்தான். ஜோதியை பார்த்ததிலிருந்து அவன் உடலில் ஊற்றெடுத்திருக்கும் பரபரப்பிற்கும், அவனுடைய மனதில் சுரந்த சுறுசுறுப்பிற்கும் ஒரு போராட்டம் துவங்கியிருந்தது. இறுதியில் மனம் வென்றது.

கட்டிலில் வந்து அமர்ந்தான். தலையணையை ஓங்கி குத்தினான். பரபரப்பாக எழுந்தான். அவன் சட்டையில் எப்பொழுதும் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் ஜோதியின் புகைப்படத்தை எடுத்தான். கட்டிலில் வைத்தான். பேனாவை எடுத்து அந்த முகத்திற்கு மேலே எக்ஸ் குறி இட்டான். குறி இட்டதை வட்டமிட்டான். ஜோதி இப்பொழுது வட்டமான சிறை ஜன்னலுக்குப் பின்னால் இருப்பது போன்று தோன்றியது. அதிலும் திருப்தி வராமல் பேனாவை கத்தி போல பிடித்து அந்த அழகான முகத்தில் முழு வேகத்தோடு இறக்கினான். பேனாவின் முனை புகைப்படத்தை குத்திக் கிழித்து அதே வேகத்தில் மெத்தைக்குள் அழுந்தி திரும்பியது. ஜோதியின் புகைப்

பட முகம் துப்பாக்கித் தோட்டாவால் துளைக்கப்பட்டது போல இப்பொழுது சிதைந்து போயிருந்தது.

சூர்யா புகைப்படத்தை திருப்பினான். பேனா குத்திய இடத்தில் துருத்திக் கொண்டிருந்த பகுதிகளை கட்டை விரலால் அழுத்தி புகைப்படத்தை மீண்டும் சமனப் படுத்தினான். 'ஜோதி இப்போ உன் போட்டோவுக்கு நடந்தது. சீக்கிரமே நிஜத்துல உனக்கு நடக்கப் போகுது உன் முகத்துல இதே குத்து விழும். ஆனா பேனாவால இல்ல.'

சொல்லி முடித்ததும் திடீரென்று அவனுக்கு ஒரு அமைதி திரும்பியது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. விளக்கை அணைத்து விட்டு ஜோதியின் புகைப் படத்தை தலையணைக்கடியில் தள்ளி, அதன் மீது தலை வைத்து படுத்தான்.

## 11

ஜோதி தன் தோழிகளுடன் அந்த ஹோட்டலில் அமர்ந்திருந்தாள்.

''காபி இன்னும் கொஞ்சம் சூடா இருக்கணும். அதுதான் ருசி'' என்று சர்வரிடம் அவள் பேசிக் கொண்டிருக் கும் போது விழியின் ஓரத்தில் நிழலாடியது.

தன்னிச்சையாக பார்வை திரும்பியது. ஹோட்டலின் கல்லா அருகில் நின்றிருந்தவனைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியம். அன்றைக்கு தியேட்டரில் டிக்கெட்டுகள் கொடுத்தானே. அவன்தானே அது? பெயர் கூட... சூர்யா! தன் தோழிகளிடம் அவனைப் பற்றி சொல்வதற்காக அவள் முகத்தை திருப்பும் முன், சூர்யாவின் குரல் அவளை ஈர்த்தது.



''இந்தாங்க...''

கல்லாவில் அவன் பணத்தை வைத்து நகர்த்துவது தெரிந்தது.

''மொத்தம் மூணு சாப்பாட்டு டோக்கன்.''

கல்லாவில் இருந்தவர் சாப்பாடு டோக்கன்களைக் கிழித்துக் கொடுத்தார்.

''இது எனக்கோ, என் பிரண்ட்ஸ்களுக்கோ இல்ல. அதோ, ஹோட்டலுக்கு வெளியே உட்கார்ந்திருக்காங் களே பிச்சை எடுத்துகிட்டு, அவங்களுக்காக ஹோட்ட லுக்குள்ள அவங்களை விடமாட்டீங்கன்னா மூணு சாப் பாடும் பார்சல் கட்டி அவங்ககிட்ட குடுத்திடுங்க.''

கல்லாவில் இருந்தவர் அவனை ஆச்சரியமாய் பார்க்க, சூர்யா அந்த டோக்கன்களை எடுத்துப் போய் நிறுத்தி யிருந்த வண்டிகளின் பக்கத்தில் நின்றபடி போவோர் வருவோரிடம் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த மூன்று நபர்களிடமும் ஆளுக்கு ஒன்றாக கொடுப்பது இங்கிருந்து தெரிந்தது.

'என்ன ஆள் இவன்?'

ஜோதி தன் இருக்கையை தள்ளி விட்டு எழுந்தாள். ஓரப் பார்வையில் ஜோதி அவனை கவனிப்பதை சூர்யா கவனித்தான். தன்னிடமிருந்த மூன்று டோக்கன்களையும் அந்த மூவருக்கும் கொடுத்துவிட்டு 'திருப்தியா சாப் பிடுங்க' என்று சொல்லிவிட்டு, திரும்பிப் பார்க்காமல் தனது மோட்டார் சைக்கிளில் ஆரோகணித்தான்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டது. வேகம் பிடித்தது. ஜோதி உணவு விடுதியின் வாசலுக்கு அவசரமாக வந்து சேர்ந்தபோது, அவனுடைய மோட்டார் சைக்கிள் தெரு

முனையில் திரும்பி மறைந்திருந்தது. ஜோதியின் மனதில் ஒரு ஏமாற்றம் சூழ்ந்தது.

## 12

பானு உணவை ட்ரேயில் பரப்பினாள். வேக வைத்த காய்களை ஒரு ஓரமாக அடுக்கினாள். தட்டு வைத்து உணவை மூடினாள். உணவு தயார். ஆனால் கொடுப்பதற்கான நேரம் இன்னும் வரவில்லை. கடிகாரத்தைப் பார்த்து நாற்காலியை திருப்பிப் போட்டு அமர்ந்தாள். கடிகாரத்தின் வினாடி முள் டிக்... டிக்... டிக்... டக் என்று நொண்டியடித்து நகர்ந்தது.

அம்மா வெளியே போயிருந்தாள். முற்றிலும் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த தனி வீட்டில் யாருடைய துணையுமில்லாமல் இருப்பது பானுவிற்கு உறைத்தது. ஆனால் அச்சம் வருவதற்கு பதிலாக ஒருவித ஆர்வமும் பரபரப்பும் அவளுக்கு வந்தன. அம்மா திரும்பி வருவதற்கு எப்படியும் இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்.

''பானு மறக்காம நேரத்துக்கு சாப்பாட்டு ட்ரேயை உள்ளாற அனுப்பிடு'' என்று சொல்லிவிட்டு அம்மா போயிருந்தாள். உணவு தயாராகிவிட்டது. அம்மா இருந்தால் அம்மாவோடுதான் எடுத்துப் போவாள். பானுவை அனுமதிப்பதில்லை. இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பு மறுபடியும் கிடைக்குமா என்று தெரியவில்லை.

பானு உணவு ட்ரேயை எடுத்துக் கொண்டு வீட்டின் அந்தப் பகுதியிலிருந்து வெளிப்பட்டாள். வீட்டின் இன்னொரு பகுதியில் படிகள் இறங்கின. அவற்றை ஒலி எழுப்பாமல் மெல்ல இறங்கினாள்.



பூட்டப்பட்ட கதவு, பூட்டின் அருகிலேயே இருந்த பிறையில் பூட்டை திறப்பதற்கான சாவி, எல்லாமே அவளுக்குப் பரபரப்பைத் தூண்டின. ஆனால் பெரிய அளவில் ரிஸ்க் எடுக்க விரும்பாமல் கதவை அண்டினாள். கதவின் கீழ்ப்பகுதியில் ஒரு திறப்பு. அதன் வழியே உணவு ட்ரேயை உள்ளே தள்ள வேண்டும். அதுதான் வாடிக்கையாக நடக்கும் விஷயம். சூர்யா மட்டுமே அந்த அறைக்குள் போய் வருகிறான். அம்மாவோ அவளோ போவதே இல்லை. அன்றாடம் இரண்டு முறை உணவு தட்டை இந்த திறப்பு வழி உள்ளே அனுப்புவதோடு சரி.

உள்ளே என்னதான் நடக்கும்? தெரிந்து கொள்ளும் ஆர்வம் பானுவை செலுத்தியது. உணவு ட்ரேயை அந்த திறப்பில் வைத்து, சற்று உள்ளே தள்ளினாள். முற்றிலுமாக பாதி வெளியேயும் இருக்குமாறு பார்த்துக் கொண்டாள். வெளியே இருந்த ட்ரேயை உள்ளே இழுக்க முடியாமல் பிடித்துக் கொண்டாள். தண்ணீரில் தூண்டிலைப் போட்டு விட்டு காத்திருக்கும் மீனவனைப் போல இருந்தது. அவளது செய்கை, தூண்டிலில் மீன் சிக்கியதும் அது மீனவனுக்கு புரியும். அதுபோல இந்த உணவுத் தட்டு உள்ளே இழுத்துக் கொள்ளப்படும்போது அதை கவனித்து விட வேண்டும் என்று அவளுக்கு ஓர் ஆர்வம்.

நேரம் நகர்ந்தது. திடீரென்று அவள் எதிர்பார்த்த வினாடி வந்து சேர்ந்தது. உள்ளேயிருந்து ட்ரே இழுக்கப்பட்டது. பானு தன் பக்க ட்ரேயை விடவில்லை. இறுக்கிப்பிடித்திருந்தாள். உள்ளேயிருந்து பெருமூச்சு சத்தம் 'ஹா... ஹா...' என்று கதவின் இடைவெளியே வழியே தப்பித்து வந்தது. பானு தன்னுடைய பலம் அனைத்தையும் பிரயோகித்து ட்ரேயை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

கூரிய நகங்கள் உள்ளே கதவைப் பிறாண்டுவது போன்ற ஒலி. அப்போதும் பானு விட்டுக் கொடுக்கவில்லை. 'தொம்... தொம்...' என்று கதவை மோதும் ஒலி. அப்பொழுதும் பானு பிடியை தளர்த்தவில்லை.

திடீரென்று உள்ளேயிருந்த பலம் அதிகமானது. ட்ரே விருட்டென்று ஒரே இழுப்பாக உள்ளே இழுக்கப்பட்டது. அப்படி இழுக்கப்பட்ட வேகத்தில், அவள் பலத்தையும் மீறி ட்ரே உள்ளே முற்றிலுமாக போனது.

அப்படி உள்ளே முற்றிலுமாக இழுக்கப்பட்டபோது இந்த முனையில் பிடித்திருந்த பானுவின் கையும் அந்த திறப்பு வழி உள்ளே போனது. பானு அந்த வேகத்தில் குப்புற அடித்து விழுந்தாள். அந்த தருணத்தில் உடல் முழுதும் அச்சம் சரேலென்று பாய்ந்தது. ஜாக்கிரதை உணர்ச்சி முழு வேகத்தில் செயல்பட ட்ரேயை பிடித் திருந்த கையை அவசரமாக விலக்கினாள். அவள் வெளியே இழுத்துக் கொள்ளுமுன், அவள் கை உள்ளே முரட்டுத்தனமாக பற்றப்பட்டது. உள்ளேயிருந்து அவள் முழு வேகத்தில் இழுக்கப்பட்டாள். அவளுடைய மென்மை யான கையில் கூர்மையான நகங்கள் பதிந்திருந்தன. இழுக்கப்பட்ட வேகத்தில் அவள் தரையோடு தேய்த்து போய் கதவின் வெளிப்பக்கம் மண்டையால் முட்டிக் கொண்டாள். உள்ளே அவளை பிடித்திருந்த கரம் சற்றே அவள் கையை தளர்த்துவதும் மீண்டும் பற்றி இழுப்பது மாக மறுபடி மறுபடி அவள் தரையோடு தேய்த்து கதவில் முட்ட ஆரம்பித்தாள்.

மண்டையிலிருந்து நூறாயிரம் வண்டுகள் புறப் பட்டது போல மண்டைக்குள் ரீங்காரம். அச்சத்தின் உச்சத்தில் அவள் அலறினாள். தரையோடு தேய்த்து



முகம் இழுக்கப்பட்டு இடது கன்னத்தின் சதை எரிந்தது. தடதடவென்று கால்கள் ஓடி வரும் சத்தம் கேட்டது. மீண்டும் மீண்டும் அவள் இழுக்கப்பட கண்ணாடி ஜன்னலில் மாட்டிக் கொண்ட வண்டுபோல அவள் கதவில் முட்டி முட்டி சப்தமெழுப்பினாள்.

நான்கு ஐந்து முறை முட்டியதும் அவளை அறியாமல் நினைவு நழுவியது. தடதடவென்று ஓடி வந்த கால்கள் அவள் கவனத்தில் பதியும்போது அவள் நினைவு நழுவிக் கொண்டிருந்தது.

"என்ன காரியம் பண்ணின பானு?"

அம்மாவின் பதைப்பான குரல். பானு நினைவை முற்றிலுமாக இழந்துவிடக் கூடாது என்று பிடிவாதமாக கதவை இன்னொரு கையால் அழுத்தி தன்னை பின்னால் உந்திக் கொண்டு, உள்ளேயிருந்து இழுக்கப்பட்ட வேகத்தை எதிர்க்க முயற்சி செய்தாள்.

அம்மா மீண்டும் ஓடிவந்த பொழுது, அவள் கையில் மூன்றடி நீளத்திற்கு ஒரு உருட்டுக்கட்டை. பரபரப்பாக பிறையிலிருந்து சாவியை எடுத்து பூட்டைத் திறந்தாள் அம்மா. சின்ன இடைவெளியே ஏற்படுத்திக் கொண்டு குண்டாந்தடியுடன் சரேலென்று உள்ளே நுழைந்தாள். நுழைந்த வேகத்திலேயே கதவை அறைந்து சாத்தி, உள்ளே யிருந்து தாளிட்டாள். அவள் கையோடு எடுத்துப் போயிருந்த உருட்டுக்கட்டை மீண்டும் மீண்டும் பயன் படுத்தப்பட்டது. உள்ளேயிருந்து முனகலும் பெருமூச்சும் எழுந்தது.

பானுவின் கையை பிடித்திருந்த பிடி தளர்ந்தது. பானு சரேலென்று தன் கரத்தை வெளியே இழுத்துக் கொண் டாள். கையிலிருந்து ரத்தம் சொட்டியது. அவளுடைய

கை விடுபட்டதும் அதே பரபரப்போடு அம்மா கதவை திறந்து வெளியே வர முயற்சி செய்தாள். அம்மா முற்றிலும் வெளியே வருமுன் உள்ளேயிருந்து அவள் கூந்தல் பற்றப்பட்டு விட்டது. இழுக்கப்பட்ட வேகத்தில் அவள் முற்றிலும் உள்ளே போய் விடுவாள் போல் இருந்தது. அம்மா தன் பலம் அனைத்தையும் உபயோகப்படுத்தி சுவரில் வெட்டப்பட்டிருந்த முக்கோண பிறையில் கையை ஊன்றி பிடிப்பு ஏற்படுத்திக் கொண்டு தன்னை முற்றிலும் வெளியே இழுக்கப் பார்த்தாள்.

பானு தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு எழுந்தாள். கதவை சாத்துவதற்காக முயன்றாள். மீண்டும் தடதடவென்று காலடிச் சத்தம்.

''என்ன ஆச்சு?''

சூர்யாவின் கோபமான படபடப்பான குரல்.

'அம்மா... அம்மா' என்று சொல்வதற்குள் பானுவிற்கு நா உலர்ந்தது. சூர்யா சட்டென்று கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தான். உள்ளே தொம்... தொம்... என்று ஒலி. சாப்பாட்டு ட்ரே பறந்து எங்கோ மோதி சலங்... சலங் என்று சத்தம். கதவு மீண்டும் திறந்தது. அம்மா வெளியே உந்தித் தள்ளப்பட்டாள். கதவு அறைந்து சாத்தப்பட்டு, உள்ளே தாளிடப்பட்டது.

வெளியே வந்து விழுந்த அம்மாவின் தலை முடியில் ஒரு கற்றை பறிக்கப்பட்டு அந்த இடத்தில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. தன்னுடைய சக்தி அனைத்தும் இழந்தவளாக அம்மாவும் தளர்ந்து அப்படியே படிகளில் அமர்ந்தாள்.

உள்ளேயிருந்து சூர்யாவின் குரல் கதவின் இடைவெளி வழியாக வெளிப்பட்டது.



''நீங்க இரண்டு பேரும் முதல்ல இடத்தை காலி பண்ணுங்க.''

அம்மாவும், பானுவும் படிகளில் உட்கார்ந்து ஏறி தங்களை மேலே இழுத்துக் கொண்டார்கள். இருவரும் அவசரமாக வீட்டின் மறுபகுதிக்கு விரைந்தார்கள்.

பத்து நீண்ட நிமிடங்களுக்குப் பிறகு அந்த அறைக் கதவு திறக்கப்பட்டு, மூடப்படும் ஒலி. படிகளில் சூர்யா பரபரப்பாக ஏறி வரும் சத்தம். சூர்யா வந்து பார்த்த போது பானு ஒரு பக்கமும், அம்மா ஒரு பக்கமும் சரிந்து கிடந்தார்கள். பானுவின் கையிலிருந்து ரத்தம் கோடுகளாக இறங்கிக் கொண்டிருந்தது. அம்மாவின் பின்னால் தலையில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. பானுவின் உச்சமண்டையில் சின்ன வீக்கம் தெரிந்தது.

சூர்யா பரபரப்பாக இயங்கினான். பதினைந்து நிமிடங்களில் அம்மாவும் பானுவும் கண்களைத் திறந்தார்கள். காயங்களை சுத்தப்படுத்தி மருந்து போடப்பட்டு இருந்ததால் சுரீரென்று அந்த இடங்களில் எரிச்சல் கிளம்பியது.

''என்ன ஆச்சு பானு?''

சூர்யா பதட்டமாகக் கேட்டான்.

''தப்பு என் பேர்லதான்.''

பானு அழ ஆரம்பித்தாள்.

அம்மா சூர்யாவைப் பார்த்துத் திரும்பினாள்.

''என்னப்பா, எங்களையே கவனிச்சுகிட்டு இருக்க. உன் மூஞ்சியை கண்ணாடியில பார்த்தியா?''

சூர்யா முகத்தை அப்படியே திருப்பி சுவரில் இருந்த கண்ணாடியில் பார்த்தான். அவனுடைய இடது கண்ணோரம் கறுத்திருந்தது. கன்னத்தில் ஒரு கோடு கிழிக்கப்பட்டிருந்தது. உதடு ஓரத்தில் ரத்தம் கசிந்தது.

"ரொம்ப போராட வேண்டியிருந்ததாப்பா?"

சூர்யா 'ஆம்' என்று தலையசைத்தான்.

"இதெல்லாம் என்னை ஒண்ணும் பண்ணாது நீங்க வருத்தப்படாதீங்கம்மா."

"நீயும் முதல்ல மருந்து போட்டுக்கப்பா."

சூர்யா தலை அசைத்து விட்டு தன் காயங்களைக் கழுவ எழுந்தான்.

அன்றிரவு சாப்பாட்டு மேஜையில் அம்மா, பானு, சூர்யா மூவரும் மருந்திட்ட காயங்களுடன் அமர்ந்திருந்தனர்.

"ரொம்ப வலிக்குதாம்மா? டாக்டர் கிட்ட போகலாமாம்மா?"

சூர்யா கேட்டான்.

"வேண்டாம் சூர்யா, நீ தான் மருந்து போட்டு விட்டுட்டியே."

பானு மறுபடி கண்களில் கண்ணீர் காட்டினாள் "எல்லாம் என்னாலதானே?"

"இல்ல, பானு இத்தனைக்கும் காரணம் நீ இல்ல, அவ" சூர்யா பற்களைக் கடித்துக் கொண்டு சொன்னான்.

"எவ?"

"ஜோதி!"

அம்மா சரக்கென்று நிமிர்ந்தாள்.

"அந்தப் பொண்ணு ஒரு பாவமும் அறியாத பொண்ணு... அவளை ஏம்ப்பா குறை சொல்ற?"

சூர்யா பதில் சொல்லவில்லை.

"சூர்யா..."



"என்னம்மா?"

"நான் ஒண்ணு சொன்னாக் கேட்பியா?"

"அவளை மன்னிக்க மாட்டேன்."

"மன்னிக்க வேண்டாம்... அதுக்காக நீ உன் வாழ்க்கையைக் கெடுத்துக்க வேண்டாம்.. நீ அமெரிக்காவுக்குத் திரும்பிப் போயிடு..."

"அவளை உங்க காலடியில கொண்டு வந்து எறியர வரைக்கும் எனக்கு வாழ்க்கையில வேற ஆர்வம் இல்ல... ஜோதியைத் தவிர வேற ஏதாவது பேசறதா இருந்தால் பேசுவோம்..."

சூர்யாவின் பிடிவாதம் அம்மாவிற்கு நன்றாகத் தெரியும்.

மௌனமானாள்.

## 13

சூர்யா தன் மோட்டார் சைக்கிளில் சாய்ந்து நின்றிருந்தான். வெகு நேரமாக அந்த வீட்டின் மீதே பார்வையைப் பதித்திருந்தான்.

ஜோதியின் வீடு. அன்றைக்கு விடுமுறை என்பதால் ஜோதியின் தம்பி பிரபு நண்பர்களோடு அந்த வீட்டை ஒட்டி இருந்த தோட்டப் பகுதியில் காற்றாடி விட்டுக் கொண்டிருந்தான். காலையில் சூரியன் வானத்தில் மஞ்சளாக எழுந்த போதே ஜோதி வீட்டை விட்டு ஒரு முறை வெளிப்பட்டாள். வாசலில் ஒரு மெகா சைஸ் கோலம் போட்டு விட்டு வீட்டிற்குள் திரும்பியிருந்தாள். அதன் பின் பேப்பர்கள் கொண்டு வந்து போடப்பட்டபோது செய்தித்தாள்களை எடுத்துப் போக ஜோதியின் அப்பா ஒரு முறை வெளியே வந்து போனார்.

சூர்யா ஒரு சிகரெட்டை புகைத்துக் கொண்டு அந்த மரத்தடியில் வெகு நேரமாக நின்றிருந்தான். பிரபுவும் நண்பர்களும் பறக்கவிட்ட காற்றாடி இப்படியும் அப் படியும் தவ்வி விட்டு உயரமாக இருந்த ஒரு மரத்தின் கிளையில் போய் சுற்றிக் கொண்டதை சூர்யா கவனித் தான்.

சிகரெட்டைக் கீழே எறிந்தான். காலால் நசுக்கி அணைத் தான். பாக்கெட்டிலிருந்து ஒரு சூயிங்கம் எடுத்து வாயில் போட்டு மென்று கொண்டே தெருவைக் கடந்தான். தோழர்கள் அனைவரும் மரத்தின் உச்சியில் சிக்கித் தத்தளித்த காற்றாடியிலேயே கவனம் பதித்திருந்தார்கள்.

''அந்த காத்தாடி வேணுமா?''

திடீரென்று சூர்யாவின் குரல் கேட்டதும் சிறுவர்கள் அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

''காத்தாடி வேணுமான்னு கேட்டேன்.''

'ஆம்' என்று தலையசைத்தான் பிரபு.

சூர்யா தன் ஷூக்களை கழற்றிவிட்டு அந்த மரத்தின் மீது வெகு லாவகமாக ஏறினான். அவன் ஏறும் வேகத்தை சிறுவர்கள் அனைவரும் பிரமிப்போடு பார்த்துக் கொண் டிருந்தனர். காற்றாடி சுற்றியிருந்த கிளையை நெருங்கி விட்ட சூர்யா கிளையின் மீது காலை பதித்ததும், அவ னுடைய பாரத்தை தாங்காமல் கிளை வளைந்தது. முற்றிலுமாக அவன் பாரத்தை கிளையில் செலுத்தினால் கிளை முறிந்து விடும் போல் இருந்தது. ஒரு காலை வைத்து அவன் அழுத்தியதுமே, கீழே இருந்த சிறுவர்கள் பயத்தில் 'ஓ' என்று என்று குரல் கொடுத்தார்கள்.

சூர்யா குனிந்து அவர்களைப் பார்த்தான். 'பயப்படா தீர்கள்' என்பது போல் கை அசைத்தான். சிறுவர்களின்



கூக்குரல் வீட்டிற்குள் இருந்தவர்களை வெளியே கொண்டு வந்தது.

''என்னடா அங்க கலாட்டா?'' என்று கேட்டபடி வந்து ஜோதி நிமிர்ந்து பார்த்தாள்.

மரத்தின் உச்சியில் சூர்யா.

ஜோதியும் ஆர்வத்தோடு அவனை கவனிக்கத் தொடங் கினாள். ஜோதி வந்து நின்றதும், அவளை சற்றும் கவனிக் காதவன் போல சூர்யா அந்த கிளையில் இருந்து விலகி னான். சற்று தாழ்வாக இருந்த அடுத்த கிளை சற்று கனமாக இருந்தது. அந்தத் தாழ்வான கிளையில் சூர்யா தனது பாரத்தை வைத்து அழுத்திப் பார்த்தான். கிளை வளைந்ததே தவிர உடைந்து விடும் அபாயம் இல்லை.

சூர்யா மெல்ல அந்த கிளையில் இருபுறமும் கால் களைப் போட்டு அமர்ந்தான். பின் சற்று தூரம் அப்படியே நகர்ந்து, தன்னை பாலன்ஸ் செய்து கொண்டு அந்த கிளையில் ஒவ்வொரு பாதமாக வைத்து எழுந்தான். அப்படி எழுந்தபொழுது மேலே இருந்த கிளை, அக்கம் பக்கத்தில் இருந்த சிறு கிளைகளை எல்லாம் ஆதரவுக் காக பற்றிக் கொண்டான். மிகவும் ஆபத்தான ஒரு செய லில் அவன் ஈடுபட்டிருப்பது போல ஜோதிக்குத் தெரிந்தது.

''ஹலோ, இறங்கிடுங்க. காத்தாடி வேற வாங்கிக் கலாம்'' என்று கீழேயிருந்து குரல் கொடுத்தாள்.

சூர்யா அந்த குரல் தன்னை எட்டியது போலவே காட்டிக் கொள்ளவில்லை. தாழ்வான கிளையில் ஒரு பாதத்தின் முன்னால் அடுத்த பாதத்தை வைத்து கொஞ் சம் கொஞ்சமாக நகர்ந்தான்.

இந்த கிளையும் பாரத்தில் வளைந்து ஊஞ்சலாடியது இப்பொழுது சூர்யா நின்றிருந்த கிளையிலிருந்து ஐந்தடி

உயரத்தில் காற்றாடி சிக்கியிருந்த கிளை தெரிந்தது. சூர்யா பக்கத்தில் இருந்த கிளையை இடது கையால் பற்றிக் கொண்டு நுனி விரல்களால் இந்த கிளையில் நின்று எம்பினான். அப்படி, எம்ப, இந்த கிளை அவன் பாரத்தில் இன்னும் தாழ்ந்தது. காற்றாடியிலிருந்து அவனுடைய தொலைவை அதிகப்படுத்தியது.

''வேண்டாங்க... இறங்கிடுங்க'' ஜோதி மறுபடியும் குரல் கொடுத்தாள்.

சூர்யா மீண்டும் நகர்ந்து அந்த கிளையில் இருபுறமும் கால்களைப் போட்டு அமர்ந்தான். அவன் ஆபத்தாக இருக்கிறான் என்ற கவலையெல்லாம் தாண்டி அவன் இப்பொழுது என்ன செய்யப் போகிறான் என்ற ஆர்வம் ஜோதிக்கும் தொற்றிக் கொண்டது. சிறுவர்கள் எல் லோரும் கழுத்து வலிக்கும் அளவிற்கு அண்ணாந்து மேலே பார்த்தனர்.

சூர்யா தன்னுடைய சட்டையை கழற்றினான். பேண்ட் மட்டும் அணிந்து மேலே உடையில்லாமல் அவன் பரந்த மார்பு வியர்வையால் பளபளத்தது. சட்டையின் ஒரு நுனியை கையில் பிடித்துக் கொண்டு மீண்டும் அந்த கிளையில் பாலன்ஸ் செய்து எழுந்து நின்றான். நின்றபடி சட்டையை வீசி மேலேயிருந்த கிளையில் போட்டான். ஒரு நுனியைப் பிடித்துக் கொண்டு அவன் வீசியதும், சட்டை மேலேயிருந்த கிளையை தாண்டி, மறுபுறம் இன்னொரு நுனி தொங்கியது.

சூர்யா, இந்த நுனியையும், அந்த நுனியையும் சேர்த்துப் பிடித்தான். இப்பொழுது அவன் சட்டையைப் பிடித்து இழுக்க இழுக்க மேலேயிருந்த கிளை கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே குனிந்தது. சிறுவர்கள் கூக்குரலிட்



டனர். கிளையின் நுனி இருக்கும் பகுதிக்கு சூர்யா நகர நகர மேலேயிருந்த கிளை முற்றிலுமாக தழைந்து வந்தது. காற்றாடி கைக்கு எட்டும் தூரத்திற்கு வந்ததும் அதன் நூலை கிளையிலிருந்து அறுத்து எடுத்து சூர்யா குனிந்து பார்த்தான்.

சிறுவர்கள் அத்தனை பேரும் சந்தோஷ மிகுதியில் கைதட்டி ஆரவாரித்தனர். ஜோதியும் அவளை அறியாமல் கைகளை வேகமாகத் தட்டினாள். அப்போது ஜோதி பார்ப்பது போல சூர்யா முகத்தில் சின்ன ஆச்சரியம் காட்டினான். ஒரு உபகிளையை அப்படியே ஒடித்து எடுத்து அதில் காற்றாடியின் நூலை சுற்றி அதைக் கீழே எறிந்தான். காற்றாடி மிதந்து மிதந்து கிளையின் பாரத்தால் கீழே சிறுவர்களின் மத்தியில் போய் சேர்ந்தது.

இப்பொழுது சூர்யா மேலேயிருந்த கிளையிலிருந்து தன் சட்டையை உருவினான். அப்படி உருவிய வேகத் தில் திடீரென்று பாலன்ஸ் இழந்து நின்றிருந்த கிளையி லிருந்து அப்படியே சரிந்தான். சிறுவர்களின் கவனம் காற்றாடியில் பதிந்திருக்க, சூர்யாவின் மீது கவனத்தை பதித்திருந்த ஜோதி 'பார்த்து' என்று அலறினாள்.

சூர்யா அந்தக் கிளையிலிருந்து நழுவி செங்குத்தாக விழ ஆரம்பித்தான். ஜோதியின் இதயம் உச்சகதியில் இயங்கியது. கீழே விழத் துவங்கிய சூர்யா குறுக்கே நின்றிருந்த இன்னும் சில கிளைகளைப் பற்றிக் கொள்ளப் பார்த்து அவையும் முறிந்து விட இங்கும் அங்குமாக மோதி, கடைசியில் கனமான ஒரு கிளையைப் பற்றியதும் அப்படியே தொங்கினான். புவியீர்ப்பு விசையால் அவன் தொங்கிய கிளை மேலும் கீழுமாக சற்று நேரம் ஊஞ்ச லாடியது. அங்கிருந்து பத்தடி தூரத்தில் பூமி கைகளை

மெல்ல விலக்கி கடைசி பத்தடிகளை குதித்து இறங்கினான். அவனுடைய மார்பில், தோளில், புஜத்தில் முகத்தில் என்று பல்வேறு இடங்களில் கிளைகளும் முறிந்த மரப் பகுதிகளும் ரத்தக் கோடுகளை இழுத்திருந்தன.

''ஐயோ, உடம்பெல்லாம் ரத்தங்க'' என்று ஜோதி பதறினாள்.

சூர்யா புன்னகைத்து சட்டையை உதறி அணிந்து கொண்டான். சிறுவர்கள் அனைவரும் அவனை சூழ்ந்து கொண்டு 'தேங்க்யூ அங்கிள்... தேங்க்யூ அங்கிள்...' என்று சொல்ல, பிரபுவின் தலையை அன்போடு சிலுப்பி விட்டு சூர்யா நகர்ந்தான்.

''ஹலோ, உங்களைத்தான். உங்க மூஞ்சி பூரா ரத்தம் கொட்டுது.''

ஜோதி கிட்டத்தட்ட அவனை வழி மறித்து நின்றாள்.

''பரவாயில்ல...''

''எதாவது மருந்து போட்டுகிட்டு போங்க.''

''அதெல்லாம் எதுவும் வேண்டாம். கூலா கொஞ்சம் வாட்டர் கிடைக்குமா?''

''உள்ள வாங்க.''

''இல்ல... உள்ள வரலை. இங்க குடுங்க.''

ஜோதி பரபரப்பாக உள்ளே ஓடினாள். ப்ரிட்ஜில் இருந்து பாட்டில் தண்ணீரை கொண்டு வந்தாள். சூர்யா குளிர்ந்த நீரை பருகப் போகிறான் என்று நினைத்தாள். கைகளில் வாங்கி முகத்தில் வாரி அடித்துக் கொண்டான். ரத்தம் வடிந்த இடங்களில் குளிர்ந்த நீரால் கழுவிக் கொண்டான்.



''தேங்க்யூ'' என்றான்.

''எதுக்கு இவ்வளவு ஆபத்தான விஷயங்களை எல்லாம் செய்றீங்க?''

ஜோதி படபடத்துடன் கேட்டாள்.

சூர்யா நின்றான். திரும்பிப் பார்த்தான்.

''இன்னொரு தடவை கேளுங்க.''

''இன்னும் கொஞ்சம் இருந்தா நீங்க கீழே விழுந்து மண்டையெல்லாம் உடைஞ்சே போயிருக்கும். எதுக்காக இந்த மாதிரியெல்லாம் ரிஸ்க் எடுக்கிறீங்கன்னு கேட்டேன்.''

''உங்களுக்காகத்தான்.''

சொல்லிவிட்டு ஜோதியின் அடுத்த ரியாக்ஷனுக்காக காத்திராமல் சூர்யா கேட்டை திறந்து வெளியேறினான். அவன் பார்வையில் இருந்து மறைந்த பிறகும், அவன் 'உங்களுக்காகத்தான்' என்று சொன்ன வார்த்தைகள் ஜோதியைச் சுற்றி வந்தன.

## 14

ஜோதி அந்த மரத்தடியில் சிந்தியிருந்த இலைக் குப்பைகளையும், கிளைக் கழிவுகளையும் காலால் ஒதுக்கினாள்.

'உங்களுக்காகத்தான்.'

துணிகளை துவைத்தாள், கொடியில் உலர்த்தினாள்.

'உங்களுக்காகத்தான்.'

குளித்தாள்.

'உங்களுக்காகத்தான்.'

சாப்பிட்டாள்.

'உங்களுக்காகத்தான்.'

புத்தகம் படிக்க பார்த்தால் கூட, கவனம் புத்தக வரிகளில் ஓடாமல் மீண்டும் மீண்டும் கிளையிலிருந்து பரபரவென்று இறங்கி வந்த சூர்யாவின் முகத்திலேயே இருந்தது.

'யாரவன்? எதனால் என்னை இவ்வளவு தூரம் ஆட்டிப்படைக்கிறான்?'

ஜோதி குழம்பினாள். ஆனால் உள்ளுக்குள் எங்கேயோ ஒரு ரகசிய சந்தோஷம் அவளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது. கோவிலில், பேருந்து நிலையத்தில் தியேட்டரில் என்று அடிக்கடி ஏற்கெனவே பார்வையில் இடறியவன்தான். மீண்டும் இடறுவான் என்று எண்ணம் வந்ததும் அவளையுமறியாமல் அது அவளுக்கு அதிகமான சந்தோஷத்தைத் தந்தது.

## 15

அந்தப் பெண்மணி நிறைய லிப்ஸ்டிக் அணிந்திருந்தாள். குட்டையான ப்ளவுஸ் போட்டிருந்தாள். புடவையை இடுப்பில் மிகவும் தழைத்து கட்டியிருந்தாள். பார்வையிலேயே அழைப்பு இருந்தது.

''என்ன ரேஞ்சுல தம்பி வேணும்?''

சூர்யா அவளுக்கு எதிரில் நின்றிருந்தான்.

''பணத்தைப் பத்தி பிரச்சனையில்ல. ஆளுங்களை பார்த்து நான் செலக்ட் பண்ணனும்.''



''நம்மகிட்ட எல்லா வயசுலயும் சரக்கு இருக்கு. ஆந்திரா வேணுமா, காஷ்மீர் வேணுமா, அஸ்ஸாம் வேணுமா, மஹாராஷ்டிரா வேணுமா?''

சூர்யா அவள் பேசும்போது கையை உயர்த்தி குறுக்கில் மறித்தான்.

''18 வயசிலிருந்து 20 வயசுக்குள்ள இருக்கிற பொண்ணுங்களை மட்டும் காட்டுங்க.''

காட்டப்பட்ட ஆறு பெண்களில் இடது ஓரத்தில் நின்றிருந்த பெண்ணை சூர்யா தேர்ந்தெடுத்தான்.

''அட, நம்ம மகாவுக்குதான் அதிர்ஷ்டம். தம்பி, அஞ்சாயிரம் ரூபாய் டெபாசிட் கட்டணும்.''

''டெபாசிட்டா எதுக்கு?''

''ஆமா, பொண்ணை வெளியில இல்ல அழைச்சுட்டுப் போறேன்னு சொல்றீங்க... நீங்க திரும்ப கொண்டு வந்து குடுத்துட்டு இந்த பணத்தை வாங்கிட்டுப் போகலாம். நைட்டு பூரா அந்த பொண்ணு வேணும்னா ரேட்டு ஆயிரம் ரூபாய். ஆக மொத்தம் ஆறாயிரம் ரூபா கொடுங்க. காலையில பொண்ண திரும்பி குடுத்திட்டு அஞ்சாயிரம் ரூபா வாங்கிட்டுப் போங்க.''

சூர்யா பணத்தை எண்ணிக் கொடுத்தான்.

''போலாம்'' என்றான் அந்தப் பெண்ணிடம்.

கோவையிலிருந்து ஊட்டி செல்லும் பேருந்து கொண்டை ஊசி வளைவுகளில் முக்கி முக்கி ஏறியது. ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்த சூர்யா, தன் அருகில் சற்றே அலட்சியமாக அமர்ந்திருந்த மகாவை பார்த்தான். அவள் கரன்சி கரன்சியாக கொண்டு வந்து கொட்டுவாள் என்று நம்பித்தானோ என்னவோ அவ

ளுடைய பெற்றோர் மகாலட்சுமி என்றே பெயர் வைத்திருந்தனர் என்று நினைத்துக் கொண்டான். அவளிடமிருந்து சற்றே மலிவான ஒரு சென்டின் வாசம் வந்தது. காற்றில் அவளுடைய புடவை மார்பிலிருந்து நழுவி விழுந்தபொழுது சூர்யாவைப் பார்க்க விட்டே அள்ளி எடுத்து போர்த்திக் கொண்டாள்.

''மகா..''

''ம்..''

''நாம, ஒரு வித்தியாசமான இடத்துக்குப் போறோம்.''

''அப்படியா?''

''ஆமா. உனக்கு அந்த அம்மா எவ்வளவு பணம் குடுப்பாங்க?''

''நீங்க ஆயிரம் ரூபா குடுக்கறிங்களே அதுல பாதி பணம் எனக்கு. பாதி பணம் அவங்களுக்கு. எல்லாரையும் வச்சு தொழில் நடத்தணுமில்ல. போலீசுக்கு மாமூல் கொடுக்கறதிலயிருந்து எல்லாத்தையும் அவங்கதானே பாத்துக்கறாங்க.''

''உனக்கு போனஸா, நான் இன்னொரு ஆயிரம் ரூபா குடுக்கப் போறேன்.''

''நிஜமாவா?''

''ஆமா, ஆனா நீ கொஞ்சம் ஒத்துழைக்கணும்.''

''ஒத்துழைக்கணும்னா, ரெண்டு பேரா?''

''இல்லம்மா. ஒரு ஆள் தான். ஆனா பாரு எனக்கு ஜோதி அப்படிங்கிற பேருதான் பிடிக்கும். மகாலட்சுமிங்கிற பேரு பிடிக்கலை. அதனால நான் உன்னை ஜோதின்னு தான் கூப்பிடுவேன். உன் பேரு என்னன்னு கேட்டா ஜோதின்னுதான் நீ சொல்லணும்.''

''அவ்வளவுதானா. பேரை மாத்தி சொன்னா ஆயிரம் ரூபா குடுத்துடுவீங்களா?''



''இல்ல, இன்னொரு கண்டிஷனும் இருக்கு. பஸ்லயிருந்து இறங்கினதும் சொல்றேன்.''

பேருந்து அவர்களை இறக்கி விட்டதும், ''இப்ப சொல்லுங்க அடுத்த கண்டிஷன் என்ன?''

''ரொம்ப சிம்பிள்மா. கண்ணை கறுப்பு துணி போட்டு கட்டிடுவேன். நாம எங்க போறோம் அப்படிங்கிறது சஸ்பென்ஸா இருக்கும். ஓ.கே.?''

''சரியான விளையாட்டுப் பிள்ளையா இருப்பீங்க போலிருக்கு.''

''அப்படித்தான் வச்சுக்கோயேன். என் கையை புடிச்சிட்டு பத்திரமா வரணும். ஓ.கே. இருட்டுலதான் நாம சந்தோஷமா இருக்கப் போறோம். அப்போ ஜோதி அப்படின்னுதான் நான் கூப்பிடுவேன். அப்படியே நான் கூப்பிடாமல் விட்டாலும் உன் பேரென்னனு கேட்டா என்ன சொல்லணும்? ஜோதின்னு சொல்லணும். வா.''

அவளை ஒரு மரத்தடிக்கு அழைத்துச் சென்றான். கறுப்பு துணியொன்றை எடுத்து பட்டையாக மடித்து அவள் கண்களை கட்டினான்.

''என்னங்க, என்னவோ போலிருக்குது.''

''பிறவியிலிருந்தே பார்வையில்லாதவங்க எத்தனை பேர் இருக்காங்க. கொஞ்ச தூரம் தானே... வா.''

அவள் கையை பற்றி மெதுவாக அழைத்துச் சென்றான். 'பார்த்து இப்ப ஒரு மேடு வருது. இப்ப ஒரு பள்ளம் வருது. இப்ப கொஞ்சம் தண்ணி வருது' என்று அங்கங்கே அவளுக்குச் சின்ன சின்னதாக அறிவுறுத்திக் கொண்டு ஏற்றத்தில் அவளை நடத்திச் சென்றான்.

வழக்கமாக அவனை வரவேற்கக் காத்திருக்கும் பானுவையும் அம்மாவையும், காத்திருக்க வேண்டாம்

என்று முன்னதாகவே சொல்லி விட்டான். மதியமே புறப்பட்டு கோவைக்குச் சென்று விட்டார்கள். அந்த வீட்டை அடைந்ததும் மகாலட்சுமியின் கண்களைக் கட்டியிருந்த துணியை அவிழ்க்கச் சொன்னான். அவிழ்த்ததும் எதிரே இருந்த மரக்குடிலைப் பார்த்து அவள் ஆச்சரியப்பட்டாள்.

''என்னங்க இது, சினிமா செட்டு போல இருக்கு.''

''சினிமா செட்டுன்னே நினைச்சுக்க.''

கதவை திறந்து அவளை உள்ளே அழைத்துப் போனான். பாத்ரூமைக் காட்டினான்.

''போய் நல்லா குளிச்சிட்டு வா. குளிச்சிட்டு இந்த நைட்டியை போட்டுகிட்டு நீ தயாராகணும்.''

''இந்த நைட்டி எனக்கே எனக்கா?''

''உனக்கே உனக்குதான்.''

அவள் சந்தோஷமாக பாத்ரூமிற்குள் நுழைந்தாள். இருபது நிமிடங்களில் குளித்து, புது நைட்டி அணிந்து அவள் தயாராகி விட்டாள்.

''உன் பெயரென்ன சொன்ன?''

''மகாலட்சுமி.''

பளீரென்று கன்னத்தில் அறைந்தான். அதிர்ந்து பார்த்தாள்.

''மறக்கலாமா?''

''என்னங்க, எதுக்காக அடிக்கிறீங்க?''

''இதப்பாரு. நான் ஒரு மாதிரியான ஆளு. உண்மையில் ஜோதிங்கற பொண்ணை தான் இந்த வீட்டுக்கு அழைச்சிட்டு வரணும்னு ஆசை. அது நடக்கலை.



அதனால உன்னை அழைச்சிட்டு வந்திருக்கேன். உன் பேரு ஜோதின்னு சொல்லணும்னு சொல்லியிருக்கேன். அப்புறம் மகான்னு சொன்னா என்ன அர்த்தம். இப்ப சொல்லு, உன் பேரென்ன?''

அவள் வலியின் காரணமாக கண்களில் துளிர்த்திருந்த நீரை சுண்டிவிட்டாள். ''என் பேரு ஜோதி ஆனா, மறுபடி அடிக்காதீங்க.''

''சரி, என் கூட வா.''

அவளை அழைத்துப் போய் அந்த வீட்டின் மறு பகுதிக்குச் சென்றான். முக்கோண பிறையிலிருந்து சாவியை எடுத்து மூடப்பட்டிருந்த அந்த கதவை திறந்தான்.

''நீ முதல்ல உள்ள போ. நான் இன்னொரு வழியா உள்ளே வருவேன். ஓ.கே.''

''என்னங்க ஒரே விளையாட்டா இருக்கு?''

''இந்த விளையாட்டுக்குதாம்மா பணம். உனக்கு ஆயிரம் போதாதா. இரண்டாயிரம் வேணும்னாலும் போனஸா தர்றேன். ஆனா கொஞ்சம் நீ ஒத்துழைக்கணும்.''

''சரி'' என்று அவள் முணுமுணுப்பாக சொன்னாள்.

கதவை திறந்து உள்ளே அவளை அனுப்பிவிட்டு கதவை மீண்டும் சாத்தினான். பூட்டினான். சாவியை பிறையில் வைத்துவிட்டு படிகளில் சென்று அமர்ந்தான். இரண்டு உள்ளங்கைகளில் முகவாயை பதித்து மூடிய கதவையே பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளே கும்மிருட்டில் மெல்ல மெல்ல அவள் பாதங்களை நகர்த்தி 'என்னங்க... எங்க இருக்கீங்க?' என்று கேட்பது அவனுக்குக் கேட்டது.

வினாடிகள் நிமிடங்கள் ஆயின. நிமிடங்கள் நகர, நகர திடீரென்று அவளின் குரல் கதவின் கீழேயிருந்த திறப்பு வழியாக கசிந்து வந்தது.

''என்ன விளையாட்டுங்க இது. ஏதாவது ஒரு விளக் கையாவது போடுங்க. ஐயோ அங்கயெல்லாம் தொடா திங்க. எனக்குக் கூச்சமா இருக்கு.''

சூர்யா புன்னகைத்தான். திடீரென்று உள்ளேயிருந்து அவளது குரல் வீறிட்டது. புலியின் குகைக்குள் செலுத் தப்பட்டவள் போல, அந்த அறைக்குள் அங்கும் இங்கு மாக ஓடுவதும் அலறுவதும் மூடிய கதவுகளைத் தாண்டி அதிர்வுகளாக அவனை எட்டின.

''விடுங்க... என்னை விடுங்க. பணமும் வேண்டாம் காசும் வேண்டாம். விடுங்க... ஐயோ, என்னை விடுங்க'' அவள் அலறினாள், அழுதாள்.

கொலுசுகள் அணிந்த அவள் பாதத்தின் ஒலிகளும், தொடர்ந்து 'தொம்.... தொம்..' என்று ராட்சஸ பாதங்கள் பதித்தது போன்ற இன்னொரு ஓட்டமும் ஒன்றை ஒன்று மோதிக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே கேட்டன. அந்தப் பெண் உச்சகட்டத்தில் அலறிய பொழுதும் கூட சூர்யாவின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. சற்று நேரத்தில் அந்தப் பெண் கதவின் உட் பக்கம் வந்து தபதபவென்று தட்டினாள். ''கதவைத் திறங்க... கதவைத் திறங்க.. யாராவது கதவை திறங்க என்னைக் காப்பாத்துங்க.''

பாதி சத்தம் போட்டுக் கொண்டிருக்கும்போதே, பின் னாலிருந்து இழுக்கப்பட்டவள் போல அவளுடைய கைகள் கதவிலிருந்து விலகின. எங்கோ அவள் தூக்கி யெறியப்படும் 'தொம்' என்ற ஒலி. 'வீல்' என்ற



அவளுடைய உச்ச பய அலறல். மீண்டும் அவள் கதவை நெருங்கி வெளியே வந்துவிட துடிக்கும் பிறாண்டல்கள்.

சூர்யா இருபது நிமிடங்கள் கழித்து சாவியை போட்டு கதவை திறந்தான். இருட்டினுள் அடியெடுத்து வைத் தான். மகாலட்சுமி அவன் மீது எறியப்பட்டாள். அவனை மோதி நகர்த்திக் கொண்டு அவளும் கீழே விழுந்தாள். சூர்யா பாக்கெட்டிலிருந்து பென்டார்ச் எடுத்து அவள் முகத்தில் அடித்துப் பார்த்தான். அவள் முகத்தில் ரத்தக் கோடுகள். நைட்டி தாறுமாறாக கிழிந்து உடலெங்கும் காயங்கள். கீழே மோதிய வேகத்தில் அவள் மயக்கமா யிருந்தாள். 'ஹா... ஹா..' என்ற பெருமூச்சு ஒலி சூர்யா வின் கழுத்தருகில் கேட்டது. சூர்யா பயப்படவில்லை. சட்டென்று திரும்பி அவனுக்குப் பின்னால் நின்றிருந்த உருவத்தை பிடித்து முழு வேகத்தில் உந்தித் தள்ளினான். அது எதிர்முனை சுவரில் மோதி தொம்மென்று ஒலி எழுப்பும் நேரத்தில் மகாலட்சுமியை தரதரவென்று கதவு வழி வெளியே இழுத்தான். கதவை அறைந்து சாத்தினான். உள்ளேயிருந்து கதவு தொம் தொம்மென்று மோதப்படும் ஒலி. மகாலட்சுமி காயங்களிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. படிகளில் அவளைத் தூக்கி தரையில் கிடத்தினான். சில்லென்ற தண்ணீரை முகத்தில் அடித் ததும் அவள் விழிகள் திறந்தன. சூர்யாவைப் பார்த்ததும் ராட்சதனை பார்த்தது போல மாபெரும் குரலில் மீண்டும் அலறினாள். மயக்கமானாள்.

"என்னை விட்டுருங்க... விட்டுருங்க... விட்டுருங்க...'' என்று அலறினாள். மீண்டும் மயக்கமானாள். சூர்யா அவளை சுமந்து கொண்டு அந்த வீட்டின் மறுபகுதிக்கு வந்தான்.

"யார் இவங்க?" என்று கேட்டார் டாக்டர்.

"தெரியலை" என்றான் சூர்யா இடதும் வலதுமாக தலையை அசைத்து. "நான் ஊட்டியில இருந்து திரும்பி வரும்போது ரோடு ஓரத்துல கிடந்தாங்க. உடம்பெல்லாம் காயம். யாரோ துரத்தி துரத்தி அடிச்சிருக்காங்க. பிறாண்டிருக்காங்க. முகத்துல தண்ணி அடிச்சு எழுப்பிப் பார்த்தேன் மயக்கம் தெளிய மாட்டேங்குது. கண்ணை திறக்கும் போதெல்லாம் என்னைப் பார்த்து பயப்பட்டு அலர்றாங்க. நான் அவசரமாக வேற வேலைக்கு போய் கிட்டிருக்கேன். கொஞ்சம் இவங்களுக்கு சிகிச்சை கொடுத்து குணமானதும் யார், என்னன்னு விசாரிச்சு அனுப்பிடுங்க. இந்தாங்க, மருந்து செலவுக்கெல்லாம் பணம் நான் குடுத்திடறேன்."

மூன்று ஐநூறு ரூபாய் நோட்டுகளை எண்ணி டாக்டரின் கையில் திணித்ததும் "உங்க பேரு என்ன?" என்றார் அவர்.

"என் பேரு சூர்யா. நான் கோயம்புத்தூர்ல இருக்கேன். வர்றேங்க எனக்கு வேலை இருக்கு."

மேற்கொண்டு அவருடன் பேசாமல் சரசரவென்று வெளியேறினான்.

மேட்டுப் பாளையத்தின் ஒதுக்குப்புறமான அந்த மருத்துவமனையிலிருந்து பேருந்து நிலையம் நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான்.

## 16

ஜோதி வெகு நேரம் விழித்திருந்தாள். படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். உறக்கம் வரவில்லை. மூடிய



இமைகளுக்குள் கனவுகளோடு விழிகள் விழித்திருந்தன. முண்டியடித்து அடைத்திருக்கும் மேகங்களைத் தாண்டி சூரியனின் ஒளிக்கீற்று கசிவது போல, அவளுடைய சுத்தமான அரண்களையும் உடைத்து அவளுக்குள் கசிந்திருந்தான் சூர்யா.

எப்படி... எப்படி இது சாத்தியம்? என்ன செய்து விட்டான் என்று மறுபடி மறுபடி இந்த நெஞ்சம் நினைத்துக் கொண்டிருக்கிறது. யோசித்தால் அவளுக்கு புரியவில்லை. இரவு இரண்டு மணி ஆனதும் உடலின் ஒவ்வொரு செல்லும் ஓய்வு வேண்டும் என்று அவளிடம் இறைஞ்சி மண்டியிட்டன. ஆனால், உறங்க முடியாமல் காற்றில் பறந்து கண்ணில் அடிக்கும் மணல் துகள்களைப் போல ஒரே நினைவு அவளை புரட்டிப் புரட்டி அடித்தது. திடீரென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தவளை போல அவள் எழுந்தாள். தன்னுடைய நோட் புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டாள். யாருடைய தூக்கத்தையும் கலைக்காமல் நுனி விரல்களால் நடந்து வீட்டின் பின்புறம் வந்தாள். விளக்கை போட்டுக் கொண்டாள். உறங்க அனுமதிக்கப் படாத விழிகள் தணல் கட்டிகள் போல எரிந்தன.

நோட் புத்தகத்தின் தாளில் பேனா முனை வெகு நேரம் தயங்கியது. அவளுடைய அறிவை இதயம் இறுதியில் வென்றது.

'அன்பே சூர்யா, ஐ லவ் யூ.'

எழுதி முடித்ததும், எதிரே நின்று சூர்யா அதை படித்து விட்டதைப் போல அவள் கன்னங்களில் திடீரென்று ஒரு சிவப்பு. வெட்கத்தில் விழிகள் இமைகளை இழுத்தன. அந்தத் தாளை மட்டும் நோட் புத்தகத்திலிருந்து கிழித்தாள். இரண்டாக நான்காக மடித்து அதே புத்தகத்தின் கடைசி பக்கத்தில் வைத்தாள்.

'சூர்யா இதை உன்கிட்ட குடுப்பேனான்னு தெரியாது. ஆனா இதை எழுதி முடிச்சதும் உங்கிட்டயே சொன்ன மாதிரி ஒரு சந்தோஷம். நீ எப்படி என் மனசுக்குள்ள வந்த? ஆனா, மனசை விட்டு வெளியே அனுப்பக்கூடாதுன்னு மட்டும் புரியுது.'

நோட் புத்தகத்தை பழைய இடத்தில் வைத்து விட்டு, படுக்கையில் வந்து படுத்தாள். இத்தனை நேரம் போக்கு காட்டிக் கொண்டிருந்த தூக்கம் இப்பொழுது அவளை சுலபமாக வந்து தழுவிக் கொண்டது.

## 17

இரண்டு நாட்கள் கழித்து ஜோதிக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. தனக்கு யார் கடிதம் அனுப்பக் கூடும் என்பது புரியாமல் ஜோதி கடித உறையை கிழித்தாள். உள்ளேயிருந்து அவள் மடியில் வந்து விழுந்த தாளைப் பார்த்ததும் துல்லியமாக அதிர்ந்தாள். அவளுடைய நோட் புத்தகத்திலிருந்து கிழிக்கப் பட்ட தாள். அவசரமாக பிரித்தாள்.

'அன்பே சூர்யா, ஐ லவ் யூ' என்று மூன்று நாட்களுக்கு முன் அவள் எழுதிய தாள். அதற்கு கீழே அன்பே ஜோதி நானும் உன்னை - சூர்யா' என்று எழுதப்பட்டிருந்தது. ஜோதியின் உடலெங்கும் திடீரென்று புது ரத்தம் பாய்ந்தது. சட்டென்று அந்த கடிதத்தை மடித்து நெஞ்சோடு அழுத்திக் கொண்டாள்.

'எப்படி... எப்படி என்னுடைய நோட் புத்தகத்தில் வைத்த தாள் அவன் கையில் போய் சிக்கியது? இது நிஜ உலகமா அல்லது கனவு உலகமா. அன்பே ஜோதி நானும் உன்னை... அப்படி என்றால்...? மை காட்! சூர்யா லவ்ஸ் மீ! கடவுளே, சூர்யாவுக்கும் என்னை பிடித்திருக்கிறது.



ஆனால்... ஆனால் இந்தக் கடிதம் அவன் கையில் எப்படி போய் சிக்கியது?'

நினைத்து நினைத்து குழம்பிக் கொண்டிராமல் நேரடியாக அவனிடமே கேட்டு விடுவது என்று தீர்மானித்தாள் ஜோதி!

பேருந்து நிலையத்திற்கு ஜோதி வந்து சேர்ந்தபோது அவள் வழக்கமாக ஏறும் பஸ்சின் கண்டக்டர் இருக்கையில் சூர்யா அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் ஜோதியின் கால்களுக்கு வேகம் கூடியது. படிகளில் பரபரப்பாக ஏறி, "சூர்யா" என்றாள்.

சூர்யா திரும்பினான். புன்னகைத்தான்.

"என் லெட்டர் கிடைச்சதா?" என்றான்.

'ஆம்' என்பது போல மிகச் சன்னமாக அவள் தலையை அசைத்தாள்.

"உங்களுக்கும் பிடிச்சிருக்குதானே?" மீண்டும் 'ஆம்' என்று தலையசைத்தாள்.

"அப்படின்னா, என்னோட பைக்ல வருவீங்களா?"

சட்டென்று அதிர்ந்தாள். சற்று யோசித்தாள். புன்னகை விரிந்தது. தலை அசைத்தாள்.

சூர்யா, ஜோதி இருவரும் அந்த பேருந்திலிருந்து இறங்கினார்கள். சூர்யா மோட்டார் சைக்கிள் நிறுத்தியிருந்த இடம் நோக்கி நடந்தனர்.

## 18

அந்த பூங்காவில் மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நிழல் தந்தன. மரத்தின் நிழலில் போடப்

பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் சூர்யா அமர்ந்திருந் தான்.

''ஐயா...''

குரல் கேட்டு நிமிர்ந்தான். ஒரு கால் சூம்பிப்போய் மற்ற காலின் உதவியுடன் அந்தக் காலை இழுத்துக் கொண்டே நடந்து வந்திருந்த சிறுமி அவனிடம் கையேந்தி நின்றாள்.

சூர்யா இறுக்கமான முகத்துடன் வேறு திசை பார்த் தான். சற்று நேரம் இறைஞ்சிக் கொண்டு இருந்து விட்டு அந்த சிறுமி அடுத்த பெஞ்ச் நோக்கி நடந்தாள். தட்டு நிறைய பூச்சரங்களை வைத்துக் கொண்டு பாவாடை கட்டிய இன்னொரு சிறுமி அவன் அருகில் வந்து நின்றாள்.

''ஏனுங்க பூ நல்லா வாசனையாயிருக்கு, கொஞ்சம் வாங்கிக்கங்க.''

சூர்யா முகத்தை திருப்பிக் கொண்டான். சற்று தள்ளி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் கும்மாளம் அவன் முகத்தில் எந்தப் புன்னகையையும் கொண்டு வரவில்லை. கிட்டத்தட்ட பத்து நிமிட காத்திருத்தலுக் குப்பின் பொறுமையிழந்து சூர்யா எழுந்தான். அவன் மடியிலிருந்து ஒரு வாழ்த்து அட்டை நழுவி தரையில் விழுந்தது. சற்றே ஆத்திரத்துடன் அதை ஓங்கி மிதிப் பதை போல் தன்னுடைய ஷூ காலை உயர்த்தியவன் தயங்கி விட்டு காலை மெல்ல இறக்கினான்.

அந்த வாழ்த்து அட்டையை எடுத்தான். திறந்தான். 'புதன் மாலை ஆறு மணி, நேப்பியர் பூங்கா - உங்கள் வெளிச்சம்.'



வாழ்த்து அட்டையின் முகப்பில் பெரிதாக இரண்டு சிவப்பு உதடுகள். திறந்தால் உள்ளே, 'இதயத்தை கொள்ளை யடித்தவனுக்கு' என்று ஜோதியின் கையெழுத்து. அதற்கு கீழே நான்கு வரிகள். சூர்யா கடிகாரத்தை பார்த்தான். மணி ஆறு முப்பது. ஜோதிக்காக இனி காத்திருப்பதில்லை என்று இரண்டடி எடுத்து வைத்தபோது, கொலுசு கால்கள் பின்னாலிருந்து சப்தித்தன. சில்லென்று இரண்டு கைகள் பின்புறமிருந்து அவன் கண்களைப் பொத்தின. மிக இறுக்கமாயிருந்த சூர்யாவின் முகம் சட்டென்று பனிக் கட்டி போல் உருகி, பெரிய புன்னகையுடன், அந்த கைகளை அப்படியே தழைத்து இறக்கி உதடுகளுக்கு கொண்டு வந்து முத்தம் கொடுத்தான். கைகள் சரே லென்று விலக்கிக் கொள்ளப்பட்டன. திரும்பினான்.

ஜோதி நின்றிருந்தாள்.

மஞ்சள் சுடிதாரில் ஒரு சூரியகாந்திப் பூ உயிர் பெற்று வந்தது போல் காட்சியளித்தாள்.

''ஸாரிப்பா... ரொம்ப நேரம் காக்க வச்சிட்டேனா?''

''இதுக்கு எதுக்கு ஸாரி சொல்ற... காதலுடைய சுவாரஸ்யமே காத்திருக்கிறதுலதான்.''

''நிஜமாவா? என் மேல கோபம் இல்லையே.''

''என்ன ஜோதி, பெத்த குழந்தை மேல அம்மாவுக்கு கோபம் வந்தாலும் வரலாம். உன் மேல எனக்குக் கோபமா? இப்பவே ஒரு கத்தி வாங்கி என் வயித்துல டார்னு கிழிச்சுப் பாரு. அப்பகூட நான் சிரிச்சுக்கிட்டே தான் காட்டுவேன்.''

''ச்சீ... ஏன் எடுத்த உடனே கத்தி துப்பாக்கின்னு பேசிகிட்டு.''

''சரி... என்ன பேசணும்னு நீ சொல்லு.''

''எனக்கு இன்னைக்காவது அந்த உண்மையைச் சொல்லுவீங்களா?''

''எந்த உண்மை?''

''நான் நோட் புக்ல எழுதி வச்ச பேப்பர் உங்க கைக்கு எப்படி வந்தது? ஒரு மாசமா கேட்டுகிட்டிருக்கேன். இன்னும் நீங்க பதில் சொல்லலை.''

சூர்யா வாய் விட்டுச் சிரித்தான்.

''முட்டாள் பெண்ணாயிருக்கியே. அதுக்கென்ன ஏதாவது முகமூடி கொள்ளைக்காரனையா உங்க வீட்டுக்கு அனுப்பினேன். தினம் நீ ஏர்ற பஸ்லதானே நானும் ஏறிகிட்டிருந்தேன். ஒரு நாள் உன் நோட் புத்தகத்தி லிருந்து ஒரு காகிதம் நழுவி கீழே விழுந்தது. வேற யாரும் எடுக்கிறதுக்கு முன்னால நான் எடுத்தேன். திறந்து பார்த்தா எனக்கு ஆச்சரியம். ஒரு ஆம்பளை முதல்ல இந்த வார்த்தைகளை சொன்னா செருப்படி கிடைக்குமா இல்ல சிரிப்பு கிடைக்குமான்னு தைரியம் வராது. மனசுக்குள் ளயே நான் வச்சு தவிச்சுகிட்டிருந்த ஒரு விஷயத்தை நீ தைரியமா சொல்லியிருந்த. உடனே பதில் எழுதணும்னு தோணிச்சு எழுதிட்டேன்.''

''ச்சீ... அவ்வளவுதானா?''

''வேற என்ன நீ எதிர்பார்த்த? என் கனவுல வந்து, இந்த மாதிரி நோட் புத்தகத்துல எழுதி வச்சிருக்கேன். எப்படி யாவது வந்து திருடிட்டு போங்க. அப்படின்னு நீ சொன்னேன்னு நான் சொன்னாதான் உனக்கு சந்தோஷமா இருக்குமா?''

''அப்படி இல்ல சூர்யா. நான் ரொம்ப உறுதியானவ அப்படின்னு நினைச்சுகிட்டிருந்தேன். எந்த ஆம்பளைக் கும் வளைஞ்சு கொடுக்கக் கூடாதுன்னு பிடிவாதமா இருந்தேன். உண்மையான காரணம் என்னன்னா, எந்த ஆம்பளையும் பெரிசா என்னை இம்ப்ரஸ் பண்ணவே இல்லை. ஆனா எதுக்காக உங்ககிட்ட விழுந்தேன்னு யோசிச்சு யோசிச்சுப் பார்க்கறேன். புரியவே மாட்டேங் குது.''



''ஏம்மா, நான் என்ன உன் மனசை கவர்றதுக்காக சர்க்கஸ்காரங்களை மாதிரி பார் விளையாடி காட்ட முடி யுமா. இல்ல, உடம்புல நெருப்பை வச்சுகிட்டு சைக்கிள் ஓட்டிக் காட்ட முடியுமா.''

''பின்ன எப்படிங்க சூர்யா என் மனசுல வந்தீங்க?''

''ரொம்ப ரொம்ப சிம்பிளான காரணம், ஜோதி.''

''என்ன?''

''நான் உண்மையா, மனசார நூறு சதவிகிதம் உன் னையே நினைச்சுக்கிட்டிருந்தேன். நீ எனக்கு கிடைச்சா உலகத்துல அதைவிட பெரிய சந்தோஷம் இல்லைன்னு ஏங்கினேன். என்னுடைய ஆசையோட தீவிரம் உன்னை வந்து தொட்டிடுச்சி.''

பேசிக்கொண்டே இருவரும் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள்.

''எனக்கே என்னை பார்த்தா ரொம்ப ஆச்சரியமா இருக்கு.''

''ஏய், நாங்களெல்லாம் ஆச்சரியப் படுறதுக்கு கொஞ்சம் பாக்கி வச்சுக்க.''

''எப்படி இருந்த பொண்ணு நான். ப்ரெண்டை பார்க்கப் போறேன்னு வீட்ல போய் சொல்லிட்டு உங்களை பார்க்கிறதுக்கு இங்க வந்திருக்கேன்.''

''ஏன், உங்க வீட்ல கட்டுப்பாடு அதிகமா? உங்க அப்பா முரடரா?''

''அப்படியில்ல. ஆனா நிச்சயமா தங்களோட பொண்ணு காதலிக்கறதா வந்து சொல்லுவான்னு அவங்க கொஞ்சம் கூட எதிர்பார்க்க மாட்டாங்க.''

ஜோதி அவன் தோளில் தலையை சாய்த்துக் கொண் டாள்.

''இப்படி ஒரு ஆம்பளை பக்கத்துல, பப்ளிக் பிளேஸ்ல நெருக்கமா உட்காந்திருப்பேன்னு நான் கற்பனை கூட பண்ணிப் பார்த்ததில்லை சூர்யா. சில சமயம் பொதுவுல நெருக்கமா உட்காந்திருக்கிற ஜோடிகளைப் பார்க்கிறப்ப ஆத்திரமா வரும். இதெல்லாம் எதுக்கு இங்க பண்றாங்க. வீட்ல வச்சுக்க வேண்டியது தானே அப்படின்னு கோபம் வரும். ஆனா இப்பதான் புரியுது. இது எத்தனை சுகமான துன்னு.''

சூர்யா மெல்ல தன் கையை உயர்த்தி அவள் தோளில் வைத்து சற்றே அவளை தன்னோடு இறுக்கிக் கொண் டான். ஜோதி கண்களை மூடி அந்த அணைப்பை ரசித் தாள். அவளுடைய நாசிகள் விகசித்து மூச்சு வேகம் பிடித்தது.

''சூர்யா எப்ப உங்க வீட்டுக்கு என்னை அழைச்சிட்டுப் போகப் போறீங்க?''

''என் வீடு இங்க இல்லையே ஜோதி.''

''உங்க அப்பா அம்மா?''

''எங்க அப்பா, எங்க அம்மா இரண்டு பேரும் என் னோட அஞ்சு வயசிலயே பிடிக்காம ஒரு ஆக்ஸி டெண்டுல இறந்து போயிட்டாங்க. அப்புறம் என்னை



கொஞ்ச நாள் வளர்த்தது எங்க மாமா. பள்ளிக் கூடத்துல பரீட்சைக்குக் கட்ட பணம் கேட்டபோதுதான் எங்க மாமா, 'போதும் நீ படிச்சது மரக்கடைக்கு வந்துரு' அப்படின்னு சொன்னாரு. அவர் வச்சிருக்கிற மரக்கடையில லாரியில் வந்து லோடு இறங்கும்போது அதைப் பார்த்து கணக் கெழுதறதுக்கு என்னை உபயோகப்படுத்திக்கணும்னு ஆசைப்பட்டாரு. ஆனா எனக்கு அழுகையா வந்தது. சொன்னா ஆச்சரியப்படுவ. எனக்கு ரொம்ப நெருக்கமான ஒரு நண்பன் இருந்தான். அவன், 'டேய் நீ ஏண்டா கவலைப்படுற. உன் பீஸை நான் கட்டறேன்.' அப் படின்னு சொல்லி என்னுடைய ஸ்கூல் பீஸ் கட்டினான். அதுக்கப்புறம் ஒரு நாள் கூட பணத்துக்காக என்னை ஏங்க விடலை. மேல மேல நான் படிக்கிறதுக்கு அவன்தான் ஹெல்ப் பண்ணினான்.''

''உங்க மாமா...?''

''மாமா என்னிக்கோ என்னை உதறிட்டு மறந்தே போயிட்டாரு.''

''சரி, உங்க ப்ரெண்டை பார்க்கிறதுக்காவது என்னை அழைச்சிட்டுப் போவீங்களா?''

''அழைச்சுட்டுப் போறேன் ஜோதி. அதுக்குக் கூடிய சீக்கிரமே அவசியம் வரும்.''

''சூர்யா, என்ன திடீர்னு குரல்ல ஒரு இறுக்கம் தெரிஞ்சது?''

''இருக்கும் ஜோதி. பழசெல்லாம் ஞாபகப்படுத்தாத எனக்கு மூட் அவுட் ஆயிடும்.''

''ஸாரிடா.''

ஜோதி அப்படியே அவன் முகத்தில் உரசி கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்தாள். சூர்யா கண்களை மூடிக் கொண்டான்.

சில பெஞ்சுகள் தள்ளி பூ விற்கும் சிறுமி தட்டுடன் நகர்ந்து கொண்டிருக்க, சூர்யா திடீரென்று கைதட்டி அவளை அழைத்தான்.

''இங்க வா.''

அந்தப் பெண் ஓடோடி வந்தாள்.

''ஏனுங்க எவ்வளவு முழம் குடுக்கட்டும்?''

''முழமா? தட்டுல எவ்வளவு பூ இருக்கோ அத்தனையும் சேர்த்து எவ்வளவாகும்?''

பெண்ணின் விழிகள் பெரிதாக விரிந்தன.

''மொத்தம் நூறு ரூபாய்க்கு பூ இருக்குங்க.''

''அப்படியே குடு.''

சூர்யா அத்தனை பூவையும் அப்படியே அள்ளிக் கொண்டான். நூறு ரூபாய் நோட்டை தட்டில் போட்டான்.

''ஓடு... போய் விளையாடு.''

சந்தோஷமாக சிரித்துக் கொண்டு சொன்னான். சற்று முன் பாறைபோல இறுகியிருந்த அந்த முகத்தில் இப்பொழுது புன்னகையா, சிறுமிக்கு ஆச்சரியமாக இருந்தது. பரபரவென்று ஓடிப் போனாள்.

''என்ன சூர்யா இது. எதுக்கு இவ்வளவு பூ?''

''சொன்னா என்னை பைத்தியக்காரன்னு நினைக்க மாட்டியே.''

''ம்ஹூம்.''



சூர்யா அந்த பூச்சரங்களை அரசியல்வாதிகள் தோளில் போட்டுக் கொள்ளும் துண்டைப் போல தனது இடது தோளில் வரிசையாக போட்டுக் கொண்டான்.

''என்ன செய்றீங்க சூர்யா?''

''என் தோள்ல நீ சாய்ஞ்சு முகத்தை வச்சிருந்த இல்லையா. என் எலும்பு உன் கன்னத்தை குத்தப் போகுதே அப்படின்னு தோணிச்சு. இப்ப சாய்ஞ்சுக்க. மெதுமெதுன்னு பூ இருக்கு.''

''நிஜமாவே பைத்தியக்காரனேதான்.''

ஜோதி வாய்விட்டுச் சிரித்தாள். அத்தனை பூச்சரங்களையும் அள்ளி அவன் மடியில் பரப்பினாள்.

''என் முட்டாள் பையா. இந்த பூவோட மெதுமெது எனக்கு சுகமா இருக்காது. உன்னோட எலும்பு கன்னத்துல குத்துதே அதுதான் சுகம்.''

அவன் தோளில் மறுபடியும் கன்னத்தை பதித்து சாய்ந்து கொண்டாள்.

''சூர்யா...''

''ம்...''

''இந்த சன்டே நாம மருதமலை போகலாமா?''

''ஞாயிற்றுக்கிழமையா? ஞாயிற்றுக்கிழமை வேண்டாம் ஜோதி. சனி ஞாயிறு ரெண்டு நாளும் எனக்கு வேற வேலையிருக்கு.''

''சூர்யா, நானே கேக்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நீங்க என்ன பிஸினஸ் பண்றீங்க. நான் எப்ப கூப்பிட்டாலும் ஓடி ஓடி வந்துடறீங்களே.''

''முட்டாள் பெண்ணே, நான் டாட்டா பிர்லா அம்பானி மாதிரி பிஸினஸ் செய்துகிட்டிருந்தாலும் என் ஜோதி

கூப்பிட்டான்னா அத்தனையும் விட்டுட்டு ஓடி வந்திர மாட்டேனா.''

''சரி, அப்படியே இருக்கட்டும். என்ன பிஸினஸ் பண் றீங்க?''

''எங்க மாமாகிட்டயிருந்து கத்துகிட்டது தான். மரக் கடை வச்சிருக்கேன் சூர்யா டிம்பர்ஸ் தெரியுமா?''

''ம்ஹூம்.''

''அந்த விஷயமெல்லாம் உனக்கெதுக்கு. சனி ஞாயி றுல நான் முக்கியமான ஒரு வேலையா போறதனால, மத்த எந்தக் கிழமையில கூப்பிட்டாலும் உனக்காக வர்றேன்.''

''மண்டே எங்களுக்கு காலேஜ் லீவு. அன்னைக்கு?''

''சரி, மண்டே சாயந்திரம் நாம மீட் பண்றோம்.''

சொல்லிவிட்டு சூர்யா நிமிர்ந்தான். கால் சூம்பிப் போய் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த சிறுமி சற்று தள்ளி நின்று அவர்களையே பார்ப்பது தெரிந்தது.

சூர்யா பெரிய புன்னகை அணிந்து கொண்டான். 'இங்கவா' என்று அவளைக் கூப்பிட்டான். சிறுமி சற்று ஆர்வமும் சற்று அச்சமுமாக அவர்களை நெருங்கினாள். சூர்யா பாக்கெட்டிலிருந்து பர்ஸை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான்.

''நீ ஐஸ்க்ரீம் சாப்பிட்டிருக்கியா பாப்பா?''

''ம்ஹூம்.''

பர்ஸை திறந்து இருபது ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''போ, பார்க் வாசல்ல ஒரு ஐஸ்க்ரீம் பார்லர் இருக்கு. உனக்கு புடிச்ச ஐஸ்க்ரீம் வாங்கி சாப்பிடு. ஓடு.''



சிறுமி சற்றும் நம்ப முடியாமல் அந்த ரூபா நோட்டை புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். சந்தோஷ மிகுதியில் சூம்பிப் போன கால்கள் கூட சக்தி மிகுந்தது போல அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள்.

''ஏய், என்ன இது?''

''எது?''

''யாரோ ஒரு பெண்ணுக்கு ஐஸ்க்ரீம் வாங்கி தார்றீங்க. எனக்கு வாங்கி தரணும்னு தோணிச்சா?''

''அவ்வளவுதானே. வா, ஐஸ்க்ரீம் பார்லரையே உன் பேருக்கு மாத்தி எழுதிடலாம்.''

ஜோதி சந்தோஷமாக சிரித்து, சூர்யாவின் இடுப்பை வளைத்து பிடித்துக் கொண்டாள்.

''சூர்யா இன்னொரு விஷயம் சொன்னா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே.''

''இல்ல, சொல்லு.''

''நான் வெட்கத்தை விட்டு உங்க மேல பாய்ஞ்சு பாய்ஞ்சு பிடிக்கறனே, நீங்க மட்டும் யோசிச்சு யோசிச்சு என்னை தொடறீங்க. நான் அழகா இல்லையா?''

சூர்யா சிரித்தான்.

''நீ அழகா இல்லைன்னு சொன்னா, சூரியனுக்கு அமாவாசை வந்திருக்குன்னு சொல்ற மாதிரி. பொது இடத்துல நான் உன்னை கவனமா தொடறதுக்குக் காரணம் நம்மளைத் தெரிஞ்ச யாராவது, நமக்குத் தெரியாம பார்த்துட்டு உன்னோட வீட்ல போய் சொன்னாலும் கூட உனக்கு எந்த ப்ராப்ளமும் வந்திரக்கூடாதுன்னுதான். அப்புறம், திங்கட்கிழமை மஞ்சள் சாரி கட்டிட்டு வா.''

''ஏன் சூர்யா? இன்னைக்கும் அதே கலர்தானே கட்டிட்டு வந்திருக்கேன்.''

''ஆமா, மறுபடியும் திங்கட்கிழமை கட்டிட்டு வாயேன்.''

''அப்ப ஒரு கண்டிஷன்.''

''என்ன?''

''இப்ப, உங்க மடியில கொஞ்ச நேரம் படுத்துக்கிறதுக்கு எனக்கு இடம் குடுக்கணும்.''

சூர்யா புன்னகைத்து நகர்ந்து கொள்ள, ஜோதி அவன் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டாள். அவள் முகத்தில் நிறைவான ஆனந்தம் ஒளிர்ந்தது.

## 19

''நிஜமாவா அண்ணா?''

பானுவின் குரலில் ஆச்சரியம் ஒலித்தது. சூர்யாவின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள்.

''ஆமாம் பானு, ஜோதி இந்த வீட்டுக்கு வரப்போறா. மருமகளா வரப்போறா.''

''ஐயோ, கேட்கவே எவ்வளவு சந்தோஷமாயிருக்கு. நானும் அம்மாவும் ஜோதியை எப்பண்ணா பார்க்கலாம்?''

''சூர்யா.''

அம்மா அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

''உண்மை தெரிஞ்சா அந்த பொண்ணு தாங்குவாளா?''

''அம்மா, தயவு செஞ்சி இந்த மாதிரி கேள்வி எல்லாம் கேட்டு, என்னை தர்ம சங்கடப் படுத்தாதீங்க.''

''சரி.. சரி..''



அம்மா தன்னுடைய குரலை இறக்கிக் கொண்டாள்.

''அடுத்த வாரம் ஜோதி இங்கே வருவா. பிரம்மாண்டமா வருவா.''

சூர்யா சொல்லிவிட்டு பானுவைப் பார்த்து கண்ணடித்தான். பானு புரியாமல் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

## 20

''லேசா லேசா தலையை இந்தப் பக்கம் சாய்.''

காமிராவின் வ்யூ பைண்டர் மூலம் ஜோதியை பார்வையிட்டுக் கொண்டிருந்தான் சூர்யா. ஜோதி மஞ்சள் புடவையில் மகரந்த துகள்களை ஒருங்கிணைத்தது போல பளீரென்று ஒளிர்ந்தாள்.

''இந்த காமிராவுல இருக்கிற ரோல் தீர்ற வரைக்கும் என்னைத்தான் எடுக்கப் போறீங்களா?''

''ஆமா'' என்றான் சூர்யா.

''அப்படி அந்த மரத்து மேல சாய்ஞ்சு நில்லு.''

சூரிய வெளிச்சம் முகத்தின் சரி பாதியை ஒளியூட்டிக் காட்ட, மறுபாதியில் வெளிச்சமும் நிழலுமாகப், படிந்திருக்க ஜோதியின் முகம் மிகவும் வசீகரமாக தென்பட்டது. சூர்யா வெவ்வேறு கோணங்களில் அவளை புகைப் படம் எடுத்தான். பெரும்பாலான புகைப்படங்கள் அவளுடைய முகத்தை நெருக்கமாக க்ளோஸ் அப்பில் பதிவு செய்தன.

''ஒவ்வொரு போட்டோவுக்கும் எனக்கொரு ஐஸ்க்ரீம் வாங்கித் தரணும்.''

''ஷ்யூர்'' என்றான் சூர்யா.

இருபது வெவ்வேறு கோணங்களில் அவளை புகைப் படம் எடுத்து முடித்ததும் ஜோதி பாய்ந்து வந்து கேமி ராவை அவனிடமிருந்து பிடுங்கினாள்.

''நீங்க வச்சிக்கிறதுக்கு என்னை போட்டோ எடுத்து கிட்டீங்க. நான் வச்சுக்கிறதுக்கு எனக்கு போட்டோ வேணும். உங்களை நான் எடுக்கப் போறேன்.''

சூர்யாவை அவள் க்ளிக் செய்ய ஆரம்பிக்க, அவன் முகத்தை வெவ்வேறு சேஷ்டைகளாக்கிக் கொண்டு அவளை வெறுப்பேற்றினான்.

'ப்ளீஸ்' என்று கெஞ்சலாக அவள் கேமிராவால் அவன் மார்பில் செல்லமாக அடித்தாள்.

# 21

அடுத்த ஞாயிறு மாலை.

அழைப்பு மணி ஒலித்ததும் சூர்யா சென்று கதவைத் திறந்தான். பானுவும் அம்மாவும் நின்றிருந்தார்கள்.

''ஊட்டி குளிர் எலும்பு வரைக்கும் குத்துதுப்பா'' என்று அம்மா, போர்த்தியிருந்த கம்பளியை இன்னும் நெருக்கமாக இழுத்துக் கொண்டாள்.

''பானு, நீ கண்ணை மூடிட்டு வா. உனக்கு ஒண்ணைக் காட்டணும்.''

சூர்யா சொன்னதும் பானு முகத்தில் ஆர்வம் கொப் பளிக்க கண்களை மூடிக் கொண்டாள். அவள் கையைப் பற்றி சூர்யா நடத்திச் சென்றான். பின்னாலயே அம்மாவும் தொடர்ந்தாள்.

''கண்ணைத் திறக்கலாமா?''



''இரு கழுதை. நான் சொன்னப்புறம் திறக்கலாம்.''

''இப்ப திறக்கலாமா?''

''அட, இன்னும் அந்த இடத்துக்குப் போய் சேரவே யில்ல.''

சூர்யா பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்று அறை மையத்தில் அவளை நிறுத்தி தன் கையை விலக்கிக் கொண்டான்.

''இப்ப கண்ணை திறந்து பாரு.''

பானு இமைகளைத் திறந்தாள். பார்த்த காட்சி பிரமிக்க வைத்தது. அந்த அறையின் நான்கு சுவர்களிலும் ஜோதி ஆக்ரமித்திருந்தாள். எதிர் சுவரில் பத்தடிக்கு ஆறடி விகிதத்தில் அவளுடைய வசீகரமான முகத்தின் நெருக்க மான க்ளோஸ் - அப் பிரமாண்டப் படுத்தப்பட்டிருந்தது.

''அப்பா! என்ன அழகு இவ.''

பானு நெஞ்சை பிடித்துக் கொண்டாள். அந்த அறை யின் மற்ற சுவர்களில் ஜோதியின் வெவ்வேறு புகைப் படங்கள் வெவ்வேறு அளவுகளில் ஒட்டப்பட்டிருந்தன. அந்த அறையின் மையத்தில் நின்று கொண்டு பார்த்தால் நான்கு திக்கிலிருந்தும் ஜோதி சூழ்ந்து கொண்டிருப்பது போல தோன்றியது.

பானு ஒவ்வொரு புகைப்படமாக ஓடி நெருக்கத்தில் பார்த்தாள். அம்மா பிரமித்து சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

''என்ன சூர்யா இதெல்லாம்?'' என்றாள்.

''ஜோதிம்மா. அவளை நேர்ல அழைச்சுட்டு வர்றதுக்கு முன்னால போட்டோவுல அழைச்சுட்டு வந்திட்டேன். பிடிச்சிருக்கா? உங்களுக்கு மருமகளா வரப் போறவளை பிடிச்சிருக்கா?''

''ரொம்ப கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவப் போல தெரியறா. அடக்கமான பொண்ணா தெரியறா. உன் பேர்ல எக்கச்சக்க காதல் போல இருக்கு. கண்ணுலயே தெரியுது.''

''ஆமாம்மா'' சூர்யா தலையை குனிந்து கொண்டான்.

''நீ செய்யறது நியாயம் தானா சூர்யா?''

சூர்யாவின் முகம் சட்டென்று இறுக்கமானது.

''அம்மா இந்த விஷயத்துல தலையிடாதீங்கன்னு எத்தனையோ தடவை சொல்லிட்டேன்.''

அம்மாவின் குரல் சட்டென்று அடங்கிப் போனது.

''நான் கிளம்பணும். பஸ்சுக்கு நேரமாச்சு.''

''டிபன் சாப்டுட்டுப் போப்பா.''

''வேண்டாம். மேட்டுப் பாளையத்துல சாப்டுக்கறேன்.''

சூர்யா சரேலென்று கத்தரித்துக் கொண்டு, தனது பயணப் பையை அள்ளிக் கொண்டு அங்கிருந்து வெளிப் பட்டான். அம்மாவும், பானுவும் பிரமை பிடித்தவர்கள் போல அவன் சரிவுகளில் வேகமாக இறங்கி நடந்து செல்வ தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## 22

ஜோதி கண்ணாடிக்கு எதிரில் நின்றிருந்தாள்.

'இந்த முகத்தையா அழகு... அழகு என்று சூர்யா கொண்டாடுகிறான்?' அவளுடைய முகத்தின் பேரில் அவளுக்கே ஒரு விதப் ப்ரியம் வந்து விட்டது. புருவத்தை நீவிக் கொண்டாள். பொட்டை சரிப்படுத்திக் கொண்டாள். கூந்தலை சற்று



தழைய வாரி பட்டாம் பூச்சி க்ளிப் அணிந்து கொண்டாள். பச்சை நிற சுடிதாரும், மஞ்சள் நிற துப்பட்டாவும் அவள் நிறத்துக்கு வெகு பொருத்தமாகத் தோன்றியது.

''என்ன ஜோதி, வெளியே கிளம்பிட்டியா?''

அம்மாவின் குரல் முதுகில் கேட்டது.

''ஆமாம்மா.''

''என்ன இப்பல்லாம் லீவு நாள்ல கால் வீட்ல நிற்க மாட்டேங்குது. தோழியைப் பார்க்கப் போறேன். துடைப்பக் கட்டையை பார்க்கப் போறேன்னு ஓடிப் போயிடுற.''

''அம்மா எனக்கு இருபது வயசாகப் போகுது. என் ப்ரண்டைப் பார்க்கப் போகக் கூட எனக்கு சுதந்திரம் கிடையாதா?''

''எந்த ப்ரண்டு வீட்டுக்குப் போற?''

''கலாவதி வீட்டுக்கு.''

''அக்கா...'' பிரபு எங்கிருந்தோ ஓடி வந்தான்.

''கலாவதியக்கா வீட்டுக்கா போற?''

''ஆமா.''

''நானும் வரேங்கா. அவங்க தம்பி கூட கம்ப்யூட்டர்ல கேம்ஸ் எல்லாம் விளையாடிட்டு இருப்பேன்.''

''இன்னைக்கு வேண்டாம் செல்லம். இன்னொரு நாள் அழைச்சுட்டுப் போறேன்.''

''அக்கா இன்னைக்கு வரேங்கா.''

''வேண்டாம்னா வேண்டாம்.''

திடீரென்று ஜோதியின் குரலில் கோபம் தொனித்தது.

''எப்ப திரும்பி வருவ?''

அம்மா கேட்டாள்.

''என்னம்மா, என்னென்னவோ கேள்வியெல்லாம் கேக்குற.''

''இல்ல கொஞ்ச நாளாவே உன்னைப் பார்த்திட்டு வர்றேன். உங்கிட்ட ஒரு மாற்றம் தெரியுது.''

'அட, காதலில் இருந்தால் எத்தனை தான் கட்டுப் படுத்தி வைத்தாலும், உணர்வுகள் ரகசியமாக பொத்தி வைக்கப்பட்டாலும் எப்படியோ காட்டிக் கொடுத்து விடு கிறதே!

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. நான் எப்பவும் போல தான் இருக்கேன்.'' என்று அம்மாவிடம் சொல்லி விட்டு, பிரபுவிடம் வந்து அவன் தலையை சிலுப்பினாள்.

''நான் திரும்பி வரும்போது உனக்கு ஒரு பெரிய சாக்லேட் வாங்கிட்டு வர்றேன் ஓகே.''

''போக்கா...''

அவன் கோபத்தோடு முகத்தை திருப்பிக் கொண்டான். 'நான் போகிற இடத்துக்கெல்லாம் உன்னை அழைச் சுட்டுப் போக முடியாதுடா..' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்ட ஜோதி, அவன் கன்னத்தை செல்லமாகத் தட்டினாள்.

தொலைபேசி ஒலித்தது.

அம்மா எடுத்துப் பேசினாள்.

''ஜோதி உனக்குதான்.''

ஜோதி ரிஸீவரை வாங்கிக் கொண்டாள்.

''ஹலோ...''

''ஜோதியா பேசறது?'' எதிர் முனையில் ஒரு பெண் ணின் குரல் மூச்சிரைப்புடன் விசாரித்தது.



''ஆமா...''

''ஜோதிதானே?''

''ஆமா, ஜோதிதான் பேசுறேன்.''

''நீங்க சூர்யாவை ரொம்ப நம்பிட்டீங்களா?''

''யார் பேசறது?''

''சனி ஞாயிறுல எங்கப் போறான்? என்ன பண்றான்னு விசாரிச்சீங்களா?''

''ஹலோ, நீங்க யார் பேசுறதுன்னு கேட்டேன்.''

''விசாரியுங்க, நீங்களாகப் போய் ஆபத்துல மாட் டிக்காதீங்க.''

எதிர்முனை வைக்கப்பட்டது. ஜோதி சற்றே குழப்பத் துடன் ரிஸீவரை பார்த்துவிட்டு வைத்தாள்.

''யார்கிட்டயிருந்து போன்?''

அம்மா கேட்டாள்.

''யாருன்னு சொல்லலைம்மா. ஆனா ஜோதியா? ஜோதிதான் பேசறதா? ஜோதிதானே? அப்படின்னு மறுபடி மறுபடி ஒரே விஷயத்தைக் கேட்டுக்கிட்டிருந் தாக. கடைசில வச்சிட்டாங்க'' சொல்லிவிட்டு ஜோதி தன் ஹேண்ட் பேகை எடுத்துக் கொண்டாள்.

'போனில் பேசிய பெண் யார்? சூர்யாவைப் பற்றி அவளிடம் எச்சரிக்கை செய்ய வேண்டிய அவசியம் என்ன?'

அவளுடைய சந்தோஷத்தில் ஒரு குண்டுசியால் குத்தப்பட்டது போல ஜோதி உணர்ந்தாள்.

''போய்ட்டு வர்றேம்மா'' என்று சொல்லிவிட்டு அம் மாவையோ, பிரபுவையோ பார்க்காமல் அவசர அவசரமாக வீட்டை விட்டு வெளியேறினாள்.

## 23

மருதமலை சரிவுகளில் சற்று ஒதுக்குப்புறமான பகுதி. சூர்யாவிடமிருந்து சற்று தள்ளியே அமர்ந்திருந்தாள் ஜோதி. சூர்யா கைநீட்டி அவள் முழங்காலில் தட்டினான். ஜோதி நிமிர்ந்தாள்.

''என்னாச்சு உனக்கு. வந்ததிலிருந்தே விறைச்ச பூனை மாதிரி உக்காந்திருக்கே.''

''எங்க வீட்ல எல்லாரும் கேள்வி மேல கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டாங்க சூர்யா.''

''அவ்வளவுதானே. நான் வர்றேன். அவங்க கிட்ட அறிமுகப்படுத்தி வை. நான் அவங்ககிட்ட பேசி சமாளிச்சிடறேன்.''

''அதுக்கு முன்னால உங்களைப் பத்தி நான் இன்னும் கொஞ்சம் தெரிஞ்சுக்கணும் சூர்யா.''

''என்னைப் பத்தியா? என்ன தெரிஞ்சுக்கணும்?''

''நாளைக்கே என்னோட அப்பாவோ, அம்மாவோ உங்களைப் பத்தி என்கிட்ட விசாரிச்சாங்கன்னா, உங்க பேரு சூர்யான்னு தெரியும். சூர்யா டிம்பர்ஸ்ன்னு மரக்கடை வச்சிருக்கீங்கன்னு தெரியும். உங்க மனுஷங்க யாரு. உங்க வீடு எங்கயிருக்கு. சனி ஞாயிறு எல்லாம் எங்க போயிட்டு வர்றீங்க. இந்த கேள்விக்கெல்லாம் எனக்கு பதில் தெரியாதே சூர்யா.''

''பூ... அவ்வளவுதானே. என்கூட வா. இந்த சனிக்கிழமை நான் எங்கப் போறேனோ அங்க அழைச்சுட்டுப் போறேன்.''

''நிஜமாவா?

''நிஜமாதான். இதையா மனசுல வச்சுகிட்டு இத்தனை நேரம் உம்முன்னு இருந்தே. பைத்தியக்காரி. வெள்ளிக்



கிழமை நைட்டு நான் புறப்படுவேன். எங்ககூட வர்றியா?''

''ஐயோ, நைட்ல நான் எப்படி வர முடியும்?''

''அப்ப, ஒண்ணு செய். சனிக்கிழமை காலைல நான் சொல்ற இடத்துக்கு வந்திடு. நான் அங்க வெயிட் பண்ணி உன்னை அழைச்சிட்டுப் போறேன் அன்னைக்கு நைட்டுக்குள்ள வீட்டுக்கு திரும்பிடலாம்... சரியா?''

''சரி.''

''ஊட்டி போற பஸ்ல ஏறு. அறிவழகன் தோட்டம் அப்படின்னு கேளு. ஊட்டி டெர்மினஸ்க்கு முன்னாடியே ஒரு ஸ்டாப்பிங்ல இறங்கிக்கணும். அங்கேயே வெயிட் பண்ணிட்டிரு. நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்.''

''எத்தனை மணிக்கு?''

''பத்து, பத்தரை.''

''ஓகே, சூர்யா.''

''அப்பா! இப்பவாவது முகத்துல சிரிப்பை காட்ட முடியுமா?''

''இன்னொரு விஷயமும் என்னைக் குழப்புது சூர்யா.''

''என்ன?''

''இன்னைக்கு எனக்கொரு போன் வந்தது.''

''போனா?''

''பேசுனது ஒரு பெண் குரல். சூர்யாகிட்ட எச்சரிக்கையா இரு. அவன் சனி ஞாயிறுல எங்க போறான்னு கவனி. அப்படின்னு அந்த குரல் சொல்லிச்சு.''

சூர்யா மிகப் பெரிய ஹாஸ்யத்தை கேட்டவன் போல வெடித்துச் சிரித்தான்.

''எதிர்பார்த்தேன்'' என்றான். ''நல்லவேளை, ஓபனா கேட்டியே. மனசுக்குள்ள வச்சு நீயே எந்த முடிவுக்கும் வராம.''

''போன்ல பேசுனது யாருன்னு தெரியுமா சூர்யா?''

''ரொம்ப நல்லாத் தெரியும்.''

''யார் சூர்யா அது?''

''எங்க கடையில வேலை செய்யிற ஒரு பொண்ணு. அதுக்கு என்னவோ எம்மேல ஒரு பிரியம் விழுந்திடுச்சி. லவ் பண்றதா ஒரு லெட்டர் வேற குடுத்திச்சி. நான் கூப் பிட்டுக் கண்டிச்சேன். ஏற்கனவே வேற ஒரு பொண்ணுக்கு எம்மனசை குடுத்துட்டேன். உனக்கு அதுல இட மில்லைன்னு அழுத்தம் திருத்தமா சொல்லிட்டேன். அந்தப் பொண்ணால தாங்க முடியலை. நான் உங்க போல உயிரையே வச்சிருக்கேன். நீங்க உருகிட்டிங்கிங்களே ஜோதி அவ அப்படி இல்ல. அப்படின்னு அவ எங்கிட்ட சொன்னா. உன்னைப் பத்தி அவளுக்கென்ன தெரியும்னு நான் விளையாட்டா சிரிச்சிட்டு விட்டுட்டேன். ஆனா தான் சொன்னதை நிரூபிக்கிறதுக்காக அந்த பொண்ணு தான் போன் பண்ணி விளையாடுதுன்னு நினைக் கிறேன்.''

ஜோதியின் முகத்தில் சட்டென்று ஒரு தெளிவு வந்தது. அப்படியே நகர்ந்து சூர்யாவின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''நானொரு முட்டாளுங்க. எடுத்த உடனே உங்க கிட்டே சொல்லியிருக்கலாம்ல. மனசுக்குள்ள வச்சுக் குழப்பிக்கிட்டேன்.''

''குழப்பத்தோட நின்னுடிச்சு இல்லையா. லவ் விட்டுப் போகலையே?''



''என்ன சூர்யா கேக்கறீங்க?''

''இல்ல, என்னை லவ் பண்றதா சொன்னியே அதுவே மாறிடிச்சோன்னு கேக்கறேன்.''

''எப்படி சூர்யா அப்படி சட்டுன்னு மாறும்? அப்படியே உங்களுக்கு இன்னொரு பொண்ணு மேல ஆசை இருக்கு அப்படின்னு தெரிஞ்சாகூட எனக்கு சோகமா இருக்கும், துக்கமா இருக்குமே தவிர உங்க போல இருக்கிற காதல் போகாது சூர்யா.''

''அப்ப, ஒண்ணு செய்யறியா.''

''என்ன?''

''போன தடவை உன்னை போட்டோ எடுத்தேன். இந்த தடவை 'ஹேண்டிகேம்' கொண்டு வந்திருக்கேன்.''

''அப்படின்னா?''

''குட்டி வீடியோ. நீ இந்த கேமராவைப் பார்த்து 'ஐ லவ் யூ... ஐ லவ் யூ'ன்னு சொல்லணும். நிஜமாவே என்னை காதலிக்கிறதா இருந்தா இந்த கேமிராதான் நான்னு நினைச்சு இதுகிட்ட உன் லவ் டயலாக் எல்லாம் பேச முடியுமா?''

''என்னத்துக்கு இந்த விளையாட்டு?''

''விளையாட்டு இல்ல ஜோதி. நானும் நீயும் அப்பப்ப பார்த்துக்கறோம். அப்புறம் நீ பாட்டுக்கு கிளம்பி போயி டுற. எனக்கு நைட்டெல்லாம் உன் கிட்ட பேசணும்போல இருக்கு. உன்னை பக்கத்துல வச்சுக்கணும் போல இருக்கு. உன் போட்டோ எல்லாம் பார்த்து பார்த்து சந்தோஷப் படற மாதிரி இதுல உன் குரலையும் பதிவுப் பண்ணிட்டேன்னா அதை ரீவைண்ட் பண்ணி போட்டுப் போட்டுப் பார்ப் பேன். நான் எப்பக் கேட்டாலும் நீ ஐ லவ் யூன்னு சொல்லுவ. அந்த சந்தோஷம்தான்.''

''அவ்வளவு தானே. நான் ரெடி.''

சூர்யா கொண்டு வந்திருந்த பையிலிருந்து அந்த சிறிய ஒளிப்பதிவுக் கருவியை வெளியே எடுத்தான்.

''ஜோதி ஒரே ஒரு விஷயத்தை சொல்லிடறேன்.''

''என்ன?''

''உனக்கு மஞ்சள் கலர்தான் நல்லாருக்கும்னு நினைச்சேன். பச்சைக்கலர் இன்னும் சூப்பரா இருக்கு. அப்படியே அள்ளிட்டு ஓடிடலாம் போல இருக்கு.''

''ஓடுங்களேன்.''

''இல்ல, அதுக்கு இன்னும் நேரம் வரல்ல...''

''சனிக்கிழமையா?''

''ம்... அப்படின்னு வச்சுக்கோயேன்.''

''ஒரு கண்டிஷன் சூர்யா.''

''என்ன?''

''தனியா இருக்கும்போது, நான் உங்க மேல விழுந்து புரண்டாகூட நீங்க கவனமா இருக்கணும். கல்யாணத்துக்கு முன்னால அத்து மீறுறதுக்கு எல்லாம் ட்ரை பண்ணக்கூடாது.''

''ப்ராமிஸ்'' என்றான் சூர்யா சிரித்தபடி. அவன் கேமிராவை ஓடவிட, ஜோதி தன் முகத்தை மிக வசீகரமாக வைத்துக் கொண்டு ஒரு மெல்லிய புன்னகையுடன், ''ஐ லவ் யூடா. சத்தியமா ஐ லவ் யூடா.'' என்றாள்.

## 24

வெள்ளிக்கிழமை இரவு. அழைப்பு மணியை அழுத்தியதும் பானு ஓடி



வந்தாள். கதவைத் திறந்தாள். சூர்யாவை பார்த்ததும் பிரகாசமாகப் புன்னகைத்தாள்.

''வாங்கண்ணா, என்ன இன்னைக்கு லேட்டு?''

சூர்யா அவளுக்கு பதில் சொல்லாமல் அவள் புன்னகைக்கு மறு புன்னகையை கூட திருப்பித் தராமல் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

''அண்ணா, என்மேல கோபமா?''

நாற்காலியில் போய் அமர்ந்தான். அம்மா உள்ளேயிருந்து புடவைத் தலைப்பில் கையை துடைத்துக் கொண்டே வந்தாள்.

''வாப்பா, சூர்யா.''

சூர்யா அம்மாவை நிமிர்ந்து பார்த்தான். முகத்தில் அதே கடுமை இருந்தது. பானுவும் அம்மாவும் அவனுக்கு எதிரில் வந்து அமர்ந்து கொண்டார்கள்.

''என்ன சூர்யா, ஏன் என்னமோ போல இருக்கே?''

சூர்யா பானுவைப் பார்த்துத் திரும்பினான்.

''உன் வேலையா?''

அம்மாவைப் பார்த்தான்.

''இல்ல, உங்க வேலையா?''

அவனுடைய குரலில் ஒலித்த கோபம் இருவரையும் ஆச்சரியப்படுத்தியது.

''என்ன சொல்ற சூர்யா?''

''ஜோதிக்கு போன் பண்ணினது யாரு?''

''ஜோதிக்கா... போனா... என்னப்பா சொல்ற?''

"சூர்யாவை நம்பாத. அவன் சனிக்கிழமை எங்க போறான்னு பாரு. அப்படின்னு சொன்னது யாரு?"

"ஐயோ அண்ணா, சத்தியமா நான் இல்ல." என்றாள் பானு. அம்மா சூர்யாவை நேருக்கு நேர் பார்க்காமல் விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.

"என்னை சந்தேகப் படறியா சூர்யா?" என்றாள்.

"நீங்களும் பண்ணலை. பானுவும் பண்ணலைன்னு சொன்னா, என்னைத் தெரிஞ்ச பொண்ணு வேற யாரோ இருக்காங்கன்னு அர்த்தம். ஜோதிக்கு அப்படி ஒரு போன் வந்திருக்கு."

"இப்ப என்ன பண்ணப் போறிங்கண்ணா?"

"ஒண்ணும் பண்ணப் போறதில்ல. நாளைக் காலைல ஜோதி இங்க வர்றா."

"ஹை!"

பானுவின் முகத்தில் சந்தோஷம் தெரிந்தது.

"பார்த்துப்பா. அந்த பொண்ணுகிட்ட கொஞ்சம் கவனமா நடந்துக்க" அம்மா நிதானமான குரலில் சொன்னாள். அவளுடைய குரலில் இழைந்திருந்த கவலை, சூர்யாவின் முகத்தில் புன்னகையைக் கொண்டு வந்தது.

"இப்போ, தெளிவா புரிஞ்சிடுச்சு ஜோதிக்கு யார் போன் பண்ணினீங்கன்னு."

"ஆமா சூர்யா. நான்தான் பண்ணினேன்" என்றாள் அம்மா.

"என்னதான் நீ காரணம் சொன்னாலும் எனக்கென்னவோ நாம சரியான திசையிலதான் போய்க்கிட்டிருக்கோமான்னு அப்பப்ப ஒரு கவலை வந்திடுது."



"கவலைப்படாதீங்கம்மா. நெஞ்சை தொட்டு சொல்லுங்க. இப்ப உங்க பையன்கிட்ட ஏதாவது மாறுதல் இருக்கா இல்லையா?"

"இருக்கு. அதுதாம்பா எனக்கு பயமா இருக்கு."

"இதுல பயப்படுறதுக்கு என்னம்மா இருக்கு. பொறுப்பை என்கிட்ட விட்ருங்க. எல்லாம் நல்லபடியா முடியும்."

சூர்யா உறுதியான குரலில் சொன்னான்.

"நீங்க இரண்டு பேரும் இருட்டுல புறப்பட வேண்டாம். இருந்து காலைல முதல் பஸ் பிடிச்சுப் போங்க."

"அண்ணா அண்ணா நாளைக்கு நான் இங்கேயே இருக்கேன் அண்ணா. ஜோதி வரும்போது பார்க்கணும் போல இருக்கு."

"அவசரப்படாத பானு. எப்ப காலம் கூடி வருதோ அப்ப நானே உன்னை இருக்கச் சொல்றேன். நாளைக் காலைல புறப்படுறதுக்கான ஆயத்தம் பண்ணு. இப்ப எனக்கு வழக்கமான வேலை இருக்கு."

சூர்யா எழுந்தான்.

## 25

ஜோதி இருட்டு விட்டத்தை வெறித்துக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தாள். மனதிற்குள் நூறாயிரம் பட்டாம் பூச்சிகள் படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டிருந்தன. மறுநாள் விடியப் போவதை எதிர்பார்த்து அவளுடைய கவனம் கடிகாரத்தின் மீதே இருந்தது. அரை மணி நேரம், ஒரு மணி நேரம் எப்போதாவது இரண்டு மணி நேரம் என்று யோசித்துக் கொண்டிருந்த சூர்யாவை அவனுடைய

இடத்தில் மறுநாள் சென்று சந்திக்கப்போவதை நினைத்து அவளுள் அச்சமும் ஆர்வமும் ஒருசேர பொங்கின.

தனிமையில் இருக்கும் ஒருவனைத் தேடி அவனுடைய இடத்திற்கே போவது ஆபத்தான விஷயமோ என்று எச்சரிக்கை உணர்வு ஒருபுறம் ஒலித்துக் கொண்டே இருந்தாலும் அதில் கிடைக்கப் போகிற ஆனந்தம் இன்னொருபுறம் அவளை செலுத்திக் கொண்டிருந்தது. மேலும் சுழலும் மின் விசிறியைப் பார்த்தாள். அங்கே சூர்யாவின் கேமிரா லென்ஸை கற்பனை செய்து கொண்டாள். உதடுகளை குவித்து, 'ஐ லவ் யூ டா... சத்தியமா ஐ லவ் யூடா' என்று முணுமுணுப்பாக சொன்னாள். வெளிச்சம் இருந்திருந்தால் வெட்கத்தில் அவள் கன்னம் சிவந்து போனது வெட்ட வெளிச்சமாகி இருக்கும்.

## 26

காலை சூரியனின் ஆக்ரோஷக் கிரணங்கள் குளிர் மேகங்களை துளைத்து துளைத்து சக்தியெல்லாம் இழந்த அந்த மரவீட்டின் மீது இதமான வெயில் படிந்திருந்தன.

பானுவும் அம்மாவும் திருப்பத்தில் மறையும் வரை அவர்களுக்கு கை அசைத்துக் கொண்டிருந்த சூர்யா கதவை சாத்தி தாளிட்டான். ஜன்னல் வழியே தரையில் பதிந்திருந்த சூரிய வெளிச்சத்தை மிதித்து அந்த வீட்டின் மறு பகுதிக்கு சென்றான். இன்னும் நான்கு மணி நேரங்கள். அப்புறம் ஜோதி வந்துவிடுவாள். அதற்கு அவன் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் இருந்தன.

மரப்படிகளில் இறங்கி, அங்கிருந்த பிறையிலிருந்து சாவியை எடுத்தான். பூட்டப்பட்டிருந்த அந்த அறைக்



கதவைத் திறந்தான். சாவியை பிறையில் வைத்துவிட்டு கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். உள்ளே தாளிட்டுக் கொண்டான். தீக்குச்சியை உரசி அங்கிருந்த பெரிய மெழுகுவர்த்தியின் திரியைக் கொளுத்தினான்.

இப்பொழுது அந்த அறைக்குள் வெளிச்சம் மெல்ல படர்ந்தது. பரவியது. மெழுகுவர்த்தியின் வெளிச்சம் தெரியாத நிழலான இருட்டுப் பகுதியில் அறை தென்பட்டது. சூர்யா மெழுகுவர்த்தியை கையில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு அடியாக முன்னேறினான்.

அந்த அறை வித்தியாசமாக அமைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சுவர்களில் ஏழடி உயரத்திற்கு குஷன் வைத்து தைக்கப்பட்டிருந்தது. சுவரில் ஓங்கி மோதினால் கூட காயம் பட்டுவிடக் கூடாது என்ற கவனம் அதில் தெரிந்தது.

சூர்யா நெருங்க நெருங்க அந்த இருள் பகுதியில் அமர்ந்திருந்த உருவம் மெல்ல மெல்ல வெளிச்சத்திற்கு வந்தது.

"தியாகு."

சூர்யா கனிவான குரலில் அழைத்தான்.

அந்த உருவம் சட்டென திரும்பிப் பார்த்தது. அவனுக்கும் சூர்யாவின் வயதுதான் இருக்கும். முகம் இறுகி இருந்தது. தலைமுடி கட்டுப்பாடில்லாமல் வளர்ந்து முரண்டு பிடித்தது. முகத்தில் ஒரு வாரத்தின் முள் தாடி. அணிந்திருந்த சட்டையின் முன்புறமெல்லாம் சாப்பாடுகளின் மிச்சங்கள். சமையலின் வாசமும், வியர்வையின் வாசமும், அழுக்கின் வாசமும் சேர்ந்து கலவையான ஒரு வாசம் தியாகுவிடமிருந்து வீசியது.

சூர்யா நெருங்க நெருங்க தியாகு வெளிச்சத்திலிருந்து ஒதுங்கி இருட்டில் பதுங்கினான். மெழுகுவர்த்தியை பக்கத்தில் வைத்து விட்டு சூர்யா தியாகுவை நெருங்கினான்.

எந்த அருவருப்பும் இல்லாமல் தியாகுவை பிடித்து எழுப்பினான். தியாகுவிடமிருந்து துர்நாற்றம் வீசியது. தியாகு சூர்யாவை உதறினான். உதறிய வேகத்தில் சூர்யா தரையில் விழுந்தான். தியாகுவின் பலம் பிரமிப்பூட்டுவதாக இருந்தது.

''தியாகு நான் உனக்கு இன்னைக்கு புதுசா ஒண்ணு காட்டப் போறேனே. வரமாட்டியா.''

தியாகு பதில் சொல்லாமல் நிமிர்ந்து பார்த்தான். புத்திசாலித்தனம் எல்லாம் உறிஞ்சப்பட்டு ஆதிவாசி மனிதனைப் போல அவன் தோற்றமளித்தான். சூர்யா சொல்வது அவனுக்கு விளங்குகிறதா இல்லையா என்று புரியாமல் பார்க்கும் ஒரு பார்வை. 'ஹேய்' என்று பெருமூச்சாக ஒரு பதில். சூர்யா அவனைப் பற்றி எழுப்பினான். தியாகு முற்றிலும் நிமிர்ந்து நிற்காமல் சற்றே கூன் போட்டபடி நின்றான். இரண்டு கைகளும் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் தாமாக ஆடின.

''வா, தியாகு.''

சூர்யா தியாகுவை நகர்த்திக் கொண்டு அந்த அறையின் இன்னொரு கதவை நோக்கி நகர்ந்தான். சில சமயங்களில் தியாகுவைப் பிடித்து தள்ள வேண்டியிருந்தது. சில சமயங்களில் அவனைப் பிடித்து இழுக்க வேண்டியிருந்தது. அந்த அறையில் தரையெங்கும் ஒரு வாரத்தின் உணவு மிச்சங்கள் சிதறிக் கிடந்தன. சூர்யா அறையின் மறு கதவை திறந்தான். அறைக்குள் தியாகுவை நடத்திச் சென்றான். கதவை மூடி தாளிட்டான். விளக்கைப் போட்டான். சரேலென்று அந்த அறையில் வெளிச்சம் கூடியதும் தியாகுவிடமிருந்து 'ஹக்' என்ற வியப்பு ஒலி வெளிப்பட்டது.



சூர்யாவின் கையை உதறிவிட்டு தியாகு சுவருக்கு ஓடினான். பிரமாண்டமாக அங்கு ஒட்டப்பட்டிருந்த ஜோதியின் படத்தில் முகத்தை வைத்து தேய்த்தான். கலகலவென்று சிரித்தான். அங்கிருந்து இன்னொரு புகைப்படம். அதிலிருந்து அடுத்த புகைப்படம் என்று ஓடி ஜோதியின் புகைப்படங்களுக்கு முத்தம் கொடுத்தான். கைகளால் வருடி வருடி ஆனந்தப்பட்டான்.

சரேலென்று சுவிட்ச் போட்டது போல சுவரிலிருந்து கையை விலக்கி, அப்படியே தரையில் குறுகி அமர்ந்தான். அவன் முகத்திலிருந்து சிரிப்பு மறைந்து துக்கம் சூழ்ந்தது. தொண்டை மிரண்டு ஒலி சிதற குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான்.

சில நிமிடங்கள் அப்படி அழுது கொண்டிருந்தபொழுது 'ஐ லவ் யூடா... சத்தியமா ஐ லவ்யூடா' என்ற ஜோதியின் குரல் ஒலித்தது. தியாகுவின் தலை விலுக்கென்று நிமிர்ந்தது. குரல் வந்த திசை நோக்கி திரும்பியது. அங்கே சின்னத்திரையில் ஜோதி தென்பட்டாள். தியாகுவைப் பார்த்து 'ஐ லவ் யூடா' என்று மீண்டும் சொன்னாள்.

'உன்னை கொஞ்ச நஞ்சமா நான் லவ் பண்ணல. இந்த உலக அளவு, அதோ அந்த வானத்து அளவு. இதோ இந்த பூமியில இருக்குதே கடல், அந்த சமுத்திர அளவு உன்னை லவ் பண்றேன். நீ இல்லாம எனக்கு வாழ்க்கை இல்லை. கடைசி வரைக்கும் நான் உங்கூட இருக்கட்

டுமா? உன் உயிர் போகும்போதுகூட உன் மடியிலயே படுத்து என் உயிர் போயிடணும்.''

ஜோதி சூர்யாவின் சின்ன கேமிராவைப் பார்த்து பேசிய ஒவ்வொரு வசனமும் இப்பொழுது அந்த துணித் திரை மூலம் தியாகுவைப் பார்த்து ஒலித்துக் கொண்டிருந்தது. தியாகு எழுந்தான். எழுந்த வேகத்தில் விழுந்தன. அவனுக்கு உதவி செய்யாமல் சூர்யா விலகி நின்று வேடிக்கை பார்த்தான். தியாகு தரையோடு தேய்த்து நகர்ந்து அந்த துணித் திரை அருகில் வந்ததும் எழுந்து நின்றான்.

'எஸ், ஐ லவ் யூ. ஐ டீப்லி லவ் யூ' என்று ஜோதி அவனைப் பார்த்து சொன்னதும் முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தான். சூர்யா மெல்ல அவனை நெருங்கினான்.

''ஆமாண்டா தியாகு. ஜோதி உன்னை லவ் பண்றா. இன்னைக்கு இங்க வரப் போறா. அவ வரும் போது நீ சுத்தமா இருக்க வேண்டாமா? போய் குளிச்சிட்டு வந்திடலாம்.''

தியாகு சரக்கென்று தீக்குச்சி உரசியது போல திரும்பிப் பார்த்தான். 'நிஜமாகவா சொல்கிறாய்?' என்பது போன்ற பார்வை.

''வா, தியாகு.''

சூர்யா இப்பொழுது தியாகுவைப் பிடித்து எழுப்பிய போது அவன் முரண்டு பிடிக்கவில்லை. சூர்யா கண்ணோர விளிம்புகளில் துளிர்த்த கண்ணீரை கண்ணுக்குள்ளேயே அடக்கிக் கொண்டு, தியாகுவை பாத்ரூம் நோக்கி மெல்ல நகர்த்திப் போனான்.



## 27

ஜோதி பேருந்திலிருந்து இறங்கியபோது சூர்யா அங்கு அவளுக்காகக் காத்திருந்தான். ஜோதி சிவப்பு நிறத்தில் ஒரு ஸ்வெட்டர் அணிந்திருந்தாள். பஸ்சிலிருந்து இறங்கியதும் அந்த ஸ்வெட்டரை மடித்து தோளில் போட்டுக் கொண்டாள்.

''ரொம்ப நேரமா வெயிட் பண்றீங்களா சூர்யா?''

''நான்தான் சொல்லிட்டேனே. காதலோட சுகமே காத்திருக்கிறதுதான்னு. வா.''

அவள் தெருவை கடந்து சூர்யாவின் மோட்டார் சைக்கிள் நிறுத்தியிருந்த இடத்திற்கு நடந்தாள்.

''எனக்கே என்னைப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு சூர்யா.''

''என்ன ஆச்சரியம்?''

''எனக்கு எங்கேயிருந்து இவ்வளவு தைரியம் வந்தது. ஊருவிட்டு ஊரு புறப்பட்டு வர துணிச்சல் எங்கிருந்து வந்தது.''

''எல்லாம் காதல் செய்கிற மாயம்'' என்றான் சூர்யா.

''உண்மைதான் சூர்யா. காதலோட சக்தி என்னன்னு எனக்குப் புரியுது. இப்ப நாம எங்க போறோம்?''

''எங்கப் போகணும் சொல்லு.''

''எனக்குப் பசிக்குது சூர்யா.''

''அவ்வளவுதானே. ரொம்ப அவசரம்னா பக்கத்து ஹோட்டல்ல ஏதாவது வாங்கித் தர்றேன். இல்ல அரை மணி நேரம் பொறுத்துக்கத் தயாராயிருந்தா, நான் என்ன

சாப்பிடப் போறேனோ, அத இரண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்.''

''நம்ம வீட்ல போய் சாப்பிடலாம். நான் அரை மணி நேரம் பொறுத்துப்பேன்.''

ஜோதி மோட்டார் சைக்கிளின் பில்லியனில் ஏறி அமர்ந்தாள். மோட்டார் சைக்கிள் தார் சாலையிலிருந்து விலகி கெட்டித்த மண் சாலையில் திரும்பியது. சரிவுகளில் பெருமூச்சுகள் விட்டு முக்கி, முக்கி ஏறியது. சுற்றிலும் இருந்த மரங்களின் நிழல்கள் தரையில் கோடுகளாக வரிகள் இழுத்திருந்தன. காற்றில் குளுமையும் சுகமான வாசமும் கலந்திருந்தன. சூர்யாவின் இடுப்பை கட்டிக் கொண்டு, அவன் தோளில் முகவாய் பதித்து, அவன் காதில் கன்னம் உரச அவனை ஜோதி இறுகப் பற்றியிருந்தாள்.

''உனக்கு இன்னைக்கு நிறைய சஸ்பென்ஸ் இருக்கு ஜோதி'' என்றான் சூர்யா.

''ஐயோ, எனக்கு உடனே வீட்டுக்குப் போகணும் போல இருக்கே'' என்று துடித்தாள் ஜோதி.

''இப்பதானே வந்த?''

''நான் சொல்றது நம்ம வீட்டுக்கு.''

''அடி சக்கை.''

சூர்யா மோட்டார் சைக்கிளை திருப்பங்களில் லாவகமாகத் திருப்பினான். இருபது நிமிட பயணத்திற்குப் பிறகு பாதை முடிந்து சிறு கற்களும், பெரிய கற்களும் புரண்டிருந்த பகுதி வந்தது. சூர்யா மோட்டார் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான்.

''இங்கேயிருந்து நாம நடந்து போகணும்.''



''இன்னும் ரொம்ப தூரமா?''

''அதோ தெரியுது பார்.''

சூர்யா காட்டிய திசையில் ஜோதி பார்வையைத் திருப்பினாள். இயற்கையால் பொத்தி வைக்கப்பட்ட பகுதியில், அடர்ந்த மரங்கள் சூழ்ந்திருந்த நிழலில் அந்த மரக் குடில் மிக ரம்மியமாக இருந்தது.

''ஹை! ஐ லவ் இட் சூர்யா.''

''இங்கேயிருந்தே சொன்னா எப்படி உள்ளே வந்து பாரு.''

ஜோதி அவன் கையைப் பற்றிக் கொள்ள, சூர்யா அவளை மெல்ல சரிவுகளிலும், பாறைகளிலும் அழைத்துப் போனான். குறுக்கிட்ட ஓடையில் காலைப் பதித்ததும் சில்லீரென்ற பனிநீர் அவளுடைய உச்சந்தலை வரை சிலிர்ப்பூட்டியது.

''சூர்யா, நாம இங்கயா இருக்கப் போறோம்? இங்கயா வாழப் போறோம்? ஹையா... எவ்வளவு சுகமா இருக்கும்.''

ஜோதியால் தன்னுடைய சந்தோஷத்தை அடக்கவே முடியவில்லை. சூர்யா அவளை ஒவ்வொரு ஏற்றத்திலும் கையை பிடித்து ஏற்றி விட்டான். இறுதியில் இருவருமாக அந்த வீட்டை அடைந்தனர்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் ஜோதியின் பார்வை இடதும் வலதும், மேலும் கீழுமாக அந்த வீட்டை அளவெடுக்கத் தொடங்கியது.

''வாங்க சூர்யா, வீட்டைச் சுத்திக் காட்டுங்க.''

''இல்ல, முதல்ல டிபன். அப்புறம் வீட்டைச் சுத்திப் பாக்கலாம்'' என்றான் சூர்யா.

''இல்ல சூர்யா, டிபனைக்கூட அப்புறம் வச்சுக்கலாம். எனக்கு உடனே இந்த வீட்டைப் பார்க்கணும் போல இருக்கு.''

''சொன்ன பேச்சை கேளு ஜோதி.''

சூர்யா சற்று மிரட்டலாகச் சொன்னான்.

''இந்த வீட்டுக்குள்ள வந்துட்டா நான் வச்சதுதான் சட்டம். புரிஞ்சுதா?''

அவன் செல்ல மிரட்டலாக சொன்னதும் ஜோதி தலையை அசைத்தாள்.

''எனக்கும் பசிக்குது இல்ல, உனக்காக காலையி லிருந்து காத்திருக்கேன் வா.''

சூர்யா இருவருக்குமான தட்டுகளை எடுத்து வைத் தான். ஹாட் பாக்கிலிருந்து சுடச்சுட தோசைகளை எடுத்துப் போட்டுக் கொண்டான்.

''தோசை எல்லாம் யார் பண்ணினது?''

''ஏன், நானேதான் சுட்டேன்.''

வெள்ளை சட்னி, வாசமுடன் சாம்பார் ஜோதி சூர்யாவை கன்னத்தைப் பிடித்து கிள்ளினாள்.

''எனக்கு ஒரு பெரிய கவலை விட்டது.''

''என்ன?''

''கல்யாணத்திற்கு அப்புறம் சமையலறையில நான் நிற்க வேண்டாமே.''

சூர்யா சிரித்தான்.

''சாப்பிடு.''

ஜோதி சாப்பிட்டு முடித்து கைகளைக் கழுவிக் கொண்டதும், ''நீ முதல்ல பார்க்க வேண்டிய ரூம் ஒண்ணு



இருக்கு. வா'' என்று அவள் கையைப் பற்றி சூர்யா அவளை மெல்ல அழைத்துப் போனான்.

''கண்ணை மூடிக்க'' என்றான்.

ஜோதி இரு கண்களையும் மூடிக் கொள்ள சூர்யா அவளை நடத்திப்போய், ஓர் இடத்தில் நிறுத்தி, ''இப்போ கண்ணை திறந்து பார்'' என்றான்.

இமைகளைத் திறந்து பார்வையை விடுதலையாக் கியதும் ஜோதி பிரமித்தாள். அந்த அறையின் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் வெவ்வேறு ஜோதிகள் அவளைப் பார்த்து புன்னகைத்தார்கள். நிற்க முடியாமல் பம்பரம் போன்று சுழன்று சுழன்று நான்கு சுவர்களையும் பார்த்தாள்.

''சூர்யா... என்ன சூர்யா இது!''

''நீதான்! நாலுபக்கமும்! எந்தப் பக்கம் திரும்பினாலும் நீதான்.''

''எதுக்கு சூர்யா இவ்வளவு போட்டோ?''

''நான் என்ன செய்யட்டும் ஜோதி. உன்னை இருபத்து நாலு மணி நேரமும் என் பக்கத்துல வச்சுக்க முடியலையே ஜோதி. நேரம் வர்ற வரைக்கும் உன்னைப் பிரிஞ்சு எப்படி இருக்க முடியும்? சனி ஞாயிறுல நிம்மதியா வந்து இருக் கிறது இங்கதான். அப்போ, நான் எந்தப் பக்கம் திரும்பி னாலும் ஜோதி எங்கூட இருக்கணும்னு எனக்கு தோணிச்சி.''

ஜோதி சூர்யாவின் மீது பாய்ந்து கன்னத்தில் முத்த மிட்டாள்.

''உங்களுக்கு என்மேல அவ்வளவு காதலா?''

சூர்யா புன்னகைத்து கன்னத்தை துடைத்துக் கொண்டு இரண்டடி பின்னால் வைத்தான்.

''இதப்பாரு.''

இன்னொரு சுவிட்சை தட்டியதும் சின்னத்திரையில் 'ஐ லவ் யூ, ஐ லவ் யூடா' என்று ஜோதியின் முகம் பிரகாசமாக திரையில் உயிர் பெற்றது.

''இதுக்காகத்தான் அப்படி ரெகார்ட் பண்ணினீங்களா? வீட்டை சுத்திப் பார்க்கலாமா சூர்யா?''

''வா, நானே சுத்திக் காட்டறேன்.''

சூர்யா அவள் கையைப் பற்றிக் கொண்டு ஒவ்வொரு அறையாகக் காட்ட ஆரம்பித்தான்.

''இது கிச்சன், நான் தான் சனி ஞாயிறுல சமையல்.''

''உங்க ஒருத்தருக்கா இத்தனை பாத்திரம்?''

அதற்கு பதில் சொல்லாமல், ''இது டைனிங் டேபிள்.''

''நாலு நாற்காலி போட்டிருக்கு?''

''இது ஹால், இது பெட்ரூம்'' என்று படுக்கையறை கதவைத் திறந்தவன் திடுக்கிட்டான். தலையணைக் கருகில் பானுவின் ரவிக்கை. காலையில் ஜோதி வரப் போகிறாள் என்பதால் பானு, அம்மா இருவரும் இங்கு இருக்கும் அடையாளமே தெரியாதபடி எல்லாவற்றையும் பத்திரமாக எடுத்து மறைத்தவன் கண்களில் இது எப்படி தட்டுப்படாமல் போயிற்று. சூர்யா சட்டென்று ஜோதியின் கவனத்தை திருப்புவதுபோல், ''அதோ, அந்தப் பக்கம் ஜன்னல் வழியா மரங்களை எல்லாம் பார்த்திட்டிருந்தா அது ஒரு சுகம்'' என்று வேறொரு திசையில் கையை காட்ட ஜோதி திரும்பிய நேரம் படுக்கையறைக்குள் நுழைந்து தலையணையை நகர்த்தி ரவிக்கையை மறைத்தான்.

''சூர்யா, எப்பதான் இந்த வீட்டுக்கு வாழறதுக்காக குடி வருவோம்னு எனக்கே ஒரு ஆர்வம் வந்திடுச்சி இது எங்க போகுது சூர்யா?''



''அது இன்னொரு பக்கம். அங்க எல்லாம் இப்ப போக வேண்டாம்.''

''ஏன் சூர்யா? நான் வாழப்போற வீட்டை முழுக்க பார்க்க வேண்டாமா?''

ஜோதி அவன் பலவீனமாக மறுக்க மறுக்க அந்த வீட்டின் மறுபகுதிக்கு நகர்ந்தாள்.

''என்ன இங்க, படியெல்லாம் கீழப்போகுது?''

''அங்க போக வேணாம்.''

''ஏன் இந்த ரூமை பூட்டி வச்சிருக்கீங்க? அப்பா, கேட்கிறதுக்கு எவ்வளவு கேள்விங்க, சொல்லுங்க சூர்யா, ஏன் இந்த ரூமை பூட்டி வச்சிருக்கீங்க?''

''அது உபயோகப்படுத்தறதில்லை ஜோதி. அதனால தான்.''

''அதை திறந்து பார்க்கலாமா?''

''வேண்டாம், அங்க வெறும் கண்டா முண்டா சாமான் தான் இருக்கு.''

சூர்யா அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே பூட்டப்பட்ட அறையின் கதவு உள்ளேயிருந்து படபட வென்று தட்டப்பட்டது. ஜோதி அதிர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

சூர்யா சற்றும் புன்னகை மாறாமல், ''கவலைப்படாத, அது பூனையோட வேலை. இரண்டு மூணு பூனை இருக்கு உள்ள. எப்பவும் இந்த மாதிரிதான் தொந்தரவு பண்ணிட்டு இருக்கும், நீ வா.''

சூர்யா கிட்டத்தட்ட அவளை இழுத்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து நகர்ந்தான். வீட்டை முற்றிலுமாக சுற்றிக் கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கே வந்

தார்கள். ஜோதியின் பிரமாண்ட புகைப்படங்கள் ஒட்டிய அந்த அறையின் மையத்திற்கு வந்தபோது தற்செயலாகத் தான் ஜோதி கவனித்தாள். சுவரோடு பதிந்த ஒரு ஆளுயரக் கண்ணாடி. அதில் அவளது பிம்பம் பளீரென்று தெரிந்தது.

''இங்க ஒரு மிர்ரரா?''

''ஆமா, நீ இங்கயே இரு ஜோதி. ஜஸ்ட் டு மினிட்ஸ் வந்திடறேன்.''

சூர்யா அவளை அந்த அறையில் விட்டு விட்டு வெளியேறினான்.

அந்த கண்ணாடியை நெருங்கினாள் ஜோதி. கண் ணாடியின் வலது முனையில் சூர்யாவின் சின்னப் புகைப் படம் ஒட்டப்பட்டிருந்தது. ஜோதி அந்த புகைப்படத்தைப் பார்த்து புன்னகைத்தாள்.

''டேய் நீ இங்க வந்து ஒளிஞ்சுகிட்டா, உன்னை லவ் பண்ண மாட்டேனா?'' குனிந்து அந்தப் புகைப்படத்திற்கு முத்தம் கொடுத்தாள். அவளுடைய உதடுகள் கண் ணாடியில் பதிந்த இரண்டாவது நொடி, திடீரென்று கண்ணாடி உடைந்து ஏகப்பட்ட சூரிய கதிர்கள் போல விரிசல் விட்டது. ஜோதி மிரண்டு அப்படியே இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

இவ்வளவு மோசமாகவா ஒரு கண்ணாடி இருக்கும். முத்தமிட்டதும் உடைந்து போகிற அளவுக்கு?

எங்கேயோ 'தொம்'மென்று யாரோ விழும் ஒலி.

''சூர்யா...!''

ஜோதி அச்சத்தில் அலறினாள்.

''சூர்யா, எங்க இருக்கீங்க?''



ஒரு கதவு அறைந்து சாத்தப்படும் சத்தம். சூர்யா தபதபவென்று அந்த அறைக்குள் வந்தான்.

''என்ன பண்ணின ஜோதி?''

''ஒண்ணும் இல்ல சூர்யா. அந்த கண்ணாடியில உங்க போட்டோவைப் பார்த்தேன். முத்தம் குடுக்கணும் போல இருந்தது. கண்ணாடிக்கு முத்தம் குடுத்ததும் சடக்குன்னு உடைச்சிடுச்சி சூர்யா.''

சூர்யா சிரித்தான்.

''ராட்சஸி. கண்ணாடியையே உடைச்சிட்டே உன்னை நம்பி என்னை எப்படி குடுப்பேன்.''

''சூர்யா சிரிக்காதிங்க. எனக்கு பயமா இருக்கு.''

''இதுல பயப்படுறதுக்கு என்ன இருக்கு ஜோதி. கமான் உட்காரு.''

ஜோதியை அப்படியே நகர்த்தி போய் சோபாவில் அமர வைத்தான். ஆனால் ஜோதி திரும்பி திரும்பி அந்த கண்ணாடியையே பார்த்துக் கொண்டே இருந்தாள். இடையில் ஒரு சிறு வட்டமாகவும் அங்கிருந்து கிளம்பும் கிளை நதிகளை போல வெவ்வேறு கோணத்தில் விரிசல் விட்டிருந்தது கண்ணாடி.

## 28

பூட்டப்பட்ட அறைக்குள் தியாகு நாயைப் போல மூச்சுகளை விட்டுக் கொண்டு திமிறிக் கொண்டிருந்தான். அவனுடைய கைகளும் கால்களும் அங்கிருந்த வளையத்துடன் கட்டப் பட்டிருந்தன. அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாமல் தியாகு திமிறினான். அவனுடைய உதடு

களில் கோணலான ஒரு புன்னகை தங்கி விட்டது. அந்த அறையில் ஒரு புறம் இருந்த ஒரு கண்ணாடி அவன் மோதிய வேகத்தில் நொறுங்கியிருந்தது. அந்த உடைந் திருந்த கண்ணாடி வழியே ஜோதி நின்றிருந்த அறையில் அவர்கள் இப்பொழுது துண்டம் துண்டமாகத் தெரிந்தனர். தியாகு கயிறுகளை எப்படியாவது அறுத்துவிட வேண் டும் என்பதைப்போல திமிறிக் கொண்டே இருந்தான்.

## 29

''சூப்பரா இருக்கு உங்க சமையல்.'' ஜோதி கைகளைக் கழுவிக் கொண்டு சொன்னாள்.

''தேங்க்யூ ஜோ.''

''ஆனா, நான் காலையில வந்தபோது உங்க முகத்துல இருந்த உற்சாகம் இப்ப இல்லையே சூர்யா, ஏன்?''

''நீ நிரந்தரமா இங்க வரும்போது நிச்சயம் அந்த சந்தோஷம் வந்திடும்.''

''இப்பவே கழுத்துல தாலி கட்டிடுங்க. நிரந்தரமா தங்கிடறேன்.''

''எல்லாத்துக்கும் ஒரு சரியான நேரம் வரணும். வா, உன்னை கொண்டு போய் பஸ் ஸ்டாண்டுல விட்டுட்டு வந்திடறேன்.''

''ஏன், நீங்களும் என்கூட ஊருக்குத் திரும்பிடலாமே சூர்யா. இரண்டு பேரும் பைக்லயே போயிடலாம்.''

''இல்ல ஜோதி, எனக்கு இன்னும் நிறைய வேலை இங்கிருக்கு. நீ புறப்படு. நேரத்தோட புறப்படு.''

''என்ன சூர்யா, என்னைத் துரத்துறதிலேயே குறியா இருக்கிங்க?''



''எனக்கு இன்னும் தோட்ட வேலை பாக்கியிருக்கு. துணி துவைக்கணும். அப்புறம், கொஞ்சம் வீட்டைச் சுத்தப்படுத்தணும். நிறைய வேலையிருக்கு. ப்ளீஸ் புரிஞ்சுக்கேயேன்.''

ஜோதியால் புரிந்துகொள்ள முடியவில்லை. கண்ணாடி யில் அவள் முத்தமிட்டு, அது திடீரென்று விரிசல் விட்ட போது, என்னவோ விளக்கமில்லாத ஒரு அச்சுறுத்த லாகவே அது அவளுக்குத் தோன்றியது. அந்த தருணத்தி லிருந்தே சூர்யாவிடமும் ஒரு மாற்றம் வந்து விட்டது. மேலோட்டமாக அவன் புன்னகைத்து இயல்பாக இருப் பதுபோல் அவளோடு பேசிக் கொண்டிருந்தாலும் அவ னுடைய உள்மனதில் வேறு என்னவோ வேலை செய்து கொண்டிருப்பதாக ஜோதிக்கு தோன்றியது. அவனை வற்புறுத்தி அவனை மேலும் தர்ம சங்கடப்படுத்துவது நியாயமில்லை என்று தோன்றியது.

இவ்வளவு ஒதுக்குப்புறமான ஒரு வீட்டில், தனிமை யில் இத்தனை நேரம் கிடைத்தபோதும் கூட கொஞ்சம் கூட கண்ணியம் தவறாமல், சற்று கூட அத்து மீற வேண்டும் என்ற ஆசையைக் காட்டாமல் சூர்யா நடந்து கொண்டது அவன் மீது அவளுக்கு மதிப்பை பல மடங்கு உயர்த்தியது.

''போகலாம் சூர்யா.''

சூர்யா அவளை பேருந்து நிலையத்துக்கு அழைத்துப் போனான்.

## 30

அடுத்த இரண்டு நாட்கள் சூர்யா விடம் போனில்தான் பேச முடிந்தது. நேரில் சந்திக்க முடியாதபடி ஏதேதோ

வேலைகள் குறுக்கிடுவதாக சூர்யா சொல்லியிருந்தான். புதன்கிழமை மாலை சந்திப்பதாக ஏற்பாடு.

புதன்கிழமை.

வழக்கம்போல சூர்யா பூங்காவில் அவளுக்காக காத்திருப்பான். ஜோதி ஆட்டோவிலிருந்து இறங்கினாள். பூங்காவிற்குள் செல்வதற்கு இரண்டு கேட்டுகள் உண்டு அவள் வழக்கமாக எந்த கேட் வழி நுழைவாளோ, அந்தப் பக்கம் சாலையில் ஏதோ தோண்டியிருந்ததால் இன்னொரு கேட் வழி நுழைந்தாள்.

வழக்கமாக உட்காரும் இருக்கையிலேயே சூர்யா அமர்ந்திருந்தான். அவளுக்கு முதுகைக் காட்டியபடி அவனை நோக்கி ஜோதி மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்தாள். சற்று தள்ளி விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் பாலு தத்தி பறந்து சூர்யாவின் மீது வந்து மோதியது. சூர்யா சற்றும் அக்கறை இல்லாமல் அதை தட்டி விட்டான். அதை பிடித்து குழந்தையிடம் திருப்பித் தரப் போகிறான் என்று ஜோதி எதிர்பார்த்திருக்க, சூர்யா பலூனை தட்டி விட்டான். பலூன் காற்றில் பறந்து இன்னும் சில முறை புல் வெளியில் தத்தி அவள் காலடியில் வந்து மோதி நின்றது. குழந்தையின் அம்மா சற்றே கோபத்துடன் சூர்யாவிடம், ''பலூன் வந்தா அதை பிடிச்சுத் தரக்கூடாதா?' என்று ஆதங்கமும் கோபமுமாகக் கேட்டாள். சூர்யா அவளைப் பார்த்து திரும்பினான்.

''அடுத்த தடவை வந்திருச்சின்னா குத்தி உடைச்சிடுவேன்.''

ஜோதி அதிர்ந்தாள். என்ன ஆயிற்று? என்னுடைய சூர்யாவா இப்படிப் பேசுகிறான்? இவ்வளவு ஆக்ரோஷமான குரலில் கூட பேசத் தெரியுமா அவனுக்கு?



குழந்தை ஓடி வந்து பலூனை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டது. ஜோதி அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் தயங்கி நின்றாள். பின்னர் மெல்ல பின் வாங்கி வந்த வழியே பூங்காவை விட்டு வெளியே வந்தாள். பூங்காவை சுற்றிக் கொண்டு, நடைபாதையில் நடந்து வழக்கமாக நுழையும் கேட் வழியே நுழைந்தாள்.

அவளைப் பார்த்ததும் சூர்யா பிரகாசமானான். கைகளை வீசி காட்டினான். ஜோதிக்கு ஆச்சரியமாக இருந்தது. பலூன் மீண்டும் குழந்தையின் கையிலிருந்து ஓடி வர, சூர்யா பாய்ந்து அதைப் பிடித்தான். குழந்தையிடம் கொண்டு போய் கொடுத்து அதன் தலையை செல்லமாகச் சிலுப்பினான். குழந்தையின் தாய் அவனை அதிர்ச்சியோடு நிமிர்ந்து பார்த்தாள். ஜோதியும்.

''ரொம்ப நேரமா காத்திட்டுருக்கிங்களா சூர்யா?''

''இல்ல. இப்பதான் அஞ்சு நிமிஷம் ஆச்சு.''

''ஆர் யூ ஆல் ரைட் சூர்யா?''

ஜோதியின் கண்கள் அவனை ஆழமாக ஊடுருவின.

சூர்யா அவளை திகைத்துப் பார்த்தான்.

''என் கேட்கிற ஜோதி?''

''இல்ல, கொஞ்ச நேரத்துக்கு முன்னால அந்த குழந்தையோட பலூன் உங்க மேல வந்து மோதிச்சு. அதை பிடிக்கக்கூடாதான்னு அவங்க அம்மா கேட்டபோது, ரொம்ப கோபமா பேசுனிங்க. அது இதுவரைக்கும் நான் பார்க்காத சூர்யா.''

சூர்யாவின் கண்களில் அதிர்ச்சி.

''நீ பார்த்திட்டியா?''

''ஏன் சூர்யா, ஏன் அந்த மாதிரி கோபமா பேசுனிங்க?''

சூர்யா முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''சொன்னா திட்டமாட்டியே?''

''ம்ஹூம்.''

''நான் வந்து அஞ்சு நிமிஷம்தான் ஆச்சுன்னு உங்ககிட்ட சொன்னது பொய். ஒரு மணி நேரமா காத்திட்டிருக்கேன். ஒவ்வொரு ஆட்டோ சத்தம் கேட்கிறப்பவும், நீ வந்திட்டியா, வந்திட்டியான்னு ஏக்கமா எழுந்து பரபரப்பாவேன்... வேற யாரோ வருவாங்க. போதாக்குறைக்கு நீ வழக்கமா ஆட்டோவுல வந்து இறங்கிறதுக்கு பக்கத்துல ரோடை வேறு தோண்டி போட்டுட்டாங்க. நடந்து வர்றதுக்கு பாதை இருந்தாலும், நீ வந்து சேற வழியில ரோடை தோண்டினது என்னை அப்செட் பண்ணிடிச்சி. உன்னை உடனே பார்க்கணும் அப்படின்னு தோணிட்டா அதுக்கப்புறம் காத்திருக்கவே முடியலை ஜோதி. என் மனசு பூரா உன்னை பத்தியே யோசிச்சுக்கிட்டிருக்கும் போது அந்த பலூன் வந்து எம்மேல மோதினதை நான் கவனிக்கக்கூட இல்ல. அப்ப அவங்க அம்மா வந்து எங்கிட்ட பேசின போது எனக்கு கோபம் வந்தது உண்மைதான். இப்ப உன்னை பார்த்துட்டேனில்ல. அந்த நிமிஷமே நான் நார்மலான சூர்யாவாக ஆயிட்டேன். அதனாலதான் பலூனை கொண்டு போய் குழந்தை கிட்ட குடுத்திட்டு வந்தேன்.''

''சூர்யா தப்பா நினைச்சுக்கலேன்னா ஒண்ணு சொல்லட்டுமா?''

''நீ சொல்லி எதை தப்பா நினைச்சிருக்கேன்.''

''காதல்ங்கிறது சந்தோஷமான ஒரு உணர்வா இருக்கணும். நாம என்ன செய்றோம்கிறதே மறக்கிற அளவுக்கு வந்திட்டா தப்பாயிடும்.''



''ஓகே நான் ஞாபகம் வச்சுக்கறேன்.''

''அன்னைக்கு அப்படித்தான் உங்க வீட்டுக்கு நான் வந்திருந்த போது திடீர்னு மூட் அவுட் ஆயிட்டீங்க.''

''ஜோதி கொஞ்ச நேரம் என்னைப் பத்தி பேசாம, மொத்தமா நம்மைப் பத்தி பேசுவோமா. ரெண்டு நாள் கழிச்சு இன்னைக்குத்தான் பார்க்கிறோம். சந்தோஷமா பேசிட்டிருக்கலாமே ஜோதி. நான் கோபமா இருந்ததையும் வருத்தமா இருந்ததையும் மறுபடி மறுபடி பேசி எதுக்காக ஞாபகப்படுத்தணும். நீ என்னுடைய வீட்டுக்குள்ள நிரந்தரமாக குடிவந்த அப்புறம் கோபம், ஆத்திரம், அகங்காரம் எதுவுமே எங்கிட்ட இருக்கப் போறதில்ல. சந்தோஷம்... சந்தோஷம்... சந்தோஷம். அது மட்டும் தான் இருக்கும்.''

ஜோதி சற்று நேரம் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

''சரி, வாங்க ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிடலாம்.''

சூர்யாவின் முகத்தில் வழக்கமான வசீகர புன்னகை குடி வந்தது.

அன்று ஜோதி வீட்டிற்கு திரும்பியபோது இரவு மணி எட்டை நெருங்கியிருந்தது. கதவை அம்மா திறந்த வேகத்திலேயே, ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டது என்று ஜோதிக்கு புரிந்தது. தம்பி பிரபு அவளை பார்த்து விட்டு ஓடி வரும்போது, ''ஏய், நில்லு'' என்ற அப்பாவின் அதட்டலான குரல் அவனை நிறுத்தியது.

''நீ போய் படு. அல்லது பாடம் படிச்சிட்டு இரு. பெரியவங்க பேசற இடத்துல நீ இருக்க வேண்டாம்.''

பிரபு ஜோதியை பரிதாபமாகப் பார்த்துவிட்டு மெல்ல பின் வாங்கி, தன்னுடைய அறைக்கு ஓடினான். நிச்சயம் ஏதோ பூகம்பம் வெடிக்கப் போகிறது. ஜோதி தயாரானாள்.

''ஜோதி, எங்கே போய்ட்டு வர்றே?''

அப்பாவின் குரலில் சிறிது கடுமை சேர்ந்திருந்தது.

''ஏம்பா?''

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு.''

அப்பா அவளிடம் இதே போல முரட்டுத்தனமாக பேசியதில்லை.

''லைப்ரரிக்கு போயிருந்தேன்பா...''

''யார் கூட? அந்த சூர்யா கூடவா?''

ஜோதி அதிர்ந்தாள், நிமிர்ந்தாள்.

''என்னப்பா சொல்றீங்க?''

''நான் என்ன சொல்றதுக்கு இருக்கு. அதான் ஊர் பூரா நாறுதே.''

''அப்பா நீங்க சொல்றது எனக்குப் புரியலை.''

''இதப் படிச்சுப் பாரு. ஏதாவது புரியுதான்னு சொல்லு'' அப்பா அவளிடம் ஒரு கடித உறையைத் தூக்கிப் போட்டார்.

ஜோதியின் மீது வந்து விழுந்து தரைக்கு நழுவிய அந்த கடிதத்தை ஜோதி எடுத்தாள், பிரித்தாள்.

ஒரு பெண்ணின் கையெழுத்து.

*'அன்புள்ள ஜோதி, உன்மீது அக்கறை இருப்பதால் மீண்டும் சொல்கிறேன். சூர்யாவை நம்பாதே. அவன் ஏமாற்றுக்காரன். அவனால் உனக்கு ஆபத்து தான்.'*

அவ்வளவுதான் கடிதத்தில் வேறு எதுவும் இல்லை. அஞ்சல்தலை ஒட்டப்படாமல், கூரியர் மூலமும் அனுப்பப்படாமல் இந்தக் கடிதம் யாரால், எப்போது எங்கு கொண்டு வந்து கொடுக்கப்பட்டது?



''இந்த லெட்டருக்கு என்ன அர்த்தம்?''

அம்மா இம்முறை தன் குரலில் காரத்தை சேர்த்துக் கொண்டாள்.

''எனக்கும் புரியலை'' என்றாள் ஜோதி.

''எங்கேயிருந்துச்சு இந்த லெட்டர்?''

''ஜன்னல் வழியா உள்ள தூக்கிப் போட்டிருந்தது.'' என்றாள் அம்மா.

''யார் சூர்யா?'

''அப்பா, எல்லாத்தையும் சொல்றேம்பா. தயவு செஞ்சி கோபப்படாம. உடனே எந்த முடிவுக்கும் ஜம்ப் பண்ணாம நான் சொல்றதை பொறுமையா கேளுங்க.''

''சூர்யான்னு ஒருத்தன் இருக்கிறது உண்மையா இல்லையா?''

அப்பா பொறுமையில்லாமல் கேட்டார்.

ஜோதி தீர்மானித்தாள்.

''உண்மைதான். அந்த சூர்யாவை நான் உயிருக்குயிரா லவ் பண்றதும் உண்மைதான்.''

''என்னடி, இப்படி குண்டை தூக்கிப் போடற. கிட்ட நெருங்க முடியாதபடி நெருப்பு மாதிரி இருந்தியே. நீயா இப்படி மாறிப்போன?''

அம்மாவிற்கு கண்களில் நீர் திரண்டது.

''அம்மா, அப்பா இரண்டு பேர் கிட்டயும் சொல்றேன். தயவு செஞ்சு பதட்டப்படாம நான் என்ன சொல்றேனோ அதை முழுசா கேளுங்க. அப்புறம் உங்க கோபத்தை எல்லாம் என் மேல காட்டுங்க. சூர்யாவை நான் முதன் முதல்ல...''

ஜோதி சொல்ல ஆரம்பித்தாள். அவளுடைய குரலைத் தவிர அந்த வீட்டில் வேறு எந்த ஒலியும் இல்லாமல் நிசப்தமானது. அப்பாவும், அம்மாவும் மெல்லத் தளர்ந்து தங்கள் நாற்காலிகளில் சாய்ந்தார்கள். ஜோதி தொடர்ந் தாள்.

## 31

சூர்யா தன் மடியில் வந்த விழுந்த அந்த கடிதத்தை கவனித்தான். நிமிர்ந்து பார்த்தான். ஜோதி எதிரே நின்றிருந் தாள்.

''ஹாய் ஜோதி.''

''முதல்ல அந்த லெட்டரைப் படிங்க.''

சூர்யா புரிபடாமல் அந்த கடிதத்தைப் பிரித்தான். படிக்கப் படிக்க அவன் முகத்தில் இறுக்கம் சூழ்ந்தது.

''இந்த லெட்டர் யார் கைல கெடைச்சது தெரியுமா சூர்யா? எங்கப்பா கைல.''

சூர்யா சற்று நேரம் எதுவும் பேசாமல் இருந்தான். ''சரி அப்பாவுக்குத் தெரிஞ்சுப்போச்சி, இப்ப என்ன செய்யப் போறே?''

''நான் என்ன செய்ய முடியும் சூர்யா. அப்பாவும் அம்மா வும் குதிகுதின்னு குதிக்கறாங்க. சூர்யாவை கூட்டிட்டு வர்றேன் பாருங்க... பேசுங்க அப்புறம் முடிவெடுங்கன்னு சொன்னேன். ஆனாலும் குதிக்கறாங்க. இந்த லெட்டரை அனுப்பினது யார் சூர்யா?''

''சொல்றேன்'' சூர்யா தலையை கவிழ்த்துக் கொண் டான். ''ஜோதி நான் ஒரு விஷயத்தை உன்கிட்ட சொல் லலை.''



''என்ன?''

''உனக்கு அப்பா, அம்மா, தம்பி இருக்கிற மாதிரி எனக்கு ஒரு அம்மா இருக்காங்க. ஒரு தங்கை இருக்கா.''

''என்ன சூர்யா சொல்றீங்க! உங்க சின்ன வயசுலயே அம்மாவும், அப்பாவும் ஆக்ஸிடெண்டுல இறந்துட்டதா சொல்லல.''

''பெத்தவ மட்டும்தான் அம்மாவா, கூடப் பொறந்தவ மட்டும்தான் தங்கையா. எனக்கு இப்ப ஒரு குடும்பம் இருக்கு. இதுவரைக்கும் உன்கிட்ட அவங்களை அறி முகப்படுத்தவே இல்லை. இப்ப அதுக்கான நேரம் வந்துடுச்சி.''

''நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலை சூர்யா.''

''இந்த லெட்டரை யாரு அனுப்பினதுன்னு தானே?''

''ஆமா.''

''இந்த கையெழுத்தைப் பாத்தா எங்கம்மாவோடது மாதிரி இருக்கு.''

''உங்க பேர்ல ஆசையும், பாசமும் இருக்கிற அம்மாவா உங்களை நம்பினா ஆபத்துன்னு லெட்டர் எழுதுவாங்க?''

''ஜோதி, உனக்கு வார்த்தையால புரிய வைக்க முடியாது. அம்மாவைப் பாத்து நீ நேரடியாக் கேட்டாதான் புரியும். எங்கம்மா சொன்னாலும் சரி, என் தங்கை சொன் னாலும் சரி, அதனால என்னை நம்பாம இருந்துடுவியா?''

''அந்தக் கடவுளே இறங்கி வந்து சொன்னாலும், நான் உங்களை நம்புவேன் சூர்யா.''

'சுருக்'கென்று தைக்கும் வார்த்தைகள். சூர்யாவின் உடல் சற்று நடுங்கியது.

''ஏன் சூர்யா எதாச்சும் தப்பா சொல்லிட்டேனா?''

''இல்ல ஜோதி, நான்தான் தப்பு பண்ணிட்டேன்.''

''என்ன சொல்றிங்க சூர்யா?''

''ஒண்ணுமில்ல. இத்தனை நாள் வரைக்கும் என் அம்மாவையும், தங்கையையும் உன் கண்ணுல காட்டாமலே இருந்துட்டேனே. நான் உங்கப்பாவை வந்து பாக்கறதுக்குள்ளே நீ வந்து எங்கம்மாவையும், தங்கையையும் பாத்துட்டா நல்லா இருக்கும்னு நெனைக்கிறேன்.''

''ஏன் சூர்யா?''

''ஜோதி! என்னுடைய குடும்பத்தைப் பத்தி, என்னோட பின்னணி பத்தி, நீ வந்து வாழப்போற வீட்டைப் பத்தி உங்கப்பாவோ, அம்மாவோ கேள்விகள் கேட்டா, சொல்ல முடியாது. ஒரு அசௌகரியம் உனக்கு இப்ப இருக்கு. அம்மாவையும், தங்கையையும் நீ நேர்ல வந்து பாத்துட்டா, உனக்கும் அது தெளிவாப் புரிஞ்சுடும். உங்கப்பா அம்மாகிட்டயும் எடுத்துச் சொல்ல முடியும்.''

''எப்ப அழைச்சிட்டு போறிங்க சூர்யா? எப்படியோ எங்க வீட்ல கட்டுப்பாடு அதிகமாயிடுச்சி. இன்னைக்கே காலேஜ் கட் பண்ணிட்டு தான் உங்களைச் சந்திக்க வந்திருக்கேன். அதனால சனி - ஞாயிறு விடுமுறை நாளா இருந்ததுன்னா நான் கிளம்பி வர்றது கஷ்டமாயிருக்கும்.''

''வேண்டாம். சனி - ஞாயிறு வேண்டாம். நாளன்னைக்கு வியாழக்கிழமையே வா, நான் அழைச்சிட்டுப் போறேன்.'' என்றான் சூர்யா.

''காலைல எட்டு மணிக்கு இதே இடத்துல மீட் பண்ணுவோம். ஆனா ஒரு விஷயம் ஜோதி. வியாழக்கிழமை நம்ம வாழ்க்கைல ஒரு முக்கியமான நாளா இருக்கப் போவுது.''



## 32

வியாழக்கிழமை.

காலையிலிருந்து படபடப்பாக இருந்தது ஜோதிக்கு. பூஜை அறையில் வழக்கத்திற்கு அதிகமாக ஐந்து நிமிடங்கள் நின்றாள். இன்றைக்குத்தான் சூர்யாவின் குடும்பத்தை சந்திக்கப் போகிறேன். அவர்கள் எல்லோருக்கும் என்னைப் பிடித்துப் போக வேண்டும். சூர்யாவின் அம்மாவிடம் தெள்ளத் தெளிவாக கேட்கப் போகிறேன். ஏன் சூர்யாவை நம்பாதே என்று எழுதினீர்கள்? சூர்யாவிடம் என்ன குறை கண்டு பிடித்தீர்கள்? சூர்யாவின் அம்மா எங்கள் திருமணத்தில் ஏதாவது பிரச்சனை வரும் என்று எதிர்பார்க்கிறாரா? சூர்யா வேறு ஜாதி, நான் வேறு ஜாதி என்று கவலைப்படுகிறாரா? எதுவாக இருந்தாலும் சூர்யாவை நம்பாதே என்று ஏன் எழுத வேண்டும்? சூர்யாவைப் போல் ஒரு நல்ல மனிதன் கிடைப்பானா? அவனைப் போய் நம்பாதே என்று சொன்னால் என்ன அர்த்தம்.

சூர்யா குடும்பத்து உறுப்பினர்களை சந்திக்கப் போகும் பரபரப்பைவிட, தன் குடும்பத்து உறுப்பினர்களிடம் உண்மையை மறைத்து... வெளியூர் செல்வது பற்றி எந்த தகவலும் கொடுக்காமல் எப்படியும் இரவுக்குள் திரும்பி விடலாம் என்ற தைரியத்துடன் கிளம்புவதே அவளுடைய இதயத்தில் அதிக பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜோதி சூர்யாவுக்குப் பிடித்தமான புடவையை அணிந்து கொண்டாள்.

''அப்பா போயிட்டு வர்றேன். அம்மா போயிட்டு வர்றேன்'' என்று விடைபெற்றுக் கொண்டாள். தம்பியை கிட்டே கூப்பிட்டு அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ''வரேண்டா பிரபு.''

அண்மைக்காலமாக அக்காவின் நடவடிக்கை புரியாமல் இருந்தது. எப்படியும் தன்னிடம் எல்லா விஷயத்தையும் இன்னொரு நாள் அக்கா சொல்லி விடுவாள் என்ற நம்பிக்கையுடன் பிரபு. அவளுக்கு பதில் முத்தம் கொடுத்துவிட்டு தன் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொள்ள ஓடினான்.

குறிப்பிட்ட இடத்தில் சூர்யா காத்திருந்தான். ஜோதியைப் பார்த்ததும் வசீகரமாகப் புன்னகைத்தான்.

''சூர்யா, நாம பைக்ல போகப் போறமா?''

''இல்ல ஜோதி, பஸ்ல.''

''ஏன் சூர்யா?''

''அவ்வளவு தூரம் உன்னை பைக்ல அழைச்சிட்டுப் போனா களைச்சிப் போயிடுவே.''

''பஸ் வேண்டாம் சூர்யா.''

''ஏன் ஜோதி?''

''யாராவது தெரிஞ்ச முகம் பார்த்ததுனா தேவையில்லாம வீட்ல பிரச்னையாயிடும்.''

''நியாயம்தான், பஸ்சும் வேண்டாம், பைக்கும் வேண டாம், கார்ல போலாம்.''

''கார்லயா! ஏது காரு?''

''இருக்கு ஜோதி, எனக்கு சொந்தமான ஒரு காரும் இருக்கு. அதை எடுத்துட்டுப் போலாம். நீ ஒண்ணு செய். நேப்பியர் பூங்கா வாசலுக்கு வந்துடு. இருபது நிமிஷம் கொடு, காரை எடுத்துக்கிட்டு நான் அங்க வந்துடறேன்.''

''ஏன் சூர்யா? நான் உங்க கூடவே வந்துட்டா...''

''வேண்டாம் ஜோதி. நாம காரெடுக்கும் போது எங்க போறோம். என்ன பண்றிங்கன்னு கேள்வி கேட்டா



அதுவும் எனக்கு தர்ம சங்கடமாத்தான் இருக்கும். நீ பூங்கா வாசல்ல காத்திரேன் வந்திடறேன்.''

''சரி சூர்யா'' என்றாள் ஜோதி அரை மனதாக.

சொன்னபடி இருபது நிமிடத்தில் நேப்பியர் பூங்கா வாசலில் அந்த மாருதி கார் வந்து நின்றது.

கார் கண்ணாடியைத் தழைத்த சூர்யா 'ஏறு ஜோதி' என்றான்.

ஜோதி நிறைய நம்பிக்கைகளுடன், புரிபடாத சில சந்தேகங்களுடன் காருக்குள் ஏறி அமர்ந்தாள்.

கார் அவளுடைய எதிர்காலத்தை நோக்கிப் புறப்பட்டது.

மலையின் வளைவான சாலைகளில் மாருதி சீரான வேகத்தில் பயணம் செய்தது.

சூர்யா பாதையில் கவனம் பதித்திருந்தானே தவிர, அநாவசியமாக ஜோதியுடன் அரட்டை அடிக்கவில்லை.

''சூர்யா.''

''ம.''

''உங்கம்மா எப்படி இருப்பாங்க?''

''அப்படின்னா?''

''கோபக்காரங்களா, சாந்தமானவங்களா, மாடர்னானவங்களா இல்ல பழமையானவங்களா?''

சூர்யா வாய்விட்டு சிரித்தான். ''மருமகள் ஆகறதுக்கு முன்னாடியே மாமியாரைப் பத்தி ஆழமா தெரிஞ்சுக்கணும்னு ஆசை இல்ல?'' என்றான்.

''ஆமா சூர்யா.''

''எங்கம்மா ரொம்ப நல்லவங்க. தனக்கு மருமகளா வரவளை கண்ணுக்குள்ள வெச்சி காப்பாத்துவாங்க. உம்

பேர்ல தன் மகன் உயிரையே வெச்சிருக்கான்னு அவங்களுக்குத் தெரியும். அதனால உன்னை ஆசையா இழுத்து மடியில போட்டுக்குவாங்க.''

''அப்படிப்பட்டவங்க ஏன் சூர்யா அப்படி ஒரு லெட்டர் எழுதினாங்க.''

''நான் சொல்லிடுவேன் ஜோதி. ஆனா உனக்கு சஸ்பென்ஸ் போயிடும். வா... மலை வீட்டுக்கு வா. அங்க உனக்கு எல்லா கேள்விகளுக்கும் விடை கிடைச்சுடும்.''

''எனக்கு சஸ்பென்ஸ் பிடிக்கலை சூர்யா.''

''சில விஷயங்களில் ரகசியமா இருந்து வெளிப்படும் போதுதான் ரெட்டிப்பு சந்தோஷம்.ஜோதி ப்ளீஸ். இன்னும் மூணு மணி நேரம் தானே.''

''நான் வரேன்னு அம்மாகிட்ட சொல்லிட்டிங்களா?''

''ம். சொல்லியாச்சு.''

''உங்க தங்கை வீட்ல இருப்பாங்களா, இல்ல படிக்கப் போயிருப்பாங்களா?''

''இன்னைக்கு உன்னை அழைச்சிட்டு வரேன்னு சொல்லியிருக்கேன். பார்க்கணும்னு ஆசையிருந்தா வீட்ல இருக்கட்டும். இன்னொரு நாளைக்கு பாத்துக்கலாம்னு தோணிச்சின்னா படிக்கப் போயிருக்கட்டும்.''

ஜோதியிடம் அப்படி பதில் சொன்னானே தவிர, அம்மாவோ, பானுவோ, அந்த வீட்டில் இருக்கப் போவதில்லை என்பது சூர்யாவுக்கு மட்டும் தெரியும். முந்தின நாளே அதற்கான ஏற்பாடுகளை அவன் செய்திருந்தான்.

ஜோதி கொண்டு வந்து கொடுத்த கடிதத்தை எடுத்துக் கொண்டு அவன் போயிருந்தான். வெள்ளிக்கிழமை மாலையிலேயே எதிர்பார்த்து பழகியிருந்த அம்மாவுக்கு, கதவைத் திறந்ததும் அவன் நின்றிருந்ததைப் பார்த்து திகைப்பு வந்தது.



''என்ன சூர்யா. திடீர்னு புறப்பட்டு வந்திருக்க?''

''என்னம்மா செய்யறது. வீட்லயே நாம ரொம்ப நம்பிக்கை வெச்சிருக்கறவங்க நமக்கு எதிரா துரோகம் பண்ணினாங்கன்னா என்னம்மா செய்யறது.'' சூர்யா புன்னகைத்தபடி கேட்டான். வீட்டிற்குள் நுழைந்தான்.

''என்ன சூர்யா சொல்ற?''

''அம்மா உங்களுக்குத் தெரியாதது எதுவும் இல்ல. ஜோதியை இந்த வீட்டிற்குக் கூட்டிட்டு வரணும்னு நான் எவ்வளவு நாளா திட்டம் போட்டு, ஒவ்வொரு காயா நகர்த்தி, இப்ப அது கூடி வர்ற நேரத்தில நீங்களே ஜோதிக்கு லெட்டர் எழுதியிருக்கீங்க. சூர்யாவை நம்பாதே, அவன் கூட வந்தா ஆபத்துன்னு நியாயமாம்மா? சொல்லுங்கம்மா. நீங்க எது செஞ்சாலும் அதுக்கொரு நியாயம் இருக்கும். அந்த காரணம் என்னன்ன தெரிஞ்சுக்கலாமா?''

''சூர்யா நானும் ஒரு பொம்பளை. அதுவும் ஒரு சின்ன பொண்ணு. நீ அவளை மனசார விரும்பறேன்னு அவ முழுமையா நம்பிட்டா. தன்னோட வாழ்க்கை பூராவும் உன்கிட்ட ஒப்படைக்கத் தயாரா இருக்கா. அந்த மாதிரி சமயத்துல அவளை கூட்டிட்டு வந்து நீ ஏமாத்தப் போற சூர்யா. முன்னாலயே தெரிஞ்சிருந்தும் அதுக்கு நான் உடன்பட்டா அது பெரிய பாவமில்லையா.''

''இல்லம்மா. பாவம் இல்ல. என்ன நடந்ததுங்கறதை முழுசா மறந்திட்டிங்களா. புதுசா வரப்போற ஒரு ஜோதிக்காக இவ்வளவு யோசிக்கிறவங்க ஒரு ஆம்பளையோட மனசு என்ன பாடுபடும்கிறதையும் யோசிச்சிருக்கணும்.

நான் இப்ப இங்க வந்ததுக்கு காரணம் நீங்களும் பானுவும் ரெண்டு நாளைக்கு எங்கயாவது போயிடுங்க. எனக்கு இந்த வீடு வேணும்.''

'என்ன சூர்யா சொல்ற. என்ன செய்யப் போற?'

''வெள்ளிக்கிழமை சாயங்காலம் வாங்கம்மா, என்ன செஞ்சிருக்கேன் என்ன செய்யப்போறேன்னு நேர்ல தெரிஞ்சுக்கலாம். பானு அம்மா முரண்டுப் பிடிச்சாலும் அழைச்சிட்டுப் போக வேண்டியது உன்னோட பொறுப்பு.'' என்று சூர்யா அழுத்தந்திருத்தமாக சொல்லிவிட்டு வந் திருந்தான். அவனுக்குத் தெரியும். பானுவும், அம்மாவும் அவனிடம் எவ்வளவு தூரம் உரிமை எடுத்துக் கொண் டாலும் கூட அவனுடைய குரலில் தீவிரம் சேர்ந்து விடும் பொழுது அதை மறுத்துப் பேசவோ, எதிர்த்துப் பேசவோ அவர்கள் விரும்புவதில்லை.

இப்போது ஜோதியுடன் அந்த வீட்டை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தபோது அவனுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்த விஷயம் அம்மாவும் பானுவும் அங்கே இருக்க மாட்டார்கள் என்பதுதான்.

கார் நிறுத்தத்திற்கு வந்தது.

''இதுக்கு மேல கார் போகாது ஜோதி. இனிமே நடந்து தான் போகணும்.''

''நடப்போம் சூர்யா. எனக்கு இந்த ஏரியாவுல நடக்க ரொம்பப் பிடிச்சிருக்கு.''

சூர்யா பின் இருக்கையிலிருந்து ஒரு பாலிதீன் பையை எடுத்துக் கொண்டான். ஜோதியின் கையைப் பிடித்து ஏற்றத்தில் மெல்ல அழைத்துப் போனான்.

வீட்டை அடைந்தபோது, வெளியே பூட்டப்பட்டிருந்தது.



''என்ன சூர்யா, அம்மாவும் பானுவும் இருப்பாங்கன்னு சொன்னிங்க.''

''அப்படித்தான் அம்மா சொன்னாங்க. என்னாச்சின்னு தெரியலையே.''

சூர்யா தாழ்ப்பாளில் செருகப்பட்டிருந்த அந்த காகி தத்தை எடுத்தான். அவன் சொல்லிக் கொடுத்தபடி அம்மா எழுதியிருந்தாள்.

'சூர்யா, பூவும், பழமும் வாங்கிவர கடைக்குப் போகி றேன். எப்படியும் இரண்டு மணிக்குள் வந்து விடுவேன்' அம்மா.

சூர்யா மணி பார்த்தான். ''மணி ஒண்ணாகுது அம்மா பக்கத்துலதான் போயிருக்கிறாங்க. வந்திடுவாங்க.''

அவனிடமிருந்த சாவியால் பூட்டைத் திறந்தான். கதவைத் திறந்ததும் ''வலது காலை எடுத்து வச்சி வா ஜோதி'' என்றான்.

ஜோதியின் கன்னங்கள் சிவந்தன. வெகுநாள் பழகிய வீட்டிற்குள் நுழைவதுபோல எந்த கூச்சமும் இல்லாமல், எந்த தயக்கமும் இல்லாமல் ஜோதி அந்த வீட்டினுள் வலது காலை எடுத்து வைத்தாள். காரிலிருந்து எடுத்து வந்த பாலிதீன் கவரை அவளிடம் நீட்டினான் சூர்யா.

''என்ன இது?''

''தெறந்துதான் பாரேன்.''

ஜோதி, சோபாவில் அமர்ந்து கவருக்குள்ளிருந்து அதை எடுத்தாள். அது ஒரு அட்டைப் பெட்டி. பட்டுப் புடவை வைக்கும் அட்டைப் பெட்டி.

''புடவையா எனக்கா!''

''ஆமா ஜோதி. முதன் முதல்ல அம்மாவைப் பார்க்கப் போறே ஒரு சாதாரண சேலை கட்டிக்கிறதைவிட, பட்டுப் புடவை கட்டியிருந்தா நல்லா இருக்கும்னு தோணிச்சு. ப்ளீஸ் மாத்திட்டு வாயேன்.''

''எதுக்கு சூர்யா இதெல்லாம்.''

''ப்ளீஸ் சொன்னா கேளு.''

ஜோதி தோள்களைக் குலுக்கிவிட்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தாள். கதவை சாத்திக் கொண்டாள். அந்த அறையில் நான்கு திசையிலிருந்தும் வெவ்வேறு வடிவத்தில், வெவ்வேறு அளவுகளில் ஜோதி அவளைப் பார்த்துச் சிரித்தார்கள். முந்தின தடவை முத்தம் கொடுத்த போது விரிசல் விட்டு விட்ட கண்ணாடி மீண்டும் மாற்றப்பட்டு, இப்போது அவள் பிம்பத்தை துல்லியமாக பிரதிபலித்தது.

ஜோதி பட்டுப் புடவைக்கு மாறினாள். இன்னொரு பெட்டியில் அவள் அணிய வேண்டிய தோடு, கை வளையல்கள் இருந்தன. பூரண அழகோடு சூர்யாவின் அம்மாவைச் சந்திக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறானோ என்னவோ ஜோதி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். ஜோதி அந்த அறையை விட்டு வெளிப்பட்டவுடன் சூர்யா அவளைப் பார்த்து பிரமித்தான்.

''அசல் கல்யாணப் பொண்ணு மாதிரியே இருக்க, இப்பவே உன் கழுத்துல தாலி கட்டிடலாம் போலருக்கு.''

''கட்டுவாங்க... கட்டுவாங்க. எங்கப்பா, எங்கம்மா, தம்பி இவங்க மூணு பேரும் இருக்கும்போதுதான் என் கழுத்துல தாலி ஏறணும்.''

''ஜோதி, நீ ரொம்ப அழகா இருக்க ஜோதி.''



சூர்யா உற்சாகமாக சொல்லாமல் சற்று தளர்ந்த குரலில் சொன்னதுபோல் ஜோதிக்குத் தோன்றியது.

''ஜோதி இப்படி உட்காரேன்.''

ஜோதி அமர்ந்தாள். சூர்யா அவளிடமிருந்து இரண்டடி தள்ளி அமர்ந்தான். அவளிடம் ஏதோ சொல்ல முனைபவன் போல உதடுகளைத் திறப்பதும், மூடுவதுமாக அவன் சிரமப்படுவது தெரிந்தது. வலது கண்ணுக்கு கீழுள்ள நரம்பு துடித்தது.

''என்ன சூர்யா என்ன ப்ராப்ளம்?''

''உன் ஞாபக சக்தி எப்படி ஜோதி?''

''உங்களைப் பத்தி எந்த விஷயம் வேணாலும் கேளுங்க சூர்யா. உங்ளை நான் முதன் முதலாகப் பாத்தப்ப ப்ரௌன் கலர்ல கட்டம் போட்ட சட்டை போட்டிருந்தீங்க, ரெண்டாவது தடவை பார்த்தப்ப பச்சை கலர்ல கோடு போட்ட சட்டை போட்டிருந்தீங்க. கருப்பு கலர் பேண்ட். அதுல ஒன்று ரெண்டு வெள்ளை நூலு ஒட்டிக்கிட்டு இருந்தது. அப்போ இடது கன்னத்துல சின்ன புள்ளி வெச்ச மாதிரி ஒரு பரு வந்துட்டுப் போயிருந்தது.''

''ஏய் இதையா கேட்டேன்.''

''கேளுங்க சூர்யா. நாம சந்திச்ச தேதியெல்லாம் என்னென்னன்னு தெரியணுமா. உங்க வண்டி நெம்பர் சொல்லணுமா. உங்களைப் பத்தி என்னவேணாலும் கேளுங்க சூர்யா சொல்றேன்.''

''என்னைப் பத்தியில்ல ஜோதி. உன்னைப் பத்தி உன்னைப் பத்தின எல்லா விஷயமும் உனக்கு ஞாபகம் இருக்கும் தானே'' சூர்யாவின் குரலில் இப்போது பனிக்கட்டியின் சில்லிப்பு இருந்தது.

''புரியலை சூர்யா.''

''புரியும்படியா தெளிவாவே கேக்கறேன். இந்த போட்டோவைப் பாரு.''

சூர்யா அவளிடம் ஒரு புகைப்படத்தை நீட்டினான். ஜோதி அதை கையில் வாங்கிப் பார்த்தாள்.

''இது நான்தான். யாரோ எனக்குத் தெரியாமலே தள்ளி நின்னு போட்டோ எடுத்திருக்காங்க. யார் சூர்யா இதை எடுத்தது?''

''அது இருக்கட்டும். இந்த போட்டோ எடுத்தபோது நீ எங்க நிக்கறே தெரியுதா ஜோதி?''

''மெட்ராஸில. நான் எங்க காலேஜுக்குப் போறதுக்கு ரோட்டை க்ராஸ் பண்ணும்போது, எதிர் சைடுல கொஞ்சம் உயரமா நின்னு யாரோ எடுத்திருக்கிறாங்க.'' ஜோதியின் புருவங்கள் குழப்பத்தில் நெரிந்தன. சூர்யா என்ன சொல்ல வருகிறான் என்பது புலப்படாமல் இருக்கும் குழப்பம்.

''உன்னோட போட்டோவை சட்டுன்னு அடையாளம் சொல்லிட்டே. இப்ப இன்னொரு போட்டோவைக் காட்ட றேன். அதையும் பாரு.''

சூர்யா அடுத்ததாக நீட்டிய இன்னொரு போட்டோவை ஜோதி கையில் வாங்கினாள். அதில் ஒரு வசீகரமான இளைஞனின் முகம் பதிவாகியிருந்தது. அவனை எப் போதோ பார்த்தது போன்ற ஞாபகம் இதயத்தின் அடி மட்டத்தில் கசடாகத் தங்கியிருந்தது. ஆனால் இவன் யார்? எங்கே, எப்போது பார்த்தோம் என்பது ஜோதிக்கு நினை வில் வரவில்லை.

''எங்கேயோப் பார்த்திருக்கேன் சூர்யா. ஆனா யார்னு சட்டுனு புரியலை.''



''இவன் பேரை சொல்றேன் அப்பவாச்சும் புரியுதான்னு பாக்குறியா ஜோதி. இவன் பேரு தியாகு.''

''தி...யா...கு இந்த பேரையும் கேள்விப்பட்டிருக்கேன் சூர்யா. ஆனா சட்டுன்னு நினைவுக்கு வரலையே யார் இவரு?''

''என்னோட நண்பன். என்னோட தெய்வம். சின்ன வயசுல அப்பா அம்மா இறந்த பிறகு மாமா கிட்ட தான் வளர்ந்தேன். ஆனா பள்ளிக்கூடத்துல பணம் கட்ட கூட தயாரா இல்லாதபோது என்கூடப் படிச்ச ஒரு நண்பன்தான் உதவி செஞ்சான். பள்ளிப் படிப்புக்கு மட்டுமில்ல. காலேஜ் படிப்பை முடிக்கிறதுக்கும் அவன்தான் உதவி செஞ்சான்னு சொன்னேனே ஞாபகம் இருக்கா?''

''ஆமா.''

''அவன் இவன்தான். நான் படிப்புல ஆர்வமா இருக்கறது தெரிஞ்சதும் இவன் எனக்காக எவ்வளவு வேணா செலவு செய்யத் தயாரா இருந்தான். இவன் சாதாரணமானவன் இல்ல ஜோதி. இவனுக்கு ஒரு அம்மா உண்டு. அன்பான ஒரு தங்கை உண்டு.''

''ஓ... பானுன்னு சொன்னது இவரோட தங்கைதானா?''

''ஆமா. அம்மான்னு நான் சொன்னதும் இவனைப் பெத்த அம்மாதான். ஆனா மகனோட நண்பனா நெனச்சி பழகினது இல்லை. அவங்க வயித்திலேயே பொறந்த பிள்ளையாதான் என்னைப் பார்த்துக்கிட்டாங்க. மெட் ராஸ்ல படிப்பை முடிச்சுட்டு நான் மேலே படிக்க ஆசைப் பட்டபோது வெளிநாட்டு யுனிவர்சிட்டியில அனுமதி கெடைச்சது. அங்கெல்லாம் போயி படிக்கணும்னா நெறைய பணம் வேணும். தியாகு சந்தோஷமா அந்த பணத்தை செலவு பண்ண தயாரா இருந்தான். அவன்

ரொம்ப கண்ணியமானவன் ஜோதி. ஒரு பெரிய கம்ப்யூட்டர் கம்பெனி வெச்சி நடத்திட்டு இருந்தான். கட்டுப்பாடு, கண்ணியம், கருணை இதுக்கெல்லாம் ஒரே ஆளைக் காட்டுன்னு சொன்னா கண்ணை மூடிக்கிட்டு தியாகுன்னு சொல்லலாம்.''

''இப்ப அவரு எங்க இருக்காரு?''

''சொல்றேன். தியாகுவை நீ எப்படி மறந்தேன்னுதான் எனக்குத் தெரியலை.''

''ஏன் சூர்யா இவரை ஏற்கனவே எனக்குத் தெரியுமா?''

''தெரியும் ஜோதி. அக்டோபர் ரெண்டாம் தேதிய மனசுக்குள்ள கொண்டு வா.''

''அக்டோபர் ரெண்டாம் தேதி காந்தி பொறந்த நாள்.''

''ரெண்டு வருஷத்துக்கு முன்னால அக்டோபர் ரெண்டாம் தேதி நீ எங்க போயிருந்த?''

''எங்க போயிருந்தேன் சூர்யா?''

''மெட்ராஸ்ல ஸ்பென்ஸர் பிளாசால உன் ப்ரெண்ட் சோட ஷாப்பிங் போயிருக்கல?''

''ஆமா... ஆமா... ஆமா.''

ஜோதி சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தாள். சரேலென்று எல்லாமே சுழன்று, நினைவுச் சக்கரங்கள் சட் சட்டென்று பொருந்தின.

அக்டோபர் இரண்டு. ஸ்பென்ஸர் பிளாசா, கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. ஜோதி கல்லூரியின் முதலாம் ஆண்டில் இருந்தாள். தன் தோழிகளுடன் ஐஸ்க்ரீம் பார்லர், ரெடிமேட் டிரஸ்ஸஸ் என்று சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



அதுவரை பொதுவாக கோவில், பூஜை அறை, கர்நாடக சங்கீதம் என்று தன்னை ஒரு குறுகிய வட்டத்துக்குள் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த ஜோதியை, அவளது தோழிகள் வற்புறுத்தி ஸ்பென்ஸர் பிளாசாவிற்கு அழைத்து வந்திருந்தனர். எவ்வளவு வித்தியாசமான மனிதர்கள், எவ்வளவு வித்தியாசமான பொருட்கள் இந்த ஆர்ப்பாட்டங்கள் எதுவும் தனக்கு அனுபவமாக கிடைக்காமலேயே இருந்து விட்டதை ஜோதி உணர்ந்து, விரித்த விழிகளுடன் ஒவ்வொன்றையும் ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

ஒரு பொம்மைக் கடையின் கண்ணாடி ஷோகேஸில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பஞ்சு பொம்மைகளை மிகுந்த ரசனையோடு அவள் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த இளைஞன் குறுக்கிட்டான்.

''எக்ஸ்க்யூஸ்மீ.''

ஜோதி திரும்பினாள். நாகரீகமாக உடுத்தியிருந்தான். கண்ணியமான தோற்றத்தோடு இருந்தான். ஆனால் முகத்தில் அச்சத்தின் வியர்வை பளபளப்பு. உதடுகள் உலர்ந்து பேசுவதே பெரும் உழைப்பு போல தெரிந்தது.

அவனை ஜோதி அவ்வப்போது பார்த்திருக்கிறாள். அவள் கடைத் தெருவிற்குப் போகும்போது, கோயிலில் சுற்றி வரும்போது, பேருந்து நிலையத்தில் காத்திருக்கும் போது என்று பல சந்தர்ப்பங்களில் அவன் முகம் குறுக்கிட்டிருந்தது.

தள்ளி நின்று வேடிக்கை பார்த்து விட்டுப் போகும் ஆண்களில் ஒருத்தன் என்றே ஜோதி அவனை அலட்சியப்படுத்தியிருந்தாள். 'டயம் ப்ளீஸ்' என்றோ, 29சி போய் விட்டதா?' என்றோ ஏதாவது ஒன்றிண்டு வார்த்

தைகள் பெண்ணிடம் பேசி அதிலேயே ஆனந்தம் கொள்ளும் ஆண்களை அவள் மதித்ததில்லை. இப்போது இவனிடமும் கடுமையான முகத்தையே காட்டினாள்.

''எஸ்'' என்றாள் ஜோதி.

அங்காங்கே கடைக்காரர்கள் குறுக்கிட்டு தங்கள் கடைக்கு வரச் சொல்லி அழைப்பது போல, இவனும் அப்படித்தான் என்று நினைத்துக் கொண்டாள்.

அந்த 'எஸ்' என்ற சொல்லே போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று சொன்னது போல அவன் உடலில் நடுக்கம் கூடியது. நாக்கு நுனியால் உதடுகளை ஈரம் செய்து கொண்டான்.

''ஐயாம் தியாகு.''

''எஸ்.''

''ரொம்ப நாளாவே உங்களை நான் வாட்ச் பண்ணிட்டு இருக்கேன். கோயில்ல, கடைத் தெருவுல அப்பப்ப பாத்திட்டு இருக்கேன்.''

ஜோதியின் முகம் சுண்டியது. சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஜோதி, போயிடாதீங்க நான் சொல்லி முடிக்கிற வரைக்கும் கேளுங்க. உங்களைப் பார்த்ததிலேர்ந்து எனக்கு தூக்கம் போச்சி. வாழ்ந்தால் உங்களோடதான் வாழணும்னு முடிவு பண்ணிட்டேன். நான் ஒரு பெரிய கம்ப்யூட்டர் கம்பெனி வெச்சிருக்கேன். ஆனா கொஞ்ச நாளா பிஸினஸ்ல கான்ஸ்செண்ட்ரேட் பண்ணவே முடியலை. உங்க அப்பா அம்மாகிட்ட பேச எங்கம்மாவை அனுப்பறேன். ஆனா அதுக்கு முன்னால உங்க மனசை தெரிஞ்சுக்கணும் அப்படிங்கறதாலதான்.''



ஜோதி வெடுக்கென்று திரும்பினாள். ''மிஸ்டர் இது மெட்ராஸ். காலேஜ் படிக்கிற பொண்ணுங்க ரோட்ல நடந்து போவாங்க. பக்தி இருக்கிற பொண்ணுங்க கோயிலுக்குப் போயிட்டுதான் வருவாங்க. வீட்ல வேலை இருந்த துன்னா மார்க்கெட்டுக்குப் போயிட்டு வருவாங்க. போற வர்ற வழியில நீங்க ஒரு பொண்ணை பாத்துட்டதனாலேயே அவ பேர்ல ஆசைப்படறதும், வீட்டுக்குப் பொண்ணு கேட்க ஆள் அனுப்பட்டுமான்னு கேக்கிறதும் டூ மச்.''

''ஜோதி... ஜோதி... ஜோதி. இந்த மாதிரி நடந்துடுமோன்னுதான் பயந்துட்டு இருந்தேன். இதனாலேயே தயங்கித் தயங்கி மூணு மாசமா பயந்து ஒதுங்கிட்டேன். ஆனா உங்ககிட்ட எப்படியும் சொல்லிடணும்னு அப்படிங்கிறதாலதான்... இந்த லெட்டரைக் கொஞ்சம் படிச்சுப் பாருங்களேன்.''

அவன் கடிதம் ஒன்றை அவளிடம் நீட்டினான்.

எங்கோ போயிருந்த ஜோதியின் தோழிகள் அந்த நேரம் பார்த்து வந்து சேர்ந்தனர்.

''மிஸ்டர் உங்க மனசுல என்ன நெனைச்சுட்டு இருக்கீங்க.'' ஜோதி குரலை உயர்த்திக் கத்தினாள். ''ஏன் இப்படி பப்ளிக் பிளேஸ்ல பிகேவ் பண்றிங்க'' அவன் கொடுத்த கடிதத்தை இரண்டாக, மூன்றாக கிழித்தபோது தியாகு பதறி, அவள் கைகளைப் பிடித்தான்.

''கிழிக்காதிங்க ப்ளீஸ். கிழிக்காதிங்க... லெட்டரை கிழிக்கும்போது என் இதயத்தையே கிழிக்கிற மாதிரி இருக்கு.''

தியாகுவின் தோளில் ஒரு கை விழுந்தது.

திரும்பினான். பெண் போலீஸ்.

''என்னய்யா டீஸண்டா டிரெஸ் பண்ணிக்கிட்டு பொம்பளைங்ககிட்ட கலாட்டா பண்றே, என்னம்மா பண்றாரு இவரு?''

''நான் பாட்டுக்கு கடையில வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கேன். அங்கேர்ந்து வந்து மூணு - நாலு மாசமா உன்னையேதான் ஃபாலோ பண்ணிட்டு இருக்கேன். நீதான் எனக்கு பொண்டாட்டியா வரணும். நீயில்லன்னா வாழ்க்கைப் போச்சி. உனக்கு எழுதின லவ் லெட்டரைப் படிச்சுப் பாருன்னு கொடுக்கிறார் மேடம்'' ஜோதி கோபமும் ஆத்திரமாகவும் சொன்னாள்.

''ஜோதி... ஜோதி... தயவு செஞ்சி...'' என்று தியாகு ஏதோ சொல்ல தொடங்கியபோது... அவன் கன்னத்தில் பளீரென்று அறை விழுந்தது. எங்கிருந்தோ ஒரு ஆண் போலீஸும் வந்து சேர்ந்தார்.

''ஈவ்டீஸிங்கா பண்ணிட்டு இருக்கிற. உங்கள மாதிரி ஆளுங்களை மூணு மாசம் களி தின்ன உட்டா தாண்டா புத்தி வரும்'' என்று பிடித்து இழுத்து தள்ளியதில், தியாகு தரையில் மோதி விழுந்தான். நிமிருமுன், போலீஸ்காரரின் பூட்ஸ் கால் விலாவில் உதைத்தது.

''நல்லா குடுங்க அப்பதான் புத்தி வரும்.'' ஜோதியின் தோழி ஒருத்தி சொன்னபோது,

''வாங்க போகலாம்'' என்று ஜோதி அவர்களை அழைத்துக் கொண்டு சட்டென்று அங்கிருந்து விலகினாள்.

தியாகு அள்ளி எடுக்கப்பட்டான். ஷோகேஸ் கண்ணாடியில் அவனுடைய பிம்பம் பார்த்து ஜோதிக்கு அடிமனதில் சற்றே வலித்தது. தரதரவென்று படியை நோக்கி அவன் இழுத்துச் செல்லப்பட்டபோது சற்று இரக்கம் வந்தாலும், அடிக்கடி அவள் வாழ்க்கையில் காதல்



கடிதங்களைக் கொடுத்து இடறிக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு இப்படித்தான் ஒரு முடிவு வர வேண்டும் என்று தோன்றியது. முகத்தைத் திருப்பிக் கொண்டு எஸ்கலேட்டரில் இறங்கினாள்.

ஜோதியின் கண்களில் சற்றே அச்சம் வந்திருந்தது.

''ஸாரி, உங்க ப்ரெண்டுன்னு எனக்குத் தெரியாது சூர்யா. ஆனா பொதுவாவே நான் அப்பல்லாம் பயந்த சுபாவம். எந்த ஆம்பளைகிட்டேயும் தேவையில்லாம பேசற டைப் இல்லை. ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்ல திடீர்னு எம் முன்னாடி வந்து நின்னு... ஐ லவ் யூ... நீயிருந்தாதான் என் வாழ்க்கை அப்படியெல்லாம் பேசினதும் ரொம்ப பயந்து போயிட்டேன். பயத்தவிட கோபம்தான் அதிகமா வந்தது. ஏன் அப்புறம் என்னாச்சி?''

''அதுக்கப்புறம் என்னாச்சின்னு தெரிஞ்சிக்கிற ஆர்வம் கூட உனக்கு இல்லாமப் போச்சி ஜோதி. ஏன்னா உன்னைப் பொறுத்த வரைக்கும் உன் வாழ்க்கைல குறுக்கிட்ட அம்பது - நூறு ஆம்பளைங்கள்ல ஒருத்தன் தான் தியாகு. ஆனா தியாகுவைப் பொறுத்த வரைக்கும் அவன் வாழ்க்கையே நீதான்னு நெனைச்சிருந்தான். உன் கண்ணெதிரே அவமானப்பட்டு, போலீஸ்காரங்க தர தரன்னு இழுத்துட்டுப் போனதும் ரொம்ப உடைஞ்சுப் போயிட்டான். உலகத்தை மறுபடியும் திரும்பிப் பாக்கற தைரியம் கூட இல்லாமப் போயிடுச்சி. ராத்திரி பூரா உட்கார்ந்து அழுதிருக்கான். இழுத்துட்டுப் போன போலீஸ் அவன் பேர்ல கேஸ் புக் பண்ணி, அப்புறம் அவன் வக்கீலுக்குப் போன் பண்ணி, அவங்க வந்து போலீஸுக்கு பணம் செட்டில் பண்ணி, ஒரு வழியா சமாதானமாகி, ராத்திரி தான் அவன ரிலீஸ் பண்ணிருக்காங்க. வீட்டுக்கு வந்து படுத்தவனுக்கு தூக்கமே வரலை.

"முதன் முதலா உன்ன நேருக்கு நேர் சந்திச்ச சந்தர்ப்பத்துலயே அவ்வளவு தூரம் அவமானப் படுத்தப்பட்டது. அவனால தாங்கவே முடியலை. அவன் சொல்ல நெனைச்சதை முழுசா கேட்டுக்க கூட பொறுமையில்லாம போலீஸ்ல மாட்டிவிட்டது அவனை ரொம்பவும் உருக்கிடுச்சி. ராத்திரி பூரா தூங்காம இருந்தவன், காலைல ஒரு முட்டாள்தனம் பண்ணிட்டான். மூணாவது மாடியிலேர்ந்து கீழ குதிச்சிட்டான்."

"ஐயய்யோ அப்புறம்?" ஜோதியின் உடல் தன்னிச்சையாய் நடுங்கியது.

"விழுந்தவன் செத்திருந்தா யாருக்கும் எதுவும் தெரிஞ்சிருக்காது. மண்டையில பலமான அடி. பொழச்சிட்டான். ஆனா மூளை கொஞ்சம் கலங்கிடுச்சி. ஜோதி, ஜோதி, ஜோதி... ஜோதி வேற எதுவும் அவனால பேச முடியலை. பெரிய பெரிய டாக்டர்கள் எல்லாம் எவ்வளவு முயற்சி எடுத்தும் கூட அவனை சரிப்படுத்த முடியலை. அவன் ஆஸ்பத்திரியில சேர்ந்த விஷயம் கெடைச்சி... நான் படிப்பை அப்படியே முறிச்சிட்டு வெளிநாட்டிலேர்ந்து ஓடி வந்துட்டேன். எனக்கு வாழ்க்கைல விளக்கேத்தி வெச்ச நண்பன் ஆஸ்பத்திரில படுக்கைல தெருப் பிச்சைக்காரன் போல ஜோதி... ஜோதின்னு புலம்பிகிட்டு இருக்கிறதைப் பாத்தபோது நான் நொறுங்கிப் போயிட்டேன்.

யார் அந்த ஜோதி? இவனை இந்த அளவுக்கு பைத்தியமாக்கின அந்த பொண்ணு யாருன்னு ஆத்திரத்தோட கேட்டேன். உன்னைப் பத்தி விசாரிச்சு நான் வர்றதுக்குள்ள உங்கப்பாவுக்கு ட்ரான்ஸ்பராகி மெட்ராஸை விட்டு போயிருந்த. அதுக்கப்புறம் நீ எங்க போயிருக்கேன்னு



தெரியாம தேடி கண்டு பிடிக்கறதுக்கு கொஞ்சம் டயம் ஆயிடுச்சி.

தியாகு யாராலயும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மாறிட்டிருந்தான். தனியா விட்டா சுவத்துல மோதி மோதி மண்டைய காயப்படுத்திக்கிட்டு தன்னைத்தானே வருத்திக்கிட்டான். ஏதோ ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில தூக்கிப்போட எனக்கு மனசு வரலை. என்னோட பொறுப்புல அவனோட அம்மாவும், தங்கையும் அவனைப் பாத்துக்கணும்னு நான் நெனைச்சேன். நான் என்ன வேணும்னு கேட்டாலும் எனக்கு வாங்கிக் கொடுத்த வள்ளல் அவன். அவன் ஆசைப்பட்டது ஒரே ஒரு விஷயம்.

நீ. அது அவனுக்கு கெடைக்கற வரைக்கும் எனக்கு தூக்கமில்லன்னு நான் முடிவு பண்ணிட்டேன். ஜோதி, இந்த வீடு என்னோடது இல்ல தியாகுவோடது. இந்த வீட்டுக்கு மருமகளா நீ வரணும்னு சொன்னேனே எனக்கு பொண்டாட்டியா இல்ல. தியாகுவுக்கு பொண்டாட்டியா."

"என்ன உளர்றிங்க சூர்யா."

"உளறல் இல்ல ஜோதி. ஒவ்வொண்ணும் பிளான்... பண்ணி... பிளான் பண்ணிதான் செஞ்சேன். எந்த மருந்தாலயும் குணப்படுத்த முடியாத தியாகுவை, குணப்படுத்தக் கூடிய மருந்து ஜோதிதான்னு டாக்டர்கள் சொன்னாங்க. நிச்சயமா இதுக்கு நீ ஒத்துக்கப் போறதில்லேன்னு எனக்குத் தெரியும். என்மேல உனக்கு லவ் வந்ததும் உன்னைப் போட்டோஸ் எடுத்து இந்த வீடு முழுக்க அலங்காரம் பண்ணியிருக்கேனே... எனக்காக இல்ல.. இந்த ரூம் நடுவுல தியாகு வந்து உட்கார்ந்திருந்தான்னா சமாதானம் ஆயிடுவான். ஹாண்டி கேம்ல ஐ லவ் யூ டா

சத்தியமா உன்ன லவ் பண்றேன்னு கேமராவைப் பாத்துப் பேசினியே அதெல்லாம் என்னைப் பாத்து பேசின துக்காக இல்ல. அதைப் போட்டுப் போட்டு காட்டினேன், தியாகுவுக்கு அவனை பாத்துதான் நீ சொல்ற மாதிரி ஒரு பிரமை. ஒரு தடவை நீ இங்க வந்திருந்தபோது கண் ணாடியில உன் முகத்தை பாத்த அங்க ஒட்டியிருந்த என்னோட போட்டோவுக்கு 'கிஸ்' கொடுக்கிறதா நெனைச்சி கண்ணாடிக்கு முத்தம் கொடுத்த அப்ப என்னாச்சி ஞாபகம் இருக்கா?''

ஜோதி பிரமித்திருந்தாள். நடப்பதெல்லாம் நனவா கனவா என்று புரிபடாமல் ஒரு பிரமிப்பு. தான் பார்த்த, பழகிய சூர்யா இவன்தானா? அல்லது அவனுக்குள் அவளுக்குப் புரிபடாத ஒரு பேய் நுழைந்து விட்டதா?

''உன்னைத்தான் கேக்கறேன் ஜோதி, பதில் சொல்லு? அன்னைக்கு கண்ணாடியில முத்தம் கொடுத்தபோது என்னாச்சி?'' சூர்யாவின் குரலில் வழக்கமான அன்பு இல்லை. அதிகாரம் இருந்தது.

''கண்ணாடி விரிசல் விட்டது.''

''எப்படி தெரியுமா? அந்த கண்ணாடிக்கு மறு பக் கத்துல தியாகு இருந்தான். அங்கேர்ந்து உன்னையே பாத்திட்டு இருந்தான். போட்டோவுலயும், சினிமாவி லயும் உன்னைப் பார்த்து குணமாயிட்டிருந்தவன் நேருக்கு நேரா கண்ணாடி ஜன்னலுக்கு மறு பக்கம் நின்னு, நீ நகர்ந்து, நிக்கறது எல்லாத்தையும் பாத்துட்டு இருந்தான். கண்ணாடிக்கு முத்தம் கொடுத்த போது தனக்கே முத்தம் கொடுத்த மாதிரி உன்னைப் பாய்ஞ்சிப் பிடிச்சிடணும்னு ரூமுக்குள்ள கண்ணாடி மேல பாய்ஞ்சான். அதனால தான் விரிசல் விட்டிருக்கு. அப்பதான் நான் தபதபன்னு ஓடி வந்து உன்னை வெளியில அழைச்சிட்டு வந்தேன்.''



''சூர்யா, நீங்க சொல்றதெல்லாம் சும்மா வெளையாட்டுக் காகவா இல்ல நிஜமாவா? புரியலை. வெளையாட்டுக்காக அப்படின்னு சொன்னா இந்த வக்கிரமான வெளையாட் டெல்லாம் எனக்குப் பிடிக்காது சூர்யா.''

''வெளையாட்டு இல்ல ஜோதி நிஜம். இப்படி பட்டுப் புடவை கட்டி, நகையெல்லாம் போட்டு, அலங்காரம் பண்ணி, கல்யாணப் பொண்ணு போல தயாரா இருக் கியே. தியாகு வரப்போறான். உன் கழுத்துல தாலிகட்டப் போறான்.

''வெளையாடாதீங்க சூர்யா.''

''வெளையாட்டு இல்லைன்னு மறுபடியும் சொல் றேன். தியாகுவைப்போல ஒரு நல்லவனை நீ பாக்கவே முடியாது. என்னைப் போல பத்து பங்கு பதினைஞ்சு பங்கு நல்லவன். கண்ணியமானவன், புத்திசாலி, நாணயமானவன். உம்மேல ப்ரியம் வெச்சதனாலதான் அவனுக்கு அந்த விபத்து நடந்தது. அதுக்கு முன்னால, பஞ்சு போல மென்மையா இருந்தவன் மண்டையில அடிபட்டு மூளை கலங்கின பிறகுதான் முரட்டு ஆளா மாறினான். ஆனா நீ பயப்பட வேண்டாம். இப்ப அவன் முரடன் இல்ல. உம்மேல பாய்ஞ்சி குத்திக் கிழிக்கிறவன் இல்ல. உன் போட்டோவும், உன் குரலும், நீ ஒரு தடவை நேர்ல வந்துட்டுப் போனதும் அவனை நெறைய மாத் திடுச்சி. இப்ப அவன் எவ்வளவோ பரவாயில்லை. நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா தியாகுவைத்தான் பண்ணிக் கணும் ஜோதி. உன் வாழ்க்கை ரொம்ப சந்தோஷமா இருக்கும். நான் உன்னைத் துரத்தி துரத்தி காதலிச்சது நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கறதுக்காக இல்ல. என் நண்பன் தியாகுவுக்கு உன்ன பரிசா கொடுக்கணுங் கறதுக்காக.''

''சூர்யா நானென்ன பேனாவா, பென்சிலா! உங்ககிட்ட இருக்கிற பொருளை நண்பன்கிட்டத் தூக்கிக் கொடுக்கற துக்கு. நான் ரத்தமும் சதையும் சேர்ந்த மனுஷி. எனக்கும் மனசு இருக்கு. விருப்பு வெறுப்பு இருக்கு. யாரை கல்யாணம் பண்ணிக்கணும் யாரைக் கல்யாணம் பண் ணிக்க வேண்டாம்னு முடிவு பண்ற உரிமை இருக்கு. நான் உங்க மேல ஆசைப்பட்டதனால நான் ஒண்ணும் உங்க அடிமையாயிட மாட்டேன். என்னை நீங்க விலை கொடுத்து வாங்கலை. நெனைச்சவங்களுக்கெல்லாம் தூக்கிக் கொடுக்கறதுக்கு. காதல்னா என்னன்னு தெரிஞ்சுக்கங்க சூர்யா.''

''நீ தெரிஞ்சுக்கணும் ஜோதி நீ தெரிஞ்சுக்கணும். தியாகுவுக்கு ஜோதி தான் வேணும்னு முடிவு பண்ணின போது உன்னை குண்டுக்கட்டா தூக்கிட்டு வந்து தியாகு கிட்ட போட்டிருக்க முடியும்.

ஏன் அப்படி போடலை. அப்படிப் போட்டா தியாகு மேல நிச்சயமா உனக்குப் பிரியம் வந்திருக்காது. ஏன்னா காதல்னா உனக்கு என்னன்னு புரிஞ்சிருக்காது. தியாகு உன் மேல வெச்சிருந்த அன்பு, பாசம், ப்ரியம், காதல் உனக்காக உயிரைக் கொடுக்கக்கூட தயாராக இருந்தது. இதெல்லாம் உனக்குப் புரிஞ்சிருக்கவே புரிஞ்சிருக்காது. முதல்ல காதல்னா என்னென்னு நீ உணரணும்னுதான் உன்னை நான் காதலிச்சேன். இப்ப தெரியுதா ஜோதி காதலோட வலி. காதலிச்சவன் வேண்டாம்னு சொன்னா மனசு எவ்வளவு வேதனைப்படுது பாத்தியா... இதே கஷ்டத்தைத்தானே என் தியாகுவும் அனுபவிச்சிருப்பான்.''

''சூர்யா போதும். நான் அவசரப்பட்டுட்டேன். நான் ஆசைப்பட்டது, காதலிச்சது, வாழணும்னு ஆசைப்பட்டது



எல்லாமே உங்க கூட தான். என்னைக்கோ ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்ல பாத்துட்டு... முகம் கூட ஞாபகம் இல் லாத... ஒரு தியாகுவுக்காக நீங்க காதலை விட்டுக் கொடுக்கலாம். ஆனா நான் விட்டுக் கொடுக்க முடியாது. உங்க நெஞ்சைத் தொட்டு சொல்லுங்க. கடைசி வரைக்கும் இந்த நோக்கத்துக்காகத்தான் காதலிச்சிங்களா? ஒரு நாள் கூட உங்களுக்கு என் மேல உண்மையான காதல் வரல்லியா?''

சூர்யா தலை குனிந்தான்.

## 33

''சொல்லுங்க சூர்யா. என்மேல காதலா இருக்கிறதா சொன்ன அத்தனை வார்த்தைகளும் போலியான வார்த் தைகள் தானா?''

''இல்ல ஜோதி. ஆரம்பிச்ச போது ஒரு நாடகமாத்தான் ஆரம்பிச்சேன். என்னோட தியாகு வுக்காகத்தான் அப்படி செஞ்சேன். ஆனா போகப் போக என்னையும் அறியாம மனசுல நீ இடம் பிடிக்க ஆரம் பிச்சது உண்மைதான். ஆனா நேத்து வந்த ஜோதி அவ ளால எனக்குக் கிடைக்கிற இந்த சந்தோஷம். இதுக்காக என் நண்பனை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. என்னுடைய பிடிவாதம் தப்புன்னு தியாகுவோட அம் மாவே சொன்னாங்க. ஒரு பொண்ணை குண்டுக்கட்டா தூக்கிட்டு வர மாதிரி இல்ல அவ மனச மாத்த முடியாது உன்னால. அப்படின்னு சொன்னாங்க. அதனாலதான் உனக்கு போன் செய்தாங்க. லெட்டர் எழுதினாங்க. எல் லாம் செஞ்சாங்க. நான் சொல்றேன். தியாகுவோட நீ வாழ ஆரம்பிச்சுட்டா முதல்ல உன்னால ஒத்துக்க முடிய

லேன்னாலும், பின்னால உன்னால ஒத்துக்க முடியும். இங்கேயே உட்கார்ந்திரு தியாகுவை கூட்டிட்டு வர்றேன்.''

சூர்யாவின் குரலில் இருந்த முரட்டுத்தனம் ஜோதியை ஆச்சர்யப்படுத்தியது.

''ஒரு நாளும் இதுக்கு ஒத்துக்க மாட்டேன்'' ஜோதி கதவை நோக்கி நடந்தாள்.

சூர்யா மொத்தமாக மாறிப் போனான். அவள் மீது பாய்ந்தான், இழுத்தான், கீழே தள்ளினான். ''ஏய் என்னை முரடனாக்கதே. என் தியாகுவுக்கு நீ இல்லேன்னா வேற யாருக்குமே இல்லாமப் பண்ணிடுவேன்.''

ஜோதி முதன் முதலாக சூர்யாவை இந்த மாதிரி பார்க் கிறாள். சிங்கத்தின் கூண்டுக்குள் தெரியாமல் நுழைந்து விட்டபோது... திடீரென்று சிங்கம் பாய்ந்து, கழுத்தைக் குறி வைத்து கவ்வி விட்டதைப் போல ஜோதிக்குள் ஒரு நடுக்கம் ஓடியது. இது அவள் ஆசைப்பட்ட, காதலித்த சூர்யா இல்லை. அவனுக்குள் புகுந்து கொண்டிருக்கும் ஏதோ ஒரு மிருகம்.

இந்த மிருகத்திடமிருந்து முதலில் தப்பித்தால்தான் நல்லது. அவளுடைய சூர்யா ஒரு நாளும் இது போல நடந்து கொள்ள மாட்டான். அவன் சுய நினைவில் இல்லை. ஜோதி அவன் பாரத்தை பொறுக்க முடியாமல் சுகம் சுழித்தாள். சட்டென்று முடிவு செய்து அவனுடைய கையைக் கடித்தாள். இந்த செயலை சற்றும் எதிர்பாராத சூர்யா திகைத்தான். கையை உதறி நகர, ஒரே உந்து உந்தித் தள்ளிவிட்டு ஜோதி ஓடினாள். சூர்யா கையை நீட்டியபோது அவளின் சேலை நுனிதான் கையில் கிடைத்தது. அதை பற்றி அவன் எழுந்திருக்குமுன் ஜோதி அந்த அறைக்கு வெளியே பாய்ந்து விட்டாள்.



அறைக் கதவை சாத்த அவள் முயற்சிக்க, முழு வேகத் துடன் அவளைப் பிடித்து உள்ளே இழுத்தான்.

ஜோதி கதவில் மோதி, அவன் மேல் வந்து விழுந்தாள். வந்து விழுந்த வேகத்தில் இருவரும் உருண்டனர். கண்ணாடியை ஒட்டி போடப்பட்டிருந்த சிறு மேஜையில் கால்கள் மோதிய வேகத்தில் மேஜை கவிழ்ந்தது. அதி லிருந்து விழுந்து ஓடிய அலங்கார பொருட்களில் ஜோதி பவுடர் டப்பாவைக் கையில் எடுத்தாள். சற்றும் யோசிக் காமல் அதை வீசி.. வீசி.. சூர்யாவின் முகத்தில் அடித்தாள். தகர டப்பாவின் முனை சூர்யாவின் வலது கன்னத்தில் தாக்கிய வேகத்தில் அவன் கீழே விழுந்தான். எழுந் திருக்குமுன், ஜோதி அந்த அறையை விட்டு வெளிப்பட் டாள். அறைக்கதவைத் தாளிட்டு விட்டு வெளியே தபதபவென்று ஓடினாள். பவுடர் டப்பாவைத் தூக்கி அடித் தாள்.

வாசல் கதவைத் திறக்க முடியவில்லை. கதவோடு பொருத்தியிருந்த பூட்டு பூட்டப்பட்டிருந்தது. அதன் சாவி சூர்யாவிடம்தான் இருக்கும். அதை எப்படி எடுப்பது? மீண்டும் அறைக்கதவைத் திறந்து உள்ளே போனால் அவனிடம் சிக்கவேண்டி வரும். இதைத்தவிர வீட்டை விட்டு வெளியேற வேறு வழி இருக்கிறதா? ஜோதி இன்னொரு பாதைக்கு ஓடினாள். அது வீட்டின் இன்னொரு பகுதிக்குப் போனது.

அங்கு மரப்படிகளில் தபதபவென்று ஓடினாள். பூட் டப்பட்ட ஒரு வாசலின் முன் கொண்டு போய் விட்டன. இப்படி ஒரு வழி இருக்கிறது. ஆனால் பூட்டப்பட்டிருக் கிறதே... படிகளில் மீண்டும் ஜோதி ஏற முயன்றபோது, பக்கத்தில் இருந்த பிறையில் சாவி பளபளத்தது. ஜோதி

அந்த சாவியை எடுத்தாள். நடுங்கும் விரலால் பூட்டில் நுழைத்தாள். சாவி நழுவி கீழே விழுந்தது. பதட்டத்தில் சாவியை கதவுக்கு அடியில் தள்ளி விடுவோமோ என்று ஜோதி பயந்தாள். மரத்துப்போன விரல்களால் சாவியைப் பற்றி உதடுகள் உதற, உடம்பு குலுங்க, பூட்டில் நுழைத்து பூட்டைத் திறந்தாள். திறந்த வேகத்தோடு பாய, அவள் நுழைந்ததும் கதவு மூடி அறைந்து சாத்திக் கொண்டது. அவளை முற்றிலுமாக இருள் சூழ்ந்தது.

## 34

ஜோதி மலையில் போய் முட்டியதுபோல் விதிர்த்து நின்றாள். கும்மிருட்டு அவளை விரட்டியது வந்த வழியே திரும்பிவிடும் வேகத்தோடு, கதவை மீண்டும் தொட்டபோது... மிகவும் அதிர்ந்து போனாள். கதவை உள்ளிருந்து திறப்பதற்கு எந்த வசதியும் இல்லை. கைப்பிடியோ, தாழ்ப்பாளோ எதுவும் இல்லை. கதவின் உட்புறமும் சின்னச் சின்ன பஞ்சுப் பொதிகளால் மிருதுவாக்கப்பட்டிருந்தது.

''ஜோதி'' இருட்டில் இருந்து குரல் மிதந்து வந்தது. ஜோதி தூக்கி வாரிப் போட்டுத் திரும்பினாள்.

'சரக்' என்று தீக்குச்சி உரசும் சத்தம். ஒரு மெழுகு வர்த்தி உயிர் பெற்றது.

''ஜோதி.. ஜோதி.''

கால்களால் நிற்க முடியாமல் சக்தியெல்லாம் இழந்து அப்படியே சுவரில் சாய்ந்து அமர்ந்தாள். வெளிச்சம் வந்த திசையில் அவளுடைய விழிகள் திரும்பின. தியாகு அங்கு அமர்ந்திருந்தான். மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் பாதி முகம் நிழலாகவும், பாதி முகம் நிஜமாகவும் அவன் அமர்ந்திருந்த கோலம் ஜோதியின் அடிவயிற்றில் நெருப்பை பற்ற வைத்தது. கலைந்து இருந்த உடைகள், கசங்கியிருந்த தலைமுடி, களைத்திருந்த விழிகள்.



''ஜோதி, பயப்படாதே'' தியாகுவின் குரல் அவளை எட்டியது.

''ஐயோ வேண்டாம் என்னை ஒண்ணும் பண்ணிடாதிங்க. தயவு செஞ்சி என்னை விட்டுடுங்க.''

''நான் உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன். உட்காரு ஜோதி.''

ஜோதி உட்காரத் தயாராக இல்லை. பார்வை இங்கும் அங்குமாக அலைந்தது.

தியாகு மெழுகுவர்த்தியை எடுத்துக் கொண்டு அவளை நோக்கி நடந்து வர ஆரம்பித்தான்.

ஜோதி தரையிலிருந்து துள்ளி எழுந்தாள். சுவரோடு ஒன்றினாள். ''வேண்டாம்... வேண்டாம்... வராதீங்க... வராதீங்க கிட்ட வராதீங்க...''

''ஜோதி நீ ரொம்ப அழகா இருக்க...''

ஜோதி திடீரென்று முழுவேகத்துடன் அவன் மீது பாய்ந்தாள்.

தியாகுவின் மீது பாய்ந்த வேகத்தில் அவன் பின்னால் எறியப்பட்டான். கையிலிருந்த மெழுகுவர்த்தி எகிறி கீழே விழுந்து அணைந்தது. இருள் எங்கும் இருள். ஜோதி ஓடினாள். தம்மென்று சுவர் மீது மோதினாள். ஆனால் வலிக்கவில்லை. அந்த அறை சுவர்களில் உட்புறங்கள் எல்லாமே பஞ்சு வைத்து மெத் மெத்தென்று ஆக்கப் பட்டிருந்தது. தியாகு மண்டையை மோதிக் கொண்டால்

கூட அடிபட்டுக் கொள்ளக் கூடாது என்று கவனமாக இருக்கலாம்.

ஜோதி சுவரைப் பிடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள். பின்னாலேயே ஜோதி ஜோதி என்ற தியாகுவின் குரலும் மூச்சிறைப்பும் கேட்டு, ஜோதியின் அச்சமுற்ற கால்களுக்கு வேகம் கூடியது.

சட்டென்று ஒரு வெளிச்சம் அந்த அறையில் ஊடுருவுவதை கவனித்து அந்த பகுதிக்கு ஓடினாள். அங்கு ஒரு கண்ணாடி சுவரோடு பதிக்கப்பட்டிருந்தது. ஜோதிக்கு உடனே புரிந்தது. இந்த கண்ணாடிக்கு உட்புறம் இருந்துதான் தியாகு அன்றைக்கு அவளை கவனித்திருக்க வேண்டும். கண்ணாடியின் மறுபுறம் அவளுடைய புகைப்படங்கள் ஒட்டிய அந்த அறை. இந்த கண்ணாடியை உடைத்துக் கொண்டுதான் இந்த அறையை விட்டு தப்பித்துப் போக வேண்டும். ஜோதி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"ஜோதி உனக்கு என்ன வேணும்."

தியாகு மிகவும் நெருங்கி விட்டான். கண்ணாடிக்கு மறுபுறமிருந்து வெளிச்சம் அவன் முகத்தில் பட்டது.

ஜோதியின் உதடுகள் நடுங்கின.

"எனக்கு முதல்ல இந்த ரூமை விட்டுப் போகணும். நிஜமாகவே என்னை விரும்புனிங்கன்னா என்னை வெளியே போக விடுங்க."

''அவ்வளவுதானே ஜோதி. போகலாம். கொஞ்சம் நகர்ந்து நில்லு.''

தியாகு ஓடி வந்து, கண்ணாடியின் மீது பாய்ந்தான். சிலீர், என்று கண்ணாடி விரிசல் விட்டது. தியாகுவின் நெற்றியில் ஒரு ஓரம் கிழிந்து ரத்தம் வழியத் துவங்கியது.



தியாகு அந்த ரத்தத்தைக் கண்டு அஞ்சவில்லை. மீண்டும் ஓடி வந்து அந்த கண்ணாடி மீது பாய்ந்து மோதினான். இந்த முறை கண்ணாடி இன்னும் அதிகமாக விரிசல் விட்டது. அவன் முகத்தின் இன்னொரு பகுதியும் கிழிந்தது. மூன்றாவது முயற்சியில் கண்ணாடி நொறுங்கியது. பக்கத்து அறை தெளிவாகத் தெரிந்தது.

''ஜோதி, தப்பிச்சுப்போ...''

தியாகு எந்த உணர்ச்சியும் இல்லாமல் சொன்னான். கண்ணாடி உடைந்த பகுதி உயரமாக இருந்ததால் ஜோதியால் எம்பிப் பிடிக்க முடியவில்லை.

"நான் உன்னைத் தூக்கிவிடறேன்."

"வேண்டாம் என்னைத் தொடாதீங்க."

''வேற என்ன முயற்சி பண்ணினாலும் வெளியில போக முடியாது ஜோதி. இந்த கண்ணாடி கூட இப்ப நீ வருவேங்கறதாலதான் சூர்யா திறந்து வெச்சான். இல்லேன்னா என்னை நானே காயப்படுத்திக்குவேன்னு இன்னொரு தடுப்பு போட்டு இந்த கண்ணாடிய மறைச்சிருப்பான். போ... ஓடிப்போ."

ஜோதி பதறப் பதற... தியாகு அவளை சட்டென்று குனிந்து, முழங்கால்களைக் கெட்டியாகப் பற்றி, கட்டிப் பிடித்துத் தூக்கினான். அப்படியே உயர்த்திக் காட்ட, ஜோதி ஜன்னல் திறப்பு போல் இருந்த விளிம்பைப் பிடித்து தன்னை மேலே இழுத்துக் கொண்டாள். உடையாமல் ஒட்டியிருந்த ஒன்றிரண்டு கண்ணாடித் துண்டங்கள் அவள் உடலிலும் கோடுகள் கிழித்தன. தன்னை முழுவதுமாக இழுத்துக் கொண்டு, சற்று உயரத்திலிருந்த அந்த அறையின் தரையில் உருண்டு எழுந்தபோது... அதிர்ந்தாள்... அது அவள் புகைப்படங்கள் ஒட்டியிருந்த

அறை. அந்த அறைக் கதவு வெளியே தாளிடப்பட் டிருந்தது. தாளிட்டதும் அவள்தான்.

கீழே அடிபட்டுக் கிடந்த சூர்யா மெல்ல எழுந்தான். ''ஜோதி ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறே? நீ எங்க போனாலும், உலகத்தோட எந்த மூலைக்குப் போனாலும் மறுபடியும் உன்ன இழுத்துட்டு வந்து தியாகு கிட்டதான் கொடுக்கப் போறேன்.''

''நோ... நோ'' ஜோதி கத்தினாள். தபதபவென்று இங்கும் அங்கும் ஓடினாள் கதவை மோதினாள்.

''என்னை வெளியப் போகவிடு... வெளியப் போக விடு'' என்று கத்தினாள்.

சூர்யா தரையில் கையை ஊன்றி மெல்ல எழுந்தான். அவளால் தாக்குண்டபோது அவனுக்கு அதிகமான காயங்கள் ஏற்பட்டு ஒவ்வொரு அசைவிலும் அவன் முகத்திலும் வலி தெரிந்தது.

ஜோதி அங்கும் இங்குமாக ஓடி ஓடி மிரண்டாள், கால்கள் தளர்ந்து தரையில் அமர்ந்தாள்.

சூர்யா அவளை நெருங்கினான்.

ஜோதி சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். ''சரி, அப்படியே தியாகுவை நான் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தாலும் என் அப்பா - அம்மா அவங்க முன்னிலை யிலதான் பண்ணிப்பேன். தயவு செஞ்சி இப்ப என்னை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க. எங்கப்பாவோட வர்றேன்.''

சூர்யா சிரித்தான். ''கல்யாணத்தைப் பண்ணிட்டு ஜோடியா போய் அவங்க கால்ல விழுங்க எல்லாம் சரியா யிடும்.''



''நோ... நோ...''

சூர்யா குனிந்து அவள் கன்னத்தில் பளீரென்று அடித் தான். ''என்னடி துள்ளிட்டே இருக்கிற... சொன்னப் பேச்சை கேக்க மாட்டியா?''

அவன் அடித்த அடி, உச்சி மண்டை வரை ரீங்காரமாக சிமிட்டியது. சூர்யா அவளை அதே அறையின் இன் னொரு பகுதிக்கு இழுத்துப் போனான். அவள் புகைப் படங்கள் ஒட்டியிருந்த சுவரில் பதிந்து இருப்பதே தெரி யாமல் ஒரு கதவு பதிந்திருந்தது. அதில் தன்னிடமிருந்த சாவியைப் போட்டு, சூர்யா திறந்தான். வெளியே இழுத்துப் போனான். ஜோதி அவனிடமிருந்து எவ்வளவோ முயற்சி செய்தும், அவன் ஒற்றைக் கைப்பிடியிலிருந்து மீள அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஹாலுக்கு வந்ததும் ஜோதி கூண்டுக்குள் மாட்டிக் கொண்ட எலியைப் போல, அங்கும் இங்குமாக விழி களால் துழாவினாள். மேஜையின் ஒரு ஓரத்தில் பழங்கள். அவற்றுக்குப் பக்கத்தில் ஒரு சிறு கத்தி... ஜோதி அந்த மேஜையை நெருக்கமாக கடக்கும்போது சட்டென்று பாய்ந்து அந்த கத்தியை எடுத்தாள். சற்றும் யோசியாமல் சூர்யாவின் மீது பாய்ச்சிக் கிழித்தாள்.

அவளைப் பற்றியிருந்த சூர்யாவின் கை மிரண்டு விலகியது. பேய் பிடித்தவள் போல ஜோதி செயல் பட் டாள். முழங்கையால் அவன் முகத்தில் ஓங்கி அடித்தாள்.

சூர்யா அவளை எட்டிப் பிடிக்க முயற்சி செய்ய, கையில் கிடைத்த பாத்திரங்கள் சாமான்கள் என்று எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல்... ஒன்றன் பின் ஒன்றாக தூக்கி அடித்தாள். கிச்சன் கதவைத் திறந்து வெளியே பாய்ந்து தபதபவென்று ஓடி, ஜன்னலைத்

திறந்து வெளியே குதித்தாள். குளிர் காற்று அவள் மீது மோதியது.

ஓடி ஓடி அவள் உடல் முற்றிலும் களைத்திருந்தது. அவளின் உள் மனது தப்பிப்போ...' தப்பிப்போ என்று ஓலமிட்டது.

ஜோதி ஓடினாள். அடர்ந்திருந்த மரங்கள், சரிவான பாதை, உருட்டிவிடும் கற்கள் யாவற்றையும் மிதித்து ஜோதி ஓடினாள். எங்கே போகிறோம் என்பது தெரியாமல் அந்த பைத்தியக்கார வீட்டிலிருந்து தப்பித்தால் போது மென்றே ஒரே குறிக்கோளுடன் ஓடினாள்.

மூச்சிரைத்தது. புடவை ஆங்காங்கே கிழிந்தது. முதுகுத் தண்டில் அத்தனை குளிரிலும் வியர்வை ஓடையாக இறங்கியது.

ஒரு பெரிய பாறையின் பின்னே திரும்புவதற்காக ஜோதி வேகத்தைக் குறைத்தபோது... பின்னாலிருந்து அவள் தோளில் கை விழுந்தது. திரும்பினாள்.

சூர்யா! உடலில் ஆங்காங்கே ரத்தக் கீறல்கள். ஆனால் முகத்தில் ஆத்திரம், கோபம், அடக்க முடியாத வேகம், ஜோதியின் கூந்தலைப் பற்றிக் குலுக்கினான்.

''எங்கேயும் தப்பிச்சுப் போக முடியாது. வாடி என் கூட'' என்று கூந்தலைப் பிடித்து இழுத்தான்.

ஜோதியின் உடலில் ஒவ்வொரு அங்குலமும் வலியில் அலறியது.

அவனிடமிருந்து திமிற முடியாமல் ஜோதி சற்று இழுக் கப்பட்டபோது... சட்டென்று சூர்யாவின் பிடியில் இறுக்கம் தளர்ந்தது. அவளை விறைத்த விழிகளால் பார்த்து அதிர்ந்துபோன சூர்யா, அப்படியே திரும்பிப் பார்த்தான்.



சூர்யாவின் பின் மண்டையில் ஓங்கி மரக்கிளையை இறக்கியிருந்த தியாகு வெறி நாய் போல... பெருமூச்சு களை சிதறிக் கொண்டு அங்கே நின்றிருந்தான்.

சூர்யா அப்படியே விழுந்து சுருண்டான்.

''ஜோதி, நீ வா உன்ன பத்திரமா உங்க வீட்ல நான் கொண்டு போய் சேர்க்கிறேன்'' தியாகு இப்படி சொன்ன தும் ஜோதி அவனுடைய முகத்தைப் பார்த்து அப்படியே அலறிப் பின் வாங்கினாள். சூர்யாவின் முகம் போல், தியாகுவின் முகத்திலும், மார்பிலும், கரத்திலும் அங் கங்கே ரத்தக் கோடுகள்.

சுருண்டு விழுந்த சூர்யாவின் பின் மண்டையிலிருந்து ரத்தம் வேகமாக கசிந்தது. அவனை ஓங்கித் தாக்கிய மரக்கிளை முறிந்து கீழே கிடந்தது.

''சூர்யா... சூர்யாவை என்ன பண்ணினீங்க?''

''ஜோதி... நீ வேண்டாம்... வேண்டாம்னு சொல்லச் சொல்ல உன்ன வற்புறுத்தினது எனக்குப் பிடிக்கல. உன்ன காப்பாத்தறதுக்காகத்தான் அவனை அடிச்சேன். வா... நானே கொண்டு போய் விட்டுர்றேன்'' தியாகு அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கினான். அவள் பற்றிக் கொள்ள தன் கையை நீட்டினான்.

''வேண்டாம்... வேண்டாம் கிட்ட வராதீங்க.'' ஜோதி பயந்து இரண்டு அடி பின் வாங்க, சரேலென்று பூமியின் பிடிப்பு இல்லாமல் கால் நழுவியது.

அப்பொழுதுதான் அந்த சரிவின் விளிம்பில் வந்து விட்டதை ஜோதி உணர்ந்தாள். உணரும் முன் சரிவைத் தாண்டி அவள் சரிவில் நழுவத் துவங்க...

தியாகு பாய்ந்து அவளைப் பிடித்தான். அவள் அவன் கையின் பலத்தைப் பிடித்துக் கொண்டு விளிம்பில் தொங்கினாள்.

கீழே முப்பதடி ஆழத்தில்... கொடூரமான பாறைகள். விழுந்தால் மண்டை சிதறிவிடும். அபாயகரமாக ஜோதி தொங்கினாள். மிக நெருக்கத்தில் தியாகுவின் முகம். ரத்தம் கசியும் முகம். சூர்யாவை ஓங்கியடித்த வெறி இன்னும் கண்களில் தெரியும் முகம். ஜோதி உச்ச பயத் தில் அப்படியே மயக்கமானாள்.

தியாகு ''ஜோதி... ஜோதி கண்ணைத் திற'' என்று கத்திக் கொண்டிருந்தான்.

எங்கோ வெகு தூரத்திலிருந்து அவள் செவிப்பறை களில் அந்தக் குரல் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண் டிருந்தது. தியாகு அவளை அப்படியே மேலே இழுத்துப் போட்டான்.

ஜோதி முகத்தில் சுளீரென்று நீர் அடித்து, அவளுக்கு விழிப்பு வந்தபோது மேலே ஆகாயம். அடர்ந்திருக்கும் மேகங்கள். நிலமை புரிந்து அவள் சட்டென்று எழுந்து உட்கார்ந்தபோது சூர்யாவின் அடிபட்ட மண்டையில் துணியைச் சுற்றி கட்டுப் போட்டுக் கொண்டு தியாகு.

ஜோதி அப்படியே எழுந்து உட்கார்ந்தாள். அவ ளுடைய அசைவால் கவரப்பட்டு தியாகு திரும்பினான்.

''ஜோதி நான் பயந்தே போயிட்டேன். உனக்கு ஒண்ணுமில்லையே?''

உதடுகளை ஈரம் பண்ணிக் கொண்டாள்.

''ஒண்ணுமில்ல. சூர்யாவுக்கு என்னாச்சி?'' என்றாள்.

''பலமா அடிச்சிட்டேன்'' சொல்லும்போதே தியாகு வின் குரல் நடுங்கியது. கண்களில் நீர் திரண்டது. ''எனக்காக... எனக்காகன்னு எல்லாம் பண்ணினான். ஆனா அன்பைக் கொடுத்து அன்பை வாங்கணும். கத்தியைக்காட்டி வர்றதில்ல காதல்னு இந்த முட்டாப் பயலுக்குப் புரியலை. நான் பைத்தியமாத்தான் இருந் தேன். வெறியனாத்தான் இருந்தேன். ஆனா உன்னுடைய முகத்தைப் பாத்ததும் உன்னோட குரலைக் கேட்டதும்... நான் சமாதானம் ஆயிட்டேன். சூர்யா கிட்ட நான் நிதானமா பேசணும்னு நெனைச்சபோதெல்லாம் அவன் பிடி கொடுக்கலை. ஒரு சமயத்துல என்னோட ரூமுக் குள்ள மெழுகுவர்த்தியோ, தீப்பெட்டியோ எலக்ட்ரிக் ஸ்விச்சோ இருந்ததில்லை. ஏதாவது பண்ணி நான் காயப்படுத்திக்குவேன்னு சூர்யாவுக்கு பயம் இருந்தது. இப்ப நான் தெளிவாயிட்டதை தெரிஞ்சதுக்கப்புறம்தான் தைரியம் வந்து மெழுகுவர்த்தி, தீப்பெட்டி எல்லாம் என்கிட்ட கொடுத்தான்.

''நேத்தைக்கு நீ வந்து பாத்திருந்தேனா முரட்டு தாடி யும், மீசையும், சிக்குப் பிடிச்ச தலையுமா நான் இருந் திருப்பேன். ஒவ்வொரு வாரக் கடைசியிலும் சூர்யாதான் என்னை வந்து சுத்தம் பண்ணுவான். இன்னைக்கு நீ வரப் போற. நீ வரும்போது நான் அழகா இருக்கணும்ங்கறதுக் காக காலைல ஷேவ் பண்ணி குளிப்பாட்டி விட்டான். நல்ல டிரெஸ் போட்டு விட்டான். எல்லாம் என் மேல இருக்கிற ஆசைலதான் செய்யறான். ஆனா பைத்தியக் காரன். கட்டாயப்படுத்தி காதல் வராதுன்னு புரிஞ்சுக் கலை. நீ காதலிச்சது ஆசைப்பட்டது எல்லாம் சூரியாவை தான். அதெப்படி காதலை தூக்கிப் பரிசா கொடுக்க முடியும்? ஒரு பொண்ணோட இதயத்தை பிச்சை கேட்கக் கூடாது. முகமூடி போட்டு கொள்ளையடிச்சிட்டு வர முடியாது. நட்பு பெரிசுன்னு நெனைச்சதால சூர்யாவால இதையெல்லாம் புரிஞ்சுக்க முடியல...''

இந்த தியாகுவா பைத்தியமாக, நடந்து கொள்பவன்? முரட்டு சுபாவம் கொண்டவன்!

ஜோதி அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள். ஆனால் அதே சமயம் இக்கட்டான சூழ்நிலையில் அழுகை பீறிட, அப்படியே உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டாள்.

''ஜோதி, வா போகலாம் சூர்யாவை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போகணும். டாக்டர் அவனை கவனிச்சாகணும். இப்படியே ரத்தம் வெளியப் போயிட்டிருந்தா... இவன் சீக்கிரமே செத்துப் போயிடுவான். எனக்கும் இல்லாம உனக்கும் இல்லாம வீணாப் போயிடுவான். உனக்கு கார் ஓட்டத் தெரியுமா ஜோதி?''

அழுது கொண்டே ''தெரியும்'' என்று தலையை இடதும், வலதுமாக அசைத்தாள்.

''எனக்கும் காரோட்டத் தெரியும் ஜோதி. ஆனா காரைத் தொட்டு ரொம்ப நாளாச்சி. இப்ப சூர்யாவை காப்பாத்தியாகணும். வா'' தியாகு அப்படியே சூர்யாவை அள்ளி தோளில் போட்டுக் கொண்டான்.

ஜோதி சற்று தயங்கிவிட்டு, எழுந்து கொண்டாள். சூர்யாவை தோளில் போட்டுக் கொண்டு தியாகு சரிவில் இறங்க... இறங்க... சின்ன இடைவெளி கொடுத்து ஜோதியும் இறங்கினாள். காரின் அருகே வந்ததும் கார் கதவைத் திறந்தான் தியாகு. பின் கதவைத் திறந்து சூர்யாவை அங்கே கிடத்தி, மறு கதவைத் திறந்து உள்ளே அமர்ந்து சூர்யாவின் தலையை பின் மடியில் பொருத்திக் கொண்டான். கார் சாவியை ஜோதியிடம் தூக்கிப் போட்டான்.

''பயப்படாத ஜோதி. உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன். உனக்கும் சூர்யாதான். நான் உன்னை ஆசைப்பட்டது உண்மைதான். ஆனா இன்னைக்குத் தெளி வாயிட்டேன். சூர்யா என்கிட்ட கொண்டு வந்து கொடுத்த



ஜோதியை, மறுபடி அவனுக்குப் பரிசா தரப் போறேன். எடு வண்டியை எடு.''

ஜோதி முன் இருக்கையில் ஏறி அமர்ந்தாள். அழுகை பீறிட, சாவியை நுழைத்து காரைக் கிளப்பினாள்.

## 35

மருத்துவமனையின் வெளியே இருந்த அந்த சிறிய பிள்ளையார் சன்னதியின் வாசலில் அவர்கள் சிறு கூட்டமாக நின்றிருந்தார்கள். ஜோதியின் அப்பா - அம்மா, பிரபு - தியாகுவின் அம்மா - தங்கை பானு.

கோவில்மணி ஒலித்தது. கற்பூரத் தட்டு உயர்ந்து விநாயகரின் கறுத்த மேனியை வெளிச்சமிட்டுக் காட்டியது.

''அக்கா எங்கம்மா?'' பிரபு அம்மாவின் புடவையைப் பிடித்து இழுத்துக் கேட்டான்.

''உள்ளதான் இருக்கா வருவா'' அம்மா சமாதானமாகச் சொன்னாள்.

ஆஸ்பத்திரியின் தனி அறை.

கட்டிலில், மண்டையில் போடப்பட்ட கனத்த கட்டுடன் சூர்யா கண்களை மூடிப்படுத்திருந்தான். அவனது வலது கையை தனது கையில் வைத்து பொத்தியிருந்தாள் ஜோதி. அவள் கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் இறங்கிக் கொண்டிருந்தது.

''சூர்யா நீங்க எப்ப கண்ணைத் திறப்பிங்கன்னு தெரியாது. கண்ணைத் திறந்ததும் மறுபடியும் பழைய வேகத்தோட நீ தியாகுவுக்குத்தான் உரியவ அப்படின்னு சொல்லி முரண்டு பிடிப்பிங்களான்னு தெரியாது. ஆனா நிச்சயமா முன்னால இருந்ததைவிட, இப்ப எனக்கு

தைரியம் ஜாஸ்தி. ஏன்னா என் பக்கம் பேசறதுக்கு தியாகு. இருக்காரு. தியாகு நல்ல மனிதர்தான் நல்ல நண்பர்தான். ஆனா அவசரப்பட்டு உயிரைக் கொடுக்கறதுக்கு நெனைச்ச ஒரு கோழையா இருந்துட்டாரு. அந்த கோழைக்குள்ள ஒரு தைரியம் வர்றதுக்கும், உடம்புல பலம் வர்றதுக்கும், பூட்டிக்கெடந்த ரூம்ல அவருக்குக் கெடைச்ச அனுபவம் உதவியா இருந்திருக்கு. நீங்க என்ன பிடிவாதம் பிடிச் சாலும் என்னை உதறி எறிஞ்சாலும் நான் மறுபடி மறுபடி உங்களைத்தான் சுத்தி வருவேன். உங்க மனசை மாத்தி என் பக்கம் கொண்டு வர்ற வரைக்கும் நான் ஓயமாட்டேன்.''

சூர்யாவிடம் எந்த அசைவும் இல்லை. ஆனால் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிவிட்டதாக டாக்டர்கள் சொல்லியிருந்தனர். பக்கத்துக் கட்டிலில் தன் காயங் களுக்காக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த தியாகு மெல்ல கட்டிலில் எழுந்து அமர்ந்தான்.

''ஜோதி.''

''ம்.''

''என்னை மன்னிச்சிடு. என்னாலதான் உனக்கு இவ்வளவு சிக்கல். சூர்யா நல்லவன். எனக்காக உன்கிட்ட முரட்டுத்தனமா நடந்திட்டிருக்கான். அதெல்லாம் மன சுல வெச்சிக்காத. அவன் உம்மேல உயிரையே வெச் சிருக்கான். உங்க ரெண்டு பேரோட வாழ்க்கைக்குள்ள நிச்சயம் நான் குறுக்கே வரமாட்டேன்.''

''தெரியும் தியாகு.''

தியாகு நிறைவான புன்னகையுடன் திரும்பிப் படுத்தான்.

ஜோதி தன் கைகளுக்குள் பொத்தியிருந்த சூர்யாவின் கையை தன் உதடுவரை உயர்த்தி, அவன் கையில் முத்தமிட்டாள்.

# இமைக்காத இமைகள்

**இறுதிக் காட்சி பற்றி இங்கேயே ஒரு முன்னோட்டம்:**

சர்ச்சில் பிரார்த்தனை முடிந்து எல்லோரும் கலைந்து போன பின் இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பின்பகுதிக்கு நடந்தார்.

'கன்ஃபெஷன் பாக்ஸ்' என்று சொல்லக்கூடிய 'பாவ மன்னிப்பு' கோரும் பகுதியை சீரிய நடையில் அடைந் தார்.

மூங்கில் கதவைத் திறந்து பாவமன்னிப்புக் கோரு பவர்கள் அமரக்கூடிய நாற்காலியில் அமர்ந்து கதவை மூடிக் கொண்டார். காத்திருந்தார்.

பிரம்புகளால் நெய்யப்பட்ட தடுப்புச் சுவரின் மறு பக்கம் நீண்ட வெள்ளை அங்கியுடன் பாதிரியார் வந்து அமர்வது அந்த இடுக்குகள் வழியே தெரிந்தது.

பால்ராஜ் தொண்டையை செருமிக் கொண்டார்.

''ஃபாதர்... இன்று நான் தெரிந்தே செய்யப்போகும் ஒரு பாவத்திற்கு முன்கூட்டியே கர்த்தரின் பெயரால் உங்கள் சன்னிதியில் மன்னிப்புக் கோரி அமர்ந்திருக்கிறேன்...'' என்றார்.

''தொழில்ரீதியாக ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன் நான். பொய்கள் எதுவும் சொல்லக்கூடாது என்பதுதான் என் தொழில் கட்டளை. ஆனால் ஒரு தீய சக்தியை ஒடுக்க வேண்டி, ஒரு நல்ல உயிரைக் காப்பாற்ற வேண்டி இன்று நீதிமன்றத்தில் நான் ஒரு பொய் சொல்லவிருக்கிறேன். கர்த்தரின் பெயரால் என் பாவத்தை மன்னியுங்கள்...''

பால்ராஜின் குரலில் எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இருக்கவில்லை.

இனி -

## 1

ஹெல்மெட் முகத்தை மூடியிருந்தது. அதனால் நெஞ்சில் மோதிய குளிர்காற்று முகத்தில் மோதவில்லை. கறுப்பு ஜெர்கின் நெஞ்சை மூடியிருந்தது.

அதனால், நெஞ்சில் மோதிய குளிர்காற்று மார்பில் உறைக்கவில்லை.

திருப்பத்தில் அவன் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்தான். இன்ஜினை அணைத்தான்.

சூரியன் ஓயும் நேரம். அந்தத் தெருவின் மீது, மரக் கிளைகள் இருட்டைப் போர்த்தியிருந்தன.

மோட்டார் சைக்கிளை ஒரு மரத்தடியில் சாய்த்து நிறுத்தினான். ஹெல்மெட்டைக் கழற்றாமல், பத்தடி நடந்தான்.



கேட்களைத் திறந்தான்.

புதிதாய் எண்ணெய் விடப்பட்ட கேட்கள் ஊமையாக அவனுக்கு வழி விட்டன.

சிமெண்ட் பாதையில் முதலடி வைத்தான்.

இரு கைகளையும் கிளவுஸ்கள் மூடியிருக்கின்றனவா என்று சரிபார்த்துக் கொண்டான்.

ஜெர்கின் ஜிப் விலக்கி உள்ளேயிருந்து அதை எடுத்தான்.

நீள்பிறை வடிவத்தில் மிகக் கூரான பற்களுடன் பளபளக்கும் கத்தி!

சின்ன யோசனையுடன் நின்றான். திரும்பினான்.

காம்பவுண்டு சுவரில் இருந்த அழைப்பு மணி பொத்தானை அழுத்தினான்.

வீட்டிற்குள் சங்கீதமாய் அழைப்புமணி ஒலித்தது.

சட்டென சிமெண்ட் பாதையிலிருந்து நகர்ந்து ஒரு மரத்தின் பின்னே மறைந்து நின்றான்.

அங்கிருந்து பதினைந்தடி தூரத்தில் வீட்டின் முகப்பு தெரிந்தது.

ரோஸ்வுட் நிற வேலைப்பாட்டுடன் அமைந்திருந்த கதவு திறந்து அவள் நின்றாள்.

வீட்டினுள் விளக்கு போடப்பட்டு விட்டதால், அந்த வெளிச்சத்தில் அவள் நிழல் தீற்றலாகத் தெரிந்தாள்.

ஆனாலும் அது ஹரிதா தான் என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தது.

அவனை விட வேறு யாருக்கு அவளைப் பற்றி தெரிந்திருக்க முடியும்?

அழைப்பு மணி ஒலித்தவர் எங்கே என்று அவள் கண்கள் தேடுவதை அவன் கவனித்தான்.

ஒரு வேளை கேட்டுக்கு வெளியே நிற்கிறார்களோ என்ற சந்தேகத்தோடு அவள் கதவுக்கு வெளியே அடியெடுத்து வைத்தாள்.

அவளை இப்போது அவனால் நன்றாகப் பார்க்க முடிந்தது.

அவள் கழுத்திலிருந்து கணுக்கால் வரை மூடும்படி ஒரு இரவுடை அணிந்திருந்தாள். அதன் சன்னமான துணியில் பின்னாலிருந்து வெளிச்சம் விழுந்ததால், அவளுடைய உடல் வளைவுகள் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன.

அவனுக்கு மற்ற வளைவுகளைப் பற்றி அக்கறையில்லை. ஆர்வமும் இல்லை. ஒரே ஒரு வளைவில்தான் அவன் கவனம் முழுவதும் கூர்ப்பட்டிருந்தது.

அவளுடைய கழுத்து!

பல இரவுகளில் அவன் முகர்ந்து பார்த்த கழுத்து, வெப்பமான உள்ளங்கையை வைத்து மிருதுவாக அழுத்திய கழுத்து. உதடுகளால் முகவாயிலிருந்து முத்தமாக கோடிழுத்து உதடுகளைப் பதித்து ரசித்த கழுத்து!

இப்போது அந்தக் கழுத்தை அவனுடைய வீச்சுக்கத்தி பிளக்கப் போகிறது. பொன்னிறம் ததும்பும் அந்த மேனியில் சிவப்பு ரத்தம் கறையிடப்போகிறது!

கதவிலிருந்து வெளிவந்து அவள் சிறு படிகளில் இறங்கினாள்.

மொத்தம் ஐந்தே படிகள் அதற்குப் பின் சிமெண்ட் பாதை. அதன் பின் கேட்கள்.

அவள் படிகளில் இறங்கும் போது அவன் செயல்பட்டான். வெகு சரேலென மரத்தின் பின்னிருந்து குதித்து வெளிப்பட்டான். ஒரே எட்டில் அவளை அடைந்து விட்டான்.



காற்றில் அவன் பாய்ந்த ஒலியிலிருந்தோ, அல்லது உள்ளுணர்வு உந்துதலிலோ ஹரிதா மிகக் கடைசி தருணத்தில் திரும்பி விட்டாள்.

ஹெல்மெட் அணிந்த ஒரு ஆளை வெகு திடீரென்று தனக்குப் பின்னே வெகு அருகாமையில் பார்த்ததும், அவள் இதயம் ஒரு கணம் நின்று போனது. அவளையறியாமலேயே அலறுவதற்காக வாய் திறந்தது.

அவன் பின்புறத்திலிருந்து தாக்கினான்.

இடது கை அவள் வாயை மொத்தமாகப் பொத்தியது. பொத்திய முகத்தைப் பின்னிழுத்து. அந்த செயலினால், ஹரிதாவின் கழுத்து (சிறு வளைவுடன்) அண்ணாந்து நின்றது.

அவனுடைய முழங்கால் உயர்ந்து அவளுடைய கீழ் முதுகில் மோதித் தள்ளியது.

காலால் தள்ளி, கையால் இழுத்ததும், ஹரிதா அவன் எதிர்பார்த்தபடியே முழங்கால்கள் தரையில் மோத சரிந்தாள்.

அவன் வேகமாக அவள் பின்னே மண்டியிட்டு அமர்ந்து, கத்தியை அவள் கழுத்தில் வைத்து இழுத்தான்.

சர்ர்ரக்!

அந்த கணம் அவளை அதீத வலி தாக்கியிருக்க வேண்டும்.

வெண்ணெய்க்குள் செலுத்தியது போல் கத்தி வழுக்கிக் கொண்டு உள்ளே போனது. உணவுக் குழாய் மூச்சுக்குழாய், ஒலி உருவாகும் தொண்டை எல்லாமே அந்தக் கத்தியில் முடிவுரை எழுதிக் கொண்டிருந்த அந்த தருணத்தில் -

''ஏ...ய்!'' என்ற ஒலி ஒன்று அவனைத் தாக்கியது. அடுத்த கணம், அவன் பின்னிருந்து இழுக்கப்பட்டான்.

அவனுடைய கவனம் முழு முற்றிலுமாக ஹரிதாவின் கழுத்தின் மீது நிலைத்திருந்ததால், பின்னாலிருந்து தான் இழுக்கப்படக்கூடும் என்று அவன் சற்றும் எதிர்பார்த் திருக்கவில்லை.

இழுத்த வேகத்தில், ஹரிதாவின் கழுத்தை சீவிக் கொண் டிருந்த கத்தி அவள் முகவாயைப் பிடித்து நிமிர்த்தியிருந்த இடது கையில் முத்தமிட்டு விலகியது.

சுரீர் என்ற வலி அந்த இடது கையிலிருந்து மூளையின் உச்சி வரை பாய்ந்தது. கத்தி அவன் கையை காயப்படுத்தி விட்டது!

இழுக்கப்பட்டதிலேயே அவன் அதீத கோபம் கொண்டிருந்தான். கத்தி கையைக் காயப்படுத்தியதும், கோபம் பன்மடங்கானது.

ஹரிதாவால் இனி ஆபத்தில்லை.

போராடுவதற்காக உயர்ந்திருந்த அவள் கைகளும், தரையில் மோதிய கால்களும் செயலற்று நின்று விட் டிருந்தன.

அதனால் அவன் ஹரிதாவை சரியவிட்டு திரும்பினான்.

தன்னை இழுத்தவனை ஹெல்மெட் வைஸரின் கண் ணாடி வழியே கவனித்தான்.

இழுத்தவன் இளைஞன். முப்பது வயதுக்குள் இருந் தான். உயர்ரக பிரேமில் வட்டக் கண்ணாடிகள் அணிந் திருந்தான். ஒரு விற்பனைப் பிரதிநிதி போல கச்சிதமான உடைகள் அணிந்திருந்தான்.

இப்போது அவன் கண்களில் பீதி தெரிந்தது.



ரத்தம் சொட்டும் கத்தியைப் பார்த்தா அல்லது கத்தியை வைத்திருப்பவனது முகத்தைப் பார்க்க முடியாததாலா என்று புரியவில்லை.

முட்டாள்! தேவையில்லாமல் குறுக்கிட்டு விட்டான்.

நடந்து முடிந்த காட்சிக்கு வலிய வந்து சாட்சியாகி விட்டான். இவனை விட்டுவிட்டுப் போக முடியாது.

ஹெல்மெட் அணிந்தவன் கத்தியை காற்றில் வீசிக் காட்டினான்.

சர்ரக்.

இளைஞன் ஓரடி பின்னால் நகர்ந்தான்.

ஆனால் புறமுதுகிட்டு ஓடவில்லை. அவனுடைய உடல் இடுப்பருகில் வளைந்தது. கைகளும் கால்களும் முன்னும், பின்னுமாக இடம் பெயர்ந்து ஒரு கராத்தே வெட்டைக் குறிக்கும் வகையில் நின்றன.

ஹெல்மெட் அணிந்தவன் திடுக்கிட்டு நின்றான்.

கராத்தே சண்டையை எதிர்கொள்ள அவனுக்குத் தெரியாது. சற்று தாமதித்தாலும், நிலைமை அவன் கட்டுப்பாட்டிலிருந்து கைமீறி விடும் என்று புரிந்ததும், செயல்பட்டான்.

தலையைக் குனிந்து நேரே எதிராளியின் மீது பாய்ந் தான். ஹெல்மெட் தலை எதிரிலிருந்த இளைஞனின் மார்பில் பீரங்கிக் குண்டு போல் மோதியது.

அவன் கராத்தே வெட்டை இறக்க, கத்தி அவன் கையை சீவியது.

இளைஞன் பதறி நின்றான். ரத்தம் சொட்டும் கையை நம்பமுடியாமல் அவன் பார்க்க, ஹெல்மெட் அவன் மீது மீண்டும் பாய்ந்தான்.

இளைஞன் கத்தியைத் தடுக்க முனைந்து பிடித்து இழுத்ததில் இவன் இடது கையிலிருந்து கிளவுஸ் அவன் கைக்குப் போய்விட்டது.

இளைஞன் அந்த கிளவுஸை வீசியெறிந்து விட்டு, மீண்டும் தாக்குதலில் ஈடுபட முனைய, இப்போது அவன் வேகம் குறைந்திருந்தது.

கத்தி அவனை ஒன்று, இரண்டு, மூன்று என்று பற்பல இடங்களில் குத்திக் கிழித்தது.

இளைஞன் தடுமாறிப் பின்னால் சரிந்தான்.

படிகளில் குப்பையாக விழுந்தான்.

ஹெல்மெட் அணிந்தவனின் கைகள் இப்போது நடுங்கிக் கொண்டிருந்தன.

கால்களும் லொடலொடவென்று ஆடின.

இந்த இரண்டாவது உயிரை அவன் தீர்க்கத் திட்ட மிட்டிருக்கவில்லை.

இந்த இளைஞன் யார்? எங்கிருந்து திடீரென்று முளைத்தான்? தெரியவில்லை!

யோசிக்கக் கூட நேரமில்லை.

உடனே - வெகு உடனே அவன் திரும்பியாக வேண்டும்.

இடதுகையில் கத்தி கீறிய இடத்தில் ரத்தம் இன்னும் கசிந்து கொண்டிருந்தது.

பியக்கப்பட்ட கையுறை எங்கே?

பார்வையை வீசிப் பார்த்தான்.

ஐயோ!

இவன் கைக்கு எட்டாத ஸன்ஷேடில், ஜன்னலின் திறந்த இமை போல் இருந்த மழை காப்பின் மீது அது விழுந் திருந்தது. அதன் ஒரு விரல் மட்டும் வெளியே தொய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது.



அவன் அதே குறியாகப் பார்த்திராவிட்டால், அது கண்ணில் பட்டிருக்காது.

அதை மீட்க முடியுமா?

தெரு முனையில் ஒரு கார் திரும்பும் ஒலி கேட்டதும் அவன் உஷாரானான். சரேலென நின்றிருந்த இடத்தி லிருந்து பாய்ந்து மரத்தின் பின்னே போனான். கைக் குட்டை எடுத்து தன் இடது கையில் சுற்றிக்கொண்டான்.

கார் நிற்காமல் காம்பவுண்டு கேட்டைக் கடந்து அடுத்த தெருவிற்குப் போனது.

ரிஸ்க் எடுக்க அவன் விரும்பவில்லை.

கேட்டை ஒலியின்றி திறந்து பைக் நிறுத்தியிருந்த இடத்திற்கு விரைவாக அவன் நடந்ததை அந்த மாலை யிருள் நேரத்தில் யாரும் கவனிக்கவில்லை.

## 2

அந்த கறுப்பு நிற பென்ஸ் கார் நீளமாய் இருந்தது.

உருட்டிவிட்ட பந்து போல நழுவிக் கொண்டு வந்து போர்டிகோவில் நின்றது.

கார்ச சக்கரங்கள் முழுமையாக நிறுத்தத்திற்கு வரும் முன்னரே காரின் மூன்று கதவுகள் திறந்து, மூவர் வெளியே இறங்கினர். விரைப்பாக நின்றனர்.

திறந்து பிடிக்கப்பட்ட பின் கதவு வழியே தாராசங்கர் இறங்கினான்.

தாராசங்கர். நாற்பத்தியாறு வயது. நிழலான நிறத்தில் சதுரமான முகம். அடர்ந்த புருவங்கள். பெரிய இமை களுக்குக் கீழ் வலிமையான கண்கள். உயர்ந்திருந்த தாடை எலும்புகள். வெள்ளையும், கறுப்புமாக குண்டூசி

முனையால் புள்ளிகள் வைத்தது போன்ற நரை கலந்த மீசை.

தாராசங்கரின் மார்புயரத்திற்குத் தான் காரின் உச்சி இருந்தது. அகலமான மார்பு. வலுவான தோள்கள்.

செம்பட்டை நிறத்தில் சட்டை, அதே நிறத்தில் பேண்ட். பெல்ட் பக்கிளில் தங்கம் ஜொலித்தது. இடது மணிக்கட்டில் தொங்கிய வாட்ச் - மறுபடியும் தங்கம்.

தாராசங்கர் ஒரு கணம் நின்று தன் ராஜ்யத்தை பார்வையிடுவது போல் கண்களை நாற்புறம் சுழற்றினார்.

தாராசங்கரைப் பற்றி பணம் வைத்திருந்தவர்கள் அறிவார்கள். அரசியல்வாதிகள் அறிவார்கள். அடியாட்கள் அறிவார்கள். பாதாள உலகத்தில் புழங்கும் சட்டத்துக்கு எதிரானவர்கள் அறிவார்கள்.

போலீஸ் அறியும், சி.பி.ஐ. அறியும், தீவிரவாதக் குழுக்கள் அறியும்.

தாராசங்கர் ஒரு பொன் சிலந்தி, வலையைப் பின்னி விட்டு அதன் நடு மையத்தில் அமர்ந்து காத்திருக்கும் செல்வச் சிலந்தி. அந்த வலையில் தப்பித்தவறி அப்பாவி பிஸினஸ் ஈக்கள் அமர்ந்தால், ஒரே வீச்சில் அவருடைய செல்வ சேமிப்பில் சேர்த்துக் கொள்ளும் சிலந்தி.

தாராசங்கரின் அசைவிற்காக அவருடைய தனிப்பட்ட காவலர்கள் மூவரும் காத்திருந்தார்கள்.

அவர் நடக்கத் துவங்கியதும், அவரிடமிருந்து சமமான இடைவெளி விட்டு மூவரும் மூன்று திக்குகளில் அவரை வட்டமிட்டபடி அவருடன் முன்னேறினார்கள்.

அவர்களுடைய பாதுகாப்பு வளையத்தை மீறி தாரா சங்கரை அணுகுவது சூரியனை வெறும் விழியால் பார்ப் பதைப் போல் சுலபமானது.



தாராசங்கர் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தார்.

பாதுகாவலர்கள் தொடர, அவருடைய பிரத்யேகமான லிப்டில் ஏறினார்.

அதன் இயக்கும் போர்டில் கால்குலேட்டர் போல் இருந்த அமைப்பில் தனது சங்கேத எண்களை அழுத்தினார்.

லிப்ட் மூடியது. மேலே எழும்பியது.

மூன்றாவது மாடியில் அவருடைய பிரத்யேக அறைக்குள் அவரைக் கொண்டு சேர்பித்தது.

லிப்டிலிருந்து அவர் மட்டும் வெளிப்பட்டார்.

பாதுகாவலர்கள் கூட அவருடன் அந்த அறைக்குள் அனுமதிக்கப்பட்டதில்லை.

அந்த பிரத்யேக லிப்டைத் தவிர வேறு எந்த வழி யிலும் அவருடைய அறைக்குள் நுழைய வழி இல்லை.

லிப்டை இயக்க அவரைத் தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை.

அவர் வெளியேறியதும் லிப்ட் கதவு மூடியது. பாது காவலர்களைக் கீழ்த்தளத்தில் கொண்டு போய் சேர்த்தது.

தாராசங்கர் தன் இருக்கைக்கு நடந்தார்.

அந்த அறையை அவர் நுணுக்கமாக ரசித்து ரசித்து அமைத்திருந்தார்.

ஒலியெழுப்பாத ஏர்கண்டிஷனர் காற்றை இருபத்து நான்கு மணி நேரமும் குளிராக வைத்திருந்தது.

ஏழு டெலிவிஷன்களில் அந்த கட்டிடத்தின் வெவ் வேறு பகுதிகளின் இயக்கங்களை உட்கார்ந்த இடத்தி லிருந்து பார்க்க முடிந்தது.

தாராசங்கர் தன் சுழல் நாற்காலியில் அமர்ந்து சின்னத் திரைகளைப் பார்வையிட்டார்.

கீழ்த்தளத்தில் கிளப்பில் ஆட்கள் மும்முரமாயிருந் தார்கள். பார் பகுதியில் பீரும், மதுவும் பரபரப்பாக வியா பாரம் ஆகிக் கொண்டிருந்தது. பின்னணியில் ஒரு சதுர மேடையில் குறைந்த ஆடைகளுடன் இரண்டு பெண் கள் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

ஷீலாவிற்கு தொப்பை விழுந்து விட்டது. அவளை விலக்கி விட்டு, இளமையாய் வேறொருத்தியை டான் ஸிற்கு புக் பண்ண வேண்டும் என்று தாராசங்கர் நினைத் துக் கொண்டார்.

இன்னொரு சின்னத் திரையில் கிளப்பின் இன்னொரு பகுதியில் சிகரெட் புகையின் அடர்த்தியில், உறுப்பினர் கள் டோக்கன் வைத்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குத் தேவையானதை உடனுக்குடன் வழங்குவதற்கு தயாராய் சிப்பந்திகள் காத்திருந்தார்கள்.

அடுத்த திரைக்கு தாராசங்கரின் பார்வை நகர்ந்தது.

மஸாஜ் கிளப்!

மஞ்சள் நிற வெளிச்சத்தில் கவர்ச்சி மிகுந்த பெண் ஊழியர்கள் மசாஜ் விளையாட்டில் கிளப் உறுப்பினர்களை சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மஸாஜ் கிளப் மூலம் கிடைக்கும் வருவாய்தான் தாராசங்கரின் வருவாய்களிலேயே முதன்மையானது என்று அவருக்குத் தெரியும்.

இது தவிர இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைக் கூடம், கம்ப்யூட்டர் பயிலகம் என்று தாராசங் கர் வெவ்வேறு பகுதிகளின் இயக்கங்களை சின்னத்திரை களில் பார்த்துவிட்டு திரும்பினார்.

நாற்காலியை அப்படியே நகர்த்தி அவருடைய பர்ஸனல் கம்ப்யூட்டருக்கு எதிரே நிறுத்தினார்.



கம்ப்யூட்டர் அவர் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டது.

சில பொத்தான்களைத் தட்டியதும், அவருடைய அன்றைய வரவு செலவுகளை அச்சிட்டுக் காட்டியது.

இண்டர்காம் ஒலித்தது.

''யெஸ்?'' என்றார் தாராசங்கர்.

''நவீன்ராஜ் வந்திருக்கிறார். உங்களுடன் பேச வேண்டுமாம். வெகு அவசரமாம்...''

ஒலித்த குரல் ஆதர்ஷினுடையது.

ஆதர்ஷ், தாராசங்கரின் முக்கிய உதவியாளன். இளைஞன். சிக்கனமான வார்த்தைகளை மட்டும் உபயோகிப்பவன்.

அவசியமற்று தாராசங்கரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்ற கொள்கை வைத்திருப்பவன்.

''நவீன்ராஜை தர்பார் ரூமில் காத்திருக்கச் சொல்.''

தாராசங்கர் சற்று நேரம் தன் கம்ப்யூட்டரில் மேலும் சில விவரங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு எழுந்தார்.

சங்கேத எண்களை அழுத்தியதும் லிப்ட் மேலே ஏறி வந்தது. அவருடைய பாதுகாவலர்கள் மூவரும் லிப்டில் தயாராய் இருந்தார்கள்.

தாராசங்கர் லிப்டில் ஏறி அடுத்த தளத்திற்கான பொத் தானை அழுத்தினார்.

அடுத்த தளத்தில் அவர் வெளிப்பட்ட போது, பாது காவலர்களும் அவருடன் வெளிப்பட்டார்கள்.

சிறிய காரிடாரில் நடந்ததும் இரட்டைக் குளிர்கண்ணாடிக் கதவுகள் பொருத்தப்பட்ட அறை எதிர்கொண்டது.

கதவின் மீது 'தர்பார்' என்ற வார்த்தை பொன் நிற எழுத்துக்களால் மின்னியது.

தாராசங்கர் தன்னை சந்திக்க வருபவர்களுக்காக ஒதுக்கியிருக்கும் பிரத்யேக அறை.

ஒரே சமயத்தில் முப்பத்தியிரண்டு பேர் ஒருவரை ஒருவர் பார்க்கும்படி அமரக்கூடிய நீள்வட்ட மேஜையும், வசதியான குஷன் நாற்காலிகளும் கொண்ட கான்பரன்ஸ் அறை.

தாராசங்கருக்கு முன்பாக அவருடைய பாதுகாவலர்கள் அந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

மையத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த நவீன்ராஜ் அவர்களைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து நின்றான்.

பாதுகாவலர்கள் நவீன்ராஜை நெருங்கினார்கள். அதில் ஒருத்தன் நவீன்ராஜின் உடலின் பல்வேறு பாகங்களைத் தட்டிப் பார்த்தான். அவன் எந்த ஆயுதத்தையும் ஒளித்திருக்கவில்லை என்பதை தீர்மானித்துக் கொண்டான்.

அவன் தலை அசைத்ததும், மற்ற பாதுகாவலர்களும் அவன் பின்னே நகர, மூவரும் அந்த கான்பரன்ஸ் அறையிலிருந்து வெளியேறினார்கள்.

இப்போது அந்த அறையில் நவீன்ராஜும், தாராசங்கரும் மட்டும்தான்.

தாராசங்கர் அவனை அமரும்படி சைகை செய்து விட்டு தனது இருக்கையில் அமர்ந்தார்.

நவீன்ராஜை ஆழமாகப் பார்த்தார்.

நவீன்ராஜ் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான்.

அவனுடைய அந்த வசீகரமான முகத்தில் புதிதாக சில கவலை ரேகைகள்.

நவீன்ராஜ் தமிழ்த் திரையுலகில் ஒரு புயலாக நுழைந்து இளைஞர்களின் மனதைக் கொள்ளை கொண்டுள்ள இளம்



நடிகன். இப்போது தாராசங்கரின் சினிமா கம்பெனி தயாரித்துக் கொண்டிருக்கும் படத்தில் தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருப்பவன்.

"என்ன நவீன், ஏதாவது சம்பளப் பிரச்சனையா?"

நவீன்ராஜ் குழைந்தான். "உங்கள் கம்பெனியில் எனக்கு என்ன சம்பளப் பிரச்சனை இருக்க முடியும், கேப்டன்?"

தாராசங்கர் ராணுவத்தில் பணிபுரிந்தவரில்லை. கேப்டன் பதவியை வகித்தவர் இல்லை. ஆனால் அவரை கேப்டன் என்றே விளிக்கும்படி நெருக்கமானவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது.

'உங்கள் கம்பெனியில் என்ன சம்பளப் பிரச்சனை?' என்று இன்றைக்கு குழையும் இதே நவீன்ராஜ தான் முதலில் நடிக்கக் கூப்பிட்டபோது கால்ஷீட் இல்லை அது இது என்று ஏக பிகு பண்ணினான். அவனுடைய வசீகரமான முகத்தில் அமிலம் பீய்ச்சப்பட்டால் அந்த கால்ஷீட் பிரச்சனையெல்லாம் தீர்ந்துவிடும் என்று தாராசங்கரின் கட்டளையின் பேரில், அவருடைய பி.ஏ. ஆதர்ஷ் ஒருமுறை நவீன்ராஜிடம் சொன்ன பிறகு உடனடியாக அவன் கால்ஷீட் தேதிகள் வழங்கியதை தாராசங்கர் மறக்கவில்லை.

"வேறு என்ன பிரச்சனை?" என்றார், நேரடியாக.

"நான் ஒரு கொலை செய்து விட்டேன்" என்றான் நவீன்ராஜ், மெல்லிய குரலில்.

## 3

நவீன்ராஜ் அந்த வார்த்தைகளைச் சொன்னதும், தாராசங்கர் திடுக்கிட்டு பார்ப்பார் என்று எதிர்பார்த்திருந்தான். ஆனால் ஏமாந்தான்.

'நான் பென்சிலைத் தொலைந்துவிட்டேன்' என்று சொன்னால் என்ன ரியாக்ஷன் இருக்குமோ

அந்த அளவுதான் அவர் முகத்தில் உணர்ச்சிகள் பிரதி பலித்தன.

''யாரை?''

''எ.. என் மனைவியை...''

''யூ மீன்.. ஹரிதாவை?''

''ஆமாம்...'' நவீன்ராஜ் முகம் தழைந்தது. குரல் மெலிந்தது.

''ஹரிதா இன்னும் உன் மனைவியா?''

''விவாகரத்து ஆகிவிட்டது.. ஆனால், கோர்ட் சொன்ன தொகையை இன்னும் அவளுக்கு நான் தந்து கணக்கை நேர் செய்யவில்லை...''

''கூலிக் கொலைகாரனை வைத்து கொலை செய்தாயா?''

''இல்லை.. நானே.. நேரில் போய்..''

தாராசங்கரின் இமைகள் சற்றே உயர்ந்தன.

''நீயே பர்ஸனலாகப் போகிற அளவு முட்டாளா நீ?''

''உணர்ச்சி வேகத்தில்...''

''காரணங்களை விடு.. நடந்ததை முழுமையாக சொல்...''

''ஹரிதாவிற்கும் எனக்கும் ஒத்துவராமல் போய் நான் அவளிடமிருந்து விவாகரத்து பெற வேண்டும் என்று முயற்சி செய்தது உங்களுக்குத் தெரியும்...

விவாகரத்து பேப்பரில் கையெழுத்து போடுவதற்கு ஹரிதா என்னிடம் மிகப் பெரிய தொகை கேட்டதும் உங்களுக்குத் தெரியும்.. அத்தனையும் கணக்கில் வராத பணம்.

அதில் பெரும் பகுதியைக் கொடுத்து விட்டேன்.... அதனால் என் பொருளாதார நிலையே சீர்குலைந்து விட்டது.

ஆனால் ஹரிதா என்ன செய்தாள்? டெலிவிஷனிற்கும், பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுக்க ஆரம்பித்



தாள். அவளை இத்தனை நாள் எந்த நிருபர் மதித்தான்? அவளுக்கு பொம்மை செய்யத் தெரியும், துணிகளுக்கு டிஸைன் பண்ணத் தெரியும் என்பதற்காக எத்தனை பத்திரிகைகள் அவளை கவனித்திருக்கின்றன? நவீன் ராஜின் மனைவி அதுவும் அவன் காதலித்து, பல தடைகளைத் தாண்டி அவளைக் கைப்பிடித்த மனைவி என்று தானே அவளை கவனித்திருந்தார்கள்?

இப்போது எங்கள் உறவில் புகைச்சல் என்றதும் அட்டையிலேயே அவளைப் போட்டு வியாபாரம் செய்யத் தயாராகி விட்டன, பத்திரிகைகள்.

பத்திரிகைகள் கிடைத்து விட்டதே என்று ஹரிதாவும் பப்ளிஸிடி ஆசையில் வாய்க்கு வந்தபடி என்னைப் பற்றி என்னென்னவோ கேவலமாகப் பேச ஆரம்பித்து விட்டாள். அதன் உச்சகட்டமாக அவள் எனக்குப் போன் செய்து மிரட்ட ஆரம்பித்தாள்.

அவளுக்குத் தரவேண்டிய தொகையை உடனடியாக நான் தரவில்லையென்றால், என்னுடைய மெடிக்கல் ரிப்போர்ட் ஒன்றை பத்திரிகைகளுக்கு ரிலீஸ் பண்ணுவேன் என்று அவள் கூப்பிட்டுச் சொன்னாள். அந்த மெடிக்கல் ரிப்போர்ட் என்னுடைய பழைய சரித்திரம். அதற்காக நான் அமெரிக்காவிற்குப் போய் நிறைய செலவு செய்து சிகிச்சை பெற்று சரிப்படுத்திக் கொண்டதெல்லாம் வெளியில் தெரியாது.

இப்போது வெளியில் தெரிந்தால் என் இமேஜ் வீணாகி விடும்! அவளைக் கெஞ்சினேன். அவள் பிடிவாதமாக இருந்தாள்.

அவள் உயிரோடு இருந்தால்தானே ஆபத்து என்று அவளைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்தேன்...''

நவீன்ராஜ் சின்னச் சின்ன இடைவெளிகள் கொடுத்து, மூச்சிரைக்க சொன்னான்.

தாராசங்கர் கை உயர்த்தி அவனை நிறுத்தச் சொன்னார்.

"உன்னுடைய புலம்பல்களையெல்லாம் கேட்க, எனக்கு நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை நவீன்.. இப்போது எதற்காக என்னைப் பார்க்க வந்தாய்?"

''நீங்கள்தான் என்னை இக்கட்டிலிருந்து காப்பாற்ற முடியும்...''

''கொலை செய்தபோது மாட்டிக் கொண்டாயா?''

''இல்லை. ஆனால் ஒரு தப்பு செய்து விட்டேன்.'' நவீன்ராஜ் கவலையுடன் சொன்னான்.

''கொலையைப் பற்றிய விவரங்களை மட்டும் முழுமையாகச் சொல்.''

தாராசங்கரின் குரலில் கண்டிப்பு இருந்தது.

நவீன்ராஜ் எச்சில் கூட்டி விழுங்கினான். மீண்டும் பேசத் துவங்கினான்.

* * *

''இன்றைக்கு மாலை எனக்கு படப்பிடிப்பு இருந்தது. சைதாப்பேட்டையில் படப்பிடிப்புக்காக ஒரு வீடு எடுத்திருந்தார்கள். குரூப் டான்ஸ் காட்சி.

அந்த வீட்டில் எனக்கென்று ஒரு அறை கொடுத்திருந்தார்கள். ஷாட்கள் இல்லாதபோது நான் ஓய்வெடுப்பதற்கான அறை அது. கீழ்த்தளத்தில் இருந்தது. அந்த அறைக்கு இரண்டு கதவுகள். ஒன்றைத் திறந்தால் வீட்டிற்குள் வரலாம். இன்னொன்றைத் திறந்தால் தோட்டப்பகுதிக்குப் போகலாம்...

மாலை ஐந்து மணிக்கு நான் கொஞ்சம் ஓய்வெடுக்க விரும்புவதாக படப்பிடிப்புக் குழுவிடம் சொன்னேன்.



குரூப் டான்ஸர்களை மட்டும் வைத்து எடுக்க வேண்டிய காட்சிகளை முதலில் எடுத்துக் கொள்வதாக டான்ஸ் மாஸ்டர் சொன்னார். நாற்பது நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் நான் ஓய்வெடுக்கலாம் என்று சொன்னார்.

எனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குத் திருப்பினேன். பாடல் காட்சியில் பயன்படுத்த இரண்டு செட் லெதர் உடைகள், ரெக்ஸின் தைத்த நடன உடைகள் எனக்கு என்று கொடுக்கப்பட்டிருந்தன. கறுப்பு நிறத்தில் எனக்குக் கூடுதலாக ஒரு ஜெர்கினும், லெதர் பாண்ட்டும் நான் பிரத்யேகமாக வாங்கியிருந்தேன்.

அவற்றை அணிந்து கொண்டு கதவு திறந்து தோட்டப் பகுதியில் மெல்ல நுழைந்தேன். தூரத்தில் டிபன் தயாராகிக் கொண்டிருந்தது. லைட் பாய்கள் இருவர் ரிஃப்ளெக்டர்களுக்கு புது ஜிகினாத்தாள் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். யாரும் என்னை கவனிக்கவில்லை.

தோட்டத்திலிருந்து பின் கதவு திறந்து தெருவிற்கு வந்தேன். அங்கே எனக்காக மோட்டார் சைக்கிளும், முகத்தை முழுமையாக மூடக்கூடிய ஹெல்மெட்டும் தயாராயிருந்தன. படப்பிடிப்பின் நடுவில் இப்படி நழுவி நான் துணை நடிகை வீடுகளுக்கோ, மது அருந்தும் பார்களுக்கோ போனதுண்டு என்பதால், நான் சொன்னபோது எந்தக் கேள்வியும் கேட்காமல் என் பி.ஏ. இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்.

அந்த பி.ஏ.வும். என் கால்ஷீட் தொடர்பாக இன்னொரு கம்பெனிக்கு அப்போது போயிருந்ததால், முற்றிலும் நான் தனியாக இருந்தேன்.

ஹெல்மெட் அணிந்து என் முகத்தை மூடினேன். கிளவுஸ்கள் அணிந்தேன். ஹரிதாவைத் தேடிப் புறப்பட்டேன். ஹரிதாவை வெட்டிவிட்டு மறுபடி படப்பிடிப்பு

இடத்திற்கு வந்து சப்தம் போடாமல் பூனை போல் அந்த ஓய்வு அறைக்குள் நுழைந்து அடுத்த ஷாட் ரெடி என்றதும் ஒன்றும் அறியாதவன் போல் படப்பிடிப்பில் கலந்து கொள்வது என்பது என் திட்டம்.

ஹரிதா இருந்த வீட்டிற்குப் போக பத்து நிமிடம், அங்கே பத்து நிமிடம், திரும்பி வர பத்து நிமிடம் என்று எனக்கு ஓய்வுக்காகக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள், காரியத்தையே முடித்துவிட்டு வந்து விடலாம் என்ற தைரியத்துடன் தான் போனேன்.

ஹரிதா வீட்டில் அழைப்பு மணி அழுத்தியதும் அவள் வெளியே வந்தாள். அவள் மீது பாய்ந்து வெட்டினேன். அந்த ரத்தம் பட்டாலும் என் ஜெர்கின் நிறம் காட்டிக் கொடுக்காது என்பதற்காகத் தான் ஜெர்கின் அணிந்து போயிருந்தேன். ரத்தக் கறை என் முகத்தில் படாது, காரணம் ஹெல்மெட். ரத்தம் என் கைகளைக் கறையாக் காது, காரணம் கிளவுஸ்கள். என் சட்டையில் ரத்தம் படியாது, காரணம் அதை மூடியிருக்கும் ஜெர்கின்.

எல்லாமே என் திட்டப்படிதான் நடந்தது. ஆனால் ஹரிதா முற்றிலும் தனியாகவே இருப்பாள் என்று எதிர் பார்த்திருந்த எனக்கு ஒரு அதிர்ச்சி.

அவளை நான் தாக்கிக் கொண்டிருந்த போது திடீ ரென்று ஒருத்தன் என்னைப் பின்னாலிருந்து வந்து இழுத் தான். அவன் வீட்டிற்குள்ளிருந்து தான் வந்திருக்க வேண் டும். யார் அவன்? தெரியாது. அவனால் என் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனால் நான் செய்த கொலையை அவன் நெருக்கத்தில் நின்று பார்த்து விட்டான். அவனை அப்படியே சாட்சி சொல்ல விட்டுவிட்டு வருவது தப்பு என்று அவனையும் தாக்கி வெட்டிவிட்டு நான் பைக் ஏறி படப்பிடிப்புக்கு வந்து விட்டேன்.



''நான் வெளியே போனபோது எப்படி யார் கண்ணிலும் படவில்லையோ, அதே போல படப்பிடிப்பு வீட்டில் என் அறைக்குள் நான் திரும்பியதையும் யாரும் பார்க்க வில்லை. முப்பது நிமிடத்தில் திரும்பி விடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் நான் திரும்பி வர நாற்பத்தி யெட்டு நிமிடங்கள் ஆகிவிட்டது.

நல்லவேளை... படப்பிடிப்பு தயாராகவில்லை... அதனால் என்னை யாரும் அடுத்த ஐந்து நிமிடத்திற்குக் கூப்பிட வில்லை. அதற்கப்புறம் பாடல் காட்சிக்குக் கூப்பிட்டார் கள். அதற்குள் நான் உடைகள் மாற்றித் தயாராய் இருந் தேன்...''

* * *

தாராசங்கர் தன் மூக்கு நுனியை விரல் நுனிகளால் நிமிண்டி விட்டு நிமிர்ந்தார்.

''போனாய். கொலை செய்தாய். குறுக்கில் வந்தவனையும் கொன்றாய். திரும்பி விட்டாய். அப்புறம் என்ன பிரச்சனை?''

''என்னைப் பற்றி பின்னால் யாரும் அடையாளம் சொல்லிவிடக்கூடாது என்றுதான் ஹெல்மெட், ஜெர்கின், கிளவுஸ் என்று அத்தனை முன்னெச்சரிக்கைகள் எடுத் தேன்... ஆனால் அந்த குறுக்கில் வந்தவனுடன் போராடும் போது என் இடதுகை கிளவுஸை அவன் உருவி எறிந்து விட்டான்... அதை என்னால் மீட்க முடியவில்லை.''

''ப்பூ.. கிளவுஸ் தானே? அதை சமாளித்துக் கொள்ளலாம்...''

''அவ்வளவு எளிதான விஷயமில்லை, கேப்டன்...'' நவீன்ராஜ் நெளிந்தான். ''அந்த கிளவுஸில் ஹரிதாவின் ரத்தம் இருக்கிறது... கூடவே என் ரத்தமும் இருக்கிறது...''

''உன் ரத்தமா?''

''இழுக்கப்பட்ட போது என் கத்தி என் கையிலும் ஒரு கோடு இழுத்துவிட்டது.. என் ரத்தமும் கிளவுஸில் கறையாகப் பிடித்திருக்கும்...''

தாராசங்கரின் முகத்தில் இகழ்ச்சியாக ஒரு புன்னகை படர்ந்தது.

''சபாஷ்!'' என்றார். ''கையெழுத்து போட்டு விட்டு வராதது தான் மிச்சம்... போலீஸ் கையில் அந்த கிளவுஸ் கிடைத்தால் போதும். கோர்ட்டில் எந்தக் கேள்வியும் கேட்காமல் உன்னை நேரே தூக்கு மேடைக்கு அனுப்பி விடுவார்கள்.''

''அதற்காகத் தான் உங்கள் உதவியை நாடி வந்தேன்.''

''உதவி!'' தாராசங்கரின் முகம் திடீரென இறுகியது. கோபம் ததும்பும் விழிகளால் அவனைப் பார்த்தார்.

''ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், ஹரிதாவை தீர்ப்பதற்கு என்னிடம் நூறு ஆட்கள் இருக்கிறார்கள். அப்போது என்னிடம் சொல்லி உதவி கேட்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லை.''

''இதற்கெல்லாம் உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நினைத்தேன்...''

''இன்றைக்கு உன் அந்தஸ்து என்ன? உன் நிலைமை என்ன? உன்னை நம்பி எத்தனை படங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன? ஒரு கொலை செய்வதற்கு நீயே நேரில் போக வேண்டுமா?''

''இது என் பர்ஸனல் கோபம். அவள் கழுத்தை வெட்டி அவள் துடித்து சாவதை அருகில் இருந்து பார்க்க வேண்டும் போல் எனக்கு ஒரு வெறி. அதனால் தான் நேரில் போனேன்...''

''கொலை முயற்சிக்கு முன்னால் அவள் தனியாகத் தான் இருக்கிறாளா என்று உறுதி செய்து கொள்ள வேண டும் என்பது கூட உனக்குத் தெரியாதா?''



''தனியாகத்தான் வந்தாள். இன்னும் மூன்று நிமிடம் கழித்து அந்த ஆள் வந்திருந்தால் கூட, நான் அங்கேயிருந் திருக்க மாட்டேன். விதி, அவன் தப்பான சமயத்தில் குறுக் கிட்டு விட்டான். அவன் கராத்தே கற்றவன் போலிருக்கிறது. சண்டைக்கு வந்தான். அவனைத் தீர்த்துக் கட்ட வேண்டி யிருந்தது.''

''அந்த கிளவுஸ் இப்போது எங்கே?''

''என் கைக்கு எட்டாத உயரத்தில் ஜன்னலின் ஸன் ஷேடின் மீது கிடக்கிறது. பொதுவாக அதை யாரும் அங்கே கவனிக்க மாட்டார்கள். அது கவனிக்கப்படாமலும் போகலாம். ஆனால் அந்த ரிஸ்க் எடுக்க எனக்கு பயமாய் இருந்தது...''

''உன்னை நம்பி என்னுடைய இரண்டு படங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு கோடிகள் அதில் முடங்கியிருக்கிறது என்று உனக்குத் தெரியும்... இந்த சமயத்தில் நீ ஜெயிலில் போய் உட்கார்ந்தால் என்ன ஆகும் யோசித்தாயா?''

''அதனால்தான் உங்களைத் தேடி ஓடிவந்தேன்...''

''கொலை எத்தனை மணிக்கு நடந்தது?''

''மாலை ஐந்தே முக்கால் மணிக்கு.. மாலை இருட்டில்...''

''இப்போது மணி பத்து...''

''ஆமாம்... நான்கு மணி நேரமாகிறது... இத்தனை நேரம் அவள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பாளா, போலீஸ் வந்திருக்குமா என்று தெரியவில்லையே...''

''எனக்கு பயமாய் இருக்கிறது. உடனே உங்களைத் தொடர்பு கொள்ளப் பார்த்தேன். நீங்கள் மீட்டிங்கில் இருந்தீர்கள்...''

''பயப்படாதே!'' தாராசங்கர் புன்னகைத்தார்.

''பிரச்சனையை என்னிடம் விட்டு விடு.. நான் பார்த்துக் கொள்கிறேன்.. ஆனால், தப்பித்தவறி போலீஸ் மோப்பம் பிடித்துக் கொண்டு உன்னைத் தேடி வந்தால் நீயாக ஒரு வார்த்தை கூட உளறாதே! வக்கீல்கள் இல்லாமல் பேச முடியாது என்று சொல்லிவிடு... மிஸ்டர் வீரராகவனைத் தெரியுமா?''

''உங்கள் கம்பெனி அட்வகேட்!''

''ஆமாம்... அவரைப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன்... அவரிடம் ஆலோசனை வாங்கிக் கொள்... இன்னொரு முட்டாள்தனம் நீ பண்ணினால் என்னாலும் உன்னைக் காப்பாற்ற முடியாது!''

தாராசங்கர் விருட்டென்று எழுந்து அந்த அறையை விட்டு வெளிப்பட்டார்.

லிப்ட்டிற்கு நடந்தார்.

## 4

ஆதர்ஷ் பச்சை விளக்கு எரிந்ததும், அந்த அறைக்கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

தாராசங்கர் தன் இருக்கையிலிருந்து நிமிர்ந்து பார்த்தார். ஆதர்ஷ் மரியாதையும், கூர்மையான கவனமுமாக நின்றான்.

''ஆதர்ஷ், ஹரிதாவை உனக்குத் தெரியுமா?''

''நவீன்ராஜின் எக்ஸ்-மனைவி.''

''அவள் இறந்து விட்டாள் - கொலை செய்யப்பட்டு.''

''ம்.''

''அவள் வீட்டு வாசலில் அவள் உடலும், அவளைக் காப்பாற்ற வந்தவனுடைய உடலும் கிடக்கின்றன.. அந்த வீட்டின் முகப்பில் இருக்கும் ஜன்னல் ஸன்ஷேடில் ஒரு



கிளவுஸ் கிடக்கிறது ரத்தக்கறையுடன்... இடதுகை கிளவுஸ்... அந்த கிளவுஸ் போலீஸ் கையில் சிக்கக்கூடாது...''

''சரி...''

''மிக ரகசியமாக எடுக்கப்பட்டு அது விடிவதற்குள் எனக்கு வேண்டும்...''

''யெஸ், கேப்டன்...''

அதுதான் ஆதர்ஷிடம் தாராசங்கருக்கு மிகப் பிடித்த விஷயம். யார் கொலை செய்தார்கள், ஏன் கொலை செய்தார்கள், எப்படிக் கொலை செய்தார்கள் என்ற கேள்வி கிடையாது. கிளவுஸ் வேண்டுமா, சரி கொண்டு வருகிறேன்... அவ்வளவுதான் ஆதர்ஷின் பதிலுரை.

''வக்கீல் வீரராகவனுக்கு போன் செய்து விடு. நவீன்ராஜ் வந்தால் உதவச் சொல்லி...''

''யெஸ் கேப்டன்...''

''நீ போகலாம்...''

ஆதர்ஷ் வணங்கி விட்டு வெளிப்பட்டான்.

* * *

ஆதர்ஷ். முப்பத்தி மூன்று வயது. உயரமானவன். உணர்ச்சிவசப் படக்கூடிய ஆண்மையான முகம். கூர்மையான கண்கள். வசீகரமான உதடுகள். வரிசை தப்பாத பற்கள். கவர்ந்திழுக்கும் புன்னகை.

ஆதர்ஷை தாராசங்கர் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமே, அவன் எது செய்தாலும் அதில் கச்சிதம் இருக்கும் என்பதற்காகத்தான். தாராசங்கர் பல விஷயங்களில் வெளியுலகில் தெரியாமல் செயல்படுவார். அம்மாதிரி விவரங்களில் அவர் சார்பாக செயல்படுவதற்கு ஆதர்ஷிற்குத்தான் முழுமையான அதிகாரம் இருந்தது.

இன்னது தேவை என்று தாராசங்கர் அவனிடம் சொல்வ தோடு சரி. அது பணம் விவகாரமாய் இருந்தாலும் சரி, பலம் விவகாரமாய் இருந்தாலும் சரி, ஆதர்ஷ் நடத்தி முடித்து விடுவான்.

அவனுடைய வசீகரமான முகம் காரணமாக அவனை ஒரு பெரிய கம்பெனியின் டைரக்டராக நினைக்கத் தோன் றுமே தவிர, தவறாக எடை போட யாருக்கும் எண்ணம் வராது.

தாராசங்கரின் பெரும்பாலான ரகசியங்கள் ஆதர்ஷிற்கு தெரியும் என்று ஒரு வதந்தி உண்டு. ஆதர்ஷிற்கு அப்பா, அம்மா, அண்ணன், தங்கை என்று எந்த உறவும் கிடையாது. அதனால் அவனுக்குப் பொதுவாக இரக்கம், கருணை போன்ற பலவீனங்கள் கிடையாது என்றும் சொல்வார்கள்.

ஆதர்ஷ் தன் அறையில் அமர்ந்திருந்தான்.

கண்ணாடி ஜன்னல் பதித்த கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தவர்களை நிமிர்ந்து பார்த்தான்.

விஜய் மற்றும் மங்கள்.

இருவரும் பருத்தி உடைகள் அணிந்து அப்போது தான் பம்ப் மோட்டார் விவசாயம் பார்த்து விட்டு டவுன் பஸ் ஸில் வந்து இறங்கியவர்களைப் போல் தோற்றமளித்தார்கள்.

ஆனால் இருவரும் வெகு ஆபத்தானவர்கள் என்று அவர்களைப் பற்றி அறிந்தவர்களுக்கு மட்டும் தெரியும்.

தாராசங்கர் சொன்ன அத்தனை விவரங்களும் ஆதர்ஷ் அவர்களிடம் சொன்னான்.

''அந்தக் கையுறை எடுத்து வரப்பட வேண்டும். அதில் உங்கள் கை படக்கூடாது. கவனமாகக் கையாண்டு ஒரு பாலிதீன் பையில் போட்டு எடுத்து வாருங்கள்...''



விஜய், மங்கள் இருவரும் இணைந்துதான் செயல்படு வார்கள். வேலையை அவர்களுக்குள் பங்கு பிரித்துக் கொள்வார்களே தவிர, அதற்கான கூலியை இரட்டிப்பாகக் கேட்டதில்லை

ஆதர்ஷ் ஹரிதாவின் புகைப்படம் காட்டினான். முகவரி கொடுத்தான்.

''உங்களுக்கு அதிகபட்சம் இரண்டு மணிநேரங்கள் தருகிறேன்... ஆனால் போலீஸோடு குறுக்கிடக்கூடாது...'' என்றான்.

விஜய், மங்கள் தலை அசைத்துவிட்டு வெளியேறினார்கள்.

## 5

இரண்டு பெரிய விளக்குகள் அந்த வீட்டின் முன்பகுதியில் வெளிச்சத்தைப் பாய்ச்சியிருந்தன.

போலீஸ் தலைகள் அங்கங்கே தென் பட்டன.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஜீப்பை நெருங்கினார்.

ஜீப்பின் முன் இருக்கையில் குறுகி அமர்ந்திருந்த பெண் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டரின் நிழலாடியதும் நிமிர்ந்து பார்த்தாள்.

''என் சர்வீஸில் எத்தனையோ... கொலைகளைப் பார்த் தாயிற்று. எத்தனையோ பிணங்களை எதிர்கொண்டா யிற்று. ஆனால் இன்றைக்குப் பார்த்த காட்சி எனக்கே அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது.. நீங்கள் அதிர்ந்து போனதில் ஆச்சரியமில்லை'' என்றார் பால்ராஜ். தன் ரூல் தடியை ஜீப்பில் வைத்து.

''உங்களுக்குப் பதட்டம் குறைந்து உங்களால் தெளிவாகப் பேசமுடியும் என்று தோன்றினால், நாம் பேசலாம்...'' என்றார்.

அந்தப் பெண்ணிற்கு இருபத்தி ஐந்து வயதிருக்கலாம். நாகரீகமாக பாண்ட்டும், டீ-ஷர்ட்டும் அணிந்திருந்தாள். திருத்தப்பட்ட முகத்தில் வசீகரம் இருந்தது. பயத்தில் முகம் வெளுத்திருந்தது கூட கவர்ச்சியாய் இருந்தது. பேசலாம் என்பது போல் தலையசைத்தாள்.

"பெயர்?"

"விமலா..."

"சொல்லுங்கள்..."

"ஒரு சிகரெட் இருக்குமா?" என்றாள் விமலா.

பால்ராஜ் புருவங்களை உயர்த்தி விட்டு தன் சிகரெட் பாக்கெட்டை எடுத்து நீட்டினார்.

விமலா ஒரு சிகரெட்டை உருவிக் கொண்டாள். பற்றவைத்து கண்களை மூடி நெஞ்சு நிறைய புகை இழுத்தாள். அதன் மூலம் பெரிய ஆறுதலும், தைரியமும் கிடைக்கப் பெற்றவள் போல பேசலானாள்.

பால்ராஜ் தன் பங்குக்கு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

"நானும், கார்த்திக்கும் ஒளிப்புயல் பத்திரிகையில் வேலை செய்கிறோம். தனித்தனியாகவும் பண்ணியிருக்கிறோம். எங்கள் பத்திரிகையில் ஒரு கவர் ஸ்டோரி போடுவதற்காக நவீன்ராஜின் மனைவி ஹரிதாவிடம் அப்பாயின்ட்மெண்ட் இன்று கிடைத்திருந்தது.

கார்த்திக்கும், நானும்தான் பேட்டியெடுக்க வந்திருந்தோம். ஏற்கெனவே மற்ற பத்திரிகைகளிலும், டெலிவிஷன்களிலும் சொன்ன மேட்டர்களைத் தவிர்த்து புதுமையாய் எங்கள் கவர் ஸ்டோரி அமைய வேண்டும் என்பது எங்கள் ஆசை..."



"பேட்டி எடுக்க எத்தனை மணிக்கு வந்தீர்கள்?"

"ஐந்து மணிக்கு.. இது குளிர்காலமாதலால் சீக்கிரம் இருட்டி விடுகிறது என்பதால் முதலில் தோட்டத்தில் அவசரமாக போட்டோக்கள் எடுத்தோம். ஐந்து இருபதுக்கு வீட்டிற்குள் போய் விட்டோம். பிஸ்கட், டீ சாப்பிட்டோம்..."

"ஹரிதாவுடன் வேறு யார் இருந்தார்கள்?"

"யாரும் இல்லை. ஒரு வேலைக்காரன், வேலைக்காரி கூட இல்லை. ஹரிதாவிற்கும், நவீன்ராஜிற்கும் கருத்து வேறுபாடுகள் வருவதற்குக் காரணமாய் இருந்ததே இரண்டு வேலைக்காரர்கள் தான் என்பதால், அவர்களை மொத்தமாகத் தவிர்த்து விட்டதாக ஹரிதா சொன்னார். தனிமை தனக்கு பெரும் சுதந்திரம் தந்திருப்பதாக சொன்னார்.. பேட்டி ஆரம்பிக்கும் நேரம் எனக்கு ஆபீஸிலிருந்து பேஜர் வந்தது. இன்றைய ஃப்ளைட்டில் திரும்பிப் போகிற ஒரு சென்ட்ரல் மினிஸ்டரை அவசரமாகப் பேட்டி எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

கார்த்திக்கை மட்டும் பேட்டி எடுக்கச் சொல்லி விட்டு, கைனடிக் ஹோண்டாவை எடுத்துக் கொண்டு நான் விமான நிலையத்திற்குப் போய் விட்டேன்..."

"அப்போது என்ன நேரம்?"

"ஐந்து முப்பது.. விமான நிலையம் போய்ச் சேர்ந்தபோது ஆறு மணி. அப்போது கார்த்திக்கின் செல் நம்பருக்கு அங்கிருந்து நான் போன் செய்தேன். செல்போன் ஒலித்துக் கொண்டேயிருந்ததே தவிர, அவன் எடுக்கவேயில்லை. பேட்டி எடுக்கும்போது தொந்தரவு செய்யக்கூடாது என்று அதை அவன் உதாசீனம் செய்கிறான் என்று நினைத்துக் கொண்டேன்."

"அதற்குப்புறம் மறுபடி போனில் பேசினீர்களா?"

''மினிஸ்டரை பேட்டி எடுத்து முடித்தபோது மணி ஏழரை ஆகிவிட்டது. அப்போதும் ஒருமுறை போன் செய்தேன். நோ ரெஸ்பான்ஸ். ஹரிதாவின் வீட்டு நம்பருக்கும் போன் செய்து பார்த்தேன். அதற்கும் பதில் இல்லை.. இரண்டு பேருமாக வெளியே போய் விட்டார்களா என்று சந்தேகம் வந்தது... ஆபீஸிற்கு போன் செய்தேன். கார்த்திக்கிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா என்று கேட்டேன். அவர்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை என்றார்கள். எனக்கு இன்னொரு சந்தேகம் வந்தது. உங்களிடம் சொல்வதற்கு கூச்சமாயிருக்கிறது.. ஹரிதா கொஞ்சம் அப்படி இப்படி...! ஒருவேளை கார்த்திகை அவள் சாய்த்து விட்டாளோ... அதனால்தான் இருவரும் போனை எடுக்கவில்லையோ என்றுகூட ஒரு கோபம்...''

''கார்த்திக் அப்படிப்பட்டவரா?''

''எனக்குத் தெரிந்தவரை நல்லவன்தான். ஆனால், ஆண்களை - ஏன் பெண்களைக் கூட முழுமையாக நான் நம்புவதில்லை!''

''உங்கள் இருவருக்கும்...?''

''நீங்கள் நினைப்பது போல் எந்த உறவும் இல்லை... இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்கிறோம்.. ஒன்றாக சில சமயம் மேட்டர் தயாரிக்கப் போவோம் என்பது தவிர எங்களுக்கு எந்தவிதமான பர்ஸனல் நெருக்கமும் கிடையாது. நல்ல நண்பர்கள். அவ்வளவுதான்...''

''ஏர்போர்ட்டிலிருந்து போன் செய்தீர்கள். அப்புறம்?''

''நேரில் ஒரு தடவை விசிட் செய்து ஹரிதாவின் போன் ஒருவேளை அவுட் ஆப் ஆர்டர் ஆகிவிட்டதா என்று தெரிந்து கொள்ளலாம் என்று முடிவு செய்தேன். ஹரிதாவின் வீட்டிற்கு வந்தேன்...''



''என்ன நேரம்?''

''எட்டே கால்.. அல்லது எட்டரை இருக்கலாம்.. விளக்குகள் எரியவில்லை. ரொம்ப சாதாரணமாக கேட்டைத் திறந்தேன்'' - சொல்லும் போதே அவள் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டதை பால்ராஜ் கவனித்தார்.

''வீட்டுக்கு வெளியே இருக்கும் படிகளில் ஹரிதா ரத்தத்தில் கிடந்தாள். எனக்கு என்னென்னவோ பயம் வந்துவிட்டது. இத்தனை நாள் கார்த்திக்கைப் பற்றி நான் சரியாக புரிந்து கொள்ளவில்லையோ? கார்த்திக் ஒருவேளை சைக்கோபாத்தோ? அல்லது ஹரிதாவைக் கற்பழிக்கப் பார்த்து இருவருக்கும் போராட்டமாகி அவளைத் தீர்த்து விட்டானோ..கடவுளே.. மனித மனம் எவ்வளவு விச்சித்திரமானது. எவ்வளவு முட்டாள்தனமானது!''

''நீங்கள் ஹரிதாவைப் பார்த்ததும் என்ன நினைத்தீர்கள்?''

''அத்தனை குழப்பத்திலும் என் பத்திரிகைக்கார புத்தி போகவில்லை. ஹரிதாவை அந்த நிலையில் எடுக்கும் முதல் போட்டோ என்னுடையதாய் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். போட்டோ எடுத்தேன்.. இரண்டு, மூன்று கோணங்களில் எடுத்து விட்டு, இன்னொரு ஆங்கிளில் எடுக்க பின்னால் நகர்ந்தபோது என்னவோ தடுக்கியது. பயத்தில் திடுக்கிட்டு குனிந்தால் -

ஷூக்கள் அணிந்த ஆண் கால்கள்! எப்படி திடுக்கிட்டிருப்பேன் என்று யோசியுங்கள். மை காட்! அலறாமல் எப்படியோ வாயைப் பொத்திக் கொண்டு நகர்ந்து சரியாகப் பார்த்தேன். கார்த்திக்கும் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்ததும் எனக்கு மூச்சே நின்றுவிட்டது. ஐயோ.. ஐயோ... ஐயோ என்று உதடுகள் முணுமுணுக்கின்றன... உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. கொலைகாரன் இருட்டில் ஒளிந்திருந்து என் மீது பாயப்போகிறான் என்று

ஒரு எண்ணம் வந்ததும் ஒரே பாய்ச்சலாக ஸ்கூட்டரில் பாய்ந்து ஏறி அந்த இடத்தை விட்டு ஓடினேன். போலீ ஸிற்கு போன் செய்தேன்...''

''நீங்கள் வீட்டிற்கு போகவில்லையே?''

''இல்லை...''

''எதையும் தொடவில்லையே?''

''இல்லை.. ஆனால் கார்த்திக்கின் கால் மீது தடுக்கிய போது அவன் கால் அதன் நிலையிலிருந்து கொஞ்சம் நகர்ந்திருக்கலாம்...''

''கார்த்திக்கிற்கு யாராவது எதிரிகள்?''

''எனக்குத் தெரிந்து யாரும் எதிரிகள் இல்லை... ஆனால் பத்திரிகைத் துறையில் இருப்பவர்களுக்கு அவர்கள் விரும்பாமலேயே எதிரிகள் உருவாகி விடு வார்கள். ஆனால் இந்தக் கொலைகள் கார்த்திக்கை எதிர்த்து செய்யப்பட்டதாக நான் நினைக்கவில்லை.''

''நீங்கள் பத்திரிகைக்காரர். நன்றாக கவனிப்பவர் என்பதாலேயே கேட்கிறேன்.. நீங்கள் ஹரிதாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, ஏதாவது விசித்திரமாய் இருப்பதாகத் தோன்றியதா?''

''ம்ம்ம்.. கேட் மூடியிருந்தது. ஆனால் வீட்டுக்கதவு திறந்திருந்தது. வீட்டிற்குள் ஹாலில் விளக்கு எரிந்தது. ஆனால் வீட்டிற்கு வெளியே விளக்கெரியாமல் இருட் டாக இருந்தது. வேறு எதுவும் எனக்கு வினோதமாகத் தோன்றவில்லை.''

''நீங்கள் வந்தபோது வீட்டிற்குள் யாராவது நடமாடுவது போல் தோன்றியதா?''

''அப்படி எனக்குத் தோன்றவில்லை. ஆனால் கொலை காரன் எங்காவது ஒளிந்திருக்கக் கூடும் என்ற பயம் இருந்ததென்னவோ உண்மை!''



''கொலை பற்றி பத்திரிகைக்கு தகவல் தந்தீர்களா?''

''எங்கள் எடிட்டருக்கு மட்டும் போன் செய்தேன்.. அவ ரும் வருவதாக சொல்லியிருக்கிறார்... கழுத்தை வெட்டி கொலை நடந்திருக்கிறது என்றால், ஹரிதா கூச்சலிட்டிருப் பாளே.. அக்கம்பக்கத்தில் விசாரித்தீர்களா இன்ஸ்பெக்டர்?''

''இது சற்று செல்வாக்கான ஏரியா. வீடுகள் ஒவ்வொன் றும் நிறைய இடைவெளி விட்டு கட்டப்பட்டிருக்கின்றன. இடது பக்கத்தில் வீடு பூட்டியே கிடக்கிறது. வாட்ச்மேன் கூட இல்லை. வலது பக்கத்து வீட்டிலிருந்தும் பார்ப்ப தற்கு வசதியில்லாமல் காம்பவுண்டு சுவரை ஒட்டி உயர மான மரங்கள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் இந்த தெரு வில் இருக்கும் அத்தனை பேரையும் போலீஸ் விசாரிக்கத் தான் போகிறது...''

''கார்த்திக்கும் கொலையாகி இருப்பதால், ஒரு உதவியாக கேட்கிறேன்... இந்தக் கேஸின் வளர்ச்சி பற்றி முதல் தகவல் எங்கள் பத்திரிகைக்குக் கொடுப்பீர்களா...?''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட்டை எறிந்தார்.

''ஒய் நாட்?'' என்றார். ''ஃப்ரான்ஸிக் லேபிலிருந்து ஆட்கள் வந்து விட்டார்கள்... நீங்கள் ஒய்வெடுங்கள்'' என்று இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அடுத்த சிகரெட்டைப் பற்ற வைத்தபடி நகர்ந்தார்.

## 6

''நில்'' என்றான் விஜய். ''அங்கே பார்..''

மங்கள் நின்றான்.

''போலீஸ்!'' என்றான். ''என்ன செய்வது?''

விஜய் தன்னிடமிருந்த சக்திவாய்ந்த பைனாக்குலரால் பார்த்தான்.

போலீஸ் அமைத்திருந்த விளக்குகளின் வெளிச்சச் சிதறலில் ஸன்ஷேடின் மீது அந்த கிளவுஸ் அமைதியாக படுத்திருந்தது.

''போலீஸ் கண்ணில் இன்னும் அது படவில்லை'' என்றான், விஜய். ''காத்திருப்போம். போலீஸின் அமளி அடங்கும் வரை காத்திருப்போம்...''

விஜய்யும், மங்களும் காத்திருக்கப் பழக்கப்பட்டவர்கள்.

காத்திருக்கத் தயாரானார்கள்.

* * *

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கினார். கண்களில் தூக்கம் தள்ளிப்போன தன் எரிச்சல் கரித்தது.

''யாருக்கெல்லாம் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது?'' என்றார், கேள்வியாக.

சப் இன்ஸ்பெக்டர் தன் புத்தகத்தைப் புரட்டி விட்டு நிமிர்ந்தார். ''ஹரிதாவின் அம்மா கொல்கத்தாவில் இருக்கிறார். அவருக்கு சொல்லியாயிற்று. நாளைக் காலை ஃப்ளைட் பிடித்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். லோக்கலாக யாருக்குச் சொல்லவேண்டும் என்று புரியவில்லை. மிஸ்டர் நவீன்ராஜிற்குச் சொல்ல வேண்டுமா?''

''நவீன்ராஜிற்கும், ஹரிதாவிற்கும் விவாகரத்து ஆகிவிட்டது. சட்டப்பூர்வமாக இருவருக்கும் உறவு இல்லை என்றாலும், ஹரிதா இறந்து விட்டதை நவீன்ராஜிற்கு சொல்வதுதான் நியாயம்'' என்றார், பால்ராஜ் ''நவீனுக்கு சொல்லி விடுங்கள்...''

* * *



கார் நிறுத்தத்திற்கு வந்த கணத்திலேயே, கதவு திறந்து பரபரப்பாக நவீன்ராஜ் இறங்கினான்.

வேகமாக நடந்து இன்ஸ்பெக்டரை அடைந்தான்.

''எ.. எனக்கு வந்த செய்தி உண்மையானது தானா?'' அவன் குரல் நடுங்கியது. ''ஹரிதா...?''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஹரிதா ரத்தம் சூழக்கிடந்த இடத்தைக் காட்டினார்.

தடயவியல் நிபுணர்கள் வேலை முடிந்து, அவள் உடல் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு ஸ்ட்ரெச்சரில் ஏற்றப் படத் தயாராய் இருந்தது.

இன்ஸ்பெக்டர் அவன் முகத்தையே கவனிப்பதை அவன் உணர்ந்தான். இப்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவனுக்கு முன் தகவல் இல்லாது இருந்திருந்தால் எப்படி நடந்து கொண்டிருப்பான்?

கேமிராவின் முன் ஆக்ஷன் என்ற வார்த்தை வீசப் பட்டதும், எத்தனை முறை பயிற்சி பெற்றிருக்கிறான்!

ஹரிதாவின் பிணத்தை அதிர்ச்சியுடன் பார்த்தான்.

அவளை நோக்கி ஓடி எடுத்து வைத்தான். நடை தவறியது.

விரிந்த கண்களுடன் இன்ஸ்பெக்டரைப் பார்த்துத் திரும்பினான்.

''எவ்வவ்வ்வளவு ரத்தம்!'' என்றான். குரல் தழதழத்து வந்தது. ''இப்படிக்கூட இரக்கமில்லாமல் தாக்க முடியுமா? ஐயோ.. ஹரிதா எவ்வளவு மென்மையானவள்.. அவளைப் போய்...''

அவன் கண்களில் கண்ணீர் திரண்டது. ''எப்போது இன்ஸ்பெக்டர்? எப்போது?''

''இன்று மாலை..'' என்றார் பால்ராஜ். ''நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்க வேண்டுமே.''

நவீன்ராஜ் கைக்குட்டையால் கண்களை ஒற்றிக் கொண்டான். பார்வை திருட்டுத்தனமாக மேலே நிமிர்ந்து ஸன்ஷேடை கவனித்தது.

கடவுளே! அந்த கையுறை இன்னமும் அங்கேயே இருந்தது. போலீஸின் கண்களில் படவில்லை!

நவீன்ராஜின் நெஞ்சிலிருந்து ஒரு பெருமூச்சு தானாக வெளிப்பட்டது.

''உங்கள் கேள்விகளை நாளைக்கு வைத்துக் கொள்ள முடியுமா, இன்ஸ்பெக்டர்? இன்றைக்கு எனக்கு உடம்பு சரியில்லை. மாலையிலிருந்து காய்ச்சலாக இருக்கிறது.''

''நோ பிராப்ளம்'' என்றார் பால்ராஜ். ''நாளைக்கு எப்போது உங்களுக்கு சௌகரியம்? காலையிலேயே உங்களை தொந்தரவு செய்ய வேண்டியிருக்குமே!''

நவீன்ராஜ் தன் பாக்கெட்டிலிருந்து விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான். ''என் அத்தனை நம்பர்களும் இதில் இருக்கிறது. ஒரு போன் செய்து விட்டு வாருங்கள்...'' என்றவன் வெகு எதேச்சையாக திரும்பியவனைப் போல இன்னொரு உடலையும் கவனித்தான்.

''மை காட்! இது என்ன? இன்னொரு பிணம் என்று சொல்லி விடாதீர்கள்!''

''அது இன்னொரு பிணம் தான்... வந்தவன் உங்கள் மனைவியை மட்டும் - ஸாரி, ஹரிதாவை மட்டும் கொல்லவில்லை. இன்னொருத்தனையும் சேர்த்துக் கொலை செய்திருக்கிறான்'' என்றார் பால்ராஜ்.

''மை காட்! மை காட்!'' நவீன்ராஜ தன் நெற்றியின் இருபுறமும் அழுத்திக் கொண்டான். ''ஹரிதாவின் அம்மா



கொல்கத்தாவில் இருக்கிறார். அவருக்கு சொல்லியாகி விட்டதா? இல்லை, நான் ஏதாவது ஹெல்ப் செய்ய வேண்டுமென்றால் சொல்லுங்கள்...''

''சொல்லியாகி விட்டது'' என்றார், பால்ராஜ். ''ஹரிதாவின் உடலை அவள் அம்மாவிடம் தானே ஒப்படைக்க வேண்டியிருக்கும்!''

''சட்டப்பூர்வமாக எங்களுக்குள் உறவு இல்லை'' என்றான் நவீன்ராஜ். ''ஆனால் நாங்கள் எட்டு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்து இருக்கிறோம். ஹரிதாவை நான் அவ்வளவு சுலபத்தில் என் நினைவுகளிலிருந்து தூக்கியெறிந்து விட முடியாது...''

உணர்ச்சிவசப்பட்ட போது அவன் குரல் மறுபடி மறுபடி தடுமாறியது. ''இன்ஸ்பெக்டர், எனக்கு தலை சுற்றுகிறாற் போல் இருக்கிறது... நான் போகலாமா?''

''குட்நைட்!''

''என்னைப் பொறுத்தவரை BAD நைட்'' என்றான் நவீன்ராஜ், கைக்குட்டையால் மூக்கு நுனியைத் தேய்த்துக் கொண்டு. காரில் அவன் ஏறும்வரை பால்ராஜ் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பின் தலைமை கான்ஸ்டபிளை அருகே அழைத்தார்.

''நான் வீட்டிற்குப் போகிறேன்... பகல் வெளிச்சத்தில் வந்து இந்த இடத்தை இன்னும் கவனமாக ஆராய விரும்புகிறேன். அதனால் எந்த விஷயமும் தொந்தரவு செய்யப் படாமல் பத்திரமாக அப்படியே இருக்கட்டும்.. இரண்டு பேரை இங்கே இரவு காவலுக்கு இருக்கச் சொல்லுங்கள்...''

''யெஸ் சார்'' என்று விறைப்பான சல்யூட்டுடன் பதில் வந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஜீப்பில் ஏறினார்.

இன்றைய தினம் மிகவும் களைப்பான தினம் என்று நினைத்துக் கொண்டார். விடிகாலையில் நாலரை மணிக்கு விமான நிலையத்தில் தில்லியிலிருந்து வந்த ஹோம் செக்ரட்டரியை வரவேற்கப் போனதிலிருந்து ஓய்வே இல்லாமல் போய்விட்டது. இதோ இரவு, இரவைத் தாண்டி வெகுவாக நீண்டு விட்டது!

வீட்டிற்குப் போய்ச் சேரும் வரை தூக்கத்தைத் தள்ளிப் போட வேண்டும்.

பால்ராஜ் ஜீப்பில் நன்றாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

## 7

''பிணங்கள் ஆம்புலன்ஸில் ஏறியாயிற்று...'' என்றான், மங்கள் மரத்தின் அடர்த்தியான இருட்டிலிருந்து.

''போலீஸ்?''

மங்கள் தன் பைனாக்குலரைத் தழைத்தான்.

''இரண்டு கான்ஸ்டபிள்கள் மட்டும் காவலுக்கு இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் புறப்பட்டு விட்டார்.''

''அந்த கிளவுஸ்?'' என்றான், விஜய்.

''அது அதே ஸன்ஷேடிலேயே தான் கவனிக்கப்படாமல் கிடக்கிறது.''

''போலீஸை டபாய்த்து விட்டு, இப்போது நாம் அதை அள்ளி வர வேண்டும்...''

''எப்படி?''

''போலீஸின் கவனத்தை நீ திசை திருப்பு.. நான் மொட்டை மாடிக்குப் போய் விடுகிறேன்...''

''எந்த வழியில்?''



''பின்னால் இருக்கும் உயரமான மரத்தை மறந்து விட்டாயா? நான் காரியத்தை முடித்துவிட்டு வரும் வரை போலீஸ் என்னைப் பற்றி நினைக்கவே கூடாது. அதற்கு நீதான் பொறுப்பு.''

''சரி'' என்று கைகளைத் தேய்த்துக் கொண்டான், மங்கள்.

* * *

கான்ஸ்டபிள்கள் மருதமலையும், சொக்கநாதனும் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள்.

''நல்ல பனியில் நனைய வைத்து விட்டார்கள்...'' என்றார், சொக்கநாதன், கைகளைத் தேய்த்துக் கொண்டே.

''எதற்காகப் பனியில் கஷ்டப்பட வேண்டும்? இன்னும் கொஞ்சம் நேரமானதும், நாம் ஒவ்வொருத்தராகக் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வோம். இப்போதைக்கு பனியிலிருந்து தப்பிக்க, போர்டிகோவில் நிழலில் உட்காரலாம்'' என்றார் மருதமலை, தன் தொப்பையைத் தடவிக் கொண்டே.

நாற்காலிகள் போர்ட்டிகோ நிழலுக்குள் இடம் பெயர்ந்த சமயம், மங்கள் கேட்டருகில் வந்து நின்றான். அவன் கேட்டைத் திறக்க முற்பட்ட போது, சொக்கநாதன் தொந்தரவு செய்யப்பட்டார்.

''ஏய், யார் அது?'' என்று எழுந்து கேட்டருகில் போய் நின்றார்.

மங்கள் தன் முகத்தில் வெளிச்சம் விழாத இடத்தில் நகர்ந்து நின்று கொண்டான்.

''நான் தினச் சூரியன் பத்திரிகையிலிருந்து வருகிறேன்.. இங்கே ஏதோ கொலை நடந்து விட்டதாக...'' என்று இழுத்தான்.

''விடிந்தது போ! முக்கியமான பத்திரிகைக்காரர்கள் எல்லாம் வந்து போயாயிற்று... போட்டோ வேண்டுமானால் கமிஷனர் ஆபீஸிற்குப் போ!''

''இல்லை... எனக்கு போட்டோ வேண்டாம். போலீஸ் பொதுவாகக் கொடுத்த விவரங்கள் எல்லாம் என் பத்திரிகைக்கும் கிடைத்து விட்டது. எனக்குக் கூடுதல் விபரம் கிடைக்குமா என்று பார்க்க வந்தேன்.''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை... போய் வா...'' என்று உட்கார்ந்த இடத்திலிருந்தே வெறுப்பாகச் சொன்னார், மருதமலை.

மங்கள் சில நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துக் காட்டினான்.

''நான் ஓசியில் உதவி கேட்கவில்லை'' என்றான்.

சொக்கநாதன், மருதமலையைத் திரும்பிப் பார்த்தார்.

மருதமலைக்கு திடீரென்று கோபம் வந்துவிட்டது. தடதடவென்று எழுந்து வந்தார்.

''லஞ்சம் கொடுக்கிறாயா.. லஞ்சம்! கையில் கொண்டு வந்து பணத்தைத் திணிக்க வேண்டியது. அப்புறம் இவ்வளவு வாங்கினார், அவ்வளவு வாங்கினார் என்று உன் பத்திரிகையிலேயே எழுத வேண்டியது.. போ, போ!''

இப்போது இரண்டு கான்ஸ்டபிள்களையும் கேட் அருகில் கொண்டு வந்து விட்ட திருப்தியுடன், மங்கள் தொடர்ந்து அவர்களிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டேயிருந்தான்.

* * *

விஜய் நன்றாக வளைந்திருந்த மரக்கிளையிலிருந்து மொட்டை மாடிக்கு சுலபமாக மாறிவிடலாம் என்று நினைத்திருந்தான். ஆனால் இப்போது பார்த்தால், ஆறடி இடைவெளி இருந்தது.



இந்த ஆறடியை ஒரே முயற்சியில் அவன் தாவியாக வேண்டும். அதே சமயம், மொட்டைமாடியில் அவன் குதிக்கும் சத்தம் கீழே கான்ஸ்டபிள்களுக்குக் கேட்டு விடக்கூடாது! கான்ஸ்டபிள்களும், மங்களும் உரையாடிக் கொண்டிருந்த வார்த்தைகள் அவனுக்குத் தெளிவாகக் கேட்டன. அதே போல் தானே, இங்கிருந்து எந்த ஒலியும் அங்கு போய்ச் சேர்ந்து விடும்!

விஜய், மரக்கிளை அவன் பாரத்தை அனுமதித்த எல்லை வரை அதன் நுனிக்கு நகர்ந்தான். அங்கு தன்னை நிலையாக பாலன்ஸ் செய்து கொண்டு சரேலெனத்தாவிக் குதித்தான். கைப்பிடிச் சுவரைப் பித்தான்.

காலையில் ஒரு காக்கா குப்பைத் தொட்டியிலிருந்து பொறுக்கி வந்திருந்த வாழைப்பழத் தோல் அந்தக் கைப்பிடிச் சுவரில் வீற்றிருக்கும் என்று விஜய் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவன் பிடித்த இடம் அப்படியே வழுக்கி விட, அவன் உடல் பாரம் அவனைக் கீழே இழுத்தது.

விழுந்து விடாமல் இருக்க அவன் உடலை வளைத்து பக்கத்து டிரெய்னேஜ் பைப்பில் பிடிப்பு தேடப் பார்க்க, பைப் ஒரு பகுதி உடைந்து போக -

* * *

சடசடவென்று சத்தம் கேட்டு சொக்கநாதன், மருதமலை, மங்கள் மூவரும் திடுக்கிட்டார்கள்.

குறிப்பாக மங்கள் அதிர்ந்தான்.

நிலைமை கைமீறி விட்டதை உணர்ந்தான்.

மருதமலை உஷாராகி சத்தம் வந்த திசை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

மங்கள் கேட்டைத் திறந்து அவர் மீது நொடியில் பாய்ந் தான். பாய்ந்த வேகத்தில் அவரைக் குப்புறத் தள்ளினான்.

சொக்கநாதனுக்கு நிலைமை பெட்ரோலில் நெருப்பு பரவும் வேகத்தில் புரிந்தது.

தன் லத்தியைச் சுழற்றி மங்களின் ஆடுசதையில் பலம் அனைத்தும் சேர்ந்து அடித்தார். அதே சமயம் -

* * *

விஜய், பைப்பையும் இழுத்துக் கொண்டு சரிந்து அங்கிருந்த தக்காளிச் செடியில் விழுந்து பரவினான்.

பதறி எழுந்தான். தடுமாறி விழுந்தான்.

தொடையில் தோட்டத்தில் இருந்த ஒரு கல் குத்திக் காயப்படுத்தியிருந்தது.

வலி சுரீர் என்று உச்சி வரை ஊடுருவித் தாக்கியது.

* * *

மங்கள் ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தான்.

சொக்கநாதன் மறுபடி லத்தியை உயர்த்த, அந்த கழியைப் பிடித்து சட்டென்று இழுத்தான்.

சொக்கநாதன் தடுமாறினார். ஆனால், முற்றிலும் தன் நிலையைத் தவறவிடாமல் பூட்ஸ் காலை நேரே மங்களின் முகத்தில் வைத்தார். நசுக்கித் தேய்த்து தன்னை பாலன்ஸ் செய்து கொண்டார்.

கீழே கிடந்த மருதமலையும் மிக ஆத்திரமாகி இருந்தார்.

தன் பயிற்சியையெல்லாம் சேர்த்து கையை உயர்த்தி மங்களைப் பிடித்து உத்வேகத்துடன் தள்ளினார்.

மங்களின் மூக்கில் ரத்தம் வழிந்தது.

காயங்களின் எரிச்சல் அவனைத் தாக்கியது. அதை விட விஜய்க்கு என்ன ஆனது என்ற கவலையும் சேர்ந்து



தாக்கியது. விஜய்க்கு அடிபட்டிருந்தது அவன் ஒரு வேளை போலீஸில் மாட்டிக் கொண்டால் ஆபத்து.

எனவே கான்ஸ்டபிள்களை உதறி விட்டு எழுந்தான். விஜய் கிடந்த இடத்தை நோக்கி ஓடினான்.

லத்தியால் அடிக்கப்பட்ட ஆடுசதை கன்றிப்போயிருக்க வேண்டும். அலைஅலையாக வலி கிளம்பி உடல் எங்கும் ஊடுருவியது.

விஜய்யும் தடுமாறி எழுந்திருந்தான்.

அவன் முழங்கையில், கன்னத்தில் சிராய்ப்பின் சிவப்பு.

* * *

கான்ஸ்டபிள்கள் இருவரும் விசில் ஊதிக் கொண்டே ஓடிவரும் சத்தம் கேட்டதும், விஜய், மங்கள் இருவரும் பரபரப்பானார்கள்.

ஒருவரை ஒருவர் தாங்கிக் கொண்டு நொண்டியபடி அந்த தோட்டத்தின் இருட்டில் கடந்து வேலி தாண்டிக் குதித்தார்கள்.

* * *

கான்ஸ்டபிள்கள் சொக்கநாதன், மருதமலை இருவருக் கும் காயங்களை விட பதட்டம் அதிகமாய் இருந்தது.

''இன்ஸ்பெக்டருக்கு போன் செய்'' என்றார் மருத மலை, மூச்சிரைக்க.

சொக்கநாதன் தோட்டத்திற்குள் தன் டார்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி சற்று தூரம் ஓடி, இனி எதிரிகளைப் பிடிக்க முடியாது என்ற களைப்புடன், நின்றார். திரும்பினார்.

## 8

வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து, ரோஸ் லினை சமாதானப்படுத்தி, அவள்

சமைத்து வைத்து காத்திருந்து 'ஆறியே போய் விட்டதாக' புலம்பிக் கொண்டே பரிமாறிய சாப்பாட்டை பால்ராஜ் உதடு வரைக்கொண்டு போயிருப்பார். போன் வந்து விட்டது.

ரோஸ்லின் எடுத்து யாரென்று கேட்காமலேயே 'ராங் நம்பர்' என்று ஆத்திரத்துடன் வைத்தாள்.

பால்ராஜ் பதறினார்.

மறுபடி போன் ஒலித்தது.

பால்ராஜ் பாய்ந்து எடுத்தார்.

''என்னது!'' என்றார், அதிர்ச்சியுடன். ''நான் வருகிறேன்'' என்று ரிசீவரை வைத்தார்.

''சாப்பிடாமல் எங்கேயும் போக முடியாது'' என்று இடுப்புகளில் கையூன்றி ரோஸ்லின் மறித்தாள்.

''சரி, சரி, சாப்பிட்டு விட்டு போகிறேன்.''

பால்ராஜிற்கும் தூக்கம் இழந்த கண்கள் தொந்தரவு செய்தன. ஆனால் -

ஹரிதா வீட்டிலிருந்து கான்ஸ்டபிள் சொக்கநாதன் சொன்ன விவரங்கள் அந்த எரிச்சலை விரட்டியடித்தன.

* * *

''குட்.. வெரிகுட்'' என்றார் பால்ராஜ். ''இரண்டு பேரும் விட்டுக் கொடுக்காமல் போராடி வந்தவர்கள் இருவரையும் துரத்தியிருக்கிறீர்கள். கிரேட் ஜாப்.... ஆனால், இந்த அர்த்த ராத்திரியில் இங்கே என்ன தேவைப்பட்டிருக்கும்?''

''திருட வந்தவர்களாய் இருக்கலாம்...'' என்றார், சொக்கநாதன். சொல்லிவிட்டு, தப்பாய் ஏதாவது சொல்லிவிட்டோமோ என்ற கூச்சத்துடன் வாயைப் பொத்திக் கொண்டார்.

''லுக். சாதாரணமாகத் திருட வந்தவர்களாயிருந்தால் இதே ஏரியாவில் இருட்டில் இன்னும் எத்தனையோ



வீடுகள் வசதியாய் இருக்கும் போது போலீஸ் காவல் இருக்கிற வீட்டிற்கு வந்து திருட வேண்டும் என்ற அவசியம் இல்லை! வந்தவர்களுக்கு இந்த வீட்டிலிருந்து குறிப்பாக ஏதோ வேண்டியிருந்திருக்கிறது. காலையில் வெளிச்சத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று நான் அலட்சியமாக இருந்தது தப்பாகி விட்டது. விளக்குகளைப் போடுங்கள்...''

சக்திவாய்ந்த விளக்குகள் மீண்டும் எரிய ஆரம்பித்தன.

* * *

போன் ஒலித்து ஆதர்ஷைக் கலைத்தது.

கடிகாரத்தைப் பார்த்தான்.

இரவு மணி ஒன்றைத் தாண்டியிருந்தது.

விஜய், மங்களாக இருக்கும். காரியம் வெற்றி என்று சொல்வதற்காக இருக்கலாம்.

எப்படியும் காலையில்தான் வேலை இருக்கும்.

ஆதர்ஷ் போன் தொடர்பை அவிழ்த்து விட்டு திரும்பிப் படுத்தான்.

* * *

பால்ராஜ் மொட்டை மாடியை வலம் வந்தார்.

ஒவ்வொரு பகுதியாகப் பார்வையிட்டார்.

மரத்திலிருந்து தாவிக் குதித்து கைப்பிடிச்சுவரைப் பற்றி விட முனைந்த அடையாளம் தெரிந்தது.

விஜய்யின் கை வாழைப்பழத் தோலால் வழுக்கியதில், அவன் அழுந்தப் பற்ற முயற்சி செய்ததால் அவன் விரல் ரேகைகள் ஒரு தீற்றலாய் அங்கு பதிந்திருந்தன.

பால்ராஜ் அந்த இடத்தைச் சுற்றி வட்டமிட்டார்.

இது தவிர ட்ரெய்னேஜ் பைப்பைப் பிடித்து இழுத்து விழுந்ததில் அந்தப் பைப்பின் ஈரப்பாசியிலும் கைரேகைகள் நிச்சயம் பதிந்திருக்கும்!

பால்ராஜ் பைப் விழுந்திருந்த பகுதியை மாடியி லிருந்து பார்த்தார். வெகு எதேச்சையாக அவர் டார்ச் வெளிச்சம் அடுத்த ஸன்ஷேடைத் தொட்டது.

என்ன அது?

பால்ராஜ் பார்வையை உன்னிப்பாக்கினார்.

கையுறை!

பால்ராஜ் முதலிலேயே வீட்டை முழுமையாகப் பார்க்காததற்காகத் தன்னையே கடிந்து கொண்டார்.

டார்ச்சின் வெளிச்சத்தில் அந்தக் கையுறையில் காய்ந்திருந்த ரத்தம் தென்பட்டது. அப்படியானால் - இது இப்போது வந்தவர்கள் விட்டுப் போனதில்லை.

பால்ராஜின் உணர்வுகள் கூர்மையாயின.

பக்கத்திலிருந்த கான்ஸ்டபிளை அந்தப் பகுதிக்கு டார்ச் வெளிச்சம் காட்டச் சொல்லிவிட்டு, கைப்பிடிச் சுவர் பிடித்து மெல்ல அந்த ஸன்ஷேடின் மீது இறங்கினார்.

ஒரு உலர்ந்த பாலிதீன் பை கொண்டு வரச் சொன்னார். அந்தக் கையுறையை விரல் தொடாமல் தன் ரிவால்வர் முனையால் எடுத்து அந்த பாலிதீன் பையில் போட்டார்.

இந்தக் கையுறை இந்த கொலை வழக்கின் போக்கையே நிச்சயம் மாற்றப் போகிறது என்று அவருடைய உள் ளுணர்வு குறி சொல்லியது.

## 9

''உன்னிடம் பொறுப்பைக் கொடுக்கும் போது, அது நிச்சயம் உன்னால் செய்து முடிக்கப்பட்டு விடும் என்று நம்பித்தான் கொடுத்தேன், ஆதர்ஷ்!''

தாராசங்கர் மென்மையாகத்தான் சொன்னார். ஆனால் அந்த வார்த்தைகளில் ஆயிரமாயிரம் ஐஸ் ஊசிகள் இருந்தன.



ஆதர்ஷ் குறுகினான். ''விஜய்யும், மங்களும் இதுவரை இப்படி சொதப்பியதில்லை...'' என்றான்.

''பழியை இன்னொரு தோளுக்கு மாற்றுவதால் எனக்கோ உனக்கோ லாபம் இல்லை. அந்த கிளவுஸ் எக்காரணம் கொண்டும் போலீஸின் கையில் சிக்கக்கூடாது என்றேன்.. இவர்கள் போகாமல் இருந்திருந்தால் போலீஸ் ஒருவேளை கிளவுஸை கவனிக்காமல் கூட விட்டிருக்கலாம். ஆனால் உன் ஆட்கள் போய் சத்தம் போட்டு கூத்தடித்து அந்த கிளவுஸை மீட்டுப் போகத்தான் வந்தார்கள் என்பதை போலீஸிற்குக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்...''

''இன்னொரு தடவை இந்தத் தவறு நிகழாது. இந்த ஒரு முறை மட்டும் மன்னித்து விடுங்கள்...''

''உனக்கு மன்னிப்பு கிடைக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது'' தாராசங்கர் தன் நகங்களைத் தேய்த்துக் கொண்டே சொன்னார்.

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''அந்த கிளவுஸ் போலீஸாருக்குப் பயன்படக் கூடாது. கோர்ட்டில் அதை ஒரு சாட்சியாக அவர்கள் அதைப் பயன்படுத்தக் கூடாது...''

''யெஸ், கேப்டன்...''

''இந்த முறை வேலை தெரிந்தவர்களை உபயோகப் படுத்திக் கொள்...''

தாராசங்கர் கையசைத்து அவனைப் போகலாம் என்று சொன்னார்.

* * *

அட்வகேட் வீரராகவன் பளபளவென்று முன் வழுக்கையும், பளிச்சிடும் தங்க பிரேம் போட்ட கண்ணாடியுமாக இருந்தார். எட்டு முழம் வேட்டியை இடுப்பில் முடிந்திருந்தார்.

ஐம்பதுக்கு மேற்பட்ட வயது, மீசையற்ற முகம். அப்போதுதான் பூஜை முடித்து வந்தவர் போல நெற்றியில் குங்குமப் பொட்டு. வெற்றிலைச் சாறு நனைத்த உதடுகள்.

அவர் தோற்றத்திற்குப் பொருத்தமில்லாமல் கம்ப்யூட்டரில் ஏதோ கேஸ் விவரத்தைப் பார்த்து விட்டு நிமிர்ந்தார்.

''வாங்கோ'' என்றார்.

நவீன்ராஜ் கைகளைக் கூப்பிக் கும்பிட்டான். ''தாரா சங்கர் உங்களைப் பார்க்கச் சொன்னார்...''

''எனக்கும் தகவல் வந்தது. இந்த அறையில் உங்களையும் என்னையும் தவிர வேறு யாரும் கிடையாது.. என்ன விஷயமாக இருந்தாலும் தைரியமாக எதையும் மறைக்காமல் பேசலாம்!''

கீ போர்டை நகர்த்திவிட்டு, வெற்றிலைப் பெட்டியை எடுத்தார். இரண்டு வெற்றிலைகளைக் கிழித்து நெய் சீவலுடன் வாயில் அடக்கிக் கொண்டார். நவீன்ராஜைக் கூர்மையாகப் பார்த்தார்.

நவீன்ராஜ் வாய் திறந்ததும், போன் வந்தது.

வீரராகவன் போனை எடுத்தார். ''நாராயண், நான் இப்போது முக்கியமான மீட்டிங்கில் இருக்கிறேன்... எந்த போன் வந்தாலும் நீ சமாளித்துக் கொள்...'' என்று ரிசீவரை வைத்தார்.

''ஸாரி.. நீங்கள் சொல்லலாம்.''

''என்னைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்...''

''சூப்பர் நடிகர். இப்போது அதிகபட்ச சம்பளம் வாங்கும் மூன்று நடிகர்களில் ஒருவர்.. ஹரிதா என்ற பெண்ணை ஆசைப்பட்டு துரத்தித் துரத்தி காதலித்து கல்யாணம் செய்து கொண்டவர்... உங்களுக்குள் மனக்கசப்பு வந்து ஹரிதாவை விவாகரத்து செய்து விட்டவர்.. ஹரிதா நேற்று மாலை கொலை செய்யப்பட்டு விட்டாள்... கரெக்டா?''



''அந்தக் கொலையை செய்தது நான்தான்...'' என்றான், நவீன்ராஜ் மெல்லிய குரலில்.

வீரராகவன் ''ரியல்லி?'' என்றார். ''நீங்கள் என்றால் நீங்களே பர்ஸனலாகவா?''

''ஆ.. ஆமாம்...''

''நிறைய ரிஸ்க் எடுத்திருக்கிறீர்கள்... தாராசங்கரின் இரண்டு சினிமாக்களில் ஹீரோவாக இருக்கும் தைரியம் உங்களை அப்படி செய்யத் தூண்டியிருக்கலாம்...''

''இல்லை. ஹரிதா என்னைப் பற்றி தொலைக்காட்சி, பத்திரிகைகளுக்கு கொடுத்து வந்த பேட்டிகளால் அவள் மீது எனக்கு எழுந்த அதீத வெறுப்புதான் எனக்கு அந்த தைரியத்தைத் தந்தது. கொலையை செய்து முடிக்கும் போது எதிர்பாராத விபத்து நடந்து விட்டது... அதனால் தான் பிரச்சனையே...''

''பிரச்சனைகளிலிருந்து வெளியே கொண்டு வரத்தான் சம்பளம் வாங்கிக் கொண்டு நாங்கள் இருக்கிறோமே... எனக்கு எதையும் மறைக்காமல் ஒவ்வொரு சின்ன பாயிண்டைக் கூட மிஸ் பண்ணாமல் நடந்ததை நடந்தபடி சொல்லுங்கள். அதற்கப்புறம் நாம் தெளிவாகப் பேசுவோம்...''

நவீன்ராஜ் சற்றே தெளிந்தான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். இனி காப்பாற்றப்பட வேண்டுமென்றால், இவரைப் போல திறமையானவர்களால்தான் காப்பாற்றப்பட வேண்டும்.

எனவே முந்தின மாலையில் நடந்ததைக் குறைக்காமல் சொல்லி முடித்தான்.

''படப்பிடிப்பில் மறுபடி கலந்து கொண்டபோது எப்படியிருந்தது?'' என்றார், வீரராகவன்.

''அவர்கள் ஷாட் வைத்து விட்டு கூப்பிடுவதற்குள் வந்து விட்டோமே என்று பெருமையாகத்தான் இருந்தது...'' என்றான், நவீன்ராஜ்.

''என் கேள்வியை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை... பாதிப் படப்பிடிப்பில் பிரேக்கின் போது ஓய்வெடுக்கப் போய்விட்டுத் திரும்பினால் நார்மலாக எப்படியிருந்திருப்பீர்களோ, அப்படியிருந்தீர்களா?''

''அப்... அப்படித்தான் இருந்தேன்..''

''கொலை செய்ய நீங்களே போயிருக்க வேண்டாம் என்று இப்போது பேசுவதால் எந்த லாபமும் இல்லை... ஆனால் நீங்களே நேரில் போனதால் சில கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது. அந்த ஹெல்மெட், ஜெர்கின், பாண்ட் இவற்றின் மீதும் ரத்தம் தெறித்திருக்குமே! அவற்றை என்ன செய்தீர்கள்?''

''ஹெல்மெட்டில் ரத்தம் இல்லை. ஜெர்கினில் இருந்தது. காலை மடக்கி உட்கார்ந்திருந்ததால் பாண்ட் டின் முழங்கால் பகுதியில் கொஞ்சம் சிந்தியிருந்தது. திரும்பி வரும் வழியில் ஒரு தெருவோரக் குழாயில் கைக்குட்டையை நனைத்து அந்தக் கறையைத் துடைத்து விட்டு வந்தேன். இரண்டையும் படப்பிடிப்பில் கலந்து கொள்ளும் முன், தனியே ஒரு பாலிதீன் கவரில் போட்டு வைத்து விட்டேன்... படப்பிடிப்பு முடிந்து வீடு திரும் பியதும் அந்தக் கவரின் மீது பெட்ரோல் ஊற்றி எரித்து விட்டேன்... கையுறைகளிலும் வலது கையுறையை எரிந்து விட்டேன்.. இடது கையுறையை கொலை நடந்த இடத்திலிருந்து மீட்டு வரும்படி கேட்டனைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்...''

''படப்பிடிப்பில் பிரேக் விடுவதற்கு முன் இடதுகை நார்மலாக இருந்திருக்கும். பிரேக் முடிந்து கலந்து



கொள்ளும் போது அந்தக் கையில் வெட்டுக்காயம் இருந்திருக்குமே... அதை எப்படி...?''

''உண்மைதான். ரத்தம் நிற்காமல் வந்தது. துணியால் கட்டினால் கூட அடங்கவில்லை. அதனால் ஓய்வுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் இருந்த கண்ணாடி டம்ளர் ஒன்றைக் கீழே போட்டு சிலீர் என்று உடைத்து விட்டேன். கை தவறி டம்ளர் உடைந்தது என்றும் அதைப் பிடிக்கப் பார்த்த போது கையைக் குத்திக் கிழித்து விட்டது என்றும், அப்போதே சொல்லி விட்டேன்.. உடனடியாக டாக்டர் வந்து கவனித்து ரத்தப் போக்கை நிறுத்தி, ஒரு பிளாஸ்டர் ஒட்டிவிட்டுப் போய்விட்டார்...''

''குட்... கடைசி வரை இதையே சொல்லி சமாளிக்க வேண்டும்'' என்றார் வீரராகவன், புன்னகையுடன். ''நீங்கள் சாமர்த்தியமாக பதில் சொல்வதைப் பொறுத்துத்தான் என் வேலை சுலபமாகும். நீங்கள் போலீஸிலிருந்து தப்பிப்பது எளிதாகும்...''

''நீங்கள் சொல்லும்படி செய்கிறேன்'' என்றான், நவீன்ராஜ்.

## 10

கடற்காற்று பிய்த்துக் கொண்டு போனது. தூரத்து அலைகளை சற்று நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பால்ராஜ் அந்தக் கட்டிடத்திற் குள் திரும்பினார்.

தடவியல் துறையின் அறைகள் அவருக்குப் பழக்க மானவை. காகிதங்கள், மேலும் காகிதங்கள் என்று குவித்து வைத்திருந்த நாட்கள் போய், இப்போது கம்ப்யூட்டர் களின் உதவியுடன் தடயவியல் வெகுவாக முன்னேற்ற மடைந்து விட்டதை அவர் கவனித்து வந்திருக்கிறார்.

''ஹலோ பால்ராஜ்!''

''ஹலோ சாந்தாராம். எங்கே ரொம்ப நாளாய்க் காணோம்?''

சாந்தாராம் தடயவியல் துறையில் ஆரம்பத்தில் கை ரேகைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதில் வல்லவனாயிருந் தவன். இன்றைக்கும் அவனுடைய வேகம் அவரை பிரமிக்க வைக்கும்.

''நீங்கள் கொடுத்திருந்த கிளவுஸ் வெகு ஸென்ஸேஷன லாக இருக்கப் போகிறது'' என்றான் சாந்தாராம்.

''நீதான் பார்த்தாயா?''

''யெஸ்! வாருங்கள்... என் அறைக்குப் போகலாம்...''

உயரமான காரிடாரில் நடந்து, சாந்தாராமின் பிரத்யேக அறைக்குள் பால்ராஜ் நுழைந்தார்.

சாந்தாராம் சற்று குள்ளமானவன். விழிகளைப் பெரி தாக்கிக் காட்டும் கண்ணாடிகள் அணிந்திருந்தான்.

அவனுடைய நாற்காலியில் குதித்து ஏறி அமர்ந்தான்.

பால்ராஜ் அவனுக்கு எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தார். சிகரெட் பாக்கெட்டை வெளியே எடுத்தார்.

நீங்கள் புகை பிடிக்காமல் இருப்பதற்கு நன்றி!

- என்ற அறிவிப்பை சுவரில் பார்த்ததும் சிரித்துக் கொண்டே சிகரெட்டை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டார்.

''சொல் சாந்தாராம்...''

''கிளவுஸைப் பற்றி நான் கண்டுபிடித்ததைச் சொல் லும் முன், நடந்திருந்த கொலைகளை வைத்து, கொலை காரன் எப்படிப்பட்டவன் என்று உங்களால் சில தீர்மானங் களுக்காவது வர முடிந்ததா என்று சொல்லுங்கள்...'' என்றான் சாந்தாராம்.



இன்ஸ்பெக்டர் பால்ராஜிற்கு அந்தப் பயிற்சி மிகப் பிடிக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

பால்ராஜ் சுவரில் இருந்த அறிவிப்பை சுட்டிக் காட்டினார்.

''ஒரு சிகரெட் இருந்தால் என் மூளை கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கும்.''

சாந்தாராம் புன்னகைத்தான். அறையின் ஜன்னல் கதவுகளை முழுவதும் திறந்து வைத்தான்.

''நெருக்கமான நண்பர்களுக்கு விதிவிலக்கு உண்டு...'' என்றான்.

''தேங்க்யூ...'' பால்ராஜ் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''கொலை நடந்த இடத்தை ஆராய்ந்து சில குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன். குற்றவாளி பற்றி யோசிக்கும் போது யார்? என்ற கேள்விக்கு விடை தெரிய முதலில் ஏன்? என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும், சாந்தாராம்...

கொலையான இரண்டு பேரும் நெருக்கமானவர்கள் அல்ல. அதில் ஒரு கொலையாவது எதேச்சையான கொலை என்பது புரிகிறது. கொலை நடந்த முறையை கவனி... ஹரிதா மிக நெருக்கத்தில் கொலை செய்யப்பட்டிருக் கிறாள். தூரத்திலிருந்து டெலஸ்கோப் துப்பாக்கியால் கொலை செய்ய வசதி இருக்கிறது. ஆனால், கொலை காரன் அவளை வெகு அருகில் இருந்து கொன்றிருக் கிறான். கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ஆயுதம் ஒரு கத்தி. கொலை என்ற சாதாரண வார்த்தையை மீறி வெறித் தனமான கொலை என்று சொல்லக்கூடிய அளவு கழுத்தை வெட்டியிருக்கிறான். யாரோ திருடனோ கொள்ளைக் காரனோ தாக்கியிருந்தால் அது இப்படி இருந்திருக்காது. இது தனிப்பட்ட விரோதம் காரணமாக எழுந்த வெறியின் பிரதிபலிப்பாகத் தான் தோன்றுகிறது.

அடுத்த பாயிண்ட். கொலைகாரன் ஹரிதாவை ஏனோ தானோ என்று கொலை செய்யவில்லை. மிலிட்டரிக் காரர்கள் பதுங்கியிருந்து தாக்குவது போல பின்புறமிருந்து வளைத்து இழுத்து தன் முகத்தைக் காட்டாமல் ஹரிதா வின் முகத்தை அண்ணாத்தி சீவியிருக்கிறான். இப்படி செய்வதற்கு ஹரிதாவின் வீடு, அவள் நடவடிக்கை பற்றி முன்கூட்டி தெரிந்திருக்க வேண்டும். அவளைக் கொலை செய்ய அந்தக் கணம் கோபத்தில் முடிவு செய்திருந்தால் கழுத்து இப்படி அறுபட்டிருக்காது.

இது திட்டமிட்டு நடந்த கொலை. திட்டமிட்டு என்று சொல்லும் போதே அவளுக்குத் தெரிந்தவர் அல்லது அவளுடன் பழகிய யாரோ இதில் ஈடுபட்டிருக்க வேண் டும் என்று தோன்றுகிறது.

இரட்டைக் கொலைகளையும் சேர்த்து கவனித்தால் ஒரு கொலையில் திட்டமிடுதலும், இன்னொன்றில் தயாராய் இல்லாத தன்மையும் தெரிகின்றன.

ஹரிதாவின் கொலையை செய்தவன் திட்டமிட்டு யோசிக்கத் தெரிந்தவன். ஆயுதத்தை அவனே எடுத்து வந்திருக்கிறான். ஆனால் கார்த்திக்கின் மரணத்தை கவனித்தால், ஹரிதாவைத் தாக்கியவன், கார்த்திக்கை அங்கே எதிர்பார்த்திருக்கவில்லை என்று புரியும். அவன் திட்டமிட்டபடி எல்லாம் நடக்கவில்லை என்ற பதட்டம் கார்த்திக்கின் மீது நடத்தப்பட்டிருக்கும் தாக்குதலைப் பார்த்தால் புரியும். இதிலிருந்தே அவன் தொழில்ரீதியாக குற்றங்கள் செய்பவன் இல்லை, கொலை அவனுக்கு புதிது என்று யூகிக்க முடிகிறது. போலீஸ் ரெக்கார்டுகளில் அவன் பெயர் இதற்கு முன் இருக்க வாய்ப்பில்லை...

எல்லா தடயங்களையும் வைத்துப் பார்க்கும் போது ஹரிதாவிற்கு நெருக்கமானவர் யாரோ அவள் மீது கோபம் கொண்டு, வெறியாகி, திட்டமிட்டு, அவளைக் கொலை செய்திருக்க வேண்டும். அந்த சமயத்தில், கார்த்திக் எதிர்பாராத விதமாக குறுக்கிட்டதால் அவனையும் தாக்கி கொலை செய்திருக்க வேண்டும்.. நான் கண்டு எடுத்த கையுறையில் ரத்தக் கறை இருந்ததை வைத்துப் பார்த் தால் அது கொலைகாரன் அணிந்து வந்த கிளவுஸாயிருக்க வேண்டும். கார்த்திக்குடன் நடந்த போராட்டத்தில் அது கழற்றப்பட்டு அங்கே எறியப்பட்டிருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது.



கொலைகாரன் யாராயிருக்கக் கூடும் என்று எனக்கு பர்ஸனலாக ஒரு பெயர் கூடத் தோன்றியது. ஆனால், என் மனதில் அப்படிப்பட்ட எண்ணத்தை வளர்த்துக் கொண் டால், அது என் விசாரணையை திசை திருப்பி விடும் என்ப தால் அதற்கு நான் இதுவரை முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அதைப் பற்றி பேசவும் இஷ்டமில்லை...''

சாந்தாராம் கைகளை அதிராமல் தட்டினான்.

''ஒரு சிகரெட்டிற்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா? இத்தனை விஷயங்களைப் படபடவென்று வெளியே கொண்டு வந்திருக்கிறதே?'' என்று சிரித்தான்.

''நீ கண்டுபிடித்ததைச் சொல்...'' என்றார் பால்ராஜ், சிகரெட்டை அணைத்து ஜன்னலுக்கு வெளியே எறிந்து.

''அந்த கிளவுஸ் கொலைகாரன் இடது கையில் அணிந் திருந்த கிளவுஸ்தான்'' என்றான் சாந்தாராம். ''கிளவுஸில் ஹரிதாவின் ரத்தம் இருக்கிறது. அவள் கழுத்திலிருந்து பீறிட்ட ரத்தம் கிளவுஸை நனைத்திருக்கிறது. ஆனால் நமக்கு சாதகமான இன்னொரு விஷயம் என்னவென்றால் அந்த கிளவுஸில் மோதிர விரல், சுண்டு விரல் இரண் டிலும் கீழ்ப்பகுதியில் ஒரு வெட்டு இருக்கிறது. ஹரிதா

வின் கழுத்தை வெட்டிய கத்தி பிசகி கொலைகாரனின் கையையும் சீவியிருக்கிறது. அவள் கிளவுஸ் அணிந் திருந்ததால், கிளவுஸ் உள்புறத்தில் கிழிந்து விட்டது. அதைத் தாண்டி கத்தி கொலைகாரனின் சதையையும் வெட்டியிருக்கிறது!

கிளவுஸின் வெளிப்புறம் ஹரிதாவின் ரத்தம் இருப் பதைப் போல கிளவுஸின் உட்புறம் இன்னொரு வகை ரத்தம் இருக்கிறது. கிளவுஸ் வெட்டுப்பட்ட இடத்திலிருந்து ரத்தம் உள்நோக்கிப் பாய்ந்திருப்பதைப் பார்த்தால் உள்ளே இருப்பது கொலைகாரனின் ரத்தம் என்று தோன்றுகிறது..."

''வெயிட்... வெயிட்...'' இன்ஸ்பெக்டர் பால்ராஜ் எழுந்து விட்டார்.

"இடது கையில் உள்ளங்கைப் பகுதியில் அந்த இரண்டு விரல்களின் கீழ்ப்பகுதியிலும் வெட்டுப்பட்டிருக்கும் என்றா சொன்னாய்?''

''யெஸ்...''

"அன்றைக்கு கொலை பற்றி நவீன்ராஜிற்கு தகவல் தரப்பட்டு அவன் வந்தபோது அவனுடைய விரல்களில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன்..''

''பூ மீன் நடிகர் நவீன்ராஜ்! ஹரிதாவின் எக்ஸ் கணவன்?'' என்றான் சாந்தாராம், ஆச்சரியம் தொனிக்க.

''அவனேதான். அவனுடைய ரத்தத்தை சாம்பிள் வாங்கி விட்டால்...''

''இன்ஸ்பெக்டர்! நவீன்ராஜ் போல் செல்வாக்கும், பொது மக்களுக்குப் பழக்கமானவனும் நேரடியாக ஒரு கொலையில் ஈடுபடுவானா? காசை விட்டெறிந்தால் அந்தக் காரியத்தை அவனுக்காக செய்து தர ஆயிரம் பேர் இருப்பார்கள்...''



"அது முக்கியமான பாயிண்ட் தான். ஆனால் அவன் கையில் அன்று நான் பார்த்த பிளாஸ்திரிக்கு வேறு திருப்தியான விளக்கம் கிடைக்கும் வரை அவனை சந்தேகப்பட்டிய லில் முதல் இடத்தில்தான் நான் வைத்திருப்பேன்!''

''நான் கிளவுஸையும், அந்த ரத்த சாம்பிள்களையும் விவரமாகக் குறித்து வைக்கிறேன்.. நீங்கள் முடிந்தால், நவீன்ராஜின் ரத்த சாம்பிள் எடுத்து வாருங்கள்...''

''சாந்தாராம், வெட்டுப்பட்ட கையிலிருந்து ரத்தம் கையுறைக்குள் போயிருக்கிறது என்றாயே... விரல் நுனி வரை போயிருக்கிறதா?''

''நீங்கள் எதற்குக் கேட்கிறீர்கள் என்று புரிகிறது, கிளவுஸின் உட்புறம் ரத்தம் தோய்ந்த அவன் விரல் ரேகைகள் இருக்கின்றன'' என்றான், சந்தாராம்.

''அவற்றையும் நான் நம்மிடம் இருக்கும் ரெக்கார்டு களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.. ரத்த சாம்பிளும், கைரேகையும் கொண்டு வாருங்கள்... நவீன் ராஜ் குற்றவாளியா இல்லையா என்று நான் கண்டு பிடித்துச் சொல்கிறேன்...''

## 11

ஆதர்ஷ் அவனுடைய வாட்ச்சைக் கழற்றி கைக்குட்டையால் மெருகேற்றிக் கொண்டிருந்த போது கதவு திறந்து அவன் உள்ளே அழைத்து வரப்பட்டான்.

"உட்கார்" என்றான் ஆதர்ஷ். "பெயர்?''

''என் பெயர் விஜயசாரதி...''

''ஃபரான்ஸிக் டிபார்ட்மெண்ட்டில் பணிபுரிகிறாயா?''

''ஆமாம்...'' விஜயசாரதி ஒல்லியாய் இருந்தான். கன்னங்கள் ஒட்டியிருந்தன. கண்கள் பள்ளத்திற்குள்

இடுங்கியிருந்தன. நோய்வாய்ப்பட்டவன் போல் இருந் தான்.

''எதற்காக இங்கே அழைத்து வரப்பட்டிருக்கிறாய் தெரியுமா?''

''தெரியும்... எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கும் ஒரு தடயப் பொருள் உங்களுக்கு ரகசியமாக வேண்டும்.. அதை நான் எடுத்துக் கொடுத்தால் எனக்கு நீங்கள் பணம் கொடுப்பீர்கள்...''

''அந்தப் பொருள் என்ன என்று உனக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''ஹரிதாவின் வீட்டில் கண்டெடுக்கப்பட்ட கிளவுஸ் - கையுறை...''

''ஐயோ!''

''என்ன ஐயோ?''

''அது சாந்தாராமிடம் இருக்கிறது. அவர் வளைந்து கொடுக்காதவர். ஸ்ட்ரிக்டானவர்.. காசுக்கு மயங்காதவர்...''

''அது எனக்கு வேண்டும். அந்த கிளவுஸ் மட்டுமில் லாது, அது தொடர்பாக ஏதாவது குறிப்புகள் எடுக்கப்பட் டிருந்தால், அவை அழிக்கப்பட வேண்டும்.''

''வெளியே தெரிந்தால் எனக்கு வேலை போய்விடும்...''

''வெளியே தெரிந்தால் வேலை மட்டுமில்லை. உன் உயிரே போய்விடும்... வெளியே தெரியாமல் செய்யப்பட வேண்டும். நீ ரிடையர்மென்ட் வரை வேலைக்குப் போனால் உனக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் மொத்த மாக உனக்கு கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்... நீ மறுத்தாலோ என்னைக் காட்டிக் கொடுக்க நினைத்தாலோ உன் எட்டு வயது மகள் மீது எங்கள் கவனம் திரும்பும்...''



விஜயசாரதியின் கண்களில் அச்சம் மண்டியது.

''நான் மறுக்கவில்லை. ஆனால் இது சுலபமான வேலை இல்லை...''

''தொகையை நீ சொல். பாதியை அட்வான்ஸாக இப் பொழுதே வாங்கிக் கொள்.. ஆனால் எனக்கு ஏமாற்றமோ தோல்வியோ பிடிக்காது.''

''இரண்டு லட்சம்...'' என்று தயங்கித் தயங்கி சொன் னான் விஜயசாரதி.

ஆதர்ஷ் மேஜை இழுப்பறை திறந்து நூறு ரூபாய் கட்டுகளை எடுத்து வைத்தான். ''ஒரு லட்சம்'' என்றான். ''ஆனால் இத்தனையும் உடனே செலவு செய்யாதே! போலீஸிற்கு சந்தேகம் வந்துவிடும்...''

விஜயசாரதி நடுங்கும் விரல்களால் அந்தப் பணத்தை எடுத்து பத்திரப்படுத்தினான்.

''இன்று மாலைக்குள் கிளவுஸ் உங்கள் கைக்கு வந்து விடும்'' என்றான்.

## 12

நவீன்ராஜ் குதிரை மீது சவாரி செய்வதை சில குளோஸ்அப்கள் எடுத்துக் கொண்டிருந்த போது, அவனுடைய பி.ஏ. செல்போனை விரித்துக் கொண்டு அருகில் வந்தான்.

''இன்ஸ்பெக்டர் பால்ராஜ் என்பவர் உங்களுடன் பேச விரும்புகிறார்...''

நவீன்ராஜ் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டவில்லை. போனை வாங்கிக் கொண்டான்.

''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்.. கேஸில் ஏதாவது முன் னேற்றம் இருக்கிறதா?''

''உங்களுடன் பேச விரும்புகிறேன் நவீன்...''

''இப்போது நான் படப்பிடிப்பில் இருக்கிறேன்...''

''இல்லை. இது அவசரம்...''

''அப்படியா? இன்னும் அரை மணி நேரத்தில் நான் உங்களை சந்திக்கிறேன்...''

''படப்பிடிப்பு தளத்திற்கு வரட்டுமா?''

''ஐயோ, வேண்டாம்...''

''சந்திப்பை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளலாமா நவீன்?''

''உங்களுக்குத் தெரியாதா இன்ஸ்பெக்டர்? பத்திரிகைக் காரர்கள் வம்பு தேடி அலைபவர்கள்... வெளியிடத்திலோ, எங்கள் வீட்டிலோ நாம் சந்தித்தால், அதை வைத்து நூறு கதை கட்டி விடுவார்கள்...''

''நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறீர்களா?''

''அது இன்னும் ஆபத்து.. நாம் என் வக்கீல் வீரராகவன் வீட்டில் சந்திப்போம்... சரியாக முப்பது நிமிடத்தில் நான் அங்கு இருப்பேன்...''

''வக்..கீல் வீட்டிலா?'' - மறுமுனையில் பால்ராஜ் தயங்குவதை நவீன்ராஜ் ரசித்தான்.

''வீனஸ் காலனியில் இருக்கிறது அவர் வீடு.. அட்ரஸ் தெரியுமா?''

''தெரியும்... முப்பது நிமிடத்தில் சந்திப்போம்...''

* * *

நவீன்ராஜ் டைரக்டரை அருகில் கூப்பிட்டான்.

''எனக்கு வெகு அவசரமான வேலை இருக்கிறது. இரண்டு மணி நேரங்கள் போக வேண்டியிருக்கிறது.. நீங்கள் மற்ற காட்சிகளை எடுத்துக் கொண்டிருங்கள்... நான் வந்து விடுவேன்...''



டைரக்டருக்கு இது முதல் படம். ''சரி சார்'' என்பதைத் தவிர வேறு வார்த்தை சொல்லமுடியாது.

* * *

''இது மிஸ்டர் வீரராகவன். என்னுடைய அட்வகேட். இது இன்ஸ்பெக்டர் பால்ராஜ்'' என்று நவீன்ராஜ் அறிமுகம் செய்தான்.

''நாங்கள் ஏற்கெனவே அறிமுகமானவர்கள்'' என்றார் பால்ராஜ். ''நம் விசாரணையின் போது உங்கள் வக்கீலும் உடன் இருக்க வேண்டும் என்று ஏன் விரும்புகிறீர்கள் என்று புரியவில்லை...''

''நான் ஒரு பொது மனிதன். புத்திசாலித்தனமில்லாமல் ஏதாவது பேசி சிக்கிக் கொள்ளக்கூடாது அல்லவா? அதற்காக'' என்று நவீன்ராஜ் சிரித்தான்.

''வெல்.. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்கள் வந்துவிட்டன... ஹரிதா மிக வன்மத்துடன் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்.. கார்த்திக் மிக பதட்டத்துடன் கொலை செய்யப்பட்டிருக்கிறான்... கொலை நடந்த இடத்தில் எங்களுக்கு இன்னொரு ஆதாரமும் கிடைத்திருக்கிறது, நவீன்ராஜ்.. ஒரு கிளவுஸ் - கையுறை...''

''ஒரு கையுறையா, ஒரு ஜோடி கையுறையா?''

''ஒரு கையுறை - இடது கையுறை. அது கொலைகாரனின் கையுறை என்பதும் தெளிவாகி விட்டது.''

''எப்படி?'' என்றார் வீரராகவன்.

''கையுறையில் ஒரு வெட்டு இருக்கிறது. கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்திதான் அந்த கையுறையையும் சீவியிருக்க வேண்டும். அந்தக் கையுறையில் ஹரிதாவின் ரத்தமும், அந்தக் கையுறையை அணிந்திருந்தவன் ரத்தமும் எங்களுக்குக் கிடைத்துள்ளன.''

நவீன்ராஜ் அவனையறியாமல் கைக்குட்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''கொலை நடந்த அன்று உங்கள் இடது கையில் ஒரு பிளாஸ்திரி பார்த்த நினைவு...'' என்றார் பால்ராஜ் நேரடியாக.

''அந்தக் காயத்தை நான் பார்க்கலாமா?''

''நான் அந்தக் கொலையை செய்தேன் என்று குற்றம் சாட்டுகிறீர்களா இன்ஸ்பெக்டர்?''

''ஏன் படபடப்பாகிறீர்கள்? ஒரு போலீஸ் அதிகாரி என்ற முறையில் என் கடமை விசாரணை செய்வது. உங்கள் கையைப் பார்க்கலாமா?''

நவீன்ராஜ் வீரராகவனைத் திரும்பிப் பார்த்தான்.

காட்டு என்பது போல் அவர் சைகை செய்தார்.

நவீன்ராஜ் தன் இடதுகையை விரித்து நீட்டினான்.

''இந்த பிளாஸ்திரியை எடுத்து விடலாமா?'' - இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சரேலென்று அந்த பிளாஸ்டரைப் பிய்த்தார்.

நவீன்ராஜின் இடது மோதிரவிரல், சுண்டு விரல் இரண்டின் கீழ்க்கோட்டிலும் அந்த வெட்டுக் காயம் இப்போது காய்ந்திருந்தது. ஆனாலும் சிகப்புக் கோடாகத் தெரிந்தது.

''ஆச்சரியமான விஷயம்... கிளவுஸிலும் இதே பகுதியில்தான் வெட்டுப்பட்டிருந்தது...''

''ஆச்சரியம்தான்...'' என்றான், நவீன்ராஜ். ஆனால், அவன் நினைத்த அளவிற்கு அதை கிண்டலாக சொல்ல முடியவில்லை. சற்றுத் திணறலாகத்தான் சொன்னான்.

''ஹரிதாவின் கொலை தொடர்பாக உங்களை நான் சந்தேகத்தின் பேரில் கைது செய்கிறேன், நவீன்ராஜ்...''



''வெயிட், வெயிட்...'' என்று குறுக்கிட்டார், வீரராகவன். ''சந்தேகத்தின் பேரில் கைது செய்ய உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று எனக்கும் தெரியும். ஆனால் நவீன்ராஜ் பொது வாழ்க்கையில் நிறைய செல்வாக்கும் புகழும் உள்ளவர். அவரை நீங்கள் கைது செய்வதன் மூலம் தமிழ்நாட்டிலேயே ஒரு பரபரப்பு உண்டாகும். ரகளை நடக்கும். அதனால், அவசரப்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. நவீன்ராஜ் எங்கேயும் ஓடி ஒளியப்போவதில்லை. நீங்கள் சரியான ஆதாரத்துடன் கைது செய்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது... ஒருவேளை நீங்கள் கைது செய்தது தவறாகி விட்டால், ரசிகர்கள் கொதித்து எழுவது மட்டுமில்லை, உங்கள் மீது அநாவசியத்திற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போட வேண்டிவரும்...''

''மிரட்டுகிறீர்கள்...''

''நோ, நோ.. நல்லதிற்குத்தான் சொல்கிறேன்.''

''என்ன ஆதாரங்கள் உங்களுக்குத் தேவை?''

''உங்களுக்குக் கிடைத்திருக்கும் கிளவுஸில் இருக்கும் ரத்தம் நவீன்ராஜின் ரத்தம்தான் என்ற ஆதாரம்... அதில் இருக்கும் கைரேகை நவீன்ராஜின் கைரேகை தான் என்ற ஆதாரம்... நவீன்ராஜ் கொலை நடந்த நேரத்தில் அங்கே இருந்தார் என்ற ஆதாரம்...''

''உங்கள் கைரேகைகளும், ரத்த சாம்பிளும் எடுத்துக் கொள்ள அனுமதி உண்டா?'' என்றார் பால்ராஜ், நவீன்ராஜிடம்.

''இது சரியான அப்ரோச்...'' என்றார், வீரராகவன்.

''நவீன்ராஜ், போலீஸுடன் ஒத்துழையுங்கள்...'' என்றார், நவீன்ராஜிடம்.

அங்கு நடந்தேறும் நாடகத்தில் அவரால் புரிந்து கொள்ள முடியாத ஒரு சூது இருப்பதாக பால்ராஜிற்குத்

தோன்றியது. ஆனால், அவசரப்படமுடியாத ஒரு அவஸ்தையும் இருந்தது.

"ஆதாரங்களுடன் நான் மறுபடி தொடர்பு கொள்கிறேன்.. இப்போது ரத்தம், கைரேகை இரண்டையும் எடுத்துப் போகிறேன்.." என்றார், நம்பிக்கையுடன்.

## 13

"கையைக் கொடுங்கள்" என்றான் சாந்தாராம். பால்ராஜின் கையைப் பிடித்து குலுக்கினான். நீங்கள் கொண்டு வந்திருக்கும் ரத்த சாம்பிள் ஏ குரூப். கிளவுஸில் கிடைத்த ரத்தமும் ஏ குரூப்."

"குரூப் மட்டும் ஒன்றாய் இருந்துவிட்டால் போதாதே, சாந்தாராம்."

"டோண்ட் ஒர்ரி. இப்போது டி.என்.ஏ. டெஸ்ட் என்றெல்லாம் வந்தாகிவிட்டது. இந்த ரத்தம் இந்த நபருடையது தான் என்று அடித்துச் சொல்லும் வசதி இருக்கிறது. அந்த டெஸ்ட்டிற்கு அனுப்பி விடுகிறேன். நவீன்ராஜின் இடது கையை அப்படியே ஒரு காகித்தில் பதித்து எடுத்து வந்திருக்கிறீர்களே. அதுவும் நமக்கு வெகு உபயோகமாக இருக்கப் போகிறது."

சாந்தாராம் அந்தக் காகிதத்தில் கத்திரியை ஓட்டினான். தேவையற்ற பகுதிகள் கத்தரிக்கப்பட்டு, இடது கையை தோதல் சின்னம் போல் விரித்துக்காட்டும் காகிதமாக அது இப்போது தெரிந்தது. சுண்டு விரல் மோதிர விரல் இரண்டின் அடிப்பகுதியிலும் வெட்டுப்பட்ட இடம் ஒரு கோடாகத் தென்பட்டது.

"இதை அப்படியே அந்த கிளவுஸிற்குள் செருகிப்பார்த்தால், கிளவுஸில் வெட்டும், இந்தக் கையில் இருக்கும் காயத் தடயமும் பொருந்துகிறதா என்று பார்த்து விட முடியும்..."



சாந்தாராம் பரபரப்பாக அலமாரி திறந்தான். கிளவுஸை வைத்திருந்த ட்ரேயை எடுத்து வந்தான்.

மேஜையின் ட்ரேயை வைத்தவுடன் அவன் முகம் சுருங்கியது. அவன் குரல் பரபரப்பானது.

அவன் வைத்து விட்டுப்போன கையுறை இது இல்லை.

அது இன்னும் அழுக்காக, காய்ந்த ரத்தக் கறையுடன் அல்லவா இருந்தது.

"சாந்தாராம்.. இதுவா நான் கொண்டு வந்த கையுறை?" பால்ராஜின் குரலிலும் வியப்பு.

"இல்லை!" சாந்தாராம் இரும்பு அலமாரிக்கு ஓடினான். அங்கிருந்த மற்ற ட்ரேக்களையும் எடுத்துப்பார்த்தான். வேறு என்னென்னவோ பொருட்கள் இருந்ததே தவிர கையுறை இல்லை.

சருமத்துடன் பொருந்தும் மெல்லிய கிளவுஸ் அணிந்திருந்தான், சாந்தாராம். அந்த விரல்களினால் ட்ரேயில் இருந்த கையுறையை மெல்ல எடுத்துப் பார்த்தான்.

இந்தக் கையுறை அளவே மாறியிருந்தது. துணியே மாறியிருந்தது. விரல்களின் அடிவாரத்தில் வெட்டுப் பட்டிருந்த பழைய கையுறை போல் அல்லாமல், இந்தக் கையுறையில் விரலின் நுனிப்பகுதியில் வெட்டுப்பட்டிருந்தது.

"வாட் நான்சென்ஸ்!" என்றான், சாந்தாராம். கொலை நடந்த இடத்திலிருந்து நீங்கள் கொண்டு வந்த கையுறை இது இல்லை... ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது..."

"வேறு யாராவது எடுத்துப் போயிருக்கிறார்களா என்று விசாரி சாந்தாராம்..."

''தடயமாக வந்த பொருளை அப்படி ஆளாளுக்கு எடுத்துப் போகமுடியாது இன்ஸ்பெக்டர்... இருந்தாலும், ஒருவேளை இன்னொரு குற்றத்திற்காக வந்த கையுறை யாக இது இருந்து தவறுதலாக மாறிவிட்டதா என்று விசாரிக்கிறேன்...''

அடுத்த அரைமணி நேரம் சாந்தாராம் நேரிலும், இண்டர்காமிலும் வெவ்வேறு செக்ஷன்களில் விசாரிப்பதில் செலவானது.

இறுதியில் அவன் முகம் மிகவும் சூம்பிப் போயிருந்தது.

''இன்ஸ்பெக்டர்... ஏதோ சதி நடந்திருக்கிறது. யாரோ வேண்டுமென்றே கையுறைகளை மாற்றியிருக்கிறார்கள்...''

''இது பெரிய விஷயம் இல்லையா?''

''மிகப்பெரிய விஷயம்தான். நான் மேலிடத்தில் புகார் கொடுக்கப் போகிறேன்...''

''உன்னைத் தவிர வேறு யாரிடமாவது இந்த பீரோவுக்கான சாவி இருக்கிறதா?''

''இருக்கிறது. நானும் விஜயசாரதியும் இந்த பீரோவைப் பயன்படுத்துவோம்...''

''விஜயசாரதியைக் கேளேன்.''

''விசாரித்தேன். அவனுக்கு உறவினர்கள் யாரோ இறந்து விட்டதாக போன் வந்தது என்று கிளம்பிப் போய்விட்டானாம்..''

''எனக்கென்னவோ இதில் சதி இருக்கலாம் என்று தோன்றுகிறது. கமான், விஜயசாரதி வீட்டிற்குப் போவோம்...''

''அவன் வீட்டிற்கா?''

''ஆமாம், சாந்தாராம்.. அந்த கிளவுஸ் தான் இந்தக் கேஸின் முக்கிய சாட்சி. முக்கிய சாட்சி மட்டுமில்லை. ஒரே சாட்சி!''



சாந்தாராம் மற்றதை பீரோவில் வைத்துப் பூட்டினான்.

''புறப்படுவோம்'' என்றான்.

## 14

''எக்ஸலண்ட்'' என்றான், ஆதர்ஷ். அவன் முகம் வெகு பிரகாசமாக இருந்தது.

எதிரே உட்கார்ந்திருந்த விஜயசாரதியின் முகத்தில் அந்த பிரகாசம் இல்லை.

''நான் மிகப் பெரிய ரிஸ்க் எடுத்திருக்கிறேன். வெளியில் தெரிந்தால்...''

''உன் வேலை போனால் போகட்டும். நீ கேட்ட தொகை உனக்கு கொடுத்து விட்டேன்...''

ஆதர்ஷ் பாலிதீன் கவரில் போடப்பட்ட அந்த கையுறையை தன் விரல் தொடாமல் புரட்டிப் பார்த்தான்.

''இதைப் பார்த்தால் கேப்டன் ரொம்ப சந்தோஷப்படுவார்'' என்றான்.

விஜயசாரதி தயங்கினான்.

''என்ன?''

''எனக்கு இன்னும் இருபதாயிரம் கிடைக்குமா?''

ஆதர்ஷின் புன்னகை பெரிதானது. ''பேசிய தொகைக்கு மேல் கொடுத்து எனக்குப் பழக்கம் இல்லை. ஆனாலும் நீ செய்திருப்பது மிகப்பெரும் உதவி என்பதால் - இந்தா...''

இரண்டு நூறு ரூபாய்க் கட்டுகளை எடுத்து விஜயசாரதியின் பக்கம் போட்டான்.

விஜயசாரதி நன்றி சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறியதும், ஆதர்ஷ் இண்டர்காமில் பேசினான்.

''பெயர் விஜயசாரதி.. இப்போது என் அறையை விட்டு வெளிப்பட்டிருக்கிறான். அவனிடம் ஏற்கெனவே கொடுத்த

ஒரு லட்சம் தவிர, இப்போது ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன்... பணம் பெரிதில்லை. ஆனால் விஜயசாரதியின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அவன் வீடு போய் சேரக்கூடாது. விபத்தாய் இருந்தால் பரவாயில்லை...'' என்று ரிசீவரை வைத்தான்.

* * *

விஜயசாரதி தன் மோட்டார் சைக்கிளை கவன மாகத்தான் திருப்பினான்.

மகளுக்கு வாங்கியிருந்த பட்டுச்சட்டையும், இனிப்புப் பொட்டலங்களும் பார்த்து அவள் முகத்தில் என்ன சந்தோஷம் பரவும் என்பதை கற்பனை செய்து கொண்டே அவன் திருப்பினான்.

அந்த ஜீப் அவனை உரசுவது போல் வந்தது. உரசியது. இடித்துத் தள்ளித் தூக்கி எறிந்தது.

விஜயசாரதி அந்தரத்தில் பறந்த நேரம் இனிப்புகளும் பறந்தன.

அவன் தார்ரோடில் நச்சென்று மோதி விழுந்ததும் கடைசியாகப் பார்த்தது -

அவனை நோக்கி விரைந்து வந்த ஜீப்பின் சக்கரத்தைத் தான்!

## 15

''திட்டமிட்ட சதி!'' என்றான், சாந்தா ராம்.

''என்னிடமிருந்த சாம்பிள்களுடன் நவீன்ராஜின் ரத்தம் ஒத்துப்போகிறது. கைரேகை ஒத்துப்போகிறது. ஹரிதாவை கொலை செய்தது அவன்தான் என்று தீர்மானமாகத் தெரிகிறது.



ஆனால் அதை நிரூபிக்கத் தேவையான தடயம் நம் கையை விட்டுப் போய்விட்டது...''

''தடயம் இல்லாவிட்டால் என்ன சாந்தாராம்? நடந் ததை நடந்தபடி கோர்ட்டில் சொல்வோமே!'' என்றார் இன்ஸ்பெக்டர், பால்ராஜ்.

''நான் சாட்சி சொல்லத் தயார்... ஆனால் நம் வாதம் நிற்காது - அதுவும் அவர்கள் பக்கம் வீரராகவன் போல ஒரு சாதுர்யமான வக்கீல் இருக்கும்போது!''

''விஜயசாரதி பணத்திற்கு ஆசைப்பட்டு கடைசியில் உயிரை விட்டதுதான் மிச்சம்... நம்மிடம் இருந்த ஆதாரமும் போயிற்று. அவனுக்கும் எந்த உபயோகமும் இல்லை!''

''நவீன்ராஜிற்கு அவ்வளவு செல்வாக்கு இருக்கிறதா இன்ஸ்பெக்டர்?''

''பணம்! கைகொள்ளாமல் பணம் இருக்கிறது. இப்போது ஆதரவு தர பின்னால் தாராசங்கர் இருக்கிறார்.. அரசியல் செல்வாக்கு, குண்டர்கள் செல்வாக்கு, தொழிலதிபர் செல்வாக்கு என்று எல்லா செல்வாக்கும் உள்ள மனிதர்! அவருடைய நீண்ட கைகள் தான் விஜயசாரதியை விலைக்கு வாங்கியதும் - அவனைத் தீர்த்துக் கட்டியதும்...''

''நாம் என்ன செய்யப் போகிறோம்?''

''கமிஷனரின் அனுமதி வாங்கி நான் கோர்ட்டில் கேஸைப் போடலாம் என்று நினைக்கிறேன்!''

''ஆல் தி பெஸ்ட்!'' என்றான், சாந்தாராம். ''என்னுடைய முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு...''

* * *

''அக்கிரமம்!'' என்றாள், விமலா. அவள் மூக்கு விகசித்து விகசித்து அடங்கியது. ''வெகு அக்கிரமம்...''

''நீங்கள் கொதிப்படைவீர்கள் என்று தெரியும்'' என்றார், பால்ராஜ். ''நவீன்ராஜ்தான் கொலைகாரன் என்று எனக்குத் தெரியும். ஆனால் சட்டத்தின் பார்வையில் அதை என்னால் நிரூபிக்க முடியாது. எனக்கு உங்கள் பத்திரிகையின் ஆதரவு வேண்டும். அப்போது தான் கோர்ட்டில் வழக்கிற்கு ஒரு கவனம் கிடைக்கும்.''

விமலா சிகரெட்டை வேகமாக ஊதினாள்.

''நான் தயார். இதில் கொலையாகி இருப்பது எங்கள் பத்திரிகை நிருபர் கார்த்திக். என் இனிய நண்பன் கார்த்திக். நிச்சயம் எங்கள் பத்திரிகை உங்களுக்கு ஆதரவு தரும்...''

''அதே சமயம் உங்களுக்கு ஆபத்து அதிகமாகி விடும்'' என்றார், பால்ராஜ்.

''நான் கவனமாய் இருக்கிறேன்...'' விமலாவின் குரலில் தைரியம் இருந்தது. தன்னம்பிக்கை இருந்தது.

## 16

''என் கட்சிக்காரர் நவீன்ராஜிற்கு சமூகத்தில் சிறப்பான புகழும், நன்மதிப்பும் இருப்பதைப் பொறுக்காமல் அவர் பெயருக்கு இழுக்கு சேர்க்க பல முயற்சிகள் நடந்துள்ளன. பத்திரிகைகள் தங்கள் விற்பனை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக அவரிடமிருந்து விவாகரத்து பெற்ற ஹரிதாவின் பேட்டிகளைத் தொடர்ந்து வெளியிட்டன.

பேட்டிகளில் ஹரிதா அவர்கள் தன் தனிப்பட்ட வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் நவீன்ராஜைப் பற்றி உண்மைக்குப் புறம்பான பல தகவல்களைக் கொடுத்து வந்தார்.



நவீன்ராஜின் பர்ஸனல் வாழ்க்கையின் ரகசியங்கள் என்ற பெயரில் அவரது புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் பல தகவல்களைத் தந்து வந்தார்.

இதன் காரணமாக, பத்திரிகைகளின் மத்தியிலும், அவற்றைப் படிக்கும் வாசகர்கள் மத்தியிலும் நவீன்ராஜைப் பற்றிய ஒரு மோசமான கண்ணோட்டம் வளர்ந்திருக்கலாம்...

அதனாலேயே ஹரிதா கொலை செய்யப்பட்டதும், அந்தக் கொலைக்கு நவீன்ராஜ்தான் காரணம் என்று கதை கட்டி விட்டார்கள். மக்கள் மத்தியில் அப்படியொரு எண்ணத்திற்கு ஆதரவு இருக்கும் என்று நம்பி போலீஸும் அவசரம் அவசரமாக நவீன்ராஜைக் குற்றவாளியாக்க முயற்சி செய்தது.

கொலை நடந்த இடத்தில் ஒரு கிளவுஸ் கிடைத்ததாகச் சொல்லி அதில் நவீன்ராஜின் ரத்தம் கலந்திருந்ததாகவும் சொல்லி அவர் பேரில் பழியைத் திருப்பப் பார்த்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பால்ராஜ் என் கட்சிக்காரரிடம் அவருடைய ரத்தம் சாம்பிள் வேண்டும் என்று கேட்டபோது நானும் உடன் இருந்தேன்.. கொலை செய்திருந்தாலோ, கொலை செய்த இடத்தில் தன் கிளவுஸை விட்டு விட்டு வந்திருந்தாலோ போலீஸ் கேட்டபோது ரத்தத்தைக் கொடுக்க அவர் தயங்கியிருக்க வேண்டும். ஆனால், எந்தவித தயக்கமும் இல்லாமல் ரத்தமும், கைரேகையும் நவீன்ராஜ் கொடுத்தார்.

அதன்பின் நவீன்ராஜின் ரத்தம் இருந்ததாக கேஸ் ஜோடிக்கப்பட்டிருக்கிறது. கொலை நடந்த இடத்தில் இருந்த கையுறை மாற்றப்பட்டு விட்டதாக போலீஸ் தன் வாயாலேயே ஒத்துக் கொள்கிறது. இது இவ்வாறாக இருக்க என் கட்சிக்காரர் மீது குற்றம் சொல்வது என்ன நியாயம்?

இந்தக் கொலை வழக்கில் போலீஸ் தன் கடமையை சரிவர செய்யவில்லை என்றும், அவசரம் அவசரமாக என் கட்சிக்காரரை குற்றவாளி என்று அறிவித்து அவர் மீது வழக்கை ஜோடிக்க முயற்சி செய்துள்ளது என்றும் நான் கனம் கோர்ட்டார் முன்னிலையில் தெரிவிக்க விரும்புகிறேன்.''

வீரராகவன் இன்னும் பல பாயிண்ட்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி தன் வாதத்தை பலப்படுத்திக் கொண்டார்.

பால்ராஜ் கொடுத்த சாட்சியும், சாந்தாராம் கொடுத்த சாட்சியும் எல்லாவற்றையும் நீதிபதி சுவாரஸ்யமில்லாமல் கேட்டாற் போலிருந்தது.

இறுதியில் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

''திரு நவீன்ராஜ் அவர்கள்தான் குற்றவாளி என்பது போலீஸாரால் தீர்மானமாக நிரூபிக்கப்படவில்லை. யூகங்களும், கருத்துக்களும் மட்டும் ஒரு வழக்கை முடிவு செய்ய போதுமானவை அல்ல.

சரியான முழுமையான ஆதாரங்கள் இல்லாமல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒரு மனிதரைப் பற்றி குற்றம் சொல்வதும், வழக்குப் போடுவதும் அவசியமற்ற செயல்கள் என்று போலீஸை இந்நீதிமன்றம் கண்டிக்கிறது.

ஆதாரங்கள் இல்லாத காரணங்களாலும், அவர் குற்றம் புரிந்தவர் என்று போலீஸ் தரப்பில் நிரூபிக்கத்தவறி விட்டதாலும், திரு நவீன்ராஜ் அவர்களை நிரபராதி என்று கருதி இந்நீதிமன்றம் இவ்வழக்கிலிருந்து விடுவித்து தீர்ப்பளிக்கிறது.''

* * *

கோப்பைகளை இடித்து தாராசங்கர், ஆதர்ஷ், நவீன்ராஜ் ஆகியோர் மாலையில் அந்த விடுதலையைக் கொண்டாடினார்கள்.



''உங்களுடைய சக்தி என்ன என்று மறுபடி நிரூபித்து விட்டீர்கள்'' என்று தாராசங்கரிடம் நவீன்ராஜ் பணிவாக சொன்னான்.

''அதற்காக அடுத்த கொலையையும் நீயே பர்ஸனலாகச் செய்ய வேண்டும் என்று நினைக்காதே'' என்றார், தாராசங்கர்.

அவர் ஜோக்காக சொல்லவில்லை, சீரியஸாகச் சொல்கிறார் என்று புரிந்து நவீன்ராஜ் புன்னகைக்காமல் தலையை ஆட்டினான்.

## 17

விமலா குப்பைத் தொட்டியை ஓங்கி உதைத்தாள்.

அது பெரும் ஓசையுடன் எகிறி உருண்டது.

''நோ, நோ, நோ'' என்று இரு கைகளையும் உயர்த்தினார் பால்ராஜ். ''கோபத்தினால் நாம் எதையும் சாதிக்க முடியாது!''

''கோபம் உங்கள் பேரில் இல்லை. கையாலாகாத உங்கள் டிபார்ட்மெண்ட்டின் மீது. நூற்றுக்கணக்கான ஓட்டைகள் இருக்கும் சட்டத்தின் மீது!''

விமலா எழுந்து அவளே அந்தக் குப்பைத் தொட்டியை அதனிடத்தில் கொண்டு வைத்தாள்.

''கேவலம் பணத்திற்கு ஆசைப்பட்டு முக்கியமான தடயத்தையும் ஆதாரத்தையும் வீணாக்கிவிட்ட விஜய சாரதியின் மீது எழும் கோபம் இது..''

''பத்திரிகைக் காரர்களின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்று நவீன்ராஜிற்குப் புரியவில்லை...''

என்றார், பால்ராஜ். ''நாங்களாவது ஆதாரம் இருந்தால்தான் நெருங்கமுடியும். நீங்கள் இருந்த இடத்திலிருந்தே அம்புகளை வீசுவீர்கள். கட்டுரைகளில் முகத்திரைகளைக் கிழிப்பீர்கள். பேட்டிகளில் முகத்தில் அமிலத்தையே வீசுவீர்கள். பொதுவாக பத்திரிகைக்காரர்கள் தப்பித்து விடுகிறார்கள்...''

''எங்கள் அம்புகள் எல்லாம் காகித அம்புகள்...'' என்றாள் விமலா, சலிப்புடன். ''எனிவே, நியாயத்திற் காகக் குரல் கொடுக்க உங்களைப் போல சில நல்லவர்கள் இருக்கிறீர்களே... அதுவே எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது!''

விமலா, பால்ராஜின் மேஜையில் வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை உருவினாள்.

''தேங்க்யூ... எனக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் உங்களை நான் தொந்தரவு செய்யலாம் இல்லையா?''

''அஃப்கோர்ஸ்'' என்று தீப்பெட்டியை நீட்டினார், பால்ராஜ்.

## 18

நவீன்ராஜ் அந்தக் கதவை மெல்லத் தட்டிவிட்டுத் திறந்தான்.

கம்ப்யூட்டரில் விளையாடிக் கொண்டிருந்த தாராசங்கர் பார்வையை கம்ப்யூட்டரிலிருந்து விலக்காமல் கையால் ஒரு நாற்காலியைக் காட்டினார்.

நவீன்ராஜ் உட்கார்ந்தான். காத்திருந்தான்.

தாராசங்கர் அந்த விளையாட்டை முடித்துவிட்டு, நிமிர்ந்தார்.



''வரச் சொன்னீர்களாமே?'' என்றான், நவீன்ராஜ்.

''ஆமாம்.. நீ ஏதோ இந்திப் படத்தில் புக் ஆகி இருப்ப தாக டைரக்டர் சொன்னாரே...''

''ஆமாம் கேப்டன்.. ப்ரியதர்ஷன் டைரக்ஷனில் முதன்முதலாக இந்திப்படம் பண்ணலாம் என்று...''

''அதற்காக நம் படம் இரண்டாம் பட்சமாகி விட்டதா?''

''ஐயோ, அப்படியெல்லாம் இல்லை கேப்டன்..''

''இன்னும் பதினாறு காட்சிகள் உன்னை வைத்து எடுக்கப்பட வேண்டும்... எல்லாமே மிக முக்கியமான காட்சிகளாம்... டைரக்டர் சொன்னாரே...''

''ஆமாம் கேப்டன். இந்திப் படத்திற்கு நியூஸிலாந்து போக வேண்டும் என்று சொன்னார்கள். நம் படத்திற்கும் ஒரு பாடல்காட்சி வெளிநாட்டில் எடுக்கப்பட வேண்டி யிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக வைத்துக் கொள்ள லாமே என்று நான்தான் சொன்னேன்...''

''உன் ஒருத்தனுக்காக மொத்த ஷெட்யூலையே மாற்றச் சொல்கிறாயா? இந்தக் கட்டத்தில் கூட உன்னை தூக்கி எறிந்துவிட்டு மொத்தப் படத்தையும் என்னால் டிராப் செய்ய முடியும்.. செய்யட்டுமா?''

தாராசங்கரின் குரல் ஒரு டெஸிபல் கூட உயர வில்லை.

ஆனால் நவீன்ராஜின் உதடுகள் நடுங்கின.

''ஏன் கேப்டன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்?''

''தூக்கு மேடைக்குப் போயிருக்க வேண்டியவன் நீ! உன்னை யார் காப்பாற்றினார்கள் என்று மறந்து போகாதே!''

''மறக்கவில்லை, கேப்டன்...''

''ஏற்கெனவே நம் படத்திற்குக் கொடுத்த தேதிகளை மாற்ற முடியாது. நம் படங்களை முடித்துவிட்டு அப்புறம் நீ இந்திப் படத்திற்கோ, இங்கிலீஷ் படத்திற்கோ போகலாம், புரிகிறதா?''

''புரிகிறது கேப்டன்..''

''நான் கூப்பிட்டுப் பேசியதால் டைரக்டர் மீது ஆத்திரம் கொள்ளாதே.. செட்டில் சரியான ஒத்துழைப்பு கொடு!''

''சரி கேப்டன்..'' நவீன்ராஜ் எச்சிலைக் கூட்டி விழுங்கினான்.

''இந்த மூஞ்சி அழகாய் இருக்கும் வரைதான் உனக்கு வியாபாரம் நவீன்... அது எனக்கும் தெரியும்... நம் படத்தை குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்கச் சொல்கிறேன்.. அப்புறம் நீ இந்திப்படத்திற்குப் போகலாம்.''

''யெஸ் கேப்டன்.. தேங்க்யூ கேப்டன்..''

''ஏன் பேயறைந்தாற் போல் இருக்கிறாய்? பீ சியர்ஃபுல்...''

தாராசங்கர் மறுபடியும் பார்வையை கம்ப்யூட்டர் பக்கம் திருப்பினார்.

நவீன்ராஜ் எழுந்தான்.

## 19

படப்பிடிப்பு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

அவுட்டோர் கூட்டத்திலிருந்து சற்று விலகி, ஒரு மரத்தடியில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான், நவீன்ராஜ்.



ஷாட்களின் இடைவேளையில் அங்கு படுத்து கண்களின் மீது ஈரத்துணியை அவன் போட்டுக்கொண்டதும், ''எக்ஸ்க்யூஸ் மீ சார்'' என்று இனிமையான குரல் கேட்டது.

பெண் குரல்!

நவீன்ராஜ் துணியை எடுத்தான்.

தலையை சிக் என்று வாரி, முகத்தில் அளவான மேக்கப் போட்டு, உதடுகளில் செவேர் என்று லிப்ஸ்டிக் பூசிய பெண்ணின் அழகான முகம் தென்பட்டது.

''சார், சொல்லச் சொல்ல வந்து விட்டாங்க...'' என்று பி.ஏ. பதறி வர, நவீன்ராஜ் அவனை புறங்கையால் போகச் சொன்னான்.

''யெஸ்?'' என்றான்.

''உங்களோடு தனியாக ஒரு அரைமணி நேரம் வேண்டும், சார்...''

''உங்களை எங்கோ பார்த்திருக்கிறேனே..'' என்றான் நவீன்ராஜ், கண்களைச் சுருக்கி.

''என் பெயர் விமலா.. இதற்கு முன்னால், ஒளிப்புயல் என்ற பத்திரிகையில் ரிப்போர்ட்டர் பயிற்சி எடுத்துக் கொண்டபோது, உங்களை சந்தித்திருக்கிறேன்...''

''யெஸ், யெஸ், அப்போது நீங்கள் சிம்பிளாக இருந்தீர்கள்...'' என்றான், நவீன்ராஜ்.

''இப்போது கிளாமராக இருக்கிறேனா?'' - விமலா பளீர்ப் பற்கள் தெரிய சிரித்தாள்.

''ஒரு விதத்தில்...''

''நான் இப்போது இருக்கும் இடம் அப்படி. இப்போது தான் ஒளிப்புயல் பத்திரிகையில் இல்லை... மும்பையி

லிருந்து வெளியாகும் ஸ்டார் டஸ்ட் பத்திரிகையில் சேர்த்துவிட்டேன்...''

''ஸ்டார் டஸ்ட்!''

''யெஸ்... அந்தப் பத்திரிகைக்காக உங்களோடு கொஞ்சம் பர்ஸனலாகப் பேச வேண்டியிருக்கிறது.. பர்ஸனல் காலம் என்று ஒரு பகுதியில் உங்களைப் பற்றி பொதுமக்களுக்குத் தெரியாத சில விவரங்களை கொடுக்கலாம் என்று எண்ணம்...''

''உட்காருங்களேன்..'' என்று நவீன்ராஜ் கட்டிலில் சற்று நகர்ந்து இடம் கொடுத்தான். விமலா அந்த இடத்தில் உட்கார்ந்தாள்.

''எந்த மாதிரி விவரங்கள்?'' என்றான், நவீன்ராஜ்.

''நீங்கள் ஏதாவது பள்ளிக்கு நன்கொடை கொடுத்திருக்கலாம். ஏழை நோயாளியின் சிகிச்சைக்கு பணம் கொடுத்திருக்கலாம். காதலர்களுக்கு கல்யாணம் செய்து வைத்திருக்கலாம். வயதானவர்களுக்கு கட்டில் வாங்கிக் கொடுத்திருக்கலாம். இந்த மாதிரி காரியங்களுக்கு பப்ளிஸிடி கொடுக்க வேண்டாம் என்று நீங்கள் நினைத்திருக்கலாம்... எங்கள் வாசகர்களுக்கு அதையெல்லாம் தெரியப்படுத்தலாம் என்று ஐடியா...''

நவீன்ராஜ் விமலாவை ரசித்தான். அவளுடைய தடையற்ற பேச்சை ரசித்தான். இந்தி சினிமாவில் அவன் அடியெடுத்து வைக்கும்முன் அவனைப் பற்றி ஸ்டார் டஸ்ட் பத்திரிகையில் பப்ளிஸிடி கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற கருத்தை ரசித்தான்.

''இதற்கு ஏன் தனியாக சந்திக்க வேண்டும் என்று நினைத்தீர்கள்?'' என்றான், புன்னகையுடன்.



''நாம் ஒரு கப் பீருடன் பேசக்கூடும்.. இந்த பக்கத்திற்கான மேட்டர் தவிர, உங்களுடைய பர்ஸனல் டேஸ்ட் என்னென்ன என்று சற்று அந்தரங்கமான கேள்விகளை நான் இன்னொரு பகுதிக்காக கேட்கக் கூடும்...''

''இரவு எட்டு மணிக்கு மேல் தனியாக வரும் தைரியம் இருக்கிறதா?''

''இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு வரச்சொன்னால் கூட வருவேன்...''

''ஹோட்டல் ஆஞ்சநேயாவில் ரூம் நம்பர் 408. இரவு எட்டரை மணிக்கு...'' என்றான், நவீன்ராஜ்.

''நீங்கள் தனியாக இருப்பீர்களா, அல்லது பி.ஏ., மானேஜர் யாராவது கூட இருப்பார்களா?''

''தன்னந் தனியாக இருப்பேன்...'' என்று கண்ணடித்தான், நவீன்ராஜ்.

* * *

விமலா தலைமுதல் கால் வரை மூடி ஒரு பர்தா அணிந்திருந்தாள். வாசலில் தலைப்பாகையுடன் நின்றிருந்த ஹோட்டல் சிப்பந்தி கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து விட்டான்.

விமலா சீரான நடையில் லிப்டை அடைந்தாள். நான்காவது மாடிக்கு பயணம் செய்தாள்.

வாட்சைப் பார்த்தாள். இரவு ஒன்பது.

ரூம் நம்பர் 408-இன் வாசலில் நின்றாள். அழைப்பு மணியை அழுத்தினாள்.

சின்ன இடைவெளி விட்டு கதவு திறந்து நவீன்ராஜ் நின்றான். அவளைப் பார்த்து அவன் முகம் சுருங்கியது.

''யெஸ்?'' என்றான்.

விமலா தன் முகத்துத் திரையை உயர்த்தினாள்.

நவீன்ராஜின் முகம் உடனடியாக மலர்ந்தது.

''கம் இன், கம் இன்'' என்று கதவைத் திறந்தான்.

அவளை உள்ளே அனுமதித்து, கதவை மூடினான். கதவில் அறிவிப்பை 'DO NOT DISTURB' என்று மாற்றினான்.

அறைக்குள் திரும்பினான்.

விமலா தன் பர்தாவை நீக்கியிருந்தாள்.

''பர்தா எதற்கு?'' என்றான் நவீன்ராஜ், ஆச்சரியம் தொனிக்க.

''எக்ஸ்க்ளூஸிவ் பேட்டி எடுக்கும்போது நாங்கள் யாரை சந்திக்கிறோம் என்பது வெளியில் தெரியாமல் இருந்தால்தான், போட்டி பத்திரிகைகளை முந்திக் கொள்ள முடியும்...''

நவீன்ராஜ் இரவுக்கான ஆண் உடை அணிந்திருந் தான். திறந்த மார்பும், கீழே ஒரு அரை டிராயரும், அவற்றை மூடும் இரவு கோட்.

விமலாவைப் பார்த்தான். விமலா மெல்லிய சருகுப் புடவை அணிந்திருந்தாள். அவளுடைய வயிற்றுக் குழைவும், இடுப்புச் சரிவும் பளீரிட்டன.

''உங்களுக்காகவே...'' என்று நவீன்ராஜ் கையை வீசிக் காட்டினான்.

அங்கிருந்த கண்ணாடி மேஜையில் கண்ணாடிக் கோப்பைகள். வியர்த்திருந்த பீர் பாட்டில்கள். வறுவல் முந்திரி காரக்கடலை, ஸ்பெஷல் சிப்ஸ், ஹாட் பேக்கில் சிக்கன் டிக்கா, கோபி மஞ்சூரியன்.

''முதலில் பிஸினஸ்'' என்றாள், விமலா.



தன் ஹேண்ட் பேக் திறந்து கையகல டேப்ரிகார்டர் ஒன்றை எடுத்து வைத்தாள்.

''கேட்கட்டுமா?'' என்றாள்.

''முதலில் ஒரு ஸிப்...'' என்றான் நவீன்ராஜ், கட்டிலின் நுனியில் அமர்ந்து.

விமலா ''ஓ.கே.'' என்றாள்.

நவீன்ராஜ் இரண்டு கோப்பைகளில் பீரை நிரப்பினான்.

விமலா தன் ஹேண்ட் பேகைத் திறந்து கையகல கேமிரா ஒன்றை வெளியே எடுத்தாள்.

''ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளட்டுமா?''

''ஒய் நாட்?'' - நவீன்ராஜ் தன் நைட் கோட்டை சற்றே திறந்து மார்பைக் காட்டி நின்றான்.

விமலா க்ளிக்கினாள். ஆனால் ஃப்ளாஷ் வேலை செய்யவில்லை.

''என்ன ஆயிற்று?'' நவீன்ராஜ் சிரித்தான்.

''பேட்டரி போட மறந்து விட்டேன்...'' - விமலா தன் பை திறந்து இரண்டு பேட்டரி எடுத்து கேமிராவில் செருகினாள்.

''ஒரே ஒரு போன் செய்ய வேண்டும்...'' என்று தன் செல்போன் எடுத்து டயல் செய்தாள்.

எதிர்முனை மணி அடித்து பால்ராஜின் குரல் வந்தது.

''யெஸ்...''

''விமலா பேசுகிறேன்..''

''என்ன விமலா?''

''வீட்டில்தானே இருக்கிறீர்கள்...?''

''ஆமாம்.''

''வீட்டிற்கு எப்போது வந்தீர்கள்...''

''எட்டு மணிக்கு... ஏன்?''

''எங்காவது வெளியில் போகிறீர்களா?''

''பத்து மணிக்கு என் மனைவியைப் போய் அவள் தோழியின் வீட்டிலிருந்து அழைத்து வர வேண்டும். ஏன் கேட்கிறாய், விமலா?''

''அரை மணி நேரம் கழித்து சொல்கிறேன்'' என்று போன் தொடர்பைத் துண்டித்தாள்.

பின் கேமிராவை கண்ணருகில் வைத்து க்ளிக்கினாள். இப்போது ட்ர் என்ற சத்தம் வந்தது.

விமலா கேமிராவை சற்று தள்ளி வைத்து வேடிக்கைப் பார்த்தாள். அதன் பிலிம் கண்ட்ரோலை சற்றுத் திருகி னாள். உதட்டைப் பிதுக்கினாள்.

''கேன் யூ ஹெல்ப் மீ?'' என்றாள்.

''என்ன செய்ய வேண்டும்?''

''இந்த லாக்கை ரிலீஸ் செய்து தர முடியுமா?''

''பீரை சாப்பிட்டு விட்டு செய்தால் என்ன?''

''ஒரே ஒரு வாய்...'' என்று விமலா தன் கோப்பையை அவன் கோப்பையுடன் மிருதுவாக மோதினாள். பின் பீரை சற்று உறிஞ்சினாள்.

''இங்கே கொடுங்கள்...'' என்று அந்த கேமிராவை வாங்கினான், நவீன்ராஜ்.

''கட்டிலில் உட்கார்ந்து பாருங்கள்'' என்றாள், விமலா.

கட்டில் நுனியில் அமர்ந்து அந்த கேமிராவின் பிலிம் நகர்த்தும் பகுதியை நவீன்ராஜ் திருகினான். சற்று கடின மான இருந்தது. இன்னும் கொஞ்சம்... இன்னும் கொஞ்சம்.

சட்டென்று அந்த வட்டமான பகுதி விடுபட்டது.

அடுத்த கணம் அவன் முகத்தில் சுரீர் என்று ஏதோ பீய்ச்சினாற் போலிருந்தது.



நெருப்பையே அள்ளி முகத்தில் ஊதினாற் போல நவீன்ராஜ் துடித்தான்.

அந்த பொம்மை கேமிராவில் அழுத்தி வைக்கப்பட் டிருந்த அமிலம் முழு வேகத்தில் அவன் முகமெங்கும் சீறியது.

அமிலத்தின் ஆதிக்கத்தில் சருமம் அதன் அடியாழம் வரை தீய்ந்து போனது. கண்கள் இரண்டும் கருகிப் போக -

நவீன்ராஜ் மீன் போல் துள்ளி கட்டிலில் துடித்து விழ, விமலா அவசரமாக பர்தாவுக்குள் தன்னை செலுத்திக் கொண்டாள். ஹேண்ட் பேகை அள்ளிக் கொண்டாள்.

தொலைபேசித் தொடர்பைக் கழற்றி எறிந்தாள்.

அவன் அலற அலற, அந்த அறையை விட்டு வெளிப் பட்டாள். அறையை பூட்டினாள். சாவியை காலடியில் இருந்த கார்ப்பெட்டிற்குக் கீழே எறிந்தாள்.

வேக வேகமாக லிப்ட் நோக்கி நடந்தாள்.

* * *

''இன்ஸ்பெக்டர் சார் நான்தான்...'' என்றாள். விமலா.

பால்ராஜ் கதவை இன்னும் அகலமாகத் திறந்தார்.

''என்ன அதிசயமாக என் வீடு வரை தேடி வந்திருக் கிறாய்?''

''நீங்கள் எனக்காக ஒரு பொய் சொல்வீர்களா, சார்?''

''பொய்யா?''

''இன்றிரவு எட்டரை மணியிலிருந்தே நான் உங்கள் பார்வையில்தான் இருந்தேன் என்று எனக்காக சாட்சி சொல்வீர்களா?'' விமலா பரபரப்பாகக் கேட்டாள்.

பால்ராஜின் முகத்தில் கவலை வந்தது.

''ஏன் விமலா?''

''சட்டத்திலிருந்து நழுவியவனை என் கோர்ட்டில் தண்டித்து விட்டு வந்திருக்கிறேன்... உங்கள் உதவி வேண்டும்...''

''உட்கார்ந்து பேசுவோம் விமலா...'' என்று பால்ராஜ் நாற்காலியைக் காட்டினார்.

* * *

விமலா சொல்லி முடித்ததும் ஒரு பாட்டில் தண்ணீரையும் குடித்து முடித்தாள்.

''உன்னைப் பற்றிய எந்த அடையாளமும் அங்கே விட்டு விடவில்லையே?'' என்றார் பால்ராஜ், பதட்டத்துடன்.

''நவீன்ராஜைத் தவிர வேறு யாரும் என் முகத்தைப் பார்க்கவில்லை. அவனைத் தவிர வேறு யாரும் எனக்கு எதிராக சாட்சி சொல்ல முடியாது. கதவிலும், கண்ணாடிக் கோப்பையிலும் கூட என் கைரேகை பதியாமல் கிளவுஸ் அணிந்திருந்தேன். பீர் கோப்பையில் உதடுகளைப் பதித்த இடத்தைக் கூட துடைத்து விட்டு வந்திருக்கிறேன்...''

''ஜீஸஸ்... ஹெல்ப் மீ!'' என்றார், பால்ராஜ்.

''நீங்கள் என்னைக் கைவிட மாட்டீர்களே, இன்ஸ்பெக்டர்...''

''பொதுவாக நான் சாட்சிக் கூண்டில் பொய் சொன்னதில்லை...'' என்றார், பால்ராஜ்.

''உங்களை வற்புறுத்தவில்லை. நீங்கள் சாட்சி சொல்லாவிட்டால் அதிகபட்சம் என்ன நடக்கும்? எனக்கு தண்டனை கொடுப்பார்கள்... சந்தோஷமாய் ஏற்றுக் கொள்கிறேன்...''



''உன் உயிருக்கே ஆபத்து'' என்றார் பால்ராஜ். கவலையுடன். ''ஆனால் உன்னைக் காப்பாற்றாமல் அலட்சியம் செய்ய மாட்டேன், விமலா'' என்றார், அவள் கைகளை அழுத்திக் கொடுத்து.

''ஒரு சிகரெட் கிடைக்குமா?'' என்று விமலா உலர்ந்த புன்னகையுடன் கேட்டாள்.

## 20

''டாக்டர் என்ன சொல்கிறார்?'' - தாரா சங்கரின் குரலில் கவலை இருந்தது.

''நவீன்ராஜ் பிழைத்ததே பெரிய விஷயம் என்கிறார். அவன் முகம் அடையாளம் தெரியாத அளவு உருக்குலைந்து விட்டது'' என்றான் ஆதர்ஷ், வருத்தம் தோய்ந்த குரலில்.

''எந்த நிபுணர் ஆப்பரேஷன் பண்ணினாலும், இனி பழைய முகம் கிடைக்காதாம்... அதைவிட கொடுமை இரண்டு கண்களும் சிதைந்து விட்டன. அவன் பார்வையை மீட்டுத் தருவதும் கஷ்டமாம்...''

''நம் படங்கள்?''

''இப்போதைக்கு கிடப்பில் போட வேண்டியது தான்'' என்றான், ஆதர்ஷ். ''நம் படங்களைத் தவிர மற்ற படங்களில் நவீன்ராஜின் வேலை முடிந்து விட்டதாம்... அதனால் முழு நஷ்டமும் நமக்குத்தான்...''

''அந்தப் பெண் விமலா...?''

''அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டருடன் இருந்ததாக அவள் சொல்லியிருக்கிறாள். இன்றைக்கு கோர்ட்டில் இன்ஸ்பெக்டர் என்ன சொல்கிறார் பார்ப்போம்...''

நீ போகலாம் என்பது போல் தாராசங்கர் சைகை செய்ய, ஆதர்ஷ் வெளியே வந்தான்.

21

சர்ச்சில் பிரார்த்தனை முடிந்து எல்லோருக்கும் கலைந்து போன பின் இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பின் பகுதிக்கு நடந்தார். 'கன்ஃபெஷன் பாக்ஸ்' என்று சொல்லக் கூடிய 'பாவ மன்னிப்பு' கோரும் பகுதியை சீரிய நடையில் அடைந்தார்.

மூங்கில் கதவைத் திறந்து பாவ மன்னிப்புக் கோருபவர்கள் அமரக்கூடிய நாற்காலியில் அமர்ந்து கதவை மூடிக் கொண்டார். காத்திருந்தார்.

பிரம்புகளால் நெய்யப்பட்ட தடுப்புச் சுவரின் மறு பக்கம் நீண்ட வெள்ளை அங்கியுடன் பாதிரியார் வந்து அமர்வது அந்த இடுக்குகள் வழியே தெரிந்தது.

பால்ராஜ் தொண்டையைச் செருமிக் கொண்டார்.

''ஃபாதர்... இன்று நான் தெரிந்தே செய்யப் போகும் ஒரு பாவத்திற்கு முன் கூட்டியே கர்த்தரின் பெயரால் உங்கள் சன்னிதியில் மன்னிப்புக் கோரி அமர்ந்திருக்கிறேன்...'' என்றார்.

''தொழில் ரீதியாக ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன் நான். பொய்கள் எதுவும் சொல்லக்கூடாது என்பது தான் என் தொழில் கட்டளை. ஆனால் ஒரு தீய சக்தியை ஒடுக்க வேண்டி, ஒரு நல்ல உயிரைக் காப்பாற்ற வேண்டி இன்று நீதிமன்றத்தில் நான் ஒரு பொய் சொல்லவிருக்கிறேன். கர்த்தரின் பெயரில் என் பாவத்தை மன்னியுங்கள்...''

பால்ராஜின் குரலில் எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இருக்கவில்லை.